

கோயிலும் தமிழும்




கோவை கிழார்



கோவைகிழார்

அமரர் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்,பி. ஏ. பி. எல்.


கயிலைமாமுனிவர்
தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
பேரூராதீனம், பேரூர், கோவை - 10.

வாழ்த்துரை

என்றுமுள செந்தமிழ் எனப் போற்றிடும் சிறப்புடையது நமது தமிழ்மொழி. யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம். என்றார் பாரதியார். இத்தகைய மொழி தெய்வத் தமிழ். திருநெறிய தமிழால் கோயில்கள் வளர்ந்தன. திருமுறைப் பாடல்களும் ஆழ்வார் பாடல்களும் இடம் பெற்ற கோயில்களை மக்களும் மன்னர்களும் போற்றினர். எது எமைப் பணிகொளும் ஆறது கேட்போம் என இறைவனிடம் வேண்டினர். மொழிக்கு மொழி தித்திக்கும் தெய்வப் பாடல்களுக்கு இரங்கிக் கடவுள் அருள் புரிந்தார். கோயில்கள் கற்கோயில்களாகக் கலைக் கோயில்களாக வளர்ந்தன. இறைவனே நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறித் தமிழுக்கருளினான். தமிழால் கோயில்கள் சிறந்தன. காலப் போக்கில் அயல் ஆதிக்கங்களால் திருக்கோயில்களில் வழிபாடுகள் மாற்றமடைந்தன. கற்றவர்களும் அயல்மொழி நெறியில் மயங்கினர். சிலர் மொழிப் பெருமை அறியாதவர்களாயினர்.

கோயிலால் மொழி வளர்ந்தது என்று எண்ணி கோவை கிழார் அவர்கள் கேட்போர் மனங்கொள்ளுமாறு விளக்கிய செய்திகளைக் கட்டுரைவடிவில் **கோயிலும் தமிழும்** என விளக்கியுள்ளார். தன்னேரில்லாத தமிழ் மரபு, பேணுவோர்க்குப் பெரிதும் துணைபுரியும் நூலாக முதற் கட்டுரை அமைந்தது. இரண்டாம் கட்டுரை கோவிலும் குளமும் என்று தொடங்குகிறது. வாழ்வாங்கு வாழுதற்கும், இறையருளைப் பெறுவதற்குமுரிய மனப்பான்மையை தருவன.

பாரத நாட்டில் மக்களால் பெரிதும் போற்றப்படுவது **கோயிலும் குளமும்** ஆகும். கோயில்களுக்கும் குளங்களுக்கும் போவதை மனநிறைவுக்கு உரியதென்னும் வழக்கம் நாட்டில் நிலவுகின்றது. கோயில்கள் பல தத்தம் உணர்வுகளுக்கு ஏற்பக் கோயில்களுக்குச் சென்றும் குளங்களில் நீராடியும் வழிபடும் மரபு பழைமையானது. தூய்மையுடன் சென்று வாயினால் பாடி மனதினால் சிந்தித்தால் நாம் செய்த குற்றங்கள் நீங்கும். குற்றமகன்ற வாழ்க்கையும் அமையும் என்பதை "தூயோமாய் வந்து நாம் மலர் தூவித் தொழுது வாயினால் பாடி மனதினால் சிந்திக்க போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்" என்பது ஆண்டாள் நாச்சியார் அருள்மொழி. உடல் தூய்மையும் மனத்தூய்மையும் புனித நீராடுவதால் பெறலாம். நீராடுவதற்கு உரிய குளங்களைக் கோயில் தோறும் அமைத்துள்ளனர். அவை தீர்த்தம் எனப் போற்றப்படுவதாகும்.

இத்தகைய சிறப்புக்குரிய வழிபாட்டு நெறியில் வாழ்ந்து வழிகாட்டிய அப்பரடிகள் தமிழாகமமாம் தேவாரத்தில் "சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே" என அருளியுள்ளார். கோயில் விளங்கக் குடிவிளங்கும் என்பது பழமொழி. புலரி எழுந்து புனல் மூழ்கி புனித வெண்ணீற்றிலும் மூழ்கி வழிபடுவோர் திருக்கோயிலுக்குச் சென்று அங்கு அகங்குழைந்து பூக் கொண்டு அரன் பொன்னடி போற்றினர். பூமாலை புனைந்தேத்தினர். அன்பால் உருகிக் பாடல்களைச் செவி நிறையக் கேட்டு தம் நாவால் பலமுறை கடவுள் திருப்பெயர்களை ஓதினர். இதனால் தமது நற்செயல்கள் சிறப்புற்றன என்பதை

"பூமாலை புனைந்தேத்தி புகழ் நாமம் செவிகேட்ப
நா நாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே"
என்று அருளினார்.

இத்தகு வழிபாட்டு நெறியில் பல திருக் கோயில்களுக்குச் சென்று வழிபாடாற்றியவர் செந்தமிழ் ஞாயிறு கோவை கிழார் ஆவார். அங்கங்கே இருந்த வழிபாட்டுத் தலங்களை ஆய்ந்து தமது செஞ்சொற்கோவையாக உருவாக்கிய நூல் "**கோயிலும் தமிழும்**" என்ற தலைப்பில் வெளிவருகிறது.

கோவை கிழார் அவர்கள் அறநெறியாளர். ஆய்ந்து உணரும் ஆற்றல் பெற்றவர். வாழ்வாங்கு வாழ வழிகாட்டியவர். ஆதலின் திருக்கோயில்களும், குளங்களும் மிகுந்த தலங்களை வாழ்வியலுடன் இணைத்துக் காட்டுகின்றார். சடங்குகள் என்ற பெயரால் நிகழும் தீமைகளைச் சாடுகிறார். வாழ்வாங்கு வாழும் வகையை வடித்தெடுத்துக் காட்டுகிறார். தமிழர் செந்நெறிகளை அயல் மாநிலங்களும் எவ்வாறு போற்றுகின்றன என்பதைத் தமது கட்டுரைகளால் விளக்கும் பாங்கு வியக்கத்தக்கது.

திருத்தலங்களைக் கண்டு போற்றியதுடன் அங்கு நிலவும் கல்வெட்டுக்களில் குடிப்பெயர் மரபுச் சொற்கள் பயன்பாட்டுப் பொருள்களின் பெயர்கள் எவ்வாறு இடம் பெற்றன என்பதை ஆய்ந்துள்ளார். திருக்கோயில்களில் நிகழும் தீமைகளை அகற்ற வேண்டும் என்ற நோக்குடன் சமய உண்மைகளை வெளிப்படுத்திச் சமய உலகிற்கு வழிகாட்டியுள்ளார்.

திருக்கோயில் வழிபாட்டில் கடவுளுக்குப் படைக்கப் படும் திருவமுது வகைகளைக் கல்வெட்டுக்களில் ஆய்ந்துணர்ந்து அவற்றின் சிறப்பை விளக்கியுள்ளார். தாமுணர்ந்த நல்லனவற்றைப் பிறர்க்கும் எடுத்துரைக்கும்

பாங்கினராகிய கோவை கிழார் ஒவ்வொரு நாளும் எழுதிய கவிதைகள் கட்டுரைகள் பலவாக உள்ளன. அவற்றை வகைப்படுத்தித் தொகுத்து நூல்களாக வெளிக்கொணர வேண்டும் என்ற உணர்வுடன் நமது சாந்தலிங்கர் செந்தமிழ்க் கல்லூரி வெளியிட்டு வருகிறது. நமது கல்லூரியில் பயின்று, புலமை பெற்றோர் பலர். அவர்களை ஒருங்கிணைக்க பேரூர்ப் புலவர்ப் பேரவை இயங்கி வருகிறது.

புலவர் பேரவை மூலம் பலநூல்கள் வெளிவந்துள்ளன. அவ்வரிசையில் **கோயிலும் தமிழும்** என்ற தலைப்பில் இந்நூல் வெளிவருகிறது. பேரூர்ப் புலவர் பேரவையை இயக்கும் புலவர்களில் **திரு. கி. ஆ. குப்புராசு, திரு. சி. இராசியண்ணன்** ஆகிய இருவரும் முன்னணியில் இருப்பவர்கள்

"கருமம் செய ஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடைய தில்"

என்னும் திருக்குறள் நோக்கில்இடையறா முயற்சியால் கோவை கிழாரது பல நூல்களை வெளியிட்டுத் தமிழுலகுக்கு வழங்குவதில் முனைந்து செயலாற்றி வரும் திண்மையராவர். இவர்களது செந்தமிழ்ப் பற்றும் மரபு பேணும் செம்மையும் பாராட்டுதலுக்குரியது. தமிழால் வளம் பெற்று வாழ்பவர்கள் இவர்களது நெறியில் பணியாற்றினால் நாட்டுக்கும் மொழிக்கும் வளந்தருபவர்களாகிப் புகழ்பெறுவர். நமது கல்லூரியின் பொன்விழா ஆண்டில் தமிழ் பயின்று செழுமை பெற்றுள்ள புலவர்கள் சிந்திக்க வேண்டும் தமிழால் வாழும் நாம் அம்மொழியை இகழ்ந்து கூறுவார் போக்கினை மக்களிடையே எடுத்துக்கூறவேண்டும் புதிய மாற்றத்திற்கு நமது தமிழ்ப் பணிகள் கல்வியிலும் சமயத்திலும் வாழ்வியல் நெறியிலும் வெளிப்பட வேண்டும்

அல்லவா? திரு. கோவை கிழார் வாழ்ந்து காட்டி நற்பணியாற்றி அறிவுறுத்திய வழியில் ஒன்றுபட்டுச் செயலாற்றுவோம். கோவை கிழார் எண்ணங்களையும் எழுத்துக்களையும் வெளிப்படுத்த வேண்டும். இம்முயற்சிக்கு முன்னோடியாக சென்னை **வீ. மாணிக்கம்** கம்பெனியும், ரவி சங்கர் புத்தகவெளியீட்டு நிறுவனமும் கோவை கிழாரின் **"கோயிலும் தமிழும்"** என்ற நூலை வெளிக் கொணர்ந்துள்ளது பாராட்டிற்குரியது. திரு. வீ. மாணிக்கம் அவர்களும் அவர்தம் அருந்தவச் செல்வர்கள் **மா. இரவி, மா. சங்கர்** என்பார், பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவராவார்கள். அவர்தம் வழிமுறையும், நிறுவனமும் வளமும் வலமும் பெற அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் தண்ணருள் பெற வாழ்த்துகிறோம்.

வேண்டுந்தங்களன்பு,

தவத்திரு. சாந்தலிங்க இராமசாமியடிகளார்.

பேரூராதீனம்.

தெய்வத்தின் குரல்

தமிழ் மொழிக் குயர்மொழி தரணியிலுள தெனில்
வெகுளியுற் றிருப்போன் வெறும்புல வோனே ! 63

தமிழ்ச் சுவையறியாத் தெய்வம் உளதெனில்
அஃதுணர லகையில் தாழ்வெனல் அறமே. 30

வண்ணச்சரவம்

தவத்திரு. தண்டபாணி சுவாமிகள்.

(அறுவகை இலக்கணம்)

அணிந்துரை

அகமும் புறமும் தூயராய், அடங்கிய உருவம் போன்று அக அடக்கம் மிக்கவராய், ஆன்ற அறிவினராய், அவிந்த உணர்வினராய், தமக்கும் பிறர்க்கும் நலம் பயக்கும் கொள்கைகளை உடையவராய் விளங்கிய சான்றோர் கோவை கிழார் அமரர் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்களால் எழுதப்பெற்ற ஆய்வுக் கட்டுரைகள் இருபதினைக் கொண்ட தொகுப்பு நூல்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் தனித் தனியானவை எனத்தோன்றினும் அனைத்துக் கட்டுரைகளிலும் தமிழகத்தின் தாழ்வு நிலை, அதற்கான காரணங்கள், அவற்றைப் போக்கி மேன்மை காணுதற்கு மேற்கொள்ள வேண்டிய கடமைகள் ஆகியன இழையோடி நிற்பது உண்மைநிலை.

கோயில்களினால் தமிழ் வளர்ந்ததையும் தமிழால் கோயில் வளர்ந்த வளர்ச்சியையும் திராவிடர்தம் கட்டடக் கலையின் பெருமையையும் உணர்த்துவது கோயிலும் தமிழும், கோயிலும் குளமும் என்ற கட்டுரையில் முன்னைய காலங்களில் வாழ்வோடு ஒன்று சேர்ந்து எழிலை வெளிப்படுத்திய கிராமப்புறக் கோவில்கள் குளங்கள் இயற்கை எழில்கள் ஆகியனவற்றின் அருமைகளை எண்ணவைக்கின்றார்.

பேரூர் வழிபாடு என்ற கட்டுரை ஒரு வழிகாட்டி போல அமைந்து பேரூரில் என்ன என்ன கோயில்கள் எங்கெங்கு

எவ்வெக் காலங்களில் தோன்றின என்பதனையும் அவற்றின் புராணவரலாறு, வணங்குவதால் ஏற்படும் பயன்கள் ஆகியனவற்றையும் விளக்கிக் கூறுவது.

ஆந்திர நாட்டிலும் 63 நாயன்மார்கள் வரலாறுகள் போற்றப் பெற்றுள்ளன என்பதற்கு ஹம்பி கோயிலில் சுற்றுமதிலில் பொறிக்கப்பட்ட உருவங்கள் சான்றாக அமைந்துள்ளன. அவை 12 ஆம் நூற்றாண்டு வாக்கில் அதில் இடம் பெற்றிருக்கலாம் என்பனவற்றை விளக்குவது இராயலு சீமையில் தமிழடியார்கள். என்ற கட்டுரையாகும்.

பெனுகொண்டா அருகே உள்ள இலேபாச்சி என்ற ஊரில் பாறையில் செதுக்கப்பட்டுள்ள கண்ணப்ப நாயனார் வரலாறு, கோயிலின் அர்த்த மண்டப வெளிச்சுவரில் செதுக்கப்பெற்றுள்ள சிறுத்தொண்ட நாயனார் வரலாற்று உருவங்கள், மகாமண்டபத்தின் மேல்தளத்தில் வரையப் பெற்றுள்ள மனு நீதிச்சோழன் வரலாற்று வண்ணப் படங்கள் ஆகியனவற்றை விளக்கி உரைப்பது வடுக நாடு பாராட்டிய முத்தமிழர்.

பண்பாட்டை வளர்க்கும் சமயக் கல்வி இன்றியமையாதது என்பதனைக் கூறுவது சமயக் கல்வியின் அவசியம் என்ற கட்டுரை.

தீபாவளி, கார்த்திகை போன்ற விழாக்கள் வெற்றியைக் குறிக்கும் விழாக்கள். அகங்காரம் எனும் இருளை நீக்கி அறிவுடைமை எனும் ஒளியை ஏற்றி வாழவேண்டும் என்பதனை நினைவு படுத்தும் விழாக்கள் என விளக்குவது வெற்றிவிழா.

தற்காலச் சமயநிலை என்ற கட்டுரை, "வெளித் தோற்றத்திற்கு மிகுதியாகச் சமயம் விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறதேயொழிய, உண்மைப் பீடம் இங்குச் சமயத்துக்கு இல்லை எனலாம். இத்தனை விளம்பரங்களும் சிலருடைய ஊதியத்திற்கே அனுகூலமாக இருக்கின்றன." என்ற வருத்தத்தை விளக்கிக் காட்டுவது.

கோயில்களினால் நகர அமைப்புக்கள் வளர்க்கப் பட்டன, கோயில்கள் கலைகளின் பிறப்பிடம், கலைகளை, கல்வியை வளர்க்கும் இடங்கள், என்பனவற்றைத் தெளிவுபடுத்தும் செய்திகளைக் கொண்டது. ஆனால் இன்று நிலைமைகள் தலைகீழாக உள்ளன என்பதனையும் அதற்கான காரணங்களையும் விளக்குவது. மடங்கள் சொத்துக்களைப் பராமரிப்பதிலேயே தங்கள் காலத்தைச் செலவிடுகின்றன. இவைபோன்ற பலவற்றை விளக்குவது கோயில்களும் மடங்களும் என்ற கட்டுரை.

ஊன்றிய திருவடிக்கீழ் முயலகன் இல்லாதும் அம்பலக் கூத்தனின் உருவம் அமைக்கப்படுவது உண்டு என்பதனைக் குறிப்பது கூத்தாடு தேவர்.

வேலுமயிலும் துணை என்ற கட்டுரை வேல், மயில், சேவல் பற்றிய தத்துவங்களை விளக்கி அடக்கம், ஆணவம் அழிவு, அவற்றால் ஏற்படும் உயர்வுபற்றிக் கூறுகின்றது.

திருஞானசம்பந்தர் வாழ்க்கை என்ற கட்டுரையில் வாழ்வின் நோக்கம், தமிழ் மொழியின் வண்மை, இசையின் பெருமை, ஆகியன விளக்கப்பெற்றுள்ளன, சம்பந்தர் சமணத்தின் பகைவரல்லர். அதனை இரக்கத்தோடு ஆதரித்தவர் என்று சான்றுகாட்டி நிறுவியுள்ளார்.

தவம் என்பது துன்பம் பொறுத்து பிறர்க்குத் துன்பம் தராத ஆன்மப்பயிற்சி எனச் சுட்டிக் கூறுவது, தவம் யாது என்ற கட்டுரை.

தமிழ் நாட்டில் பாடல் பெற்ற சிவத்தலங்களில் திருச்செங்கோடு தவிர பிற எல்லாக் கோயில்களிலும் லிங்கமே மூலத்தானத்தில் இடம் பெற்றுள்ளது. தமிழகக் கோவில்கள் சிற்பக்கலை வளர்ச்சியின் வாயில்கள் என்பதைக் காட்டுகிறது. நமது கோயில்களில் காணும் சில அழிந்த சிற்பங்கள். சிலைகளை அமைப்பதில் சில வேளைகளில் மரபுக்கு மாறுபட்ட வடிவங்கள் இடம் பெறுவதும் உண்டு என்பதைக் காட்டுவது இக்கட்டுரை.

இந்துக்கள் மட்டுமன்றி, சமணரும், பௌத்தரும் உருவவழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர்களே என்று எடுத்துக் காட்டுகிறார். தமிழகத்தில் சமணர்கள் எப்படி இடம் பிடித்தனர் அதன் விளைவுகள் யாவை என்பதனை உய்த்துணரவைக்கிறார், குடைவரைக் கோயில்களும் உருவ வழிபாடும் என்ற கட்டுரையில்.

சேக்கிழார்தம் திறம் செப்பி அவர்காலத்தில் நிலவிய தமிழக நிலவரங்களை விளக்குவது சேக்கிழார் என்ற கட்டுரை.

மனித இனம் நாகரிகம் பெறாத காலம் தொட்டுக் கல்லில் உருவங்களைச் செதுக்கித் தன் உளக்கருத்தை மனிதன் வெளிப்படுத்தி வந்திருக்கிறான் என்பதனை விளக்குவது கல்லும் கதை சொல்லும் என்ற கட்டுரை. கல்வெட்டுக்களே வரலாற்றுப் பதிவேடுகள் என்பதனையும் இக்கட்டுரையில் சான்றுகளோடு விளக்கி உள்ளார்.

புரியும் மொழியில் உளம் ஒன்ற செய்யப்படும் அர்ச்சனைகளால்தான் பயன் பல விளையும். தமிழ்ப் பாடல்களில் வழிபாடு செய்யப்பட்டுவந்த தென்னாட்டுக் கோயில்களில் வடக்கே இருந்து இறக்குமதி செய்யப் பெற்ற வேதியர்கள், மன்னர்களின் செல்வாக்கால் கோயில்களில் வடமொழிக்கு ஆதிக்கம் தந்தார்கள். பாராயணத்துக்கு ஏற்றவை தேவாரப் பாடல்கள். உலகில் எல்லா நாடுகளிலும் அவரவர்களின் மொழிகளில்தான் கடவுள் வழிபாடு நடைபெறுகிறது. இப்படிப்பல செய்திகளை விளக்கிக் கூறுவது வழிபாடு என்ற கட்டுரை.

கோயில்களில் திருவமுது படைக்க நிவந்தங்கள் விடப்பட்ட செய்திகளையும் அவை எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதனையும் விளக்குவது கோயில் அமுதுகள் என்ற கட்டுரை.

இவை அனைத்தும் தமிழக வரலாற்றைப் புரிந்து கொள்ளவும் தமிழ்நாடு மீண்டும் தலை நிமிர்ந்து நிற்கச் செய்ய வேண்டுவனவற்றையும் நன்கு விளக்கிக்கூறும் அரிய கட்டுரைகள். ஈடுபாடு உடையார்க்கு இது ஒரு இனிய கருவூலம்.

“தமிழால் வாழும் நாம் தமிழுக்காக, தமிழ் மக்களுக்காக, தமிழ் நாட்டிற்காக வாழ்வோம்” என்ற கருதுகோளைக் கொண்ட, பேரூர்ப் புலவர் பேரவையினர், தம் ஆசிரியர் எழுதிய கட்டுரைகளை ஒன்று சேர்த்து, செந்தமிழ்க் கல்லூரியின் பொன்விழா ஆண்டில் வெளியிடுவது போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியன.

இந்நற்பணியை முன்னின்று செயல் படுத்திவரும் என் அன்பு நண்பர்கள் **புலவர் திரு. கி. ஆ. குப்புராசும் புலவர் திரு. சி. இராசியண்ணனும்** வாழ்க வளமுடன் என வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இறைவழிபாடும் எல்லாச் செயலும், தமிழில் தமிழரைக் கொண்டே செய்வேன். என்ற சூளுரையை நாம் ஏற்போம் ! நல்லன சிறக்கட்டும்.

வாழ்க வையகம் ! வாழ்க வளமுடன்

பேராசிரியர்

அருள்நிதி.. **இராம. இருசு பிள்ளை**

கோவை

பதிப்புரை

சாவாத் தமிழ்பயிற்றும் சாந்தலிங்கர் தாண்மலரை
ஓவா துரைப்போம் உவந்து.

பேரூர் தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் திருமடம், சைவமும் தமிழும் இருகண்ணெனப் போற்றி, குமுகாயமேம்பாட்டிற்காக ஓயாதுழைக்கும் ஓரமைப்பாகும்.

கற்றுவல்ல சான்றோர்களும், முற்றுணர்ந்த மூதறிஞர்களும் அருளாளர்பலரும் 1916 ஆண்டில் கூடி "சத்வித்தியா சன்மார்க்க சபை" ஒன்றை நிறுவி, அறவுரையும் அருளுரையும் போதித்த புண்ணிய பூமியே பேரூர்.

இவ்விடத்தில் தான் 1953 ஆம் ஆண்டில் தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரியைத் தோற்றுவித்து, கொங்குநாட்டு மக்களும் பிறநாட்டு மக்களும் ஞானமும் கல்வியும் பெற, நற்றமிழ் ஆசிரியர்களைக் கொண்டு நல்லறிஞர் பலரை உருவாக்கினர். பேரூர் ஆதீனம் தவத்திரு. ஆறுமுக அடிகளார், சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார். சி.கே. சுப்பிரமணிய முதலியார், கோ. ம. இராமச்சந்திரஞ் செட்டியார், வெ. சி. சுப்பைய கவுண்டர், தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் போன்ற, "அருந் தொண்டாற்றிய தமிழ் அந்தணர்கள், கண்ட கனவு, போட்ட திட்டம், உழைத்த உழைப்பு" திருநெறிய தமிழ் வளர்க்கும், செந்தமிழ்க் கல்லூரி "ஐம்பதாண்டு பொன் விழா" கொண்டாடும் பேறுபெற்றது.

நாளும் தமிழ் வளர்க்கும் ஞான சம்பந்தராய், 'என் கடன் பணி செய்துகிடப்பதே.' என்ற அப்பர் பெருமானாய், தமிழ் பழுத்த உறவும், தவம் பழுத்ததுறவும் கொண்ட,

தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரியும், திருமடமும், இரண்டறக்கலந்து யோகமாய் விளங்கி வீறுபெற்றது.

அன்பே கடவுள், அறிவே தெய்வம், என்ற சமயக்கோட்பாட்டைப் போதித்த கோயில், கோயில் கோயிலாகவே இருக்க வேண்டும். கோயிலில் தமிழ் கொலு வீற்றிருக்கவேண்டும். என விரும்பியவர் **கோவை கிழார்.** இந்து அறநிலைய ஆணையாளராக இருக்கும் போது அனைத்து ஆலயங்களிலும், தேவாரம், திருவாசகம், திவ்வியபிரபந்தம் ஓத வேண்டும் என ஆணையிட்டவர். தமிழகத்திலுள்ள ஒவ்வொரு திருமடமும் தமிழ் மொழியை வளர்க்க, தமிழ்க்கல்லூரிகளை அமைக்க வேண்டும் என விதிவகுத்தவர். கோயில்களிலுள்ள சீர் கேடுகளைக் களைந்து செப்பம் செய்தவர்.

கோயிலும் தமிழும் - கோயிலும் குளமும் - சமயநிலை சமயக் கல்வியின் தேவை, சிற்பங்களின் சிறப்பு, கோயிலும் மடமும், தாய்மொழியே வழிபாட்டு மொழி, என்பனபோன்ற பல்வேறு கருத்துக் கருவூலங்களைத் தந்ததோடு, கோயில்பூனைகள், என்ற நூலினை எழுதி அச்சேற்றியவர். ஆய்வாளர், பன்மொழிகற்ற பண்டிதர். பல்வேறு மதநூலறிவு பெற்றவர். சமணம், பௌத்தம், சைவம், வைணவம், என்ற மத வேறுபாட்டைவிட்டவர். ஆத்தீகம் நாத்தீகம் என்ற பட்டிமன்ற சொற் போரில் நடுவராக நாவலர். சா. சோமசுந்தர பாரதியார். அறிஞர் அண்ணாவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். **கோவை கிழார் என்ற இராவ்பகதூர் கோ. ம. இராமச்சந்திரஞ் செட்டியார் ஆவார்.**

இறைப்பணியும் தமிழ்ப்பணியும் உயிர்மூச்சாய்க் கொண்டொழுகும் வெள்ளுடை வேந்தர். பேரூராதீனம் இளையபட்டமாக, லிங்கதாரியாக இருக்கும் போதே, உழைப்பால் உயர்த்தி, உயர் எண்ணத்தால் வளர்த்தி

மரத்தடியில் கற்ற தமிழை, மாடமாளிகை கூடகோபுரமாக உயர்த்தியவர் ஓடும் பொன்னும் ஒக்கநோக்கும், கயிலைப்புனிதர் கல்லும் மண்ணும் சுமப்பவர்களோடு சேர்ந்து சுமந்த கர்மயோகி.

தனித்தமிழ்க் கல்லூரி கலை அறிவியல் தமிழ்க் கல்லூரியாக வளர்ந்தது. தாய்த்தமிழ்ப் பள்ளி, தொடக்கப் பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேனிலை பள்ளியாகவிரிந்தது. ஆங்கிலத்தைக் கைவிடாது தமிழுக்கு ஆக்கம் சேர்க்க மெட்ரிக் குலேசன் பள்ளியும் தொடங்கப்பட்டது.

பேரூராதீனம் குருமகாசன்னிதானம், கயிலை மாமுனி அருளாட்சி ஏற்றபின் நிறை மொழிமாந்தர் ஆணையில் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப, என்ற தொல் காப்பியர் கூற்றுப்படி திருக்கோயில்களுக்கு திருக்குட நன்னீராட்டுகளையும், தமிழ் அர்ச்சனை முறைகளையும் சீரியமுறையில் செய்து வருகிறார்கள்.

உலக நாடுகளைப் பலமுறை சுற்றி அங்கெல்லாம், ஓதுவாமூர்த்திகளையும் சிவாச்சாரியார்களையும் பண்டார சாத்து முறைகளையும் அழைத்துச் சென்று தமிழர் வாழ்வியல் கோட்பாடுகளை, உலகறியச் செய்து, லோககுரு என அழைக்கப்பெறுகின்றார்.

எங்குந்தமிழ் எதிலும் தமிழ் என்ற அறிவியற் கோட்பாட்டின், கோவை கிழாராலும், பேரூராதீனத்தாலும் அடிப்படையில் தொடங்கப்பட்ட தமிழ்க்கல்லூரியில் படித்துப்பட்டம் பெற்ற புலவர் பெருமக்களின் அமைப்பே "பேரூர்ப்புலவர் பேரவை" ஆகும்.

பேரூர்ப்புலவர் பேரவையினர் தங்கள் தாய்வீடாகிய தமிழ்க் கல்லூரிக்கும், அந்தக் கல்லூரியைத் தோற்றுவித்த பெருமக்களுக்கும் கற்றுத்தந்த ஆசிரியர்களுக்கும் உதவுவது, அவர்களைப் போற்றிப் பாராட்டுவது, அவர்கள் கொள்கை, குறிக்கோள்களை நிறைவேற்றுவது, அவர்கள் எழுதிய நூல்களைப் பதிப்பிப்பது, நாட்டிற்கும் மொழிக்கும் குமுகாய மேம்பாட்டிற்கு மாகப்பணியாற்றுவது பெரியபேறு எனக்கருது வோராவர்.

அயல்மரபுக்குரிய ஆட்சிகள் நுழைந்த பின் தமிழ்ச் சுவடி நூல்கள் பலமறைந்தன. தமிழின்மாட்சிகள் குன்றின. ஆண்டவனை மனம் மொழி மெய்யால் வணங்க முடியவில்லை. ஆட்சி மொழியாக தமிழ் அரியணை ஏறவில்லை. தாய் மொழி வாயிலாகக்கற்பதற்கு விதியில்லை. இந்த நிலையை மாற்ற முகிழ்த்த இயக்கமே தமிழியக்கம். தமிழியக்கத்தை நிலைநிறுத்தத் தோற்றுவிக்கப் பட்ட தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி பல ஆயிரம் தமிழறிஞர்களை, புலவர் பெருமக்களை உருவாக்கியுள்ளது.

'செந்தமிழ் நெறியே சிவநெறி' என்ற மந்திரமொழியை உலகறியச் செய்த அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் என்னும் அருளாளர்கள் நாளும் தமிழிசையால் வலம் வந்தனர். தெய்வ ஒண்தீந்தமிழால் உலகளந்தனர்.

காஞ்சி ஜயேந்திர சரஸ்வதி என்பவர் தமிழில் கடவுளர்க்கு அர்ச்சனை செய்வதும் குடமுழுக்குச் செய்வதும் கூடாது. தமிழில்அர்ச்சனை செய்தால் கடவுளுக்குத் தீட்டுப்பட்டுவிடும். என்று கூறியதால் அக்கருத்தை ஏற்காது புறந்தள்ளி, நாம் நம் கடவுளர்களை நம் மொழியில் வணங்குவோம் என்ற கருத்தை வலியுறுத்தி,

யானொரு தமிழன் எனதொரு மொழியும்
தேனென வழங்கும் தென்தமிழ் மொழியே
தமிழ்பயிலு வதன்றி பிறமொழி பயிலேன்
தமிழில் வடமொழி பிறமொழி கலவேன்
இறைவழி பாடும் எல்லாச் செயலும்
தமிழில் தமிழரைக் கொண்டே செய்வேன்
இல்லப் பெயரும் மக்கள்தம் பெயரும்
எல்லாம் தூய தமிழ்ப்பெயர் இடுவேன்
கோயில் குடமுழுக்கு அர்ச்சனை யாவும்
அன்னைத் தமிழே அடித்துச் சொல்வேன்
ஊத்தை வாயன் உளறல் பேச்சை
உதறித் தள்ளி உயர்வோம் நாமே !

என்ற கோட்பாட்டை பேரூர்ப்புலவர் பேரவை மேற் கொண்டு தமிழகம் தழுவித்தன் பயணத்தைத் தொடங்கும் முகத்தான். இப்பொன் விழா ஆண்டில்.

கொங்குவேளிர், கொங்கு தேசராசாக்கள், கொங்கு நாடும் சமணமும், நால்வர்களும் கல்வெட்டுக்களும், கோயிலும் தமிழும், என்னும் ஐந்து நூல்களை நன்றி மலர்களாகத் திருவடியில் வைத்து வணங்குகின்றோம்.

பேசி மகிழும்வாயும் கொடுத்துச் சிவந்தகரமும் ஈத்துவக்கும் இன்பமும் அறிந்தவர் மங்கலம் **மாணிக்கம்** என்ற மாமனிதர். முயற்சியால் முன்னுக்குவந்து, உழைப்பால் உயர்ந்து, தமிழ் நாட்டுப்பாட நூல் வெளியீட்டுத் துறையில் கொடிகட்டிப்பறக்கும் கோன்; வாழையடி வாழையாய் வைணவ சம்பிரதாயத்தில் திளைத்தவர். ஆழ்வார் வரலாற்றைக் காவியமாக வெளியிட்டு, கண்ணன் புகழ்பாடும் கர்ணன், தாம் பிறந்த மங்கலத்தில் பல லட்சம் ரூபாயில் மாணிக்க விநாயகர் கோயிலைக் கட்டி, தமிழில் குடமுழுக்குச் செய்த குணக்குன்று.

கொடைக்குணம், இவரிடம் மட்டுமா? மாணிக்கம் குப்பம்மாள் பெற்றெடுத்த அருந்தவச் செல்வர்கள் ரவிசங்கர் என்ற பழகுதற்கினிய பண்பாளர்களிடமும் ஒரு படி மேலதாகக் காணலாம். பேரூர்ப் புலவர் பேரவை பதிப்பாசிரியர்கள் கேட்ட மாத்திரத்திலேயே **“கொங்கு தேசராசாக்கள்”** என்ற நூலை அச்சிட்டுத் தந்தார்கள். **“கோயிலும் தமிழும்”** என்ற நூலை, கேளாதநிலையில் பால் நினைந்தூட்டும் தாயாக பரிவோடு வெளியிட்டுத் தருவதாகக் கூறினார். கொடுத்து சிறந்த அவர்களின், குலம்தழைக்க, குவளைக்கண்ணன் கருணை காட்ட, பொய்யா நாவில் புலவர் பேரவை வாழ்த்துகிறது.

இந்த நூலுக்கு வாழ்த்துரை தந்த வழிபாட்டிற்குரிய **குருமகா சந்நிதானம்** அவர்களுக்கும் அணிந்துரை நல்கிய பேராசிரியர் **அருள்நிதி இராம. இருசு பிள்ளை** அவர்களுக்கும் நன்றி. மெய்ப்புப்பார்த்த தமிழ்நாடு இலக்கியப் பேரவையின் செயலாளர் **புலவர். அர. கல்யாணசாமிக்கும்** திருமுறைச் செம்மல். **புலவர். அ. சாமியப்பன்** அவர்களுக்கும் பேரூர்ப் புலவர் பேரவை தம் இதயம் கலந்த நன்றியைக் கூறிக் கொள்கிறது. இதனை அச்சிடும்பணியில் அயராது உழைத்த அச்சகப்பணியாளர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பதிப்பாசிரியர்.

புலவர். சி. **இராசியண்ணன்.**

புலவர். **கி. ஆ. குப்புராசு**



பேரூர்க்கோயிலும், தேரோடும் வீதியும் தெப்பக்குளமும், வெள்ளிமலையின் மாட்சியும் கோவைகிழார் கண்ட இயற்கைக் காட்சியே தெய்வசாட்சி.

உள்ளுறை

கட்டுரைகள் :

1

கோயிலும் தமிழும்

“கோயில் தமிழை வளர்த்தது; தமிழ் கோயிலை வளர்த்தது” என்று ஒருமுறை என் நண்பரிடம் கூறினேன். அவர் திடுக்கிட்டார். “ஒன்று மற்றொன்றை வளர்க்கலாம். கோயில் தமிழை வளர்க்கலாம்; அதற்கு மாறாகத் தமிழ் கோயிலை வளர்க்க முடியாது; அது இயற்கைக்கு மாறானது;” என்று அவர் மறுத்தார்.

“நான் சொன்ன கருத்தில் இயற்கை மாறுபாடு இல்லையே, கோயில் தமிழை வளர்த்தால், தமிழ் கோயிலை வளர்க்க முடியாதா?” என்று மீண்டும் வாதாடினேன்.

“ஒருகாலும் முடியாது. கோயில் தமிழை வளர்த்தால், கோயில் மேம்பாட்டு நிலையிலும் தமிழ் கீழ் நிலையிலும் இருந்துவிடும். ஆகவே, மாறான செயல் நடக்கமுடியுமா? என்றார். “கண்டிப்பாக முடியும் வளர்ச்சி ஒன்றுக்கொன்று ஈடுபாடு உடையது ஆகவே இரண்டு செயல்களும் நடக்க முடியும் - நீங்கள் சொல்லும் மறுப்பு தோற்றத்திற்கு இருக்கலாம், வளர்ச்சிக்கு இருக்க முடியாது” என்றேன்.

“ஏன் அப்படிப் பிரித்துக் கூறுகிறீர்கள்” என்று கேட்டார்.

“தமிழ் கோயிலைத் தோற்றுவித்தது என்றால், கோயில் தமிழைத் தோற்றுவிக்க முடியாது. அதில் மறுப்பு சரிதான். ஆனால் வளர்ச்சியில் அது தடை செய்யாது.” என்றேன்.

“இருக்கலாம்; எது முதலில் தோன்றியது, எது தோற்றுவித்தது. கோயிலா, தமிழா? நீங்கள் கூறுங்கள் பார்ப்போம்” என்றார்.

“கோயிலுக்கும் தமிழுக்கும் தோற்றம் எப்போது உண்டாயிற்று?” என்று எவராலும் கூறமுடியாது. எந்த ஆராய்ச்சி நிபுணராலும் அஃது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. கோயில் எப்போது உண்டாயிற்று, தமிழ் எப்போது தோன்றிற்று என்று மனக்கோட்டைகள் கட்டிப் பல கதைகள் உண்டுபண்ணி. இருக்கிறார்களே ஒழிய, உண்மை அறிந்தார் இல்லை. ஆகவே, ஒன்றை ஒன்று தோன்றச் செய்தது என்று கூறவே

முடியாது. ஆகவே ஒன்றுக்கு ஒன்று கீழ்ப்படிந்ததுமன்று. ஆனால் வளர்ச்சியிலேயோ ஒன்றுக்கு ஒன்று தழுவியே இருக்கிறது" என்றேன்.

"அஃது எப்படி?" என்று நண்பர் கேட்க, அடியிற் கண்டவாறு சொன்னேன்.

"தமிழர்கள் எப்போதும் சமயப்பற்று மிகுந்தவர்கள். சமய ஆராய்ச்சியில் மிகவும் வல்லவர்கள். தாங்கள் எண்ணின எண்ணங்களை நூல்களில் எழுதி வைத்தது மட்டுமன்றி, உருவங்களிலும் செய்துவைத்தார்கள். அழகு என்ற ஒரு பண்பு இருந்தால், அந்த அழகைச் செய்யுள்களால் விரித்துக் கதைகளால் விளக்கி வைத்தார்கள். அவைகளோடு நிற்கவில்லை. அழகுள்ள உடல், அழகுள்ள விலங்கு. அழகுள்ள அணி, அழகுள்ள மனை, அழகுள்ள சிற்பம். அழகுள்ள ஒவியம் இவைகளைத் தங்கள் அருமையான கைவேலையினாலும் சிறந்த மூளையினாலும் இயற்றினார்கள். இவைகளைச் சேமித்து வைப்பதற்காக நிலையங்களையும் ஏற்படுத்தினார்கள். அவ்வித வியப்புப் பொருந்திய நிலையமே கோயிலாகும். அதிலே சமயம் மட்டுமன்று; எல்லாவிதமான கலைகளும் நிரம்பி உள்ளன. அவ்விதக் கோயிலின் வளர்ச்சி தமிழர்களால் ஏற்பட்டது. தமிழின் பெருமை வளர வளரச் கோயிலின் அற்புத அமைப்புகளும் பெருகின."

இன்னும் சிறிது விளக்குகிறேன் கேளுங்கள். மிகவும் பக்குவமடைந்தவர்கள் அல்லாமல் சாதாரணமாக உள்ள மக்கள் தங்கள் நெஞ்சைக் கட்டுப்படுத்துவது எளிதன்று: சமய வழிபாட்டில் அதுமிகவும் கடினம், ஆகவே, வழிபடக் கூடிய பொருளை ஓர் உருவமாக்கினார்கள். போற்றுவதற்கு அவ்வுருவத்தை ஓரிடத்தில் வைத்தார்கள். அவ்விடத்தை அழகு படுத்தினார்கள். அவ்விடமே கோயில் ஆயிற்று. முதலில் ஓர் அழகிய மரத்தின்கீழ் ஒரு கடவுள் உருவத்தை வைத்துத் தொழுதார்கள். பிறகு மரத்தைச் சுற்றி ஒரு காவணம் கட்டினார்கள், காவணம் முதலில் ஒலையால் வேயப்பட்டது. பிறகு ஓட்டினால் ஆக்கப்பட்டது. பல்லவ அரசர்கள் தோன்றியபோது அந்நிலையங்களுக்கு உறுதி தரவே கருங்கல்லில் குடைந்து

குடைகோயில் ஆக்கினார்கள். ஒரே கல்லில் தேர்போலச் செய்தார்கள். அக்காலச் சிற்பிகளுடைய வேலை மிக அருமையானது. மாமல்லையில் போய்ப் பாருங்கள். திருச்சியில் போய்க் கண்ணால் அவ்விருந்தை அருந்துங்கள். பிறகு வெட்டின கற்களைக்கொண்டு மண்டபங்களும் விமானங்களும் உண்டாக்கினார்கள். சோழர்களே அந்தக் கலையை மிகுந்த உயர்நிலைக்குக் கொண்டுவந்தார்கள். உலகமே வியக்கும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை உண்டாக்கினார்கள். கற்றூண்களில் சிறந்த உருவப்பாடுகளை உண்டாக்கினார்கள். சுவர்களில் எவரும் எக்காலத்திலும் போற்றக்கூடிய ஒவியங்களைச் சிறந்த அழியாத வண்ணங்களில் தீட்டினார்கள். சிற்றன்ன வாசல். தஞ்சைத் திருவுள்நாழி இவைகளில் கண்டு மகிழுங்கள். நம்முடைய பெருமையை நாமே அறிவதில்லை.

வடநாட்டிலே கோயில்கள் இல்லையா? தமிழர்கள் மட்டுமே ஒப்புயர்வில்லாத கோயில்களைக் கட்டினார்களா? என்று நீங்கள் கேட்கலாம். வடநாட்டில் கோயில்கள் உண்டு. ஆனால் அவற்றின் சிறப்புத் தென் நாட்டைக் கண்டால் மங்கிப்போகும். சிற்ப நூல்களிலும் தென்நாட்டுக் கோயில்களைத் தனியே திராவிட முறை என்று இதனைப் பிரித்துக் கூறுவதற்கு என்ன காரணம், அறிவீரா? வடநாட்டு ஆதரவு இன்றித் தமிழ் அறிவியல் தனியே பெருகித் தமிழர்கள் தனித்தே கோயில் பண்புகளைத் தனித்த முறையில் வளர்த்து வந்ததனால் அப்பாகுபாடு வந்தது. இன்றைக்கே திருமயிலை கோயிலைப் போய்ப்பாருங்கள், முருகனுடைய விமானம் திராவிட முறையென்றும் விநாயகருடைய விமானம் நாகரம், அஃதாவது ஆரிய முறை என்றும் அறிவீர்கள். இந்த வேறுபாடு அந்தந்தக் கடவுள் வழிபாடு தோன்றின இடத்தை நோக்கி வந்ததென்க. முருகன் தமிழ்க் கடவுள்: ஆகவே, அவன் கோயிலும் தமிழ் முறைக் கோயிலே, தெரிந்தோ தெரியாமலோ ஆகமங்களிலும் இம்முறை போற்றப்பட்டு விட்டது. ஆகவே தமிழர்களுடைய கலை வளர்ச்சி வளர வளரக் கோயில்களின் வளர்ச்சியும் வளர்ந்ததென அறிவீர்கள்.

இனி, இதுபோலவே கோயில்களும் தமிழை வளர்த்து வந்தன என அறியவேண்டும். தமிழ் என்றால் ஏடுகளில் உள்ள எழுத்தும், பொருளும் மட்டும் அன்று. ஓவியம், சிற்பம், ஆடல் பாடல் வழிபாடு வாழ்க்கை முதலிய எல்லாப் பண்புகளும் அடங்கியதே ஆகும். இவைகளின் வளர்ச்சி எல்லாவற்றிற்கும் நமது கோயில்களே வளர்ச்சி இடங்கள் என அறிக. தமிழ் நூல்களிலே இலக்கணப் பகுதிகள் ஐந்து என்பர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பவை. இவைகளை அறிய ஏடுகள்தான் உண்டு என நினைக்கவேண்டா. ஏடுகள் இவைகளின் வரலாற்றைக் காட்டுவதில்லை. ஆனால் கோயில்கள் காட்டும் என அறியலாம். கோயிலில் உள்ளகல்வெட்டுக்களினாலே எழுத்து முன் எப்படி இருந்தது. அதன் வடிவு ஒவ்வொரு நூற்றாண்டிலும் எவ்விதமாக மாறிற்று, என அறியக்கூடும்.அதுபோலவே சொல், சொல்லின் பொருள் ஒவ்வொரு காலத்தில் வேறுபாடு அடைந்ததும், பழைய சொற்கள் மறைந்ததும், புதுச்சொற்கள் தோன்றினதும் முதலிய அரிய செய்திகள் கல்வெட்டில்தான் அறியக்கூடும். பொருள் இயலில் மிகுந்த அறிவு கோயிலிலிருந்தே தெளிவாகிறது. அரசர்களுடைய வரலாறுகள், வெற்றி, நாகரிக முதிர்ச்சி, கடல்கடந்தும் பிறநாடுகளுக்குச் சென்று குடியேறி, தமிழ் நாகரிகத்தை நிலைநாட்டின பெருமை, மக்கள் நடை, உடை பாவனை இவைகளின் வேறுபாடுகள் முதலியவை கல்வெட்டு இலக்கியத்திலிருந்தே அறியமுடியும். கோயில்கள் இல்லாவிட்டால் தமிழர் நாகரிக வரலாற்றை அறிய வசதியே இல்லை. மேலும் யாப்பினுடைய உண்மை வளர்ச்சிக்குக் கல்வெட்டுக்களில் உள்ள செய்யுள்களே சான்றாகும். ஆயிரக்கணக்கான செய்யுட்கள் நமது கோயில்களில் இருந்தும் அவைகளைத் திரட்டி மக்களுக்குப் பயன்படு முறையில் தருவார்கள் இல்லை. இக்காலத்துத் தமிழர்களுக்குத் தமிழில் பற்று இருந்தால் இச்சோம்பலில் ஆழ்ந்திருப்பார்களா? இறுதியில், அணி இயல்கருதின் கோயில் கல்வெட்டுகளே அன்றி, சிற்பங்களும் ஓவியங்களும் அதன் சிறப்பை வெளியிடுகின்றன. இசை, ஆடல் இவைகளில் கோயிலே இருப்பிடமாக இருந்தது என்றால் மிகையாகாது. ஆகவே, கோயில் வளர வளரத் தமிழும் வளர்ந்து தமிழ் நாகரிகமும் வளர்ந்தது என அறிதல்வேண்டும்.

கோயில்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குச் செய்த அரிய பணி எத்தனையோ பாகுபாடுகளில் காணலாம். அவைகளைக் கோயிலுக்குச் செல்லுகிற இக்கால மக்கள் அறிவதில்லை. இதுகாறும் அவைகள் மறைபொருளாகவே இருந்தன. முன்நாளில் இருந்த அருமைப்பாடு இப்போது இல்லை. ஆகவே, மக்கள் இதனை அறிவதில்லை. கோயில் நுழைவு ஏற்பட்ட பிறகு சில அறியா மக்கள் "கோயிலில் என்ன இருக்கிறது? புகுந்து என்ன பயன்?" என்று ஏசுகிறார்கள். இவர்கள் அறிவின்மையைக் கண்டு துயரப்பட வேண்டும். கோயில்களே பற்பல நூற்றாண்டுகளாகத் தமிழை வளர்த்து வந்தன என்று இவர்கள் அறிந்தால் இவ்வாறு கூறுவார்களா?.

"ஆகவே, தமிழ் கோயிலை வளர்த்தது ; கோயிலும் தமிழை வளர்த்தது என்று அறிதல் வேண்டும்" என்று சொன்னேன். என் நண்பரும் மகிழ்ச்சிடைந்து நன்றிகூறிச் சென்றார்.

2

கோயிலும் குளமும்

முன்னுரை

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது தமிழ் அன்னையின் முதுமொழி. அதனைத் தமிழ் மக்கள் நன்கு பாராட்டியுள்ளார்கள்.

ஓர் ஊர் கட்டுவதற்கு முந்தி, முதலில் கோயிலைக் கட்டுவார்கள். தமிழ்நாடு முற்றிலும் சுற்றிப் பார்க்கலாம். கோயிலில்லா ஊரைப் பார்க்கவே முடியாது. கோயில் இருந்தால் அதனோடு குளமும் இருக்கும். ஒரு சிறிய குளமோ, சின்னஞ் சிறு குட்டையோ இல்லாத ஊரையும் - சிறு சேரியையும் கூடக் காண இயலாது. கூடியமட்டில் குளம் என்ற பெயராலே ஒரு சிறிய நீர்நிலையாவது இருக்கும். குளத்துநீர் உடலின் அழுக்கைப் போக்க முடியும். கோயிலோ உடலிற்குள்ளே உள்ள உயிரின் மலத்தைப் போக்க இயலும். மனிதனுடைய இந்த இரண்டு அழுக்குகளையும் போக்கடித்து அவனைத் தூய்மையாக ஆக்குவதற்காகத்தான் கோயிலும் குளமும் தமிழர்கள் உண்டாக்கினார்கள்.

ஆகவே, தமிழனுடைய வாழ்க்கையிலே இந்த இரண்டும் இன்றியமையாத நிலையங்கள் ஆகிவிட்டன. முன் காலத்தில் தமிழன் தன்னுரிமையோடு சகல பண்பாடுகளிலும் சிறந்து விளங்கிக் கொண்டிருந்த நாளில், அவ்வாறு இவ்விரண்டு நிலையங்களைவும் இன்றியமையாத பொருள்களாக வைத்து வாழ்ந்திருந்தான். இந்த நாளிலும் அவ்வாறே அவ்விரண்டு பொருள்களையும் தனது பண்பாட்டின் உரிமைச் சின்னங்களாக வைத்து வாழ்ந்து வருகிறான். இவ்விரண்டையும் உண்டாக்கினதேயன்றிச் சிறப்பாக அவைகளைப் பாதுகாத்தும் வருகிறான். அவைகளுக்கு வேண்டிய பாதுகாப்பும் பொருளும் உதவி வருகிறான். அதனால் கிடைக்கும் முழுநன்மையும் பெற்று வருகிறான். இந்த வகைகளில் இவ்விரண்டும் அவனுக்கு இன்றியமையாத பொருள்கள் ஆகி விளங்குகின்றன அல்லவா?

பண்பாடு

ஒரு பெரிய நகரத்திற்குச் செல்லுவோம். அந்த நகரம் பண்டைய நகரமாக இருந்தால் அதன் இடையில் உன்னதமாகக்

கோபுரம் தெரியும். அதனைச் சுற்றிலும் சதுரம் சதுரமாக மாடவீதிகள் செல்லும். அவைகளைச் சுற்றிலும் மக்கள் குடியிருக்கும் வீடுகள் இருக்கும். கோபுரத்தை ஒட்டி அருகே அழகிய குளம் தோன்றும். அக்குளத்து எதிர்க்கரையில் நின்று கொண்டு கோயிலின் நெடிய கோபுரத்தைக் கண்டால் அதன் சாயல் (பிரதிபிம்பம்) எப்படிப்பட்ட கல் மனத்தையும் கரைத்து இழுத்துச்செல்லும். ஓர் ஓவியனோ அங்கே அமர்ந்து படம் பிடிக்கத் தொடங்குவான். என்ன அற்புதமான காட்சி ! அக்காட்சிகளின் அழகினிலே பண்டைத் தமிழன் ஈடுபட்டுக் கணக்கில்லாத செல்வத்தையும், நேரத்தையும், மூளையையும் அதில் கழித்தான். இவை எல்லாம் வீணா? இக்காலத்தில் சிலர் அவ்வாறு நினைக்கிறார்கள். உயர்ந்த கலைப்பண்பாட்டில் திகழும் மேல் நாட்டு ஆசிரியர்கள் இச்செயல்கள் வீண் அல்ல என்றும், பண்டைத் தமிழரின் உயர்ந்த பண்பாட்டை விளக்குகின்றன என்றும் புகழ்கிறார்கள். அவைகளிலே நாம் மகிழ்ச்சியுற வேண்டாமா? பெரிய நகரம் கிடக்கட்டும். அதில் காணும் காட்சி செயற்கை வடிவில் மட்டும் தோன்றினது ஆகும்.

சின்னஞ்சிறு கிராமத்திற்குச் செல்லுவோம். அது நாட்டுப் புறத்தில் உள்ளது. சுற்றிலும் தோப்புகள், வயல்கள், தோட்டங்கள், பச்சைப் பசேல் என்று விளைந்து இனிமை தரும். நீர் வடியும் கால்வாய்கள் சிலிர்சிலிர்த்துக் கொண்டு ஓடும். அருகிலே நன்செய்களுக்கு இடையே சிறியதொரு மேட்டிடத்தில் பெரும் மரப்பொழில்களிடையே ஒருகிராமம் தோன்றும். அங்கு எல்லா வற்றிலும் முதலிலே அக்கிராமத்திற்குள் நுழையும்போதே எதிரே தோன்றுவது ஓர் அழகிய தெளிநீர்க்குளம். அது நீர் நிரம்பியிருக்கும். அதன் ஒருபுறத்தில் அழகிய படிக்கட்டுகள் தோன்றும். அவைகளில் மக்கள் குளித்துக்கொண்டிருப்பார்கள். சில பெண்மணிகள் குடங்களில் நீர் முகந்து கொண்டு நிற்பார்கள். அக்குளத்தின் பரப்பிலே பச்சைத் தாமரை இலைகள் மிதந்துகொண்டிருக்கும். இடை இடையே நண்டுகளின் கண்களைப்போல, தாமரை மொட்டுகள் கதிரவனை நோக்கி நிற்கும். சில மலர்கள் அழகிய வர்ணத்துடன் மலர்ந்து நம்மை வரவேற்றுச் சிரிக்கும். இந்தக் காட்கிகளைக் காட்டிலும் அதில் தோன்றும் கோபுரத்தின் சாயல் வெகு கவர்ச்சியாக நீர்க்குள் தெரியும். தலையை நிமிர்ந்து பார்ப்போம். எதிரே வானை அளாவி நிற்கும் கோபுரம் நம்மை வசீகரிக்கும், அதன் பிம்பமோ நீரில் தோன்றி அசையும், இந்தவிதம் குக்கிராமத்தில் ஊர்க்கட்டில் இயற்கைக்

குளமும், செயற்கைக் கோபுரமும், சிறந்த பண்பாடுகளைத் தோற்றுவிக்கும் நிலையங்கள் ஆகும். விடியற்காலையில் நன்னீர் ஆடிக் குளக்கரையில் வழிபாடு செய்துகொண்டு நிற்கும் எந்த ஆடவனும் பெண்மணியும் கோபுரத்தின்மீது இளங்கதிர்கள் படிய, அத்தூய்மை ஒளி நீரிடையே தோன்ற, அக்காட்சியைக் கண்ணாரக் கண்டு மன வெழுச்சி பொங்கிக் கசிந்துருகி நிற்காமலிருப்பார்களா? அதுபோலவே மாலை நேரத்தில் கதிரவன் மறையும்போது நீரில் கோபுரச்சாயல் தோன்ற அதனைப் பார்க்கும் எவனும் மகிழாதிருப்பானா? சற்று ஆராயுங்கள்.

கவிகள் ஆர்வம்

இவ்வற்புதக் காட்சியைக் கண்டார் ஒருநாள் வாதவூர் அடிகள். இயற்கைக் காட்சியில் கடவுள் காட்சியைக் கண்டார். நெஞ்சு கனிந்தது. உவமைகள் பொங்கி எழும்பின. அவ்வுணர்ச்சியே அழகிய பாடலாக மாறி அன்புமயமாகப் பொழியத் தொடங்கியது.

"பைங்குவளைக் கார்மலரால்
செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கும் மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்"

(திருவாசகம், திருவெம். 13)

என்ற அருமைக் கவியாக மலர்ந்தது. "இதோ நீலோற்பலம். அது எம் அம்மையின் தோற்றம் அல்லவா? இதோ செந்தாமரை, அது என் அப்பனின் வடிவம் அல்லவா? இதோ நம்பியர்களும், நங்கையர்களும் நீராடி மலம்கழித்துத் தூய்மையர் ஆகிறார்கள். அது அம்மையப்பர்களின் அருள் நோக்கினால் அல்லவா? இந்த நறும்பொய்கை எம் அம்மையப்பரை நினைவு படுத்துகின்றதே," என்று வியந்து பேசுகின்றார். பின்னும்,

"காதார் குழையாடப் பைம்பூண் கலனாடச்
கோதை குழலாட வண்டின் குழாம்ஆடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி

வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதித் திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதித் திறம்பாடி அந்தமா மாபாடி
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்"

(திருவாசகம், திருவெம், 14)

இதன்கண் மகளிர் நீர்விளையாடலை எத்தனை அருமையாக வருணிக்கிறார்! மகளிர் நீர்விளையாடலில் எத்தனை ஆர்வம் காட்டுகிறார்களோ, அத்தனைக்கத்தனை அம்மையப்பரிடம் மக்கள் அன்பு காட்டுகிறார்கள். தாங்கள் காணும் இயற்கைக் காட்சிகளிலும், செயற்கைக் காட்சிகளிலும் எத்தனை மகிழ்ச்சி கொள்ளுகிறார்களோ அத்தனைக்கத்தனை ஆர்வம் நீர்விளையாடலிலும் கொண்டார்கள் போலும். வாதவூரடிகள்தாம் பெற்ற பேரின்பத்தைத் தம் அடியார்களின் நெஞ்சுகளிலும் உணர்த்திவிடுகிறார்கள் அல்லவா?

குறிஞ்சிக் காட்சி

இவ்வாறு நகரங்களிலும் கிராமங்களிலும் காணும் காட்சிகளைக் காட்டிலும், குறிஞ்சி நிலங்களில் காணும் கோயில் குளங்களின் காட்சிகள் மிக இனிமையாக இருக்கும். மலைச்சரிவின் அடிப்பகுதியில் வளைந்து வளைந்து செல்லும் இயற்கைக் குளத்துத் தெளிநீர் அம்மலையின் கரும்பாறைகளில் சிறு திவலைகளாகப் படிந்து மோதி நுரைகளைக் கக்கிவரும் காட்சி எங்கும் காணலாம். திருப்பரங்குன்றத்துச் சாரற்பொய்கை, திண்டுக்கல் பாறை அடியோரத்து நன்னீர் வாவி, நாமக்கல் சிங்கப்பெருமாள் தீர்த்தப்பொய்கை, சிவகிரி முருகன்காட்டு வளைகுளம், கழுகுமலை அடிவார நீளக்குளம் இவைகளின் அழகுகளை வியவாதார் யாரே? பாறைகளுக்கு அடுத்திருக்கும் அமைப்பைப் பெறாதிருந்தும் குன்றுகளுக்குச் சிறிது தொலைவிலிருக்கும் குளங்களின் காட்சிகளும், கண்கொள்ளாக் காட்சிகள் ஆகும். திருக்கழுக்குன்றச் சங்கதீர்த்தம், திருத்தணி அடிவாரத் தெப்பக்குளம், சிவாயத்து வாட்போக்கிப் பாறைக் குளம் இவைகளைக் கண்டோர், கோயிற்குளங்கள் மலைகளின் உறவால் அளவுகடந்த பெருமை அடைவதை நன்கு கண்டு மகிழலாம். இக்குளங்களால் அம்மலைகளுக்கு அருகில் உள்ள குடிகள் அடையும் நன்மைகளோ மிகபபல. கிராமங்களின் அமைப்பும் குளங்களுக்கு ஏற்றாற்போல் பெருமை பெறுவதையும் காணலாம்.

பழக்கப் பண்பாடு

கிராமங்களிலே குடியிருப்பவர்கள் பெரும்பாலும் உழவுத் தொழிலிலே ஈடுபடுகிறவர்கள். அவ்வப்பருவங்களை அனுசரித்துத் தங்கள் வேலைகளைச் செய்வார்கள். பகல் முழுவதும் வயல்களில் நெற்றிவேர்வை விழ வேலை செய்வார்கள். மாலை நேரங்களில் வீடுவந்து சேர்வார்கள். இரவு முழுவதும் குடும்பத்தாருடன் உறவாடிக் களித்து மீண்டும் காலையில் வேலைக்குச் செல்வார்கள். அவ்வாறு வேலைக்குச் செல்லும் முன்னர் ஊருக்கு வெளியிலே சென்று காலைக்கடன்களை முடித்துக்கொண்டு குளக்கரைக்குச் செல்வார்கள். அப்போது விடிந்து கதிரவன் தோன்றுந்தருவாயில் இருப்பான். காலையில் குளத்துநீர் ஊற்றுநீராகத் ததும்பி வெது வெது என்றிருக்கும். அதில் படிந்து நீராடுவார்கள். சிலர் நீந்தியும் விளையாடுவார்கள். அது உடலுக்கு மிகவும் ஆரோக்கியமாக இருக்கும். பிறகு உடலை நன்றாகத் தேய்த்து உலர்ந்த உடைகளை உடுத்தித் திருநீறோ திருமண்ணோ அணிந்துகொண்டு கோயிலை வலம் செய்து கொண்டு தொழுதுவிட்டு வீடு செல்வார்கள். பிறகு சிற்றுண்டி அருந்திவிட்டு, தம் வயல்களுக்குச் செல்வார்கள். இந்த முறையே நாளுக்குநாள் செய்யும் பழக்கம் ஆகும். இந்த முறைகள் தவறாது செய்து வருகையில் உடல் தூய்மை, உடற் பயிற்சி, மனதில் உற்சாகம், நெஞ்சில் அன்பு, வழக்கத்தினால் பொறுமை முதலான நற்குணங்கள் தாமாகவே தோன்றிவிடும். இந்த வகையில் கிராமங்களில் பழக்கத்தினாலேயே பண்பாடு ஏற்பட்டு மன உறுதி, அறிவு முதிர்ச்சி, அனுபவசீலம் இவைகள் விளைந்து மிளிர்ந்து விடுகின்றன. நீராடுகையில் பல அன்பர்களும் கூடுவதினால் நட்பும், கூட்டுறவின் உணர்ச்சியும் ஏற்படுகின்றன. இந்த முறை இந்த நாளிலும் கிராமங்களில் இருப்பதே நாட்டிற்கு நன்மை பயப்பது ஆகும்.

கலை உணர்ச்சி

ஆண்மக்களே அன்றிப் பெண்மக்களும் கோயில் குளங்களுக்குச் செல்லும் பழக்கம் கிராமங்களிலே உண்டு. சாதாரணமாகச் குடிநீர் எடுத்துவருவதற்குப் பெண்களே குளங்களுக்குச் செல்லுவது வழக்கம். அவர்கள் காலையில் எழுந்து குடத்தைக் கக்கத்தில் ஏந்திச் சென்று

அதனை நன்றாகத் தேய்த்து நீர் மொண்டு வருவார்கள். அதனால் அவர்களுக்கு உடற்பயிற்சி மிகுதியும் ஏற்படும். நகரப் பெண்டிர் அவ்வாறு செய்யாத வகையில் பலவீனத்திற்கு உள்ளாகிறார்கள். பெண்கள் பலருடன் பழகித் தங்கள் அறிவை அதிகரித்துக்கொள்ள இடமுண்டு. இளங்காற்றில் உல்லாசமாகப் பேசிக்கொண்டு சென்றாலே மன அமைதி மிகவும் ஏற்படும். இல்லாமற்போனால் நகர மங்கையர் போலக் கூண்டில் அடைபட்ட கிளிகள்போலாகிப் பெருமூச்சுவிட்டு நோய்க்கு அடிமையாக வேண்டிவரும். மேலும், நீர்விளையாடும் போது தெளிநீர்த்திரைகளில் கைகளைக் குடைந்து ஆடுவதினால் இன்னிசையின் இன்பமும் துய்ப்பார்கள், அதனைக் கண்டன்றோ சம்பந்தப்பெருமான் அச்செயலைக் குறித்து வியந்து வெகு இனிமையாகப் பாடுகிறார். பண்ணுக் கேற்ற சொல்லமைதியும் அப்பா சுரத்தில் இருக்கக் காணலாம்.

"மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலச் காவுளான்" (திருஞான)

என்ற புனிதப் பாசுரத்தில் காணும் இன்னிசை நீர் ஆடலுக்கு ஏற்றவாறு அமைந்திருக்கிறதைக் காண்கிறோம் அன்றோ?

இவ்வாறு நீராடி ஆலயம் தொழுதுவிட்டு நன்னீர் ஏந்திக் கொண்டு செல்லும் மங்கையர்கள் தங்கள் வீட்டிலும் இன்னிசை, நல் உறவு, நல் ஒழுக்கம் முதலிய பண்புகளில் சிறந்திருப்பார்கள் எனலாம்.

தற்காலக் கோலம்

தற்காலம் பலவிதங்களிலும் மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. நகரங்களில் கோயில்களும் குளங்களும் திருப்பணி செய்த செய்கைளினால் அழிந்த செயற்கைக் காட்சிகளாக மாறிவிட்டன. திரு அல்லிக்கேணியில் அல்லி இல்லை. பொன் தாமரைக்குளத்தில் தாமரை இல்லை. அவற்றிற்கு மாறாகப் பாசமும், நாற்றமுமே மிளிர்கின்றன. ஆனால் கிராமங்களில் அத்தனை சீர்கேடு வரவில்லை. நீர்வளம் மிகுந்திருக்கும் பொன்னி நாட்டில் கிராமங்களில் இன்றைக்கும் குளங்கள் தூய்மையாக இருக்கின்றன. ஆணும், பெண்ணும்,

அவைகளிலே நீராடுகிறார்கள். திருப்பணி செய்யப்பட்ட குளங்களில் மட்டும் நீர்ப்பூ மலரும். கொடிகள் மறைந்துபோய்ப் பாசப் புற்களும் குழித்தாமரைகளும் முளைத்துவிட்டன. குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்ளும் நிலையும் சில இடங்களில் ஏற்படும் என்றால், நாட்டுப் போக்கு எவ்வாறு இருக்கிறது என்று அறியலாம்.

கிராமங்களிலே எளியவர்களே மிகுதி. அவர்கள் வசிக்கும் இல்லங்களில் வேண்டிய நன்னீர் வசதிகள் கிடையா. வீடுகளிலும் இன்பம் தரக்கூடிய வீட்டு அமைப்பும் இல்லை. ஆகவே அப்படிப் பட்டவர்களுக்குக் கோயிலும் குளமும் அக்குறைகளை நிவர்த்தி செய்வன ஆகும். இவைகளே பொது இடங்கள் என்க. எல்லா மக்களும் அவைகளில் பழக உரிமை உண்டு. இன்னிசை, சிற்பம், ஆடல் முதலிய நற்கலைகளில் எளியவர்களும் தொடர்பு பெற்று வாழ்க்கையில் இன்பம் துய்ப்பார்கள். அவைகளை அறவே கெடுப்பது சரி அல்ல, ஆகவே, கோயில் குளங்களை நல்ல நிலைமையில் வைத்து, நம் பண்டை வழக்கங்களைப் போக்கடிக்காது அவைகளால் நன்மையும் பெருமையும் அடைவதே நாம் செய்யவேண்டிய கடமையாகும்.

3

பேரூர் வழிபாடு

சிற்பத்திற்கோர் உறைவிடம்

கோவை நகருக்கு அருகில் அமைந்துள்ள ஓர் அரிய சிவத்தலம் பேரூர் ஆகும். இவ்வூர் ஓர் அழகிய இடத்தில் அமைந்துள்ளது.. செழிப்பும், புனிதமும் கொண்ட அவ்வூருக்குக் கோவை நகர மக்கள் மட்டுமேயன்றி அடுத்துள்ள மலையாள நாட்டு மக்களும் பல்லாயிரக் கணக்கில் சென்று இறைவனை வழிபட்டுத் தங்கள் பிறப்பின் ப்யனாக வேண்டியவை வேண்டியாங்கு பெறுவர்.

பேரூர் எனும் அவ்வூருக்கு ஆதிபுரி, பிறவாநெறி, மேலைச் சிதம்பரம் முதலிய பல பெயர்களும் உண்டு. சமயாச்சாரியர்கள் இத்தலத்தை மிகவும் வியந்து தம் தேவாரத் திருப்பதிங்களில் வைத்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இதனைப் புகழ்ந்திருப்பதோடு இங்கு எழுந்தருளியிருக்கும் கூத்தாடுதேவரை நினைப்பூட்டிக் கோயில் திருப்பதிகத்தில் அருளியிருக்கின்றார். அக்காலத்தில் பள்ளுத் திருவிளையாடலும் இங்கே நடந்தது. அதனைக் கச்சியப்ப முனிவர் அருமையான பாக்களில் பேரூர்ப்புராணத்தில் விரித்திருக்கின்றார். இத்தலத்திற்குப் பல்லாயிரக் கணக்கில் மக்கள் வழிபட வந்திருக்கிறார்கள்.

திருப்பேரூர் சென்றதும் நாங்கள் எல்லோரும் ஆற்றங் கரைக்குச் செல்லுவோம். நொய்யலாறு மிகச் செழிப்பான தென்னம் பொழில்களின் இடையே ஓடுகிறது. ஆறு சிறிய தானாலும் தெளிவான நீரும் வெண்மையான மணலும் கொண்டதாகும். சோழன்துறை என்னும் அழகிய படிகளில் இறங்கித் தெளிநீராடுவோம். இறைவனைத் தொழுது திருநீறணிந்து கரையேறி மிகப்பெரிய அரச மரத்தடியில் வீற்றிருக்கும் பிள்ளையாரை வணங்கி வழிபடுவோம். கணக்கற்ற நாகர் பதுமைகள் பிள்ளையாரைச் சூழ்ந்திருக்கும். அரசமரத்தை வலம் செய்துவிட்டுப் பட்டிப் பிள்ளையார் கோயிலுக்குச் செல்லுவோம். அங்கே பட்டிப் பிள்ளையாரை வணங்கிவிட்டுப் பட்டிப்பெருமான் திருக்கோயிலுக்குச் செல்லுவோம்.

பெருங்கோயிலுக்குச் செல்லும் வழியில் அரசம்பலவாணர் கோயில், அழகிய சிற்றம்பலம், மாதேசுவர் கோயில் என்ற மூன்று சிறு கோயில்கள். சற்றுக் கிழக்கே அமைந்துள்ளன. இவைகள் ஒரே பிரகாரம் கொண்ட கோயில்கள். பட்டிப்பெருமான் பெருங்கோயிலே சகல பரிவார தேவதைகளுடன் கூடிய மூன்று பிரகாரக் கோயில். உட்பிரகாரம் வெளிப்பிரகாரம், மாடவீதியும் சேர்ந்தால் அது மூன்று பிரகாரமாக வளர்ந்த பெரும் கோயில் ஆகும். அக்கோயிலில் வழிபாடு தரிசனம் செய்யும் போது பட்டிப் பெருமானைத் தரிசித்த பிறகு உட்பிரகாரத்தில் அறுபத்து மூவர், முருகப்பெருமான் இவர்களைத் தரிசித்துச் சண்டிசுவரரிடம் வணங்கி விடை பெற்றுக் கொண்டு வெளிப்பிரகாரம் சென்று வலம் சுற்றி, கன்னி மூலைப் பிள்ளையார், தண்டாயுதபாணி. இவர்களைத் தொழுது விட்டுப் பச்சைநாயகியம்மனைத் தொழுவோம். பிறகு நடராசப் பெருமான் சந்நிதியில் பணிந்து விட்டுக் கனகசபையில் உள்ள அருமையான வேலைப் பாடுகளை வியந்துகொண்டு வெளியே செல்வோம். இம்முறைதான் எங்களுடைய வழிபாட்டு முறை. திருக்குளம், தீர்த்தங்கள் இவைகளைக் கண்டு வியப்பதும் உண்டு. ஊர் திரும்புகையில் "கொலை மறுத்தல்" முதலிய நூல்களை அருளிய சாந்தலிங்க சுவாமிகள் திருமடத்தை வணங்கிச் செல்வோம். இதுவே திருப்பேரூர் வழிபாடாகும்.

சிற்ப வளர்ச்சி :

நாங்கள் பேரூர்த் தலத்தில் தொழுது கொண்டு போகும்போது, சிற்ப வளர்ச்சியையும் காணுகிறோம். ஆற்றங்கரைச் செழுமையில் அரசமர மேடையின்கீழ் பிள்ளையாரைத் தொழுதோம். இந்த அரசம்பலம்தான் மனிதன் கடவுளைக் கண்ட இடம். அவனுடைய தெய்வ உணர்ச்சி ஒரு பண்டை மரத்தடியில் தோன்றிற்று.

மண்ணே பீடம், மரமே விதானம், வானே முகடு. இந்த இயற்கை இடத்தில் அவன் அழகனைக் கண்டான். அவன் கண்ட கோயிலும் மிக எளிமையானதே.

பிள்ளையார் கோயில் என்றதும் இங்கு பட்டிப் பிள்ளையார் நினைவுக்கு வருகிறார். தோட்டத்தில் ஒரு கருவறையில் இருக்கிறார். கூரைச் சாளையில் இருந்து, பிறகு ஓட்டுச் சாளையில் குடிபோய் இறுதியில் ஒரு செங்கல் முகட்டிற்குக் கீழ் இருப்பார். இது மனிதனுடைய பண்பாட்டிற் கிணங்க மாறுதல் அடையும். ஆனால் பிள்ளையார் கோயிலை ஓர் அறைக்கு மேல் கட்டுவது இல்லை. இது இரண்டாவது வளர்ச்சி.

இதனையடுத்து வழியில் அரசம்பலவாணர் கோயில், அழகிய சிற்றம்பலம், மாதவீச்சுரம் பார்க்கின்றோம். அரம்பலத்தில் அப்பனோடு அம்மையும் எழுந்தருளியிருக்கின்றார். கருவறையோடு முன் மண்டபங்களும் உண்டு. இவைகள் மூன்றாவது வளர்ச்சிப் படிகள்.

இனிப் பெருங்கோயிலுள் ஒரு பிரகாரம் மூன்றாக வளர்ந்திருக்கிறது. அப்பனோடு, அம்மை, பிள்ளைகள் இருவர், கூத்தாடு தேவர், பரிவார தேவதைகளும் இருக்கின்றனர். இது மிக முதிர்ந்த ஆலயச் சிற்பம். இந்த ஆலயத்திலேயே ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு காலத் தத்துவத்தையும் தோற்றுவிக்கும். பட்டிப் பெருமானின் மூலத்தானம் என்ற கருவறை ஆதியில் தோன்றியது. அதன்பின் ஒவ்வொரு பகுதியாக ஆலயம் பெருகிற்று. ஆலய சரித்திரத்தை ஆராய்ந்தால் அதுவே சிற்ப வளர்ச்சியைக் காட்டிவிடும். மூலத்தானத்தில் இருக்கும் பெருமான் சுயம்பு அல்லது தான்தோன்றி ஈசர்.

இறைவன் பெயர் 'திரு ஆன்பட்டி உடையார் எனக் கல்வெட்டு கூறுகிறது. இயற்கைக் கோயில் நாளாவட்டத்தில் செயற்கைக் கோயிலாக வளர்ந்தது. இந்த வளர்ச்சியிலும் இரு கட்டங்கள் உண்டு. முதல் கட்டம் இறைவன் இறைவி எழுந்தருளியிருக்கும் பகுதி, இரண்டாம் கட்டம் கூத்தாடு தேவர் (நடராசர்) எழுந்தருளியிருக்கும் பகுதி. முதல் கட்டம் வளர்ச்சியில் நான்காம் படியாகும். அப்பன், அம்மை இடையில் கந்தர் ஆக சோமாஸ் கந்தர் நிலையில் காட்சி தருதலைக் காண்கிறோம்.

கனகசபை என்கிற கூத்தாடு தேவர் சந்நிதி ஐந்தாவது படி ஆகும். அப்பகுதிதான் இறுதியில் சேர்க்கப்பட்ட மண்டபம் ஆகும். நாயக்க அரசர்களால் கட்டி வைத்த அரிய வேலைப்பாடுகள் அப்பகுதி கொண்டுள்ளது. மிக அற்புதமான கல் தூண்களில் மூர்த்தங்கள் அழகாக ஆக்கப்பட்டிருக்கின்றன.

மேல் தளத்தில் கற்சங்கிலிகள், பல்லிதழ் தாமரை மலர், உருளும் வளையம், வேட்டையாடும் அற்புத உருவங்கள், நர்த்தனக் கோலங்கள் இவைகளை எல்லாம் காண்கிறோம். இறைவனுடைய திருவிளையாடல்கள் கற்சிலைகளாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கனகசபை சரித்திரத்தின் முதிர்ச்சிக்காலம் அல்லது ஐந்தாவது படியை விளக்குகிறது. இங்கே இறுதியாகத் தொழுது விட்டுத் திரும்புகிறோம். ஆகவே மரத்தின் ஓர்அறைக்கருவறை, அம்மையோடு சேர்ந்த கோயில், பரிவார தேவதைகளுடன் வாழும் கோயில், இறுதியில் சேர்ந்த சித்திரம் புனைந்த கனகசபை, இந்த முறையில் ஆலயச் சிற்பக் கலையின் வளர்ச்சி முறையை நாம் அறியலாம். இதுவே பேரூரில் கண்ட சிற்ப வளர்ச்சி. அதுவே உலகம் எங்கும் காணும் சிற்ப வளர்ச்சியும் ஆகும்.

பெருங்கோயிலுக்குச் செல்லும் வழியில் அரசம்பலவாணர் கோயில், அழகிய சிற்றம்பலம், மாதேசுவர் கோயில் என்ற மூன்று சிறு கோயில்கள். சற்றுக் கிழக்கே அமைந்துள்ளன. இவைகள் ஒரே பிரகாரம் கொண்ட கோயில்கள். பட்டிப்பெருமான் பெருங்கோயிலே சகல பரிவார தேவதைகளுடன் கூடிய மூன்று பிரகாரக் கோயில். உட்பிரகாரம் வெளிப்பிரகாரம், மாடவீதியும் சேர்ந்தால் அது மூன்று பிரகாரமாக வளர்ந்த பெரும் கோயில் ஆகும். அக்கோயிலில் வழிபாடு தரிசனம் செய்யும் போது பட்டிப் பெருமானைத் தரிசித்த பிறகு உட்பிரகாரத்தில் அறுபத்து மூவர், முருகப்பெருமான் இவர்களைத் தரிசித்துச் சண்டீசுவரரிடம் வணங்கி விடை பெற்றுக் கொண்டு வெளிப்பிரகாரம் சென்று வலம் சுற்றி, கன்னி மூலைப் பிள்ளையார், தண்டாயுதபாணி. இவர்களைத் தொழுது விட்டுப் பச்சைநாயகியம்மனைத் தொழுவோம். பிறகு நடராசப் பெருமான் சந்நிதியில் பணிந்து விட்டுக் கனகசபையில் உள்ள அருமையான வேலைப் பாடுகளை வியந்துகொண்டு வெளியே செல்வோம். இம்முறைதான் எங்களுடைய வழிபாட்டு முறை. திருக்குளம், தீர்த்தங்கள் இவைகளைக் கண்டு வியப்பதும் உண்டு. ஊர் திரும்புகையில் "கொலை மறுத்தல்" முதலிய நூல்களை அருளிய சாந்தலிங்க சுவாமிகள் திருமடத்தை வணங்கிச் செல்வோம். இதுவே திருப்பேரூர் வழிபாடாகும்.

சிற்ப வளர்ச்சி :

நாங்கள் பேரூர்த் தலத்தில் தொழுது கொண்டு போகும்போது, சிற்ப வளர்ச்சியையும் காணுகிறோம். ஆற்றங்கரைச் செழுமையில் அரசமர மேடையின்கீழ் பிள்ளையாரைத் தொழுதோம். இந்த அரசம்பலம்தான் மனிதன் கடவுளைக் கண்ட இடம். அவனுடைய தெய்வ உணர்ச்சி ஒரு பண்டை மரத்தடியில் தோன்றிற்று.

மண்ணே பீடம், மரமே விதானம், வானே முகடு. இந்த இயற்கை இடத்தில் அவன் அழகனைக் கண்டான். அவன் கண்ட கோயிலும் மிக எளிமையானதே.

பிள்ளையார் கோயில் என்றதும் இங்கு பட்டிப் பிள்ளையார் நினைவுக்கு வருகிறார். தோட்டத்தில் ஒரு கருவறையில் இருக்கிறார். கூரைச் சாளையில் இருந்து, பிறகு ஓட்டுச் சாளையில் குடிபோய் இறுதியில் ஒரு செங்கல் முகட்டிற்குக் கீழ் இருப்பார். இது மனிதனுடைய பண்பாட்டிற் கிணங்க மாறுதல் அடையும். ஆனால் பிள்ளையார் கோயிலை ஓர் அறைக்கு மேல் கட்டுவது இல்லை. இது இரண்டாவது வளர்ச்சி.

இதனையடுத்து வழியில் அரசம்பலவாணர் கோயில், அழகிய சிற்றம்பலம், மாதவீச்சுரம் பார்க்கின்றோம், அரம்பலத்தில் அப்பனோடு அம்மையும் எழுந்தருளியிருக்கின்றார். கருவறையோடு முன் மண்டபங்களும் உண்டு. இவைகள் மூன்றாவது வளர்ச்சிப் படிகள்.

இனிப் பெருங்கோயிலுள் ஒரு பிரகாரம் மூன்றாக வளர்ந்திருக்கிறது. அப்பனோடு, அம்மை, பிள்ளைகள் இருவர், கூத்தாடு தேவர், பரிவார தேவதைகளும் இருக்கின்றனர். இது மிக முதிர்ந்த ஆலயச் சிற்பம். இந்த ஆலயத்திலேயே ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு காலத் தத்துவத்தையும் தோற்றுவிக்கும். பட்டிப் பெருமானின் மூலத்தானம் என்ற கருவறை ஆதியில் தோன்றியது. அதன்பின் ஒவ்வொரு பகுதியாக ஆலயம் பெருகிற்று. ஆலய சரித்திரத்தை ஆராய்ந்தால் அதுவே சிற்ப வளர்ச்சியைக் காட்டிவிடும். மூலத்தானத்தில் இருக்கும் பெருமான் சுயம்பு அல்லது தான்தோன்றி ஈசர்.

இறைவன் பெயர் 'திரு ஆன்பட்டி உடையார் எனக் கல்வெட்டு கூறுகிறது. இயற்கைக் கோயில் நாளாவட்டத்தில் செயற்கைக் கோயிலாக வளர்ந்தது. இந்த வளர்ச்சியிலும் இரு கட்டங்கள் உண்டு. முதல் கட்டம் இறைவன் இறைவி எழுந்தருளியிருக்கும் பகுதி, இரண்டாம் கட்டம் கூத்தாடு தேவர் (நடராசர்) எழுந்தருளியிருக்கும் பகுதி. முதல் கட்டம் வளர்ச்சியில் நான்காம் படியாகும். அப்பன், அம்மை இடையில் கந்தர் ஆக சோமாஸ் கந்தர் நிலையில் காட்சி தருதலைக் காண்கிறோம்.

கனகசபை என்கிற கூத்தாடு தேவர் சந்நிதி ஐந்தாவது படி ஆகும். அப்பகுதிதான் இறுதியில் சேர்க்கப்பட்ட மண்டபம் ஆகும். நாயக்க அரசர்களால் கட்டி வைத்த அரிய வேலைப்பாடுகள் அப்பகுதி கொண்டுள்ளது. மிக அற்புதமான கல் தூண்களில் மூர்த்தங்கள் அழகாக ஆக்கப்பட்டிருக்கின்றன.

மேல் தளத்தில் கற்சங்கிலிகள், பல்லிதழ் தாமரை மலர், உருளும் வளையம், வேட்டையாடும் அற்புத உருவங்கள், நர்த்தனக் கோலங்கள் இவைகளை எல்லாம் காண்கிறோம். இறைவனுடைய திருவிளையாடல்கள் கற்சிலைகளாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கனகசபை சரித்திரத்தின் முதிர்ச்சிக்காலம் அல்லது ஐந்தாவது படியை விளக்குகிறது. இங்கே இறுதியாகத் தொழுது விட்டுத் திரும்புகிறோம். ஆகவே மரத்தின் ஓர்அறைக்கருவறை, அம்மையோடு சேர்ந்த கோயில், பரிவார தேவதைகளுடன் வாழும் கோயில், இறுதியில் சேர்ந்த சித்திரம் புனைந்த கனகசபை, இந்த முறையில் ஆலயச் சிற்பக் கலையின் வளர்ச்சி முறையை நாம் அறியலாம். இதுவே பேரூரில் கண்ட சிற்ப வளர்ச்சி. அதுவே உலகம் எங்கும் காணும் சிற்ப வளர்ச்சியும் ஆகும்.

2 தென் கயிலாயம்

திருமால் இறைவனுடைய திருநடனத்தைக் காண விரும்பித் திருக்கயிலையில் தவம் செய்தார். சிவபெருமான் அவர் முன் தோன்றித் "தென்கயிலாயமாய் இருக்கின்ற மேலைச்சிதம்பர நடனக் காட்சியைக் காண்பதற்காகக் காலமுனிவரும், காமதேனுவும் காத்துள்ளார்கள்; நீயும் கோமுனியாக வடிவு கொண்டு திருப்பேரூரைச் சார்ந்திரு. அங்கே வெள்ளியம்பலத்தில் திருநடனம் செய்து காட்டுவோம்" என்று கூறினார். திருமால் கோமுனியாய் மரவுரி உடுத்து, சடைமுடி தரித்து, திருநீறும், உருத்திராக்கமும் அணிந்து பட்டிப்பெருமானை வழிபட்டார். அவர்தம் நினைவாக அமைந்த கோயில் தென்கயிலாயமாகும். இங்கு சக்கர தீர்த்தம் உள்ளது. மேற்குப் பார்த்த திருக்கோயில் வாயில் நிலையிலும், அதிட்டானத்திலும் கொங்குச் சோழர் கல்வெட்டுக்கள் உள்ளன. தற்பொழுது புதிதாகத் திருப்பணி செய்து மிக்க எழிலுடன் விளங்குகிறது. இக்கோயில் பட்டிப் பெருமான் கோயிலின் தெற்கே தென்கயிலாய வீதியில் அமைந்துள்ளது.

வடகயிலாயம் :

படைப்புத் தொழில் செய்கின்ற பிரமன் தன் தொழிலை மறந்து உறங்கத் தொடங்கினான். உறக்கம் நீங்கி உலகைப் படைக்கத் தொடங்கிய அளவில் அத்தொழில் கைகூடவில்லை. பிரமன் கயிலையை அடைந்து சிவபெருமானை வணங்கிக் "சிறியேன் பிழையைப் பொறுத்தருள வேண்டு" மென்று விண்ணப்பம் செய்தார். அதற்குச் சிவபிரான் "திருப்பேரூரில் அரசமர மூலத்தின் கண்ணதாகிய வெள்ளியம்பலத்தில் நமது நடனத்தைக் கண்ணுற்றால் எண்ணற்ற வரம் பெறலாம்," எனத் திருவாய் மலர்ந்தார். பிரமன் பட்டிமுனி வடிவுகொண்டு தண்டகமண்டலங்களைத் தாங்கி, திருநீறு, திருஉத்திராக்கம் தரித்து ஆதிபுரியாகிய பேரூர் வந்தார். பட்டிப்பெருமானை வழிபட்டுத் தன் நினைவாக அமைத்த கோயில் வடகயிலாயமாகும். இங்கு பிரமதீர்த்தம் உள்ளது, இத்தீர்த்தத்தில் குளித்தால் மலடு நீங்கும், பைத்தியம் நீங்கும், பலவிதமான நோய்களும் நீங்கும் என்று பேரூர்ப் புராணம் கூறுகிறது.

ஒரே கல்லால் ஆன மிகப்பெரிய ஆவுடையார் பெரிய சிவலிங்கம் இங்குள்ள தனிச்சிறப்பு. பிரமன் வேள்வி செய்த இடம் தற்பொழுது திருநீற்று மேடு என்று அழைக்கப்படுகிறது. இவ்வாலயம் பட்டி விநாயகர் கோயிலுக்கு வடமேற்கில் உள்ளது. தற்பொழுது நல்ல முறையில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இக்கோயில் பட்டி விநாயகர் கோயிலின் பின்புறம் வடகயிலாய வீதியில் அமைந்துள்ளது.

அழகிய திருச்சிற்றம்பலம் :-

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பேரூரை வணங்கிச் சென்று, தில்லைச் சிற்றம்பலத்திலே அம்பலவாணரைப் பாடும் பதிகத்தில் "பேரூர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாமன்றே" என்று அருளிச் செய்தார். அது கேட்ட தில்லைவாழ் அந்தணர்கள் இத்தில்லைத்தலம் போல வேறு தலம் உண்டோ என வினவியதற்குச் சுந்தரர் பேரூரின் பெருமைகளைக் கூறினார். உடனே தில்லை வாழந்தணர்கள் திருப்பேரூரை அடைந்து காஞ்சி நதியில் நீராடி சிவ சின்னங்கள் பூண்டு அம்பலவாணரையும், சிவகாமி அம்மையையும் வேண்டினர், அவ்வந்தணர்கள் சிவலிங்கம் ஒன்றை நிறுவி வழிபட்டனர். இவ்வாலயத்திற்கு அழகிய திருச்சிற்றம்பலம் என்றும், இறைவனுக்கு அழகிய திருச்சிற்றம்பலமுடையார் என்றும் பெயர். கொங்குச் சோழர் கல்வெட்டுக்கள் அடித்தளத்தில் உள்ளன. இடங்கை நாயகமுடையார் என்று எழுந்தருளுவித்த அழகிய சிற்றம்பலமுடையார் என்று கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. வேறொரு கல்வெட்டு இவ்வாலயத்தில் திருமுறைகள் பாடுவதற்கு திருமுறை வாணர்கள் அமைக்கப்பட்டிருந்ததைக் குறிப்பிடுகிறது. தற்பொழுது புதிதாகத் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இக்கோயில் அரசம்பலவாணர் கோயில் முன்புறம் பண்டித புலவர் கந்தசாமிபிள்ளை வீதியில் உள்ளது.

மாதேசுவரர் கோயில் :-

விஜய நகரப் பேரரசுக்குப் பின் மைசூர்ப் பகுதியில் பதினைந்தாம் நூற்றாண்டில் தெற்கணாம்பி மன்னர்கள் ஆட்சி செய்தனர். அக்காலத்தில் அமைச்சராக இருந்த சங்கரையன் மகன் மாதையன்

2 தென் கயிலாயம்

திருமால் இறைவனுடைய திருநடனத்தைக் காண விரும்பித் திருக்கயிலையில் தவம் செய்தார். சிவபெருமான் அவர் முன் தோன்றித் "தென்கயிலாயமாய் இருக்கின்ற மேலைச்சிதம்பர நடனக் காட்சியைக் காண்பதற்காகக் காலமுனிவரும், காமதேனுவும் காத்துள்ளார்கள்; நீயும் கோமுனியாக வடிவு கொண்டு திருப்பேரூரைச் சார்ந்திரு. அங்கே வெள்ளியம்பலத்தில் திருநடனம் செய்து காட்டுவோம்" என்று கூறினார். திருமால் கோமுனியாய் மரவுரி உடுத்து, சடைமுடி தரித்து, திருநீறும், உருத்திராக்கமும் அணிந்து பட்டிப்பெருமானை வழிபட்டார். அவர்தம் நினைவாக அமைந்த கோயில் தென்கயிலாயமாகும். இங்கு சக்கர தீர்த்தம் உள்ளது. மேற்குப் பார்த்த திருக்கோயில் வாயில் நிலையிலும், அதிட்டானத்திலும் கொங்குச் சோழர் கல்வெட்டுக்கள் உள்ளன. தற்பொழுது புதிதாகத் திருப்பணி செய்து மிக்க எழிலுடன் விளங்குகிறது. இக்கோயில் பட்டிப் பெருமான் கோயிலின் தெற்கே தென்கயிலாய வீதியில் அமைந்துள்ளது.

வடகயிலாயம் :

படைப்புத் தொழில் செய்கின்ற பிரமன் தன் தொழிலை மறந்து உறங்கத் தொடங்கினான். உறக்கம் நீங்கி உலகைப் படைக்கத் தொடங்கிய அளவில் அத்தொழில் கைகூடவில்லை. பிரமன் கயிலையை அடைந்து சிவபெருமானை வணங்கிக் "சிறியேன் பிழையைப் பொறுத்தருள வேண்டு" மென்று விண்ணப்பம் செய்தார். அதற்குச் சிவபிரான் "திருப்பேரூரில் அரசமர மூலத்தின் கண்ணதாகிய வெள்ளியம்பலத்தில் நமது நடனத்தைக் கண்ணுற்றால் எண்ணற்ற வரம் பெறலாம்," எனத் திருவாய் மலர்ந்தார். பிரமன் பட்டிமுனி வடிவுகொண்டு தண்டகமண்டலங்களைத் தாங்கி, திருநீறு, திருஉத்திராக்கம் தரித்து ஆதிபுரியாகிய பேரூர் வந்தார். பட்டிப்பெருமானை வழிபட்டுத் தன் நினைவாக அமைத்த கோயில் வடகயிலாயமாகும். இங்கு பிரமதீர்த்தம் உள்ளது. இத்தீர்த்தத்தில் குளித்தால் மலடு நீங்கும், பைத்தியம் நீங்கும், பலவிதமான நோய்களும் நீங்கும் என்று பேரூர்ப் புராணம் கூறுகிறது.

ஒரே கல்லால் ஆன மிகப்பெரிய ஆவுடையார் பெரிய சிவலிங்கம் இங்குள்ள தனிச்சிறப்பு. பிரமன் வேள்வி செய்த இடம் தற்பொழுது திருநீற்று மேடு என்று அழைக்கப்படுகிறது. இவ்வாலயம் பட்டி விநாயகர் கோயிலுக்கு வடமேற்கில் உள்ளது. தற்பொழுது நல்ல முறையில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இக்கோயில் பட்டி விநாயகர் கோயிலின் பின்புறம் வடகயிலாய வீதியில் அமைந்துள்ளது.

அழகிய திருச்சிற்றம்பலம் :-

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பேரூரை வணங்கிச் சென்று, தில்லைச் சிற்றம்பலத்திலே அம்பலவாணரைப் பாடும் பதிகத்தில் "பேரூர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாமன்றே" என்று அருளிச் செய்தார். அது கேட்ட தில்லைவாழ் அந்தணர்கள் இத்தில்லைத்தலம் போல வேறு தலம் உண்டோ என வினவியதற்குச் சுந்தரர் பேரூரின் பெருமைகளைக் கூறினார். உடனே தில்லை வாழந்தணர்கள் திருப்பேரூரை அடைந்து காஞ்சி நதியில் நீராடி சிவ சின்னங்கள் பூண்டு அம்பலவாணரையும், சிவகாமி அம்மையையும் வேண்டினர், அவ்வந்தணர்கள் சிவலிங்கம் ஒன்றை நிறுவி வழிபட்டனர். இவ்வாலயத்திற்கு அழகிய திருச்சிற்றம்பலம் என்றும், இறைவனுக்கு அழகிய திருச்சிற்றம்பலமுடையார் என்றும் பெயர். கொங்குச் சோழர் கல்வெட்டுக்கள் அடித்தளத்தில் உள்ளன. இடங்கை நாயகமுடையார் என்று எழுந்தருளுவித்த அழகிய சிற்றம்பலமுடையார் என்று கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. வேறொரு கல்வெட்டு இவ்வாலயத்தில் திருமுறைகள் பாடுவதற்கு திருமுறை வாணர்கள் அமைக்கப்பட்டிருந்ததைக் குறிப்பிடுகிறது. தற்பொழுது புதிதாகத் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இக்கோயில் அரசம்பலவாணர் கோயில் முன்புறம் பண்டித புலவர் கந்தசாமிபிள்ளை வீதியில் உள்ளது.

மாதேசுவரர் கோயில் :-

விஜய நகரப் பேரரசுக்குப் பின் மைசூர்ப் பகுதியில் பதினைந்தாம் நூற்றாண்டில் தெற்கணாம்பி மன்னர்கள் ஆட்சி செய்தனர். அக்காலத்தில் அமைச்சராக இருந்த சங்கரையன் மகன் மாதையன்

என்பவன் அருள்மிகு பட்டிப் பெருமான் திருக்கோயிலின் முன்பகுதியில் எட்டுமூலை கொண்ட எழில்மிகு தெப்பக்குளம் ஒன்றை அமைத்தான். தெப்பக்குளத்தின் முதற்படியிலும், ஆறாம் படியிலும் பதினாறு இடங்களில் தமிழிலும், கன்னடத்திலும்.

"தெற்கணாம்பி சங்கரையன் அவர்கள் குமாரன்
மாதையன் சேவை"

என்று கல்வெட்டுக்கள் உள்ளன. பங்குனி உத்திரம் பெருவிழாவின் போது தெப்பத் திருவிழா ஆண்டுதோறும் இந்தத் தெப்பக்குளத்தில் நடைபெற்று வருகிறது.

மாதையன் தெப்பக்குளத்தின் கீழ்க்கரையில் தனியாக ஒரு சிவாலயத்தைக் கட்டி அதற்கு "மாதேசுவரன்" என்றும் பெயரிட்டுள்ளான். தற்பொழுது திருப்பணி செய்யப்பட்டுள்ளது. மாதையன் வீரசைவ மரபினன்.

தென்கயிலாயம், வடகயிலாயம், அழகிய திருச்சிற்றம்பலம், மாதேசுவரர் கோயில் ஆகியன மிகவும் பழுதடைந்திருந்தன. அவற்றைத் திருப்பேரூர் மணிவாசகர் அருட்பணி மன்றத்தார் சிறந்த முறையில் திருப்பணி செய்து திருக்குட நன்னீராட்டுச் செய்துள்ளனர். அருள்மிகு பட்டிப் பெருமானை வழிபடுபவர்கள் இந்தச் சிவாலயங்களையும் வழிபாடு செய்தால் வாழ்வில் எல்லா வளங்களையும் பெறலாம். இக்கோயில்களுக்குச் செல்வதற்கு வசதியாக ஆங்காங்கே வழிகாட்டுப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

4

இராயலுசீமையில் தமிழடியார்கள்

துங்கபத்திரை நதிக்கரையில் ஹம்பி என்ற ஓர் ஊரும் அதனையடுத்து அளவிறந்த பண்டைச்சின்னங்களும் இருக்கின்றன. இராமாயண காலத்தில் இது பம்பைக்கரைக் கிஷ்கிந்தையாக இருந்ததென்பர். பாழடைந்த அரண்மனைகள், கோட்டை கொத்தளங்கள், இடிந்த ஆலயங்கள், உடைந்த சிலைகள், தூர்ந்த வாவிகள் முதலிய சின்னங்கள் ஏராளமாகக் கிடக்கின்றன. இரண்டு மூன்று ஆலயங்களைத் தவிர வேறு எந்த ஆலயத்திலும் வழிபாடென்பதே கிடையாது. அந்தப் பண்டைச்சின்னங்களை முழுமையும் கண்டு திரும்புவதற்கு இரண்டு நாட்கள் பிடிக்கும். அப்பெரும் பரப்பினைக்கொண்ட சின்னங்களைக் காணும்போது அக்காலத்திய அரசியற் சிறப்பு எத்தன்மையதென்பது புரியும். ஆலயம் செதுக்கிய கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. கர்ப்பகிரகத்தில் சிவலிங்கமும் அருகில் ஒரு சிறு கர்ப்பக்கிரகத்தில் அம்பிகையும் எழுந்தருளியிருக்கிறார்கள். முன்மண்டபம் பதினாறுகால் கொண்டது; அதற்கு முன் நந்தி மண்டபம் 4 கால்கள் கொண்டது. அவைகளைச் சுற்றிலும் பெரிய பிரகாரமும் அதைச் சுற்றி ஒரு கல் மதிலும் இருக்கின்றன. ஆலயம் கிழக்கு நோக்கியது: முகத்துவாரத்தில் கோபுரம் இல்லை. வாயிலையடுத்துத் தெற்கில் மடைப்பள்ளியும் வடக்கில் வாகன மண்டபமும் சமீபத்தில் கட்டப்பட்டுள்ளன. வெளித் தோற்றத்திற்கு இவ்வாலயத்தில் யாதொரு சிறப்பும் தெரிவதில்லை. மண்டபங்களிலோ கற்றூண்களிலோ விசேஷமாகச் சிற்பங்களுமில்லை. ஆகையால் இங்கே சிற்ப நோக்கத்துடன் தரிசிக்கச் செல்லுகிறவர்கள் ஏமாற்றத்துடன் திரும்புவார்கள். ஆலய நிர்வாகிகளைக் கேட்டதிலும் இவ்வாலயச் சரிதமோ, வரலாற்றுக் குறிப்போ, வேறு எவ்வித ஐதீகமோ யாதொன்றும் கிடைக்கவில்லை.

இவ்விதம் இவ்வாலயத்தின் யாதொரு விசேடமும் இல்லையென்று சுற்றிவந்த எனக்குத் திடீரென ஒரு புதையல் கிடைத்தாற்போலச் சுற்று மதில்களில் சில உருவங்கள் காணப்பட்டன. அவைகளைப்பற்றி விசாரித்தேன். ஒருவரும் ஒரு புலனும் தரவில்லை. பிறகு நானே அவைகளைக் நன்றாக உற்றுநோக்கினேன். சுற்று

மதில்களில் நாற்புறமும் நெடுக உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. ஓர் அடி உயரத்திலும் நான்கு அல்லது ஐந்து அடி நீளத்திலும் ஒவ்வொரு சரிதத்தை விவரிக்கும் உருவச்சித்திரங்களாக அவைகள் ஏற்பட்டிருந்தன. இவ்விதம் மதில் முழுவதில் காணப்படும் சித்திரங்களை எண்ணிப் பார்த்ததில் 46 எண்ணிக்கை வரை எனக்குக் கிடைத்தன. மேலும் ஆராய்ந்ததில் மடைப்பள்ளியிலும் வாகன மண்டபத்திலும் பல சிற்பங்கள் இருந்தன; அவைகளையும் ஆராய்ந்த பின்னர். 63 சரித்திரங்கள் அங்கு பொறிக்கப்பட்டுள்ளன என அறிந்தேன். அவைகளுள் ஒன்றில் தாய் தந்தையர் ஒரு குழந்தையை அறுக்கவும், அருகில் ஒரு முனிவருக்கு அன்னம் படைக்கவும், குழந்தை ஓடி வரவும் முதலிய சிற்பங்களைக் கண்டபின் அது சிறுத்தொண்ட நாயனார் சரித்திரம் என்று கண்டேன். உடனே மற்ற சரிதங்களும் தெளிவாயின. எனவே தமிழ்நாட்டு அறுபத்து மூன்று அடியார்களின் சரிதங்களும் இத்தெலுங்கு நாட்டில் இவ்வாலயத்தில் பொறிக்கப்பட்டுள்ளன என்று அறிந்தேன்.

தென்னாட்டிலுள்ள ஒவ்வொரு பெரிய சிவாலயத்திலும் அறுபத்துமூவர் கல் திருமேனிகளாகவும் செப்புத் திருமேனிகளாவும் எழுந்தருளியுள்ளதை நாம் அறிவோம். ஆனால் அந்நாயன்மார்கள் சரிதங்களைச் சித்திர ரூபமாகக் கல்லில் எந்த ஆலயத்திலும் அமைத்திருப்பதாகத் தெரியவில்லை. இந்த மல்லேசுவரர் ஆலயத்தில் இவ்வாறு சரிதச் சித்திரங்களாக நாயன்மார்கள் காட்சியளிப்பதைக் கேட்க நம் சைவ மக்கள் மிகவும் மகிழ்வார்கள்.

இனி இச்சரிதங்கள் தெலுங்கு நாட்டுக்கு எவ்வாறு ஏகினவென்பதை ஆராய்வோம். இச்சரிதங்கள் ஒன்பதாவது நூற்றாண்டிலிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு முன்னமே ஏற்பட்டவை. கண்ணப்பர் சரிதம் 2000 ஆண்டுகட்கு முன்னமே ஏற்பட்டிருத்தல் வேண்டும். கண்ணப்பர், நேசநாயனார் முதலியோர் சரிதங்கள் தெலுங்கு வழங்கும் நாட்டிலேயே ஏற்பட்டவை. சிறுத்தொண்டர் சரிதம் கன்னடநாட்டு வாதாபி வரையில் எட்டியிருந்தது. மேலும் குலோத்துங்க சோழன் கலிங்கப்போர் புரிந்தகாலத்தில், தமிழருடைய விவரங்களைத் தெலுங்கு நாடு முழுமையும் பரப்பியிருத்தல் வேண்டும். கோதாவரி ஜில்லாவிலுள்ள திராக்ஷா, மனதில் எண்ணவும் முடியாதது. அந்நாடு செழிப்புற்றிருந்த நாளில் அதனைக் காணவந்த ஐரோப்பிய யாத்திரிகர்கள் அதைப் போன்றதோர் ஊர் உலகெங்கும் கிடையாதென்று

எழுதியிருக்கிறார்கள். இத்தனைச் சிறப்புவாய்ந்த பெரியநகரம் கி. பி. 1565-இல் முகம்மதியரால் அழிவுற்றது. அந்நகருக்கு விஜயநகரம் என்ற பெயர் இருந்தது. அதனை ஆண்ட அரசும் சுமார் 300 ஆண்டுகளாக மிகவும் சிறப்புற்று விளங்கிவந்தது. அதனைப் புக்கர், அரிகரர் என்ற இரு அரசகுமரர்கள் தாபித்துப் பெருக்கினர். பின்னர் அவ்வரசியலாரில் மிகவும் சிறப்புற்று விளங்கினவர் **கிருஷ்ணதேவராயர்** என்ற மேதாவி. அவ்வம்சத்தரசர்களைப் பொதுவாக இராயலுசீமை என்று பெயரிட்டழைக்கின்றனர். அது இப்போது பல்லாரி, கர்நூல், கடப்பை, அநந்தபூர் என்ற நான்கு ஜில்லாக்களைக் கொண்ட ஒரு பிராந்தியமாகும். அதில் பெரும்பாலும் தெலுங்கும், மேற்குப் பாகத்தில் கன்னடமும் பேசப்பட்டு வருகிறது. நிலத்தில் அதிக மழைவளம் கிடையாது. ஆனால் கரிசல்மண்தரையாக இருப்பதால் பருத்தி நன்றாக விளைகின்றது. கடல் மட்டத்திற்குச் சுமார் 1000 அடி உயர்ந்த பீடபூமியாக இருக்கிறது. இவ்வித சீமை ஒரு தனிப்பட்ட நிலத்தன்மை கொண்டதாகும். இச்சீமையை நான் சமீபத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து கண்ட செய்திகளில் ஒன்றை இங்கு குறிக்கிறேன்.

இராயலுசீமையில் இக்காலத்திற் சிறந்த ஊர் பல்லாரி ஆகும். இவ்வூர் ஒரு குன்றுக்கருகில் கட்டப்பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் ஊர்கள் பெரும்பாலும் நதிதீரங்களில் தோன்றியிருக்கின்றன. நீர் வசதி, விளைபொருள் வசதி, கட்டடத்துக்குந் செங்கல்வசதி முதலியவைகளையே முக்கிய காரணங்களாகக் கொண்டு அவ்வூர்கள் கட்டப்பெற்றிருக்கின்றன. ஆனால் இராயலு சீமையிலோ ஊர்கள் குன்றுகட்கருகில் கட்டப்பட்டுள்ளன. எங்கும் களிமண் தரையாகையால் வீடு கட்டுவதற்குச் செங்கல் கிடையாது. குன்றுகளினருகில் இருந்தால் அக்குன்றுகளிலிருந்து கற்களைவெட்டிக் கட்டிடங்கட்கு உபயோகிக்கலாம். மேலும் குன்றுகளில் அநேகமாகக் கோட்டைகள் கட்டலாம். நாட்டில் அரசர்கட்குள் சச்சரவுகள் உண்டானால் அக்கோட்டைகள் அபயம் புகத்தக்க இடங்களாக இருக்கும். இக்காரணங்களைக் கொண்டேதான் அந்நாட்டில் குன்றுகளுக்கருகில் ஊர்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பல்லாரியும் இவ்வாறே கோட்டைக் கருகில் ஏற்பட்டிருக்கின்றது. ஆங்கிலேயர் வந்தபிறகு கோட்டைக்கு வெளியிலும் ஊர் பரவியிருக்கிறது.

பல்லாரிக்கோட்டை மிகவும் பலங்கொண்டது; செதுக்கிய கருங்கற்களாற் கட்டப்பட்டது.: மதில்கள் வெகு உயரமும் அகலமும்

உள்ளவை. மலைமீது பல கொத்தளங்களும் மதில்களும் உண்டு ; அடிவாரத்திலும் சுற்று மதில்களுண்டு. பெரும் பாறைகளின்மீது துருக்கர் தொப்பிபோன்ற அழகிய கொத்தளங்களுமுண்டு. இவைகளை நமது நாட்டு மக்கள் பார்த்து மகிழவேண்டும்.

இவ்விதக் கோட்டைக்குள் மலைக்கும் மதிலுக்கும் நடுவில் மல்லேசுவரம் என்ற சிவாலயம் ஒன்று இருக்கிறது. அது கட்டப்பட்டகாலம் தெரியவில்லை. கோட்டை ஏற்பட்ட போதே இவ்வாலயமும் ஏற்பட்டிருக்க வேண்டும். இராயலுசீமையிலுள்ள கோட்டைகளெல்லாம் பெரும்பாலும் விஜயநகரசாம்ராச்சிய காலத்தில் ஏற்பட்டவையாகையால், இக்கோட்டையும் இதிலுள்ள ஆலயமும் அவ்வரசர்கள் காலத்திலேயே ஏற்பட்டிருத்தல் வேண்டும். குறைந்தபக்ஷம் ஐந்து நூற்றாண்டுகட்டுமுன் அது கட்டப்பட்டிருக்க வேண்டும். அதில் அச்சோழன் தனது மெய்க்கீர்த்திகளைப் பொறித்திருக்கிறான். பல்லவர் காலத்தில் இராயலு சீமை முழுவதும் அவர்களுடைய ஆதிக்கத்துக்குள் பலமுறை வந்தது. ஆகவே தமிழ்நாட்டுச் சரிதைகள் தெலுங்கு நாட்டிற்குச் சென்றது சகஜமே.

பசவண்ணர் காலத்தில் (கி. பி. 12-ஆம் நூற்றாண்டில்) வீரசைவம் பரவினபோது சிவனடியார்கள் பெரிதும் போற்றப்பட்டனர். கன்னடதேசத்து அடியார்களோடு தமிழ் நாட்டு அடியார்களையும் அடியார் கூட்டத்துட் சேர்த்து வீரசைவர்கள் போற்றி வந்தனர். தங்கள் நூல்களிலும் அடியார் சரிதைகளை விரிக்கத் தொடங்கினார்கள். தெலுங்கு மொழியில் பசவபுராணம் இயற்றிய பால்குரிகி சோமநாதர் அதனுள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலிய பல திருத்தொண்டர்களின் சரிதைகளைக் கூறுகிறார். கன்னடத்தில் பசவபுராணம் எழுதிய பீமகவி மேலும் சில அடியவர் சரிதைகளைச் சேர்த்துள்ளார். இச்சரிதங்களில் சில இடங்களில் பெயர்களும் விவரங்களும் மாறிக்காணப்படும். கர்ண பரம்பரையாக ஒரு நாடுவிட்டு மற்றொருநாடு செல்லுங்கால் சரிதங்கள் மாறுவது சகஜமல்லவா? மேலும் கன்னட நாடாகிய மைசூர் தேசத்திலுள்ள நஞ்சங்குடியில் ஸ்ரீ நஞ்சுண்டேசுவரர் ஆலயத்தில் அறுபத்துமூவர் சிலைகளும் பெரிய உருவங்களாக அமைந்திருப்பதை இங்கு எழுதாமலிருக்க முடியவில்லை. எனவே பல்லாரியில் அறுபத்து மூவர் சரிதங்களெல்லாம் கற்சித்திரங்களாக அமைந்திருத்தல் ஒரு பெரிய வியப்பல்ல.

5

வடுகநாடு பாராட்டிய முத்தமிழர்

தமிழர் பெரும்புகழ் கடல் கடந்தோங்கியதென்றால், நாடு கடந்தோங்கியதெனக் கூறவும் வேண்டுமோ? எனினும், தமிழ்நாடு பெருமையுற்று விளங்கிய காலத்தில், அது எதுகாறும் சென்றோங்கிய தென்பதை அக்காலத்தவரே நன்கறிந்தனர். அவர்களுடைய வழித்தோன்றல்களாகிய இக்காலத் தமிழர் அறியவில்லை. ஆனாற் சிறிதளவு முயன்றால் அறியமுடியும். ஏனெனில், முற்காலத் தமிழர், தம் புகழினைப் பிற நாடுகளுக்குக் கொண்டு சென்றதுமன்றி ஆங்காங்கே அதனை நிறுத்திவைத்துமுள்ளார்கள்; பற்பல சின்னங்களின் மூலமாக தமது புகழைப் பொறித்துவைத்துமுள்ளார்கள். தெலுங்கு, கன்னட மொழிகளிலே தமிழர் சரித்திரங்களையும், தமிழ் மொழித் தொடர்களையும் காணலாம். ஆலயத்துச் சிற்பங்களிலே தமிழர் சரித்திரங்களைக் காணலாம். ஓவியங்களிலே தமிழர் உருவங்களைக் காணலாம். நமது முன்னோர்கள் சரித்திர ஞானம் நிரம்பியவர்களாகையால், தமது வீரப்பெருமைகள் அழிந்துபோகாத வண்ணமும், தமது பின்வருவோர் தமது செயல்களைக் கண்டு அவற்றைப் பின்பற்றும் வண்ணமும், இத்தகைய அழிவில்லாத உருவங்களால் நிலைநிறுத்தி வைத்துள்ளார்கள். நாமோ நமது அறியாமை மேலீட்டாலும் அடிமைத்தனத்தாலும், அப்பெருமையினை மறந்துவிட்டோம். இனிமேலாவது விழித்தெழுந்து அறிவு பெற்றுச் செயல் புரிவோமாக !

தமிழ் நாட்டிற்கு வடக்கே வடுகும் கன்னடமும் வழங்குகின்றன. இவ்விரண்டு மொழிகளும் ஒருங்கு சேருமிடம் அநந்தபூர் ஜில்லா. இதிலேதான் மிக்க புகழுடன் வெகுகாலம் தென்னாடுகளைப் பிறர் கையிற் சிக்காமற் பாதுகாத்து வந்த விஜய நகரத்து நரபதிகள் இராக்ஷஸ தகடியுத்தத்துக்குப் பின்பு தலைநகரமைத்துக் கொண்டு பரிபாலித்து வந்தனர். இங்கே பெனுகொண்டா தலைநகராக விருந்த போது நீர்வளங் குன்றிய இந்நாடு செல்வம் பெற்றது. அப்போது பலகுன்றுகள் அரண்களாயின. பல பாறைகள் ஆலயங்களாயின. பல

கற்றரைப் பகுதிகள் ஊர்களாயின. அவ்வாறான இடங்களுள் ஒன்று இலேபாக்ஷி என்பது. இவ்வூர் இந்துபுரம் ஊருக்குக் கிழக்கே கதிரி செல்லும் பாதையில் ஐந்து கல் தூரத்திலுள்ளது. விஜயநகர சாம்ராச்சியத்தில் இவ்வூர் மிகச் சிறந்த விளங்கியது. பெரிய ஊராகி, வர்த்தகத்துக்குப் பேர் போயிருந்தது. சுற்றுப்பக்கங்களிலிருந்து சகல சரக்குகளும் இவ்வூருக்கு இறக்குமதியாகி இங்கே விற்பனையாகும். செல்வம் பெருகியிருந்தமையால் ஆலயங்கட்குக் குறைவில்லை. இவ்வூர் விஜய நகர நரபதிகளின் கீழ்ஆண்ட ஒரு தலைவனுடைய ஆட்சியிலிருந்தது. அவர் பெயர் விருப்பண்ணன். அவனும் அவன் தம்பியும் சைவ அன்பர்கள். அந்நாட்டின் வழக்கப்படி குன்றுகளுக்கருகே தான் ஊர்கள் உற்பத்தியாகும். குன்றுகளிலகப்படும் கற்களைக் கொண்டு வீடுகள் கட்டுவார்கள். இவ்வூரும் சில பெரிய குன்றுகளுக்கருகே கட்டப்பட்டுள்ளது.

ஒரு பெரிய விஸ்தாரமான பாறையைச்சுற்றி ஊர் ஏற்படவே, இச்சைவ சகோதரர்கள் அப்பெரிய பாறையை ஆலயம் அமைக்கப் பயன்படுத்திக் கொண்டார்கள். அழகிய மண்டபங்கள் எழுப்பப்பட்டன. பெரும்பாறைகளைத் தகர்த்தெறியாமல், அவைகள் நின்ற இடத்திலேயே அவற்றைச் செதுக்கிப் பெரிய உருவங்களாக்கினார்கள். தாழ்ந்த சமமான இடங்களில் மண்டபங்களைக் கட்டினார்கள். சுற்று மதில்களையும் ஆக்கினார்கள். மேல் தளங்களில் ஓவியங்கள் பல வர்ணங்களிலே எழுதப்பெற்றன. புராணக்கதைகளையும், சிவனடியார் சரிதங்களையும் தங்களுடைய வரலாறுகளையும் இவ்வோவியங்களில் தீட்டி வைத்தார்கள். ஒரு நிலவறையில் தாமிர சாசனங்களையும் சேமித்து வைத்திருந்தார்கள். கலியாண மண்டபம் கட்ட முயன்று அஃது ஏதோ ஒரு காரணத்தினால் முடிவுறாது நின்றுவிட்டது. இப் போது இக்கட்டிடங்களையும் சிற்பங்களையும் ஓவியங்களையும் பார்த்தால் நமது குருதி பொங்கும். இவ்வளவழகிய சிற்பங்களில் பலவற்றை எதிரிகள் நாசப்படுத்தி விட்டார்கள். இச்சிதைந்த காட்சியைப் பார்வையிடும்போது, நமது நாட்டு மக்கள் இவற்றின் சிறப்பை அந்தோ ! அறிந்து கொள்ளவில்லையே ! இனியேனும் இவற்றை அழிவுறாமற் காப்பாற்றுவார்களா ! என்ற உணர்ச்சி மிகுந்தெழும். சமீபகாலத்தில் இவற்றைப் புனருத்தாரணம் செய்யும் பொருட்டு ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இச்சங்கம் கூடுமான முயற்சி

செய்து வருகிறது. பார்க்க வருகிறவர்கட்கு இச்சித்திரங் களைக்காண ஒரு கண்ணாடி வைத்திருக்கிறார்கள் ; ஒரு சிறுநூல் வெளிப்படுத்தி இருக்கிறார்கள் ; ஒரு குறிப்புப் புத்தகமும் சங்க நிலையத்துள் வைக்கப் பட்டுள்ளது. இச்சங்கம் பார்க்க வருவோரின் ஆதரவினாலேயே நடைபெறுகிறது. இது போதுமா?

இவ்வருமையான இடத்தில் தமிழர்கட்குகந்த மூன்று பொருள்கள் காணப்படுகின்றன. அவை மூன்று விதமாக மூவேறு பகுதிகளில் அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று பாறையிலுள்ள உருவம், மற்றொன்று சுவரிலுள்ள சிற்பம், மற்றுமொன்று மேல் தளத்திலுள்ள ஓவியம். இவை மூன்றும் தமிழ்ப் பெரும் அடியார்கள் சரித்திரங்களைக் குறிப்பனவே.

பாறையில் ஒரு பெரிய உருவமாகக் காட்சியளிப்பது **கண்ணப்ப நாயனாருடைய தோற்றம்.** சுமார் இருபதடி உயரமும் நாற்பதடி நீளமும் உள்ள பெரும்பாறையை அஃதுள்ள இடத்திலேயே செதுக்கி உருவாக்கி ஒரு பெரிய சிவலிங்கமும் அதைக் கவித்த விரிந்த படமுடைய ஐந்தலை நாகமும் செய்யப் பெற்றுள்ளன. நாகத்தின் தலைக்கிரீடம் தரைமட்டத்திலிருந்து இருபதடி உயரமிருக்கும். இவ்விலிங்கத்தில் வலப்புறம் சீகாளத்தி தலமான்மியம் செதுக்கப்பட்டுள்ளது. யானையும் சிலந்தியும், பாம்பும் சிவலிங்கத்தை வழிபடும் காட்சி இங்கமைந்துள்ளது. அருகில் கண்ணப்பதேவர் சிவ லிங்கத்தின் கண்ணில் தமது கண்ணை அப்புகிறார். இப்பாறையிலுள்ள சிற்பம் ஒரு தமிழடியார் சரித்திரத்தை இவ்வடுகக் கருநாட நகரத்தில் விளக்கிக் கொண்டிருக்கிறது.

இவ்வாலயத்து அர்த்தமண்டபத்தின் வெளிச்சுவரில் வரிசைக் கிரமமாக **சிறுத்தொண்ட நாயனாரின் சரித்திர நிகழ்ச்சிகள்** முழுமையும் ஒழுங்காகச் செதுக்கப்பட்டிருக்கிறன்றன. சிறுத்தொண்டரிடம் பைரவர் வருதல், நரப்பலி கேட்டல் தாய் தந்தையர் சீராள தேவரையறுத்தல், பைரவர் உண்ணமறுத்தல், சீராளனை அழைத்தல், உணவும் பைரவரும் மாயமாக மறைதல், ஈசன் இடபாரூடராகக்

காட்சியளித்தல் முதலியன மிகத் தெளிவாக அமைக்கப்பட்டுள்ளன. முகங்களின் அமைப்பை நோக்கினால் மனதில் ஓடும் எண்ணங்கள் வெளிப்படும் வகையில் இவையுள்ளன. அகத்தினழகு முகத்தில் தெரியும் என்ற உண்மை இக்கருங்கற் சிற்பங்களிலும் காணக்கிடக்கின்றன.; இவ்வுருவங்களையாக்கிய சிற்பியின் பெருமைதான் என்னே! நாயன்மார் வரலாறுகள் நமது தமிழ்நாட்டிலுள்ள ஆலயங்களில் இவ்வாறு சிற்பங்களால் அமைந்திருத்தல் அரிது.

இக்கோயிலின் மகா மண்டபத்து மேல்தளத்தில் பல சரிதங்கள் வர்ணப்படங்களாக வரையப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று இவ்வாலயம் எடுப்பித்த விருப்பண்ணனின் செய்தி; மற்றொன்று தமிழ் மக்கட்குகந்த மனுநீதிச் சோழன் சரிதம். அரசிளங்குமரன் தேரோட்டுதல், கன்று தேர்க்காலில் அகப்பட்டிறத்தல், தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை அடித்தல், அரசன் விசாரித்தல், மகனைத் தேர்க்காலில் இட்டு சாகும்படி தீர்ப்பளித்தல், மந்திரி செய்யாததால் தானே தண்டித்தல், ஈசன் காட்சியளித்தல், இறந்தவர் உயிர் பெற்றெழுதல் முதலிய பல பகுதிகளாக இச்சரிதம் அழகொழுக எழுதப்பட்டுள்ளது; பல நூற்றாண்டுகளாகியும் வர்ணம் உதிராமலும், பழுக்காமலும், மாறாமலுமிருக்கிறது. உருவங்கள் கம்பீரமாகவும் உருக்கமாகவும் இருக்கின்றன.

ஆகவே இம்மூன்று பெரிய புராண சரிதங்களும் வடுகநாட்டை யடைந்து ஓர் ஆலயத்துள் மிளிர்கின்றன. தமிழ்மக்கள் ஆங்குச் சென்று அவைகளைக் கண் குளிரக் கண்டு அனுபவிக்க வேண்டாமா?

6

சமயக் கல்வியின் அவசியம்

இந்நாட்டில் சைவாங்கில பாடசாலை, சைவத் துவிபாஷா பாடசாலை, சைவத் தமிழ்ப் பாடசாலை என மூன்றுவிதக் கலா சாலைகளிலும் சைவம் கலந்திருக்கும் போது சமயக் கல்வியைப் பற்றி இங்கே பேசத் தொடங்கியது என் அறிவின்மையைத் தோற்றுவிக்கும். ஆனால் எங்கள் நாட்டில் சமயக்கல்வி மிகவும் வேண்டற்பாலது. அங்கே கல்விக்கும் சமயத்திற்கும் சம்பந்தமில்லாமல் செய்துவைத் திருக்கிறார்கள், அதனால் வாலிபர்களுடைய நிலைமை பரிதாப நிலை அடைந்திருக்கிறது. பிற்காலச் சமயநிலை அபாயத்திற்குட் பட்டிருக்கிறது. கிறிஸ்தவ முகம்மதிய சமயங்களைக் காட்டிலும் இந்து சமயமே அபாயத்தில் உள்ளது.

இத்தியாவில் எல்லாவற்றையும்விடப் பெரியதாயுள்ள நகரத்தை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். காளிகட்டம் என்ற கல்கத்தா, வங்காளத்தில் ஹுக்லி தீரத்தில் 12 லட்சம் சனத்தொகை கொண்ட ஒரு பெரிய நகரம். அதில் 100-க்கு 70 பேர் இந்துக்களும் 25 பேர் முகம்மதியர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 3,66, 283 மதிப்புள்ள 475 கோயில்களும், ரூ. 3,74,684 மதிப்புள்ள 411 பள்ளிவாசல் களும் இருக்கின்றன. அதாவது 70% இந்துக்களுக்கு 475 கோயில்கள்; 25 முகம்மதியர்களுக்கு 411 பள்ளிகள். ஆகவே மதப்பற்று 1-க்கு 27 ஆகிறது. ஆலயங்களுக்கு 70% இந்துக்கள் ரூ. 3.66 லட்சமும், பள்ளிகளுக்கு 25% முகம்மதியர்கள் ரூ. 3.74 லட்சமும் ஆகத் தம் சமய நிலைகளுக்குச் செலவழித்துள்ளார்கள்.

மேலும் வரி கொடுப்பதில், இந்துக்கள் 90% முகம்மதியர்கள் 5.6% கொடுக்கிறார்கள். ஆகவே முகம்மதியர்களை விட இந்துக்கள் 5.35 மடங்கு அதிக செல்வந்தர்கள். இதைக் கணக்கிடும்போது இந்துக்களைவிட முகம்மதியர்கள் ஏழைகளாக இருந்தும் 6.31 மடங்கு சமயத்திற்காகச் செலவு செய்கிறார்கள், இரு சமயத்தினருடைய சமயப் பற்றை எல்லா வகையிலும் முடிவாகக் கணக்கிடும் போது இந்துக்களைக் பார்க்கிலும் மும்மதியர்கள் 2.34 மடங்கு அதிகப்

பற்றுக்கொண்டவர்கள் என ஓர் ஆசிரியர் இம்முறையில் கணக்கெடுத்திருக்கிறார்.

இக்கணக்கை இத்துடன் நிறுத்துவோம். ஆலயங்களுக்கு வழிபடச்செல்லும் ஒரு வழக்கத்தை எடுத்துக்கொள்வோம். பள்ளிவாசல்களுக்கு முகம்மதியர் வெள்ளிக்கிழமைகளிலும் கிறிஸ்தவர்கள் தம் தேவாலயங்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளிலும் தவறாமல் செல்லுகிறார்கள். இந்துக்களோ திருவிழாக்களில் கூத்து, நடனம், மேளம், வேடிக்கை இவைகளைப் பார்க்கச் செல்லுகிறார்களே ஒழிய, குறித்த நாள்களில் ஆலயங்களுக்கு வழிபடச் செல்லுகிறார்களா? செல்லுபவர்களிலும் கல்வி கற்றவர்கள் எத்தனைபேர்? மேலும், கிறிஸ்தவர்களும் முகம்மதியர்களும் தங்கள் வீடுகளிலாவது நாடோறும் தவறாமல் தொழுகிறார்கள். இந்துக்கள் எத்தனைபேர் இவ்விதப் பூஜைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்? இவர்களில் படித்தவர்களும் ஏழைகளும் வர்த்தகர்களும் தொழிலாளர்களும் உத்தியோகஸ்தர்களும் திருநீறு திருமண் இவைகளை அணியவேண்டுமென்று எப்போதாவது அறிந்திருக்கிறார்களா?

சோழபாண்டியர்களுடைய சமயாபிமானத்தின் காரணமாக ஆலயங்களால் சிறந்து விளங்கும் மதுரை, திருச்சி, தஞ்சை, சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சி முதலான சில ஊர்களைத் தவிர வேறு ஊர்களில் நம் ஆலயங்கள் பிரசித்தமாக விளங்குகின்றனவா? தற்காலத்தில் முளைத்திருக்கும் கிறிஸ்தவ முகம்மதியப் பள்ளிகள் உயர்ந்து நீண்டு விளங்குகின்றன அல்லவா? உதாரணமாக, எங்கள் கோவையில் இரயிலடி இறக்கியதும் கிறிஸ்தவ சர்ச்சும்; கடைவீதி சென்றதும் முகம்மதியப்பள்ளியும் பெரியவைகளாகத் தோன்றுகின்றன. இந்து ஆலயங்கள் இருக்கும் இடமே தெரியாமல் வீடுகளுக்குள் மறைந்திருக்கின்றன. ஆகவே இந்துமதம் தலை நீட்டவும் வெட்கப்படுகிறதுபோலும்? சமயக்கல்வியின் குறைவே இதற்குக் காரணம்.

இந்தியாவில் ஆங்கிலர் வந்தபிறகு சமயவிஷயத்தில் தலையிடக் கூடாது என்ற கொள்கையினால் சமயக்கல்வியைப் பொதுப் பள்ளிக்கூடங்களில் வைக்காமல் சமயம் அல்லாத கல்வியை மாத்திரம் போதித்து வருகிறார்கள். இந்துக்கள் பெரும்பான்மையான பேர் தங்கள் குழந்தைகளைப் பொதுப் பாடச்சாலைக்கு அனுப்புவதினால்

அவர்களுக்குச் சமயக் கல்வி கிடைப்பதில்லை. ஆனால் முகம்மதியர்களும் கிறிஸ்தவர்களும் தங்கள் பாடசாலைகளில் சமயக்கல்வி போதிக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய பிள்ளைகளுக்கு மாத்திரமேயன்றி அங்கு வாசிக்கும் இந்து பிள்ளைகளுக்கு அவர்களுடைய மதக்கொள்கைகள் படிக்கவேண்டி வருகிறது. அதன் காரணமாகத் தங்கள் மதத்தை அறியாததற்கு முன்பே பிறமதங்களைப் பற்றி அறிந்துகொள்ளுகிறார்கள். அதன் பயன் "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற வகையில் விபரீதமான முடிவை அடைந்துவருகிறது. மேலும் இந்துக்களுக்குத் தனியாக ஏற்பட்ட சில பாடசாலைகளில் சில்லரைப் பிரிவினைகளின் காரணங்களைக் கொண்டு மதப்படிப்பைக் கற்றுக் கொடுப்பதில்லை, சமீப காலத்திலேதான் "இராமகிருஷ்ண சமாஜம் பாடசாலை" முதலிய பாடசாலைகளில் மதப்படிப்புப் போதிக்க ஆரம்பித்திருக்கின்றனர். சைவத்திற்கு ஏற்பட்டவைகள் மிகச் சிலவே.

கிறிஸ்தவர்களிலும் முகம்மதியர்களிலும் தங்கள் வீடுகளில் பெற்றோர்கள் மதப்படிப்புக் கற்றுக்கொடுக்கின்றனர். இந்துக்களிலோ பெற்றோர்களுக்கே மதவாசனை இல்லாத போது எவ்வாறு பிள்ளைகளுக்கு அதனைக் கற்பிக்க முடியும்? சைவர்கள் வீடுகளில் 12 திருமுறைகளே இல்லாமலிருக்கும் போது சைவத்தைப்பற்றி எவ்வாறு அறிவார்கள்? விவிலிய நூல் இல்லாத கிறிஸ்தவர் வீடு ஒன்று உண்டா? யோசியுங்கள், தற்காலத்தில் உலகம் போகும் போக்கை வெகு சுலபத்தில் வாலிபர்கள் அறிந்துகொள்ளுகிறார்கள். பாடசாலையிலும் வீட்டிலும் சமய ஒழுக்கம் கற்பிக்கப்படாதபோது தம் மனம் போன போக்கில் நிரீசுவர நூல்களை வாசித்து அலைகிறார்கள். மேற்கே பேருக்குக் கிறிஸ்து சமயம் அரசாங்க மார்க்கமாக இருந்தும் உண்மையில் அதன் கோட்பாடுகளை யாரும் எடுத்து ஆளுவதில்லை. ருஷியர்களுக்குச் சமயமே இல்லை. ஜெர்மானியருக்கு அது வேண்டியதில்லை. இத்தாலியர் அது இருந்தும் அதனைப் பின்பற்றுவதில்லை. ஆகவே கிறிஸ்து பகவான் சொன்ன புத்திமதிகளுக்கு எதிராகவே மேற்கு அரசர்கள் நடக்கின்றனர். சண்டை கூடாதென்றால், அதுதான் வேண்டும் என்கிறார்கள். கடவுளை வேண்டாம் என்று அவரைச் சிங்காசனத்திலிருந்து தள்ளிவிட்டார்கள். ஆன்மா மக்களுக்கு அவசியமில்லை என்று

எண்ணுகிறார்கள். உயிருள்ள மட்டும் சுயநலத்துடன் சுகப்படவேண்டுமென்பதே தற்காலத்து ஜீவிய நோக்கம். இந்த நோக்கத்தைக் கண்ட தற்காலத்து வாலிபர்கள் அதன் போக்கிலேயே போகிறார்கள்.

நம் இந்து வாலிபர்கள் சமயத்தை வெறுப்பதற்கு இன்னும் காரணங்கள் உண்டு. கல்கத்தாவில் கிராம தேவதையான காளிகட்டத்துக் கோயிலுக்குச்சென்றால் நாள்தோறும் ஆடுகளைக் கதற வெட்டிப் பலிதருகிறார்கள். இதனைக் கண்டவாலிபர் எவரும் அதை ஏற்றுக்கொண்ட சமயத்தை வெறுக்க மாட்டாரா? தென்னிந்தியாவிலும் எத்தனை கிராமங்களில் கிராம தேவதைகளுக்காக ஆடு, கோழி, பன்றி, எருமை இவைகளைப் பலிகொடுக்கிறார்கள்! இவ்வக்கிரமங்களை நடத்திவரும் வகுப்பார்களுக்கு மெய்ஞ்ஞானம் இருக்குமா? ஒரு தாயின் முன்னால் ஒரு மகன் மற்றொரு மகனை அறுத்துக் காணிக்கையாக வைத்தால் அத் தாய்க்கு எப்படிப் பிரீதி உண்டாகும்? ஆகவே படித்த வாலிபனுக்குச் சமயத்தில் வெறுப்பு உண்டாகிறது சகஜம். அதிலும் வேண்டுதலைக்காகவும், வைசூரி முதலியவைகளைப் போக்கவும் பலி கொடுப்பதென்றால், இதனைவிட அருவருப்பானதும் உண்மைக்கு மாறானதும் வேறு எது உண்டு? கல்கத்தாவில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பூசித்த தக்ஷிணேசுவரத்தில் ஆலய வாசலண்டை பூசனைக்கு வைத்த மாமிசங்களைக் பிரசாதமாக விற்றால் அந்தச் சமயத்தில் ஒரு கற்ற மானிடனுக்கு எவ்வாறு நம்பிக்கை வரும்? ஆகவே நம்மில் பலி கொடுத்தல் முதலிய மூடக்கொள்கைகள் அறவே ஒழிய வேண்டும் அல்லவா?

மேலும் தக்ஷிணேசுவரத்தில் இராமகிருஷ்ணரின் படுக்கை குறிச்சி முதலியவைகளுக்குப் பூசனை நடக்கிறது. போளூரில் இராமகிருஷ்ணர், விவேகாநந்தர் முதலிய பெரியார்களுக்கு ஆலயங்கள் கட்டி அவர்களுடைய உருவங்களுக்கு உருவவழிபாடு நடக்கிறது. திருவண்ணாமலையிலும் சேந்தமங்கலத்திலும் மானிடவழி பாடு வெகு மும்முரமாக நடக்கிறது. இவ்விதமாக உயிருள்ளவர்களும் குறைபாடு கொண்டவர்களுமான மானிடர்களுக்குப் பரிபூரணமான கடவுளுக்கு வழிபாடு நடத்தலைப்போல் ஒரு வழிபாடு நடந்தால் அதைக் காணும் கல்விகற்ற மாணவன் எவ்வாறு சகிப்பான்? ஆகவே தான் நம்நாட்டு இளைஞர்களுக்குச் சமயத்தில் பற்றுக் குறைந்து

கொண்டு வருகின்றது. மானிட வழிபாடு கூடாதென்று எவ்வளவு அழகாகத்,

"தம்மையேபுகழ்ந் திச்சைபேசினும்
சார்வினும்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதேஎந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்"

என்று சுந்தரமூர்த்திகள் கூறியிருக்கிறார்கள். மானிட வழிபாட்டில் ஈடுபட்டு எத்தனைப் பூசனைகள் புரிந்தாலும் நமக்கு அப்பூசனையைப் பெற்றவர்கள் உண்மையான நிலைமையை அளிக்கப் போகிறார்களா? அந்த ஈனச் செயல்களுக்கு மாறாக ஈசனைத் தொழுது ஈடேறுங்கள் என்று சுந்தரர் வற்புறுத்தியிருக்கிறார். இதனை நம் இளைஞர்கள் செவ்வனே அறிவார்கள். ஆகவே இக்குறைகளை நீக்கினால் ஒழிய நம் வலிபர்களுக்குச் சமயக் கல்வியில் பிரீதி ஏற்படாது.

குற்றமற்ற சமயக்கல்வி இருந்தால் குணமும் ஒழுக்கமும் முன்னேறும். அப்போதுதான் வாலிபர்கள் நன்மக்களாகிச் சன்மார்க்கத்தில் வளர்ந்து தம் குடும்பத்திற்கும் நாட்டிற்கும் பயன்பட்டவர்களாகித் தம் பிறப்பின் பயனையும் பெறுவார்கள், மேற்கு நாட்டார்களைப்போல் நிரீசுவர வாதத்தில் இறங்கிச் சுயநலத்திற்காக நாகரிகத்தின் பெயரால் ஒருவரை ஒருவர் கொலைபுரிந்து நாசமாக்காமல் கடவுளிடத்துப் பக்தியோடும் மக்களிடத்து அன்போடும் பிழைப்பார்கள். அப்படிப்பட்ட கல்வி கிடைத்தால் பற்பல விதங்களிலும் நம் வாலிபர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

மறு உலகத்தில் நன்மை கிடைக்குமென்றால், இக்கால வாலிபர்களுக்கு நம்பிக்கை வருவது கடினம். இவ்வுலகில் ஏதாவது நன்மை கிடைக்குமா எனக் கேட்பார்கள். இவ்வுலகத்திலும் கிடைக்கும் என்று சுந்தரர் உறுதி கூறியிருக்கின்றார்.

"இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள்வதற்கு யாதும்ஐயுற வில்லையே"

அதாவது மறுமையில் சிவலோகம் கிடைப்பது மாத்திரமன்றி இவ்வுலகில் உண்ணச் சோறும் இருக்கக் கூறையும் கிடைக்குமாம். ஒருவனுக்கு இவ்வுலகில் சுகமுடன் இருக்க இந்த இரண்டும் போதுமானவையல்லவா? மனிதனுக்குள்ள அவசியங்கள் சோறு கூறை என்ற இரண்டில் அடங்கிவிடும் என்பதைக் கவனியுங்கள். சமயக் கல்வி இவ்விரண்டும் தந்தால் பின்னர் நம் வாலிபர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ஏது சொல்லுங்கள்? அவ் வேலையில்லாத் திண்டாட்டந்தானே நம் படித்த இளைஞர்களை வாட்டுகிறது? படித்துவிட்டுப் பல உத்தியோக வேலைகளுக்கும் வேட்டையாடிச் சலித்துவிட்டுக் கடவுள் முதலான பல பேர்களிடமும் வெறுப்புக்கொண்டு தெய்வ நம்பிக்கையில்லாமல் எவ்வளவு ஆன்மாக்கள் வாடுகின்றன? அவர்களுக்குச் சமயக் கல்வி இருந்தால் சோறும் கூறையும் கிடைக்கும் என்றறிக.

இனி, இலங்கையைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல வேண்டும். பலியிடல் தமிழர்களுடைய வழக்கம் அன்று. கண்டிப்பாக சைவர்களுடையதன்று. பலி என்ற சொல்லே தமிழ்சொல் அன்று. ஆகவே, அவ்வழக்கம் தமிழருக்கு ஏது? திருள்ளுவரும், சாந்தலிங்க சுவாமிகளும் அவதரித்த நாட்டிலும் அந்நாட்டு மக்களிலும் பலி இருந்திருக்க முடியுமா? அது பிறநாட்டிலிருந்தே இறக்குமதியான ஒரு கெட்ட கொடிய பழக்கமேயாகும். இந்தியாவில் இத்துர்ப்பழக்கம் அதிகம் உண்டு. இந்நாட்டிலும் ஒரு சிறிது உண்டெனக் கேள்விப் பட்டேன். கொலையும் பலியும் அறவே கூடாது என்று போதித்த பௌத்த சமயம் ஆளும் இத் தீவில் எவ்வாறு இத் துர்ப்பழக்கம் வந்ததோ தெரியவில்லை. அது, எங்கேனும் இருந்தால், இனி அடியோடு மறைந்துவிடும் என்று எண்ணுகிறேன்.

சமயச்சார்பில் நடக்கும் மற்ற மூடப்பழக்கங்கள் எவையெனில் வெறியாடல், அலகு குத்துதல், தீ மிதித்தல் முதலியன. இவை காட்டுமிராண்டிகளின் சமய நடவடிக்கைகள். சாத்வீக சமயமாகிய சைவத்தில் இவைகளுக்கு இடமில்லை. நோன்பு அல்லது தவம் என்பதைக் கூறும்போது தெய்வப்புலவர்,

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்றார். ஆகவே உடம்பில் வலிசெய்துகொண்டு பின்பு அதைப் பொறுத்துக்கொள்ளுதல் தவம் ஆகாது. இந்நாட்டில் இத்தவம் அதிகமாகக் குடிகொண்டிருக்கிறது. அது, இருந்தால் வெளிநாட்டாரும் வெளிச்சமயத்தாரும் ஏளனம் செய்ய இடம் இருக்கும். நம் வாலிபர்க்கும் நம்பிக்கைக் குறைவு உண்டாகும். ஆகவே இந்தத் தீய ஒழுக்கங்களை விடவேண்டும். நல்லொழுக்கத்தில் சேரவேண்டும். அப்போதுதான் எல்லாரையும் "சேரவாரும் செகத்தீரே" என்று நாம் அழைக்க முடியும்.

இக்காரணங்களினால் சமயக்கல்வி நமது நாடுகளில் அவசியம் என்று தோன்றவில்லையா?

7

வெற்றி விழா

நமது நாட்டில் வழங்கும் விழாக்கள் பலவகைப்படும். அவைகள் எந்த நோக்கங்களைக் கொண்டு ஏற்பட்டனவோ அந்த நோக்கங்களை அறிந்து அவைகளை வகுத்துக் கூறலாம். வெற்றி, சமயம், நோன்பு, கோரிக்கை, விளைவின் ஈட்டம் முதலிய பல நோக்கங்களைக் கொண்டு நமது நாட்டு விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன. வெற்றி விழா - தீபாவளி, சமயவிழா - ஆவணியவிட்டம், நோன்பு விழா - பிள்ளையார் நோன்பு, கோரிக்கை விழா - கேதார கௌரி விரதம், விளைவின் ஈட்ட விழா - தைப் பண்டிகை என்பவை, அவைகளில் சில எடுத்துக் காட்டுக்களாகும். இவைகளில் வெற்றிவிழாவுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுத் தீபாவளி எனலாம். அது வடநாட்டுத் திருவிழா. அண்மையிலே தென்நாட்டிற்கு வந்தது என அறியவேண்டும். வட மொழிப் புராணங்களின்படி கண்ணபிரான் நரகாசுரன் என்ற அசுரன்மீது வெற்றி கொண்டதைப் பாராட்டும் விழா அது ஆகும். ஆகவே, அவ் விழாவை ஒரு வெற்றிவிழா என்று கொள்ள வேண்டும். போரிலே வெற்றி கொண்டதைக் கொண்டாடும் வகையில் பாணங்கள் வெடிகள் முதலிய ஆர்ப்பாட்டங்கள் செய்யப் படுகின்றன. அவைகள் வெற்றியின் அறிகுறிகள்.

இனி, தீபாவளி என்ற பெயரிலேயே வெற்றியின் அறிகுறி இருக்கிறது. அச்சொல் தீப + ஆவளி - என்ற இரண்டு சொற்களின் கூட்டுச்சொல் ஆகும். இச்சொற்களில் தீபம் என்றால் விளக்கு என்று பொருள், ஆவளி என்றால் வரிசை என்று பொருள். ஆகவே அந்தக் கூட்டுச் சொல்லுக்கு விளக்குகளின் வரிசை என்பது பொருள். தீபாவளி என்ற பண்டிகையைக் கொண்டாடினால், விளக்குகளை வரிசையாக வைத்து அதனை அதன் அறிகுறியாகக் கொண்டு பாராட்டுதலே அப் பண்டிகையைச் சரியாகச் செய்யும் முறை ஆகும். அவ்விதமாக நாம் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுகிறோமா? இல்லை, பட்டாசு வெடிகளையும் மத்தாப்புக்களையும் கொளுத்துகிறோமே ஒழிய அன்று விளக்குகளை நாம் வரிசையாக வைப்பது இல்லை. பின் வேறு எவராவது அவ்வாறு விளக்குகளை வைத்துக்

கொண்டாடுகிறார்களா என்று கேட்டால், ஆம்; மார்வாடிகள் அவ்வாறு கொண்டாடுகிறார்கள் என்று வடநாட்டு வியாபாரிகளின் கடைகளைப் பார்த்த நீங்கள் சொல்லுவீர்கள். அந்தப் பண்டிகை அவர்களுடைய பண்டிகை ஆதலாலும் அந்தப் பண்டிகையின் போது தான் புதுவருடக் கணக்கை அவர்கள் தொடங்குகிறபடியாலும் அப் பண்டிகையின் உண்மைப் பொருளை அவர்கள் அறிந்து அவ்வாறு விளக்கு வரிசைகளை வைத்துக் கொண்டாடுகிறார்கள். அப் பண்டிகை தென்னாட்டுப் பண்டிகை அல்ல. ஆகையால் நாம் விளக்குகளை வைத்து அதனைக் கொண்டாடுவதில்லை.

நமது தென்னாட்டில் விளக்குகளை வரிசையாக வைத்துக் கொண்டாடும் வேறொரு பண்டிகை உண்டு. அது கார்த்திகைப் பண்டிகை ஆகும். கார்த்திகை பௌர்ணமியில் மூன்று நாட்கள் நமது ஆலயங்களிலும் வீடுகளிலும் விளக்குகளை வரிசையாக வைத்து இறைவனை ஆராதனை செய்வோம். அந்தச் செயலுக்குத் தனித் தமிழ்ப் பெயர் ஒன்று இருந்தது. அது **விளக்கீடு** என்பது. திருஞான சம்பந்தப் பெருமான் "கார்த்திகை விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்" என்று மயிலைத் தேவாரத்தில் அச் செய்தியையும் பண்டிகையையும் குறித்துப் பாடியிருக்கின்றார். அப் பண்டிகையில் விளக்கு வைத்தல்தான் தமிழ் நாட்டின் பண்டைய விழா வழக்கு ஆகும்.

இனி, விளக்கு வைத்தல் வெற்றிக்கு அறிகுறி என்றோம். விளக்கு ஒளியைக் காட்டும்; இருட்டைக் போக்கும். இருட்டு அறியாமை; ஒளி அறிவுடைமை. அறியாமையாகிய இருட்டை அறிவாகிய ஒளி நீக்கிவிடும். மூளையிலும் நெஞ்சிலும் அறியாமை இருக்கும் மட்டும் இருட்டே இருக்கும். அறிவு ஏற்பட்டால் ஒளி திகழும். ஒரு இருட்டறையில் இருந்தால் நமக்கு எந்தப் பொருளும் தெரியாது. அங்கே ஒரு விளக்கை ஏற்றினால் அவ்வறையில் உள்ள பொருள்கள் எல்லாம் தெரியும். அதுபோலவே நமது நெஞ்சில் இருள் மூடியிருந்தால் மடத்தன்மையில் மூழ்கியிருப்போம். அறிவு துலங்கினால் மடத்தன்மை நீங்கி அறிவாளிகள் ஆவோம். ஆகவே மனதில் உள்ள இருட்டை நீக்கி அதனை வினவவைப்பது அறிவு எனும் ஒளிதான். இருட்டை ஒளி வெல்லுகிறது; அது வெற்றி என்க. ஆகவே விளக்கு வெற்றியின் அறிகுறி ஆகும்.

7

வெற்றி விழா

நமது நாட்டில் வழங்கும் விழாக்கள் பலவகைப்படும். அவைகள் எந்த நோக்கங்களைக் கொண்டு ஏற்பட்டனவோ அந்த நோக்கங்களை அறிந்து அவைகளை வகுத்துக் கூறலாம். வெற்றி, சமயம், நோன்பு, கோரிக்கை, விளைவின் ஈட்டம் முதலிய பல நோக்கங்களைக் கொண்டு நமது நாட்டு விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன. வெற்றி விழா - தீபாவளி, சமயவிழா - ஆவணியவிட்டம், நோன்பு விழா - பிள்ளையார் நோன்பு, கோரிக்கை விழா - கேதார கௌரி விரதம், விளைவின் ஈட்ட விழா - தைப் பண்டிகை என்பவை, அவைகளில் சில எடுத்துக் காட்டுக்களாகும். இவைகளில் வெற்றிவிழாவுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுத் தீபாவளி எனலாம். அது வடநாட்டுத் திருவிழா. அண்மையிலே தென்நாட்டிற்கு வந்தது என அறியவேண்டும். வட மொழிப் புராணங்களின்படி கண்ணபிரான் நரகாசுரன் என்ற அசுரன்மீது வெற்றி கொண்டதைப் பாராட்டும் விழா அது ஆகும். ஆகவே, அவ் விழாவை ஒரு வெற்றிவிழா என்று கொள்ள வேண்டும். போரிலே வெற்றி கொண்டதைக் கொண்டாடும் வகையில் பாணங்கள் வெடிகள் முதலிய ஆர்ப்பாட்டங்கள் செய்யப் படுகின்றன. அவைகள் வெற்றியின் அறிகுறிகள்.

இனி, தீபாவளி என்ற பெயரிலேயே வெற்றியின் அறிகுறி இருக்கிறது. அச்சொல் தீப + ஆவளி - என்ற இரண்டு சொற்களின் கூட்டுச்சொல் ஆகும். இச்சொற்களில் தீபம் என்றால் விளக்கு என்று பொருள், ஆவளி என்றால் வரிசை என்று பொருள். ஆகவே அந்தக் கூட்டுச் சொல்லுக்கு விளக்குகளின் வரிசை என்பது பொருள். தீபாவளி என்ற பண்டிகையைக் கொண்டாடினால், விளக்குகளை வரிசையாக வைத்து அதனை அதன் அறிகுறியாகக் கொண்டு பாராட்டுதலே அப் பண்டிகையைச் சரியாகச் செய்யும் முறை ஆகும். அவ்விதமாக நாம் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுகிறோமா? இல்லை, பட்டாசு வெடிகளையும் மத்தாப்புக்களையும் கொளுத்து கிறோமே ஒழிய அன்று விளக்குகளை நாம் வரிசையாக வைப்பது இல்லை. பின் வேறு எவராவது அவ்வாறு விளக்குகளை வைத்துக்

கொண்டாடுகிறார்களா என்று கேட்டால், ஆம்; மார்வாடிகள் அவ்வாறு கொண்டாடுகிறார்கள் என்று வடநாட்டு வியாபாரிகளின் கடைகளைப் பார்த்த நீங்கள் சொல்லுவீர்கள். அந்தப் பண்டிகை அவர்களுடைய பண்டிகை ஆதலாலும் அந்தப் பண்டிகையின் போது தான் புதுவருடக் கணக்கை அவர்கள் தொடங்குகிறபடியாலும் அப் பண்டிகையின் உண்மைப் பொருளை அவர்கள் அறிந்து அவ்வாறு விளக்கு வரிசைகளை வைத்துக் கொண்டாடுகிறார்கள். அப் பண்டிகை தென்னாட்டுப் பண்டிகை அல்ல. ஆகையால் நாம் விளக்குகளை வைத்து அதனைக் கொண்டாடுவதில்லை.

நமது தென்னாட்டில் விளக்குகளை வரிசையாக வைத்துக் கொண்டாடும் வேறொரு பண்டிகை உண்டு. அது கார்த்திகைப் பண்டிகை ஆகும். கார்த்திகை பௌர்ணமியில் மூன்று நாட்கள் நமது ஆலயங்களிலும் வீடுகளிலும் விளக்குகளை வரிசையாக வைத்து இறைவனை ஆராதனை செய்வோம். அந்தச் செயலுக்குத் தனித் தமிழ்ப் பெயர் ஒன்று இருந்தது. அது **விளக்கீடு** என்பது. திருஞான சம்பந்தப் பெருமான் "கார்த்திகை விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்" என்று மயிலைத் தேவாரத்தில் அச் செய்தியையும் பண்டிகையையும் குறித்துப் பாடியிருக்கின்றார். அப் பண்டிகையில் விளக்கு வைத்தல்தான் தமிழ் நாட்டின் பண்டைய விழா வழக்கு ஆகும்.

இனி, விளக்கு வைத்தல் வெற்றிக்கு அறிகுறி என்றோம். விளக்கு ஒளியைக் காட்டும்; இருட்டைக் போக்கும். இருட்டு அறியாமை; ஒளி அறிவுடைமை. அறியாமையாகிய இருட்டை அறிவாகிய ஒளி நீக்கிவிடும். மூளையிலும் நெஞ்சிலும் அறியாமை இருக்கும் மட்டும் இருட்டே இருக்கும். அறிவு ஏற்பட்டால் ஒளி திகழும். ஒரு இருட்டறையில் இருந்தால் நமக்கு எந்தப் பொருளும் தெரியாது. அங்கே ஒரு விளக்கை ஏற்றினால் அவ்வறையில் உள்ள பொருள்கள் எல்லாம் தெரியும். அதுபோலவே நமது நெஞ்சில் இருள் மூடியிருந்தால் மடத்தன்மையில் மூழ்கியிருப்போம். அறிவு துலங்கினால் மடத்தன்மை நீங்கி அறிவாளிகள் ஆவோம். ஆகவே மனதில் உள்ள இருட்டை நீக்கி அதனை வினவவைப்பது அறிவு எனும் ஒளிதான். இருட்டை ஒளி வெல்லுகிறது; அது வெற்றி என்க. ஆகவே விளக்கு வெற்றியின் அறிகுறி ஆகும்.

திருவண்ணாமலையில் ஆண்டுதோறும் நடைபெறும் கார்த்திகைத் திருவிழாவானது இந்த வெற்றியையே அறிகுறியாகச் சோதிசொரூபமாகக் காட்டப்படுகிறது. இரண்டு பேர் தம்மில் யார் பெரியவர்கள் என்று அகந்தையினால் போராடுகிறார்கள். நடுவில் ஒரு பெரிய உருவம் தோன்றுகிறது. அதன் அடிமுடி தேடச் செல்லுகிறார்கள், முடியவில்லை. அகந்தை என்ற இருள் அவர்களைக் சூழ்ந்திருக்கின்றது. அவ்வுருவம் சோதிமயமாகிறது. அதனைத் தொழுது ஈடேறுகிறார்கள். அவ்வுருவம் ஒளி மயமானது. அவ்வொளி அவர்களின் மன இருளை நீக்கி அறிவு ஒளி தருகின்றது. அவ்வாறு தோன்றிய அவ்வுருவத்தின் ஒளியே வெற்றியின் தன்மையைக் காட்டுகிறது. அதுவே வெற்றியின் அறிகுறி.

கொங்குநாட்டுக் கோயில்களில் எல்லாம் இரண்டு கம்பங்கள் உண்டு. ஒன்று பெரிய கோபுரத்திற்கு உட்புறம். மற்றொன்று அக் கோபுரத்திற்கு வெளிப்புறம். கோபுரத்திற்கு உட்புறம் இருக்கும் கம்பம் கொடிக் கம்பம் எனப்படும். வெளிக்கம்பம் தீபக்கம்பம் எனப்படும். உட் கம்பம் திருவிழாக் காலங்களில் முதற் செயலாகக் கொடி ஏற்றி வைப்பதற்கு உதவுவது. அதில் கொடிமட்டும் கட்டப்படும். வெளிக்கம்பம் கார்த்திகை விழாக்களிலும் மற்ற பெரு விழாக்களிலும் தீபம் ஏற்றுவதற்குப் பயன்படும். அப்போது வெகு தொலைவிலும் தெரியும்படியாக குங்கிலியம், மட்டிப்பால், கற்பூரம் முதலிய எரி பொருள்களையிட்டு ஒளிதிகழ ஏற்றுவார்கள். வெகு தொலைவில் இருக்கிற மக்களும் அது விசேடத்தின் (சிறப்புவிழா) அறிகுறி என்று அறிந்து கோயிலுக்குச் செல்லுவார்கள். இவ்வாறு செய்வது வெற்றியின் அறிகுறி.

போர்க் காலங்களிலும் மலைகளின் மீது நெருப்பு இட்டு வெற்றி அறிகுறி திகழச் செய்வது உண்டு. அது எல்லா நாடுகளிலும் உண்டு. அதுபோலக் கோயில் விழாவின் வெற்றிகரமான செய்கைக்குத் தீபஸ்தம்பம் பயன் படுகிறது. இச் செய்தி கொங்கு நாட்டில் நடைபெறும் ஒரு சிறப்புச் செயல் ஆகும்.

மெல்நாட்டு உரோமானியர்கள் தாங்கள் படையெடுத்து வென்ற நாடுகளில் வெற்றி வளைவு (Victory Arch) களைச் கட்டிக் கொண்டாடினார்கள். நமது பாரத நாட்டிலோ வளைவுகளுக்கு மாறாகச் ஜெயத்தம்பம் அல்லது வெற்றிக் கம்பங்களை

நாட்டிவந்தார்கள். அசோக அரசனுடைய கம்பங்கள் வெற்றிக் கம்பங்களே. டெல்லியில் குதுப்மினாருக்கு அருகில் உள்ள இரும்புத் தூண் ஒரு வெற்றித் தூணே ஆகும். இராஜபுதனத்துச் சிற்றூரில் உள்ள கோபுரம் போன்ற தூண் ஒரு வெற்றிக் கம்பமே ஆகும். தமிழ் நாட்டிலும் இப்படிப்பட்ட வெற்றிச் சின்னங்கள் இருந்தன. சோழனுடைய படைத்தலைவன் கருணாகரத் தொண்டைமான் கலிங்கத்துப் போரில் வெற்றி கொண்டு மகேந்திர மலையில் வெற்றித் தூணை நிறுவினான். இராசேந்திரச் சோழன் இலங்கையின் மீது படையெடுத்துச் சிங்களவர்களை வென்று போலன்னறுவையில் ஒரு வெற்றித் தூணை நட்டுவந்தான் என்று வரலாறு கூறுகின்றது.

அதுபோலவே கொங்கு நாட்டு வெற்றிகளில் பல வெற்றித் தூண்களைக் காண்கிறோம். 13-ஆம் நூற்றாண்டிலே மாதப்பதண்ட நாயக்கன் நீலகிரியை வென்று அதன் அடிவாரத்தில் மாயாறும் பவானியும் கூடும் இடத்தில் தாணாக்கன் கோட்டையைக் கட்டி அதில் தன் வெற்றித் தூணை நட்டானாம். ஒவ்வோரரசரும் நாடுகளைப் பிடிக்கும்போது கோயிலைப் புதுப்பித்து அதன் முன்னர் வெற்றித் தூணை நடுவதுண்டு. அதன் உச்சியில் பெரிய சோதி விளக்கு வைத்து எரிக்க ஏற்பாடு செய்வதுண்டு. அவ்வித ஏற்பாட்டினால் அது வெற்றித் தூண் ஆகிறது. கிராம தேவதை விழாக்களிலும் அக்கினி கம்பம் என்ற நெருப்புச்சட்டித் தூணை வைப்பதில்லையா? அதுபோல இந்த வெற்றித் தூண்களும் ஏற்பட்டன. ஒளி வெற்றியைத் தருகிறபடியால் இந்த நெருப்புத் தூண்கள் வெற்றிக்கு அறிகுறிகளாக இருக்கின்றன. ஒரு விளக்கேயன்றி வரிசையாக விளக்குகள் இருந்தால் வெற்றியின் சிறப்பு விளங்கும். ஆகவே விளக்கீடு என்கிற தீபாவளி என்ற சொல்லின் பொருளும் அந்தப் பெயரில் வழங்கும் பண்டிகையும் ஒரு வெற்றிச் சின்ன விழா என்று அறிக.

8

தற்காலச் சமயநிலை

"உலகம் நம்மிடை அளவிற்கு மீறி இருக்கிறது" என்றார் வேட்ஸ் வர்த்து என்ற ஆங்கிலக் கவிஞர். அதாவது நாம் நம் வாழ்நாளில் உலகப் பொருள்களைப் பற்றியே சிந்தித்த வண்ணமாக இருக்கிறோம். வயிறார உண்பதும், நன்றாக உறங்குவதும் அவைகளுக்கு வேண்டிய பொருள்களைப் பெறுவதும் நமது கவலையாகிவிட்டது. நமது ஆன்மீக உணர்ச்சிகளையும் பெருக்க முயலுவதே கிடையாது என்பது இதன் குறிப்பு. இவ்விதமாக மேற்கு நாட்டார், எங்கும் பரவிவரும் உலகாயதக் கொள்கைகளை விடுத்துப் பரமான்மிக உணர்ச்சிகளைக் கைக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

நமது நாட்டிலோ இதற்கு எதிரிடையான கொள்கை இருந்து வருகின்றது. நமது நாட்டார் உலகப் பொருள்களுக்குச் செலுத்த வேண்டிய சிரத்தை செலுத்தாது பரமான்மிகத்திற்கு மிகுதியான நேரம் செலவழிக்கிறார்கள் என்பதே அதுவாம். நமது வாழ்க்கையை இன்பகரமாக்குவதற்கு நாம் சிறிதும் பாடுபடுவதும் இல்லை. அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்வதுமில்லை. உணவு, உடை, உறையுள் நமக்குப் போதுமானதாக இல்லை. இவைகளில் வேண்டிய அளவு கருத்துச் செலுத்தாமல் ஆன்மீகச் செயல்களில் கருத்து மிகுதியாகச் செலுத்திச் சமயத்தையே பெரிதும் பாராட்டுகிறோம் என்பதே.பிறநாடுகளைக் காட்டிலும், நமது நாட்டில் வைதீக உணர்ச்சி என்ற சமய உணர்ச்சி மக்களைப் பீடித்து நிற்கிறது என்பதே எல்லாரும் எண்ணுவதாகும். இந்த எண்ணம் எத்தனை உண்மை என இனி ஆராய்வோம்.

இவ்வாறு செய்யும் ஆராய்ச்சியிலே முன்நாளில் நமது நாடு எந்த நிலையில் இருந்தது என நினைக்க வேண்டியதில்லை. தற்காலத்தில் நமது நாடு என்ன நிலையில் இருக்கிறது? பொதுமக்கள் பெரும்பான்மையாக எந்தக் கருத்துக்களை ஆண்டு வருகிறார்கள். தங்கள் வாழ்க்கையில் எந்த முறைகளில் பழக்க வழக்கங்கள் நடவடிக்கைகள் முதலியவைகளைக் கொண்டிருக்கிறார்கள்?

கற்றோர்கள் மனநிலை எவ்வாறு இருக்கிறது? செல்வர்களின் எண்ணப்போக்கு எவ்வாறு இருக்கிறது? ஏழைகளின் நடவடிக்கை எந்தநிலையில் இருக்கிறது? நகரத்திற்கும், நாட்டுப்புறத்திற்கும் பேதம் உண்டா? பொதுவாக நாட்டின் எண்ணப்போக்கு எந்த நிலையில் சென்று கொண்டிருக்கிறது? சமயச் சார்பிலா? இலௌகிக முறையிலா என்பதை இங்கே எடுத்து கூறுவோம்.

சென்னை நகரில் நடைபெறும் நடவடிக்கைகளை ஆராய்ந்தால் சமயம் இன்றும் மக்களிடை உலாவுகிறது என்றே சொல்ல வேண்டும். சனிக்கிழமைகளில் திருவல்லிக்கேணி கோயிலும், வெள்ளி திங்கள்களில் மயிலை, சென்னைக் கந்தசாமி கோயிலும், திருவொற்றியூர் தியாகராயர் கோயிலும், கிருத்திகைகளில் வடபழனி ஆண்டவர் கோயிலும் பார்த்தால் போதுமானது. அங்கே தரிசனம் செய்யவரும் மக்கள் தொகை, சமய ஈடுபாட்டைக் குறிக்கும். ஆனால் வெள்ளிக்கிழமைகளில் மசூதிகளின் வாயிலில் கைக்குழந்தைகளை ஏற்றிக்கொண்டு முசுலிம் பெரியார்கள் எச்சில் தோய்ந்த சுவாசத்தைக் குழந்தைகளின் மேல் வீசும்படி நிற்கும் ஏழைத்தாய்மார்களைக் கண்டால் இவர்கள் சமயக் கொள்கை தூய்மையானதா? ஒரு கோரிக்கையை வேண்டிநிற்பதா என ஐயப்பட வேண்டும். வாரந்தோறும் சனி, ஞாயிறு நாள்களில் சமய உபன்னியாசங்களில் பிரசுரங்கள் ஏறிவருவதைக் கண்டால் சமய ஞானம் அதிகரிக்கின்றதே எனக்கூற வேண்டும். மார்கழி மாதத்தில் திருப்பாவை, திருவெம்பாவைப் பிரசங்கங்களும் ஏனைய நாட்களில் பகவத் விஜயம், சிவஞான போதம் உபன்னியாசங்களும் செய்யப்படுவதைக் கண்டால் யார்தான் சமய வாசனை குறைந்து வருகிறது என்று கூறமுடியும்? ஆனால் இச்சபைகளுக்குச் சிறிது சென்று பாருங்கள். சொன்னதையே சொல்லும் பேச்சுக்களும், சமயத்தைப் பெருக்கிவருமா எனச்சந்தேகம் பிறக்கும். சமயவாசனை இல்லாத சேரிகளிலேயும், குப்பங்களிலேயும் சமயப் பிரசங்கம் நடைபெறுகின்றதா? ஏனைய சமயத்தார்களின் பேச்சுக்களே அங்கே நிகழ்வதை அறியலாம். ஆகவே வெளித்தோற்றத்திற்கு மிகுதியாகச் சமயம் விளம்பரப்பட்டு வருகின்றதேயொழிய, உண்மை பீடம் இங்கு சமயத்திற்கு இல்லை எனலாம். இத்தனை விளம்பரங்களும், சிலருடைய ஊதியத்திற்கே அனுகூலமாகஇருக்கின்றன.

மாகாணத்திலே புனிதத் தலங்களும், அவற்றிலே பெரிய பண்டைய ஆலயங்களும் இருக்கின்றன. அவைகளிலே திருவிழாக்கள் வெகு ஆடம்பரத்தில் நடைபெறுகின்றன. முன்னோர்கள் வைத்துவிட்டுப் போயிருக்கும் கட்டளைகளும், அவற்றை ஆதரிக்கும் சொத்துக்களும் அபரிமிதமாக இருக்கின்றன. இவைகளால் நூதன முறைகளில் ஆடல், பாடல், திருவுலா, தெப்பம் முதலியவைகள் நடைபெறுகின்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்று மகிழ்வதன்றிக் காணிக்கைகளும் தருகிறார்கள். சில புகழ்பெற்றதலங்களில் அபிடேகம் செய்தல், காவடி எடுத்தல், தலைமுடி வாங்குதல் முதலிய காரியங்களைச் செய்யப் பல்லாயிரக்கணக்கான மக்கள் போவதுண்டு, இவர்கள் செய்வது தங்கள் கோரிக்கைகளின் பொருட்டா, சமயஞானம் அடைவதற்கா, என்பதை ஆராயுங்கள்.

இனி நாட்டுப்புறத்துச் சிற்றூர்களுக்குப் போகலாம். அங்கே பகல் முழுவதும் தோட்டங்களில் வேலை செய்து இரவில் வீட்டில் ஆயாசத்தோடு படுத்து உறங்கும் குடியானவனிடம் படிப்போ, சமயமோ இருக்கின்றனவா? சனிக்கிழமைகளில் நாமம் போடுவதும் திங்களில் திருநீறு இடுவதையும் தவிர அவனுக்கு வேறு சமயஞானம் தெரியாது. வீட்டில் அம்மை போட்டுவிட்டாலும், நச்சுச்சுரம் கண்டாலும் மாரியம்மனுக்கு பூஜை போட்டுக்கிடா வெட்டி உண்பதைத் தவிரவேறு சமயம் அவனுக்குத் தெரியாது. கிறிஸ்து நண்பர்களைப் போல துன்பம் நேரிட்ட காலத்தில் அவர்கள் வீடுகளுக்குச் சென்று பிரார்த்தனை செய்து ஆறுதல் சொல்லும் உபதேசியார்கள் நமது சமயங்களில் இருக்கின்றனரா? கோயில்களில் பணத்தை வாங்கிக் கொண்டு மக்களுக்குப் புரியாத சில சொற்களை உச்சரித்து விட்டு மணி ஆட்டுகிற பார்ப்பன அர்ச்சகர்கள் தான் பெரும்பான்மையாக இருக்கின்றார்கள். இப்படிப்பபட்ட சமயப்பணியாளர்கள் சமய எல்லைகளுக்கு வீண் பளுவுகளே அன்றி ஊழியர்கள் அல்லர். ஆகவே நகரங்கள் முதற்கொண்டு நாட்டுப்புறங்கள்வரை சமயஈடுபாடு மக்களில் மிகக் குறைவு என்றே கூறவேண்டும்.

இதுவரை மேல்நோக்காக ஆராய்ந்தோம். இனி அடிப்படையான ஆராய்ச்சி ஒன்றில் இறங்குவோம். ஒரு நாட்டினுடைய உண்மையான கொள்கையை வெளியிடுவதும் புதிதான

கொள்கையைப் புகுத்துவதும் அந்நாட்டு எழுத்தாளர்களுடைய முயற்சியே ஆகும். உலகிலுள்ள பெரும்புரட்சிகளும் அந்தந்த நாட்டின் எழுத்தாளர்களாலேயே உண்டாக்கப்பட்டன. நாட்டின் பெருமைகளுக்கும் அவர்களே காரணம் என்க. இந்த உலக விதிக்கு நமது நாடு ஒருவிலக்கு அல்ல. நமது நாட்டினுடைய எண்ண நோக்கையும் உண்மையாக அறியவேண்டும் என்றால் இங்கே இருக்கும் எழுத்தாளர்களுடைய போக்கை அறிந்தால் தெரிய வரும்.

எழுத்தாளர்கள் இருவகைப்படுவர். நூல் எழுதுபவர்கள், பத்திரிகைகளை வெளியிடுபவர் எனப் பிரிக்கப்படுவர். தென்னிந்தியாவில் இந்த ஆண்டில் சனவரி. பிப்ரவரி. மார்ச்சு மாதங்களில் வெளியிட்ட சமய நூல்களை ஆராய்ந்து பார்த்தோமானல் சமய நூல்கள் 118 ஆக உள்ளன. அவற்றுள் பிறமதத்தார் நூல்கள் போக சைவ நூல்கள் ஆறே உள்ளன. ஆகவே உண்மையில் சைவ நூல்கள் குறைவாக வெளியிடப்படுகின்றன என்று கூறவும் வேண்டுமா? நாட்டுப்புறம், நகர்ப்புறம் இவைகளில் உள்ள பாடசாலைகளில் சமயப் படிப்பு உண்டா? தமிழ் ஆசிரியர்கள் எத்தனை சமய நம்பிக்கை அற்றவர்கள் ஆகி உலகாயதத்தை போதிக்கிறார்கள். இவ்விதமாக நாடு சென்றால் சமயம் நாட்டில் மிகுதியாக ஊன்றியிருக்கிறது என்று சொல்ல முடியுமா? உண்மையில் சமயப்பிரசாரம்அதிகரிக்க வேண்டும். அப்போது தான் நாடு நல்ல நிலைமைக்கு வரும்.

9

கோயில்களும் மடங்களும்

கலாசார சேவை

நமது நாட்டில் பெரும்கோயில்களும் மடங்களுமே நமது கலாசாரச் சிறப்பிற்குப் பிறப்பிடமும் வளர்ப்பிடமும் எனச் சொல்லலாம். அவ்வாறு கூறும்போது மேற்கு வாசனையில் திகழ்ந்த நமது இளைஞர்களுக்குச் சிறிது ஐயம் தோன்றும். சமயத்திற்கும் கலைக்கும் சம்பந்தமே இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் கலையின் மேம்பாட்டிற்குக் குறைவு நேரிடும் என்றும் அவர்கள் கூறுவார்கள். நமது சமய நிலையங்களின் உண்மை வளர்ச்சியை ஆராயாத குறைவினால் தான், இந்த எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட இளைஞர்களைச் சமய நிலையங்களுக்கு அழைத்துச் சென்று அவைகள் இருக்கும் சூழ்நிலையை நன்றாக ஆராயச் சொல்லிக் காண்பிக்க வேண்டும்.

மதுரை, திருநெல்வேலி, திருவரங்கம், சிதம்பரம், திருவண்ணாமலை போன்ற பெரும் நகரங்களுக்குச் செல்வோம். ஊர் நடுவில் ஆகாயத்தை அளாவிய கோபுரங்களைக் கொண்ட திருக்கோயிலைக் காண்போம். அதனைச் சுற்றிச் சதுரம் சதுரமாக மாட வீதிகளும் தேர்வீதிகளும் வெளிவீதிகளும் அமைந்திருக்கக் காண்போம். அகலமான தெருக்களிலே பற்பல தொழிலாளர் குடியிருக்கப் பார்ப்போம். இந்த நகர அமைப்பைக்கண்டு மேல் நாட்டார்களும் வியந்து பாராட்டுகிறார்கள். கோயிலை அனுசரித்தே நகர அமைப்பு ஏற்பட்டது. நெசவு முதலிய தொழிலாளர்கள் தொகுதிகளாக இருக்கும் வண்ணம் அவ்வமைப்பு வைக்கப்பட்டது. கோயில் அதிகாரிகள் இவ்வித அமைப்பைத் தந்தார்கள் என்று கல்வெட்டுச் சான்று இருக்கிறது. சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலம் முதல் நகர அமைப்பு ஒரு கலையாகப் போற்றப்பட்டது. ஆகவே கோயிலினால் நகர அமைப்புக்கலை வளர்க்கப்பட்டதல்லவா?

இனி, கோயிலுக்கு அருகே செல்லுவோம். தெப்பக்குளமும் நந்தவனமும் அதன் வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் இருக்கக் காண்போம். தெப்பக்குளம் திருவிழாவில் தெப்ப உற்சவத்திற்கு மட்டுமல்ல,. ஊர் மக்கள் குளிப்பதற்கும், நீந்துவதற்கும் பயன்படும். நந்தவனம் கோயில் வழிபாட்டிற்குப் பூ எடுப்பதற்கு மட்டுமன்றி ஊருக்கு அழகையும், செழுமையையும் தருவதற்கும் பயன்படும். கோயிலுக்குள் இருக்கும் தீர்த்தங்களோ குடிநீர்வசதி தருவன. ஆகவே, நீர்வசதி, சுகாதாரம், இளைப்பாறல், தேகப்பயிற்சி முதலியவைகளுக்கும் அவைகள் பயன்பட்டுவந்தன.

இனி, கோயில் வாயிலுக்குச் செல்வோம். ஆகாயத்தை அளாவிய கோபுரங்கள், அழிக்க முடியாத வலிவு பொருந்திய கதவுகள், எளிதில் தாண்ட முடியாத கோட்டை மதில்கள், போர்க்காலங்களில் இவைகள் கோட்டைகளாக திகழ்ந்தன. திப்பு ஹைதர் சேனைகளாலும் தகர்க்க முடியாத மதில்கள் திருவண்ணாமலை, சிதம்பரம் கோயில்களில் உள்ளன. ஆகவே இராணுவக்கலை இங்கே தென்படுகின்றது அல்லவா? ஒரு மதில் தகர்ந்தாலும் மற்றொரு மதில் உள்ளே உண்டு. ஆகவே நிரம்பிய சாகசத்தோடு அவைகள் உண்டாக்கப்பட்டன அல்லவா? கோபுரங்களில் விசித்திர வேலைப்பாடுகள் தற்கால பொறியியல் (Engineers) வல்லாரை மயங்கச் செய்யும் சிற்பம் ஓவியம் இரண்டையும் காணுங்கள். சிதம்பரக் கோபுரத்திலே நாட்டியக்கலை முழுவதும் தீட்டப் பெற்றுள்ளது. விருத்தாசலத்திலும் அதைக்காணலாம், ஆகவே, இவைகள் கலைகளுக்குப் பிறப்பிடம் அல்லவா?

கோபுரத்திற்கு அடுத்தாற் போலத் தேரோடும் வீதியிலே மிகப் பெரிய தேர் ஒன்றும் அதைவிடச் சிறிய தேர்கள் சிலவும் நிற்கின்றன. இவை பிரம்மோற்சவங்களில் தெய்வங்களை எழுந்தருளப் பண்ணி உலாப்போவதற்குப் பயன்படுகின்றன. இத்திரு விழாக்களில் ஆடல், பாடல், நடனம், இன்னிசை முதலிய நற்கலைகள் பயிலப்படுகின்றன. ஆடல்களிலே நாட்டியம் முதலிய அருமையான கலைகளேயன்றி பொய்க்கால் குதிரை ஆட்டம் முதலிய கூத்துக்களும் உண்டு. பண்டைக்காலத்தில் தஞ்சையில் சாக்கைக் கூத்தும் இருந்தது.

இப்போது குறவஞ்சி நடக்கிறது. தேவாராதி இன்னிசைத் தெய்வீகப் பாடல்களும் பாடப்படுவன. ஊதுகுழல் முதலிய அரிய இசை இன்னியங்களும் மக்களை மகிழ்விக்கும். இவ்விதக் கலைகள் ஆலயத் திருவிழாக்களிலே பாராட்டப்படுகின்றன. மேலும் தேரின் அமைப்பைப் பாருங்கள். இறைவன் திரிபுராதிகளை எரித்தபோது ஏற்பட்ட தேரின் அமைப்பையே உறுதிப்படுத்துகிறதல்லவா? அது மரத்தினால் எல்லாவிதச் சிற்பக்கலையும் ஆக்கமுடியும் என்று கூறுகிறது. தேவதைகளின் திருவுருவங்களையும் திருவிளையாடற் செய்திகளையும் இங்கு பார்க்கலாம். சிற்பக்கலை தேர்க்கட்டிலும் நன்கு ஆராயப்பட்டது.

கோபுரவாயிலுக்கு உட்சென்றால், பலவித மண்டபங்களைக் காண்கிறோம். நான்கு கால் முதற்கொண்டு 1008 கால்வரை உட்பட்ட மகத்தான மண்டபங்கள் தோன்றுகின்றன. இவைகள் கடலை பொரி தின்றுவிட்டு அரட்டை அடிப்பதற்கும், சீட்டாடுவதற்கும் ஏற்பட்டவையல்ல. திருமறைகள், தேவாராதி இன்னிசைகள், புராணங்கள், சமயவிரிவுரைகள் முதலியவைகளை மக்களுக்குச் சொல்லுவதற்காகவே கட்டப்பட்டன. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் இங்கே பயிலப்பட்டது. பெரிய கவிஞர்கள் தாம் புதிதாக இயற்றிய நூல்களை இம்மண்டபங்களில்தான் அரங்கேற்றினார்கள். திருத்தொண்டர் புராணம், கம்பராமாயணம் முதலிய அருமையான நூல்கள் திருக்கோயில் மண்டபங்களிலே தான் அரங்கேற்றப்பட்டன. சில கோயில்களில் வேதபாடசாலை, ஆகமபாடசாலை, இலக்கணப் பாடசாலை, முத்தமிழ்ப் பாடசாலை முதலியவைகளை நடத்தி மக்களுக்குக் கல்வி ஊட்டினார்கள். இந்தப் பெருங்கலைகளை வைத்து நடத்துவதற்காக மன்னர்களும் ஏனைய செல்வந்தர்களும் அளவிறந்த சொத்துக்களைத் தானம் செய்துள்ளார்கள். ஆகவே இம்மண்டபங்களே கல்விச் சாலைகளாக விளங்கின எனலாம்.

இம்மண்டபங்கள் சில குறிப்பிட்ட பயிற்சிகளுக்குப் பயன்படுத்தப் பட்டன. மறை ஓதுதல், நாட்டியம் இயற்றல் என்பவைகளுக்குத் தனிமண்டபங்கள் இருந்தன. பரத நாட்டியக்கலை கோயிலிலேதான் தொடங்கி வளர்ச்சியடைந்தது. வாகன மண்டபங்களிலே மரத்தினாலும்,

மண்ணினாலும், வர்ணங்களினாலும் பிராணிகளின் உருவங்களை எப்படி செய்யக்கூடும் என்று அறியமுடியும்? ஆயுதங்கள் செய்தல் இசைக்கருவிகளைச் செய்தல் முதலிய தொழில்களும் ஆலயங்களிலேயே தொடங்கின. சில கோயில்களிலே கல் நாகசுரம், பலவித வேய்ங்குழல்கள், மர நாயனங்கள், பலவித கொம்புகள், பறைகள், குடமுழாக்கள், பஞ்சமுகவாத்தியங்கள் முதலிய நால்வகை இனியங்களையும் காணலாம். அம்மண்டபத்துக் கல் சிற்பங்களே பண்டைய தமிழ் இசைக் கருவிகளின் உருவங்களையும் அவைகளை உபயோகிக்கும் முறைகளையும் காட்டுகின்றன. நெல்லை, கிருஷ்ணாபுரம் கோயில்களில் காணும் இசைக் கருவிகளின் உருவங்கள் சமீபத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் இசை நூலில் வெளியிட்டுள்ளார்கள்.

இனி, சிற்பம் ஓவியம் இவைகளைப் பற்றிக் கூறவேண்டியது. கோயில் அல்லாமல் வேறு எந்த நிலையத்தில் இக்கலைகள் வளர்க்கப் பட்டன என்று கேளுங்கள்? தமிழ்நாட்டுச் சிற்பக்கலை உலகத்திலேயே சிறந்தது எனக் கூறுதல் மிகை ஆகாது. நமது நாட்டுச் சிற்பியின் மனோவேகமும் புத்தி கூர்மையும் கல்லில் கனிந்த கவிகளாக மாறியிருக்கின்றன. உயிர் அற்ற கல் உருவமாகி அறிவு படைத்து மிளிர்கிறது. பாத்திரங்கள் செய்யக்கூடிய வெங்கலமும் பித்தளையும் தாம்பரமும் அழகிய திருமேனிகளாகி மண்டபங்களிலே திகழ்கின்றன. தெய்வீக உருவங்கள் ஒன்றோ? பலவித மிருகாதிகள், அதிசய உயிர் இனங்கள், கற்சங்கிலிகள், ஆயிர இதழ்த்தாமரைகள், பலவித ஆயுதங்கள், பண்டை இசைக்கருவிகள், அழகிய பூ வேலைகள, மானுட உருவங்கள், சிற்பக்கதைகள் இவைகள் எல்லாம் மண்டபத் தூண்களில் விளங்கக் காணலாம். இம் மண்டபங்களின் இல்லாத கலைகளும் உலகில் உண்டோ? என்ற கேள்வியும் எழும்பும்.

இனி, கர்ப்பக்கிருகத்தைக் கண்டால் அதில் விமானம் சமைத்திருக்கிற ஒழுங்கைக் காணலாம். கணித நூல்படி சிறிது பிழைபடாமல் ஏற்பட்டிருக்கும் வகை அங்கே உண்டு. விமானம் என்ற சொல்லிற்கே நன்றாக அமைக்கப்பட்டது என்பது பொருள். அதற்கு ஏற்றாற் போல் இவ்வழகிய நடுநிலையம் ஏற்பட்டுள்ளது.

நாயன்மார்கள் ஆழ்வாராதியர் திருவுருவங்கள் அவர்களது வரலாற்றுச் சரிதங்களையும் உள் மண்டபங்களும் உட்கோயில்களும் நினைவுபடுத்துகின்றன. திருக்கோயிலுடைய முழு அமைப்பே உடலின் அமைப்பையும் அதன் கோசங்களையும் காட்டுகின்றன. வேதாந்த சித்தாந்த உட்கருத்து திட உருவமாக இங்கே இருக்கக் காணலாம். இக்கலைகளை எல்லாம் திருக்கோயில்கள் அல்லாத வேறு எந்த சமயப்பற்றற்ற நிலையம் ஒருங்கே காட்டமுடியும்?

மேலும் மடாலயங்களைச் சிறிது கவனிப்போம். மடங்கள் கடுந்துறவு பூண்ட பண்டைப் பெரியோர்களால் தாபிக்கப்பெற்றன. நாளுக்கு நாள் அவைகள் வளர்ந்து சமயப்பிரசாரத்தைத் தன்னலமில்லாமல் சிறந்த முறையில் திருத்தொண்டு செய்து வந்தன. மடாதிபதிகள் நிரம்பக் கற்றவர்கள். அவர்களுடைய மாணாக்கர்களும் கற்றுத் தேர்ந்தவர்கள், ஒழுக்கத்திற் சிறந்திருந்தார்கள். அவர்களுடைய கைங்கரியங்களை கண்டே அரசர்களும் செல்வர்களும் மானியங்களைத் தந்தார்கள். மடத்துப்பெரியவர்களும் யாதொரு கவலையும் இன்றி அறிவு நூல்களை ஆராய்ந்து எழுதினார்கள். அவ்வாறு தமிழ் நாட்டில் சைவ, வைணவ தத்துவ நூல்கள் அளவு கடந்து வெளிவந்தன. மற்றும் பலவகை இலக்கியப் பிரபந்தங்களும் தோன்றின. 17, 18, 19 - ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டைப் பிற நாட்டு மக்கள் கவர்ந்து கொண்ட காலத்தில் மடங்களே தமிழ்க்கலைகளை வளர்த்தன. ஆகவே கலையியல் வளர்ச்சிக்கு மடாலயங்களும் சிறந்த பிறப்பிடங்களாகித் திகழ்ந்தன.

இத்தனைச் சிறப்புப்பெற்ற கலைப்பிறப்பிடங்களும் வளர்ப்பிடங்களும் இப்போது என்ன நிலைகளில் இருக்கின்றன? கோயில்களில் சென்ற மூன்று நூற்றாண்டுகளாகப் புதுச்சிற்ப வளர்ச்சி இல்லை. ஓவியமோ பத்து நூற்றாண்டுகளுக்கு முந்தியே மறைந்துவிட்டது. நாட்டியக் கலை ஒரு சாரார்பால் சென்றுவிட்டது. தமிழ் வளர்ச்சியைத் தீட்டின கல்வெட்டுக்களை அறிவாரே இன்றிப் பிரம லிபிகளாகி விட்டன. மண்டபங்களில் உள்ள சிற்பங்களின் மதிப்பு அறியாத மக்கள் எண்ணெய் தடவி அவைகளை மறைத்து விட்டனர். ஓவியங்களையும் கல்வெட்டுக்களையும் சுண்ணாம்பினால் பூசி

மெழுகிவிட்டனர். மண்டபங்களில் சமய ஆராய்ச்சியும் கலைப்பயிற்சியும் நடைபெறாமல் தேர்ச்சீலைகளும் தட்டு முட்டுச் சாமான்களும் இடுவதே வழக்கமாகிவிட்டது. அங்கே அறிவுபெற்ற மாணவர்கள் இருப்பதற்கு மாறாகத்தேள், பாம்பு, பூரான், ஓணான், சிலந்தி முதலிய உயிர்களுக்கு உறைவிடமாகி விட்டன. எண்ணெண் கலைகளும் கோயிலைவிட்டு ஓடிப்போய் அவைகளுக்கு மாறாகக் கேளிக்கைகளும் பண விரயம் செய்யும் கூத்தாட்டங்களும் நிரம்பி விட்டன. மடங்களைப் பற்றிக் கூற வேண்டியதில்லை. அவைகள் வெறும் செல்வ நிலையங்கள் ஆகிவிட்டன. உணவுச் சாலைகளாகவும் மாறிவிட்டன. தமிழ்வளர்ச்சி இல்லை. சென்ற இரண்டு நூற்றாண்டாக ஒரு புதிய ஆராய்ச்சி நூலும் இங்கு ஏற்படவில்லை. மடாதிபதிகள் தங்களுக்கு இட்ட தருமச் சொத்துக்களைத் தங்களுடைய சொந்தப் பொருளாக நடத்தி வருகிறார்கள். இந்நிலைமை மாறவேண்டியது அவசியம் அல்லவா?

ஆலய அதிகாரிகள் கலைகளில் அன்பு பூண்ட அறிவாளிகளாக இருக்க வேண்டும்; மடாதிபதிகளும் கலைகளில் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். நமது நாட்டுப் பண்டைய மேன்மை அறிந்தவர்களாக இருக்கவேண்டும்; நாட்டு அன்பு சமய அன்பு திகழ்ந்தவர்கள் ஆனால் நமது கோயில்களில் உள்ள அற்புதப்பொருள்களில் ஒரு துணுக்கையாவது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாக விடுவார்களா ! மதுரை மதனகோபால சுவாமி கோயிலில் இருந்த இராமாயணக்கதை முழுவதும் கல்லில் தீட்டிய மண்டபத்தை அமெரிக்கக் கண்காட்சிச் சாலைக்குவிற்று விட்ட மேதாவிகள் நாட்டுத் துரோகிகள் அல்லவா? இனிமேலாவது சிற்பங்களையும் அருமையான திருமேனிகளையும் வெளிச் சென்றிருந்தாலும் இனிமேல் போகவொட்டாமல் மீண்டும் கொண்டுவர அறக்காப்பாளர்கள் முயல்வார்களாக. பண்டைய கலைகள் இறந்து போகாமல் நிலைநிறுத்தும் பொருட்டு ஆடம்பரச் செலவுகளில் சிறிது குறைத்து 100 க்கு பத்துவீதமாகிலும் வருமானத்தை கலாசாரச் சேவைக்குச் செலவழிப்பார்களாக. நமது பொது மக்களுக்கு ஆலயங்களில் உள்ள பண்டைப்பெருமைகள் தெரியாது. அவைகளை அறிவிக்கச் சிறு நூல்கள் சித்திரப் படங்களோடு வெளிவிட வேண்டும். மைசூரில் இந்த

முறை கையாளப்பட்டு வருகின்றது. நமது மாகாணத்தில் கல்வெட்டுப் பகுதி, சிற்பப் பகுதி, என்ற அரசியல் பகுதிகள் உண்டு. அவைகளால் பொதுமக்கள் எத்தனை பயன் பெறுகிறார்கள் என்று கேட்கலாம். ஆலயங்களைப் பற்றிய எளிய நூல்கள் நிரம்ப வெளிவர வேண்டும். சிற்பம், ஓவியம், நாட்டியம் முதலிய கலைகளை ஆலயச் செலவு கொண்டு பாட சாலைகள் ஏற்படுத்தி வளர்க்க வேண்டும். இவைகளுக்குச் செய்யும் செலவு வீண் அல்ல. இம்முயற்சியில் மக்கள் ஊக்கம் தருவார்களாக !

நிதிநிர்வாகம்

"கோயிலில்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்" என்பது தமிழர் முதுமொழி. ஆகவே, எந்த இடத்தில் புதுக் குடியிருப்பு ஒன்றைக் கட்டின போதிலும் முதலில் கோயிலைக் கட்டியே அதனைச் சுற்றிக் குடியிருப்பைக் கட்டி வாழத்தொடங்கினார்கள். சில இடங்களில் கோயில்கள் ஆற்றங்கரையிலும் சிறு குன்றுகளின் மீதும் கடற்கரையிலும் ஏற்பட்டன. அவ்வித இயற்கையமைப்புக்களால் அக்கோயில்களுக்குப் பெருமை மிகுதியாயிற்று. அக்கோயில்களைக் சுற்றிச் சிற்றூர்கள் அன்றிப் பேரூர்களும் உண்டாயின. சமய அடியார்கள் சில கோயில்களைச் சிறப்பித்தார்கள். அழகிய உணர்ச்சி ததும்பிய பாடல்களை அருளிச் செய்தார்கள். பல அற்புதங்களை இயற்றினார்கள். அக்காரணங்களினாலே அக்கோயில்களுக்கு ஒப்பற்ற பெருமை ஏற்பட்டது. சில ஊர்கள் அரசர்களின் தலை நகரங்கள் ஆயின. அவைகளுக்கு மேன்மேலும் பெருமை கிடைத்தது. இந்த வகையில் சிறு கோயில்கள் பெருங் கோயில்கள் ஆகி அவைகளைச் சுற்றிலும் பெரிய நகரங்கள் வளர்ந்தன. இந்த வளர்ச்சியில் கோயில்களால் நகரங்களும் நகரங்களால் கோயில்களும் சிறப்புற்று ஒன்றுக் கொன்று பேருதவியும் பெற்று ஓங்கின. இவ்விதம் வளர்ந்த நகாங்கள்தாம் மதுரை, திருச்சி, தஞ்சை, காஞ்சி, பூம்புகார், கடல் மல்லை முதலிய பண்டைப்பதிகள்.

ஆலயங்கள் பலவகைப்பட்டன. ஒரு தனி அரசமரத்து மேடையில் வணங்கப்படும் சிறிய உருவ மூர்த்தி முதல், ஏழுமதில் படைத்ததும் பெரிய நகரத்தை உட்கொண்டதுமான தலைநகர்க் கோயில்வரை அளவிறந்த விதங்களாக அமைந்து இருக்கின்றன. மனிதனுடைய நாகரிகவளர்ச்சிக்குத் தக்கபடி இக்கோயில்கள் தோன்றியிருக்கின்றன. பண்டைக் காலத்தில் அரசமரத்து மேடையின் மேல் உருவத்தை நட்டு வழிபாடு செய்வதே போதுமானதாக இருந்தது. நாளடைவில் அம் மேடையின்மேல் பந்தல் கட்டப்பட்டது. பிறகு கூறைக்கொட்டம். பிறகு வில்லை இல்லம். பிறகு செங்கல் கட்டடம். பிறகு கருங்கல்கிருகம். பிறகு அழகு விசித்திர விமானம். முடிவில் பலவித மண்டபங்கள், மதில்கள், கோபுரங்கள், குளங்கள் நந்தவனங்கள் முதலிய சேர்ந்து பெரிதாக வளர்ந்தது. மனிதன் தான் வாழும் வீட்டைச் சிறிய குடிசையிலிருந்து பணம் ஏற ஏற மாளிகையாக மாற்றிக்கொள்வதைப் போலத்தான் வழிபடும் கடவுளுக்கும் அவ்வாறே இருப்பிடம் கட்டி அங்கு வணங்கினான். இவ்விதமான வளர்ச்சி கொண்ட பாகுபாட்டை இன்றைக்கும் காணலாம்.

இனி வழிபாட்டுச் சடங்குகளிலும் இவ்வாறே காணலாம். அரசமரத்துப் பிள்ளையார் கோயிலிலே பூசாரி வேண்டியதில்லை; பணச்சேகரிப்பும் வேண்டியதில்லை. வழிபடுகிறவர்கள் தேங்காய் பழம் சூடம் வைத்துத் தண்ணீர் வார்த்துத் தாங்களே தொழுது வருவார்கள். ஆனால் பெரிய கோயில்களிலோ பலவிதமான சடங்குகளும் திருவிழாக்களும் உண்டு. நித்திய நைமித்திக விசேஷ விழாக்கள் நடைபெறும். அவைகளுக்குப் பெரும் தொகை வேண்டியிருக்கும். அவைகளை நடத்தச் சிப்பத்திகளும் அதிகாரிகளும் வேண்டும். இவ்விதமான நிர்வாகம் நடத்தச் சொத்துகள் வேண்டியிருக்கும். நமது நாட்டில் கோயிலின் வளர்ச்சியைப் பின்பற்றியே சொத்துச் சேகரிப்பும் நிர்வாக வளர்ச்சியும் இயற்கையாகவே ஏற்பட்டிருக்கின்றன. அவ்வளர்ச்சி மக்களின் நாகரிக உயர்ச்சியையும் சமய ஈடுபாட்டையும் விளக்கிக் காட்டுகின்றன.

அரச மரத்துப் பிள்ளையார் கோயிலுக்குச் சொத்து இல்லை. நாளுக்கு நாள் ஆகக்கூடிய செலவும் இல்லை. ஆனால் அக்கோயிலின் வளர்ச்சி பெருகப் பெருகக் கட்டடங்களுக்குப் பணமும் திருவிழாக்களுக்கு வருவாயும் வேண்டிவந்தன. கட்டடங்களை, அரசர், அமைச்சர், செல்வந்தர், வியாபாரிகள் பணம் உதவிக் கட்டினார்கள். திருவிழாக்களை நடத்தப் பணமும் நிலமும் தந்தார்கள். இவ்விதம் செய்யப்பட்ட தானங்கள் பலவிதங்களாக இருந்தன. பொன்காசுகள், ஆடுகள், கறவைமாடுகள், நன்செய் புன்செய் நிலங்கள், வரிகள், விளையும் பண்டங்கள், விலையுயர்ந்த மணிகள் முதலியன தரப்பட்டன. பிரார்த்தனை அல்லது வேண்டுதல் செய்பவன், பணம் ஆடு முதலியவைகளைத் தருவான். விளக்கு வைத்தல், திருவிழா நடத்துதல். சந்தி செய்தல், சாந்தி கழித்தல், முக்கால வழிபாடு இயற்றுதல் இவைகளை நடத்துபவன் நிலம் தருவான். அரசன் தன் கோரிக்கையை உத்தேசித்துக் கிராமத்து வரிகளைக் கோயிலுக்கு அர்ப்பணம் செய்தான். இவ்வரிகளில் குடிக்காணம், வெறும்பாட்டம், மீன்பாட்டம், தறிவரி, குயவரி, சந்தைவரி முதலான பல வரிகளும் சேர்ந்தன. முன் காலத்தில் தேவதானம் என்ற பெயரில் வழங்கிய இந்தப் பலவகைத் தானங்கள் இப்போது மானியம், இனாம் என்ற பெயர்களினால் வழங்கிவருகின்றன. தற்காலத்தில் உள்ள பெரும் கோயில்களுக்கு எல்லாம் இவ்வாறு பண்டைக் காலத்தில் ஏற்பட்ட மானியங்களே பெரும்பான்மையான சொத்துக்களாக இருக்கின்றன. இவைகளுடைய நோக்கம் நித்திய நைமித்திக விசேடச் சடங்குகளை நடத்துவதே என அறிய வேண்டும்.

ஆலயங்களிலே மூலத்தான மூர்த்திக்கு வழிபாடும் திருவிழாக்களும் நடத்துவது மாத்திரமன்றி பரிவார தேவதைகள், சமயாசாரியர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் இவர்களை ஏற்படுத்தி அவர்களின் வழிபாட்டிற்கும் சம்பாவனைக்கும் நிலங்களைத் தானம் செய்து வந்தார்கள். நந்தவனங்களை வைத்து அவைகளைப் பரிபாலனம் செய்வதற்கும் குளங்களைத் தொட்டுத் தெப்ப உற்சவங்கள் நடத்துவதற்கும் தேவாராதித் திருப்பாடல்களை ஓதிவைக்க

ஓதுவார்களை நியமித்து அவர்களுக்கு ஊதியம் தருவதற்கும் சமயப்பாட சாலைகள், வைத்திய சாலைகள், சிற்பநூல், ஓவியம், ஆடல்பாடல், இன்னிசை, இவைகளைப் போற்றுவதற்கும் நிலங்களைத் தானம் செய்ததுண்டு. இவைகளின் நோக்கங்கள் கெட்டுப்போகாத வண்ணம் பல நிபந்தனைகளும் ஆணைகளும் இட்டுக் கல்வெட்டு செப்பேடு இவைகளில் பதிப்பித்தார்கள். இந்த வகையில் வந்த சொத்துக்கள் ஆலயங்களுக்குச் சேர்ந்தன.

அவ்வாறு ஆலயங்களுக்குச் சேர்ந்த சொத்துக்கள் ஆலயக் கணக்கர்களிடம் பதிவு செய்யப்பட்டு ஆலயத்தின் பண்டாரத்தில் சேர்க்கப்பட்டன. பண்டைய ஆசாரத்தின்படி இச்சொத்துக்கள் ஆலய பரிபாலன மூர்த்தியான சண்டேசுரர் பேரில் எழுதப்பட்டன. உண்மையில் பண்டாரத்தின் பார்வையாளராகிய கணக்கனே பார்த்து வந்தான். சிற்சில சமயங்களில் அவன் மோசடி செய்யும் பட்சத்தில் அரசனே அதனைக் கண்டு பிடித்துத் தண்டிப்பதற்காக அமைச்சர்களை நியமித்ததுண்டு. அவ்வாறு 13-ஆம் நூற்றாண்டில் குலோத்துங்கன் மூன்றாவது காலத்தில் ஒருபரிசோதனை விசாரணை நடந்திருக்கிறது. அப்படி இருந்தும் பல பெருங்கோயில்களில் நிலங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டன. மேல்பார்வை சரியாக இருப்பதற்காக அவ்வவ்வூர்க் கோயில் மேற்பார்வையை அவ்வவ்வூர்ச் சபையார்களே பார்த்துவந்தார்கள். ஆகவே சிற்றூர்களில் பராதீனங்கள் மிகுதியாக இருக்கவில்லை.

ஆலயங்களைப் போலவே மடங்களுக்குப் பலவிதங்களில், சொத்துக்கள் சேர்ந்தன. மடங்கள் பெரும்பான்மையாக 15, 16 - ஆம் நூற்றாண்டுகளில் முன்னேற்றம் அடைந்தன. சிறந்த துறவிகள் அவைகளை ஏற்படுத்திச் சமய நூல்களை ஆராய்ந்து தம் மாணாக்கர்களுக்குச் சமயஞானத்தை ஊட்டுவதற்காகத்தான் இவைகள் ஏற்பட்டன. அவைகளில் துறவிகளும் சீடர்களான தம்பிரான்களுமே இருந்து வந்தார்கள். சமயப் பிரசாரத்தில் ஈடுபட்டு வந்ததினால் அரசர் முதலியோர் அம்மடங்களுக்கு நிலம் முதலிய அசையாப்பொருள்களை மானியங்களாகக் கொடுத்தார்கள். அன்ன

விசாரம் இன்றிச் சமயப்பணி செய்வதற்காக இத்தானங்கள் செய்யப்பட்டன. நாளடைவில் இவைகள் பெருகி பெருஞ் செல்வநிலையங்கள் ஆகிவிட்டன. மடச்சொத்துக்களை மடாதிபதியே பரிபாலித்து வந்தார். ஆனால் சீடர்களாகிய தம்பிரான்களில் நிர்வாகம் செய்யக் கார்பார் தம்பிரான் என்ற ஒருவரும் இருப்பார். சில மடங்களில் மடச்சொத்துக்களைப் பரிபாலிப்பதன்றி அருகில் உள்ள ஆலயங்களையும் பார்த்து வர விடப்பட்டனர். ஆகவே அவ்வாலயச் சொத்துக்களும் அம்மடங்களுடைய பரிபாலனத்துள் வந்துவிட்டன. இந்த வகையில் நிர்வாகம் மிகப்பெரிதாகிவிட்டது,

நமது மாகாணத்தில் உள்ள கோயில்கள், மடங்கள் இவைகளின் மொத்தம் 27,000. இவைகளில் சிறு கோயில்களை விட்டால் பணவருவாய் உள்ள பெரும் நிலையங்கள் 12552. இவைகளிலே 1000-க்குக் கீழ் - 7994 - ம், 1000 - 3000 க்குள் 2664 - ம், 3000 - க்கு மேல் 1189 - ம் ஆகமொத்தம் 11847 கோயில்கள் உள்ளன. மடங்களிலே 1000-க்கு கீழ் 94 - ம், 1000 - 3000 - ல் 41 - ம், 3000 மேல் 49 - ம், ஆக 184 மடாலயங்கள் உள்ளன. கட்டளைகளிலே 1000 - க்கு கீழ் 345 - ம், 1000 - 3000 - 83 - ம், 3000 க்கு மேல் 93 - ம் ஆகமொத்தம் 521 கட்டளைகளும் ஒட்டுமொத்தம் வருவாய் உள்ளன. அற நிலயங்கள் 12552 இருக்கின்றன. இவைகளிலிருந்து 100 - க்கு 3 ரூ. வீதம் வரும் கட்டளை வருவாய் 838000 ஆகிறது. ஆகவே அறநிலையங்களின் மொத்த ஆண்டு வருவாய் 2,79,00,000 ரூ இவைகளின் இருபது மடங்கு வீதம் சொத்து மதிப்பு $55^{3}/4$ கோடி ஆகும்.

இத்தனை மதிப்புள்ள அறநிலையங்களின் சொத்துக்கள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன எனக் கேட்கலாம். ஆங்கிலர் வந்த முதலில் தாங்களே ரிவின்யு இலாகாமூலமாக கோயில்களைப் பரிபாலித்தார்கள். 1840-இல் அதைவிடுத்து தருமகர்த்தர்கள் வசம் ஒப்புவித்தார்கள். 1860 - இல் ஆலய கமிட்டிகளை நியமித்தார்கள். சென்னையில் அவைகள் சரியாக வேலை செய்யாததினால் 1926-இல் அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் ஏற்பட்டது. அது சில ஆண்டுகளில்

பல சீர்திருத்தங்கள் அடைந்தது. அதன்படி அறநிலையப் பாதுகாப்புச் சபை ஒன்று ஏற்பட்டது (H. R. E Board) ஒரு தலைவரும் மூன்று காப்பாளர்களும் ஏற்பட்டார்கள். நிலையங்களின் கணக்கு வழக்குகளைப் பரிசோதித்துக் குற்றங்களை நீக்கி நல்லவழிக்குக் கொண்டு வருவது இவர்கள் பொறுப்பு. இவர்களின் நூற்றுக்கணக்கான சில்லறைச் சிப்பந்திகள் உண்டு. இந்தத் தாபனத்தை நடாத்த 100 க்கு 1 1/2, 3 என்ற வரிகளை வாங்கி வந்தார்கள். இவர்களே ஆலய அதிகாரிகளையும் தருமகர்த்தர்களையும் நியமித்தார்கள். இந்த முறை 20 ஆண்டுகளாக நடைபெற்றதில் நிர்வாகம் செவ்வைப்படவில்லை என்று கருதி அமைச்சர்கள் புதிதாக ஒரு மசோதாவை வெளியிட்டிருக்கிறார்கள். அதன்படி நிலையங்களிலிருந்து வாங்கும் வரி (3 + 1/2 வீதம்) அரசியலாருக்குச் சேர்ந்தது. அரசியலே பரிபாலனத்திற்குப் பொறுப்பாளி. சபை எடுத்து விடப்படும். அதற்குப் பிரதியாக அரசியல் சிப்பந்திகள் புது இலாகாவாக நியமிக்கப் படுவார்கள். இவ்விதம் செய்தால் முழுநம்பிக்கையும் உறுதியும் ஏற்படும் என்பது கருத்து.

இவ்வித மாறுதலுக்கு நாட்டில் ஒரு எதிர்ப்பு இருக்கிறது. அரசியலும் சமயமும் கலக்கக் கூடாது என்பதே. ஆங்கிலேயர் வந்த போது இருந்த நிலைமைக்கு நாம் சென்றுவிடுகிறோம். இதில் பொது மக்களுக்கு உரிமை இல்லாமல் போய்விடுகிறது. வேறு சமயங்களுக்கு இவ்வித நிர்ப்பந்தம் ஏற்படுத்தவில்லை. ஆனால் அரசியலில் நிர்வாகம் ஏற்படுத்தி விட்டால் அது செவ்வையாகவே நடக்கும். சிப்பந்திகளுக்கும் உறுதியான வேலை கிடைக்கும். ஆனால் அருளும் அன்பும் போய் இரும்புச் சட்டமே எங்கும் நிலைபெறும்.

அறநிலையங்களின் வருவாய்களைத் தனிமையான ஒரு நிதியாக ஏற்படுத்தி, சிப்பந்திகளை அரசியல் இலாகாவில் சேர்த்து விட்டால் இந்த ஆட்சேபணை நீங்கிவிடும். பிறகு சமய நிலையங்கள் தனி ஆட்சி பெறல்கூடும். பொதுமக்களின் கூட்டுறவைக் கோரி ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்த வேண்டும். இந்த மாறுதல்கள் அவசியம் வேண்டும் என்று சென்னையில் கூடிய பெரியார்கள் கூட்டம் திருத்தப்பாடு கொண்டு வந்துள்ளது. இத்திருத்தத்தினால் அறநிலையங்களின் நிர்வாகம் சீர்திருத்தம் அடையக் கூடும்.

10

ஐயவினா

பரஞ்சோதி முனிவர் அருளிச்செய்த திருவிளையாடல் புராணத்தில் சமணர் கழுவேற்றிய படலத்தில் திருவேடகம் உண்டான வரலாறு அடியிற்கண்டபடி கூறப்பட்டிருக்கிறது. சமய மேம்பாட்டை நிருபிக்க சமணரும் திருஞானசம்பந்தரும் வைகையாற்றில் ஏடுகளை இட்டனர். சமணருடைய ஏடுகள் வெள்ளத்தில் கீழே போயின. சம்பந்தருடைய ஏடு நீரை எதிர்த்து மேலே சென்றது. சமணர் தோல்வியுற்று சபதப்படி கழுவில் ஏற்றப்பட்டனர். பாண்டியன் சம்பந்தரை நோக்கி எதிரே சென்ற ஏடு எங்குற்றது என்று வினவினான். அதைக் கொணர சம்பந்தரும் ஆற்றின் கரையிலே மேற்கே சென்றனர். சிறிது தூரம் செல்லவே ஏடு மறைந்தது. அங்கிருந்து இடைச் சிறுவர்களைக் கேட்டதற்குத் தமக்குத் தெரியாது என்றனர். பிள்ளையார் பெருமானைப் பதிகம் பாடித்துதித்தார். ஈசனார் அங்கே ஒரு வில்வக் காட்டினுள் சுயம்புவாகத் தம் உருவம் காட்டினர். பாண்டியனும் அச்செய்தி கேட்டு விரைந்து வந்தனன். உடனே ஈசனார் ஒரு முதிய அந்தணனாகத் தோன்றிச் சம்பந்தரை விளித்து திருநீறுவழங்கினர். பிள்ளையாரும் ஏடு கேட்க அதனைத் தந்து மறைந்தருளினார். அதனைப் பாண்டியனுக்குக் காட்டப் பாண்டியனும் பிள்ளையாரை வணங்கி அங்குதோன்றிய சுயம்புமூர்த்திக்குத் திருக்கோயில் எழுப்பி ஊரும் கட்டினான். அதுமுதல் அவ்வூருக்குத் திருவேடகம் எனப் பெயர் ஏற்பட்டது.

"அற்றைநா ளாதி யாக வேடக மென்று நாமம்
பெற்றதால்"

என்றார் பரஞ்சோதியார். (செ-74). இதே காரணந்தான் வேம்பத்தூராரும் கூறுகின்றனர். (செய் - 65, 66 கழுவேற்றின படலம்)

ஆனால் சேக்கிழாரோ இவ்வரலாற்றை, வேறுவிதமாகக் கூறுகின்றார். சம்பந்தப்பெருமான் இட்ட ஏடு நீரை எதிர்த்துச் சென்றது; குலச்சிறையார் ஒரு விரைவாய் ஓடும் குதிரைமேல் ஏறிப்

பின்தொடர்ந்தார் ; சம்பந்தர் அவ்வேடு தங்கும்படி ஈசனாரை "வன்னி" என்ற பதிகம் பாடினார். உடனே குலச்சிறையார் நீர் நடுவுள் புக்கு ஏட்டை எடுத்துத்தன் தலைமேல் வைத்துக்கொண்டு வந்து சம்பந்தப் பெருமானுக்குக் காட்டினார் ; மன்னவன் மந்திரியை அழைத்து சமணரை முறைப்படி தண்டிக்கச் சொன்னான். இவ்வரலாற்றிற்கும் பரஞ்சோதியார் கூறும் வரலாற்றிற்கும் உள்ள வேற்றுமைகளை மிகத் தெளிவாய் அறியலாம். சேக்கிழார் வரலாற்றில் ஏடகம் என்ற பெயர் ஏற்பட்டதன் காரணம் ஏடு தங்கினதினால் என்று கூறப்படவில்லை.

"ஏற்றுயர் கொடியினாரைப் பாடினார் ஏடு தங்க" (செ - 849)

என்றும்,

"ஏடகம் பிள்ளை யார்தாம் வன்னிஎன் றெடுத்துப் பாடக்
கூடிய நீரில் ஏடு குலச்சிறை யாரும் கூடி
காடிட மாக ஆடும் கண்ணுதல் கோயில் மாடு
நீடுநீர் நடுவுட் புக்கு நின்றஏ டெடுத்துக் கொண்டார்"

(செ - 850)

என்று மாத்திரம் கூறுகின்றார் சேக்கிழார்.

ஆனால், சம்பந்தப் பெருமான் ஏடு தங்கப்பாடிய திருவேடகப் பதிகத்தில் அடியிற்கண்ட பாசுரங்கள் இருக்கின்றன.

"வன்னியு மத்தமு மதிபொதி சடையினன்
பொன்னிய திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய **மறையவர் வழிபட வடியவர்**
இன்னிசைப் பாடலர் **ஏடகத் தொருவனே**"

"புதுமலர் கொண்டு மறையவர் வழிபடும்படியானவரும் அடியார்கள் இன்னிசைப் பாடலால் துதிக்கப்படுபவருமான ஏடகத்தில் எழுந்தருளும் ஒருவன்" என்பது பொருளாகும். ஆகவே ஏடகம் என்ற பெயர் கொண்ட தலம் சம்பந்தர் அங்கு செல்வதற்கு முந்தியே இருந்திருக்க வேண்டும்.

"கோடுசந் தனமகில் கொண்டிழி வையைநீர்
ஏடுசென் றணைதரு **மேடகத் தொருவனை**
நாடுதென் புகலியுண் **ஞானசம் பந்தன**
பாடல்பத் திவைவல்லார்க் கில்லையாம் பாவமே" **- 11.**

இதனால் ஏடகத் தொருவனை ஏடுசென்றணைந்தது என்கிறார். ஆகவே, ஏடகக்கோயில் முந்தியே இருத்தல் வேண்டும். ஏடு சென்றதினால் "ஏடு + அகம்" என்றாகி ஏடகம் ஆகி இருக்குமானல் ஞானசம்பந்தர் பாடினதற்கு முந்தி அப்பெயர் ஏற்பட நியாயம் இல்லை. ஆகவே, அப்பெயரும் அப்பெயர் கொண்ட கோயிலும், ஞானசம்பந்தர் ஏடுவிட்டதற்கு முந்தியே இருத்தல் வேண்டும் எனப் புலப்படும்.

இவ்விரு கொள்கைகளில் எது சரியானது? ஏடகம் எப்போது ஏற்பட்டது என்பவைதான் ஐயங்கள்.

11

கூத்தாடு தேவர்

"கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி"

உயிர்களின் பொருட்டு ஆண்டவன் தாங்கும் கோலங்கள் பல. அவைகள் மாயை கடந்தனவாகையால் "அற்புதக் கோலங்கள்" ஆகும். அவைகளில் வியக்கத்தக்க அழகு வாய்ந்தது நடராசக் கோலம். அது அருமறைகளின் மேல் ஒளிர்வது ; சிதாகாச சொருபமாக உள்ளது ; அச்சிறந்த கோலம், சிதம்பரத்துச் சிற்சபையில் எழுந்தருளியிருப்பது.

நடராசக் கோலத்தைத் தமிழர்கள் கூத்து என்று சொல்லால் பாராட்டினார்கள். பண்டைக் கல்வெட்டுக்கள் நடராசப் பெருமானைக் "கூத்தாடு தேவர்", "ஆடவல்லான்" என்ற சொற்களாற் குறித்திருக்கின்றனர். திருத்தில்லைக் கூத்தருடைய தோற்றத்தைக் காணும்போது எப்போதும் இடைவிடாது ஆடிக்கொண்டிருக்கும் நிலைமையே நமக்குத் தோன்றும். அவ்வாறு அவர் ஆடிக்கொண்டிருப்பதினாலே தான் உலகும் ஆடிக்கொண்டிருக்கிறது. அவரது ஆட்டம் நின்றால், உலகத்தின் ஆட்டமும் நின்றுவிடும். இதுதான் திருக்கூத்தின் உட்கருத்து. உயிரோ எப்போதும் இயங்கிக் கொண்டிருப்பது. உயிரற்ற பிணமோ இயக்கம் இல்லாதது. ஆகவே உலகமும் உலகத்தில் உள்ளவர்களும் உயிருற்று இருக்க வேண்டுமாகில் அவை எல்லாம் இயங்கிக் கொண்டே இருத்தல் வேண்டும். உலக உயிர்கள் அடிமைப் பட்டவைகள். ஈசன் தலைமைப்பட்டவன் ; ஈசன் இயங்கினால்தான் உயிர்கள் இயங்கும் வல்லமைபெறும். ஆகவே உயிர்கள் இயங்கிப் பிழைக்கும்பொருட்டு ஈசன் இயங்குகிறான். அவ்வியக்கம் கூத்தினால் விளக்கப்பெற்று வருகிறது. அக்கூத்தே இயக்கத்தினுடைய வெளித் தோற்றம். இக்கருத்தைத்தான் எப்போதும் தில்லைக் கூத்தாடுதேவர் ஆன்ம கோடிகளுக்குத் தம் கூத்தினால் விளக்கிக்கொண்டு நிற்கிறார்.

தில்லையில் நடராசர் திகழ்ந்து தோன்றுவதைக் கண்டு அன்பர்கள் தத்தம் ஊர்களிலும் அத்திருக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்து வணங்குவதற்காக அவரவர்கள் கோயில்களில் அவ்வுருவத்தை எழுந்தருள வைத்திருக்கிறார்கள். இத் திருக்கோலம் வெகு அழகு வாய்ந்தது. அக்கோலத்தை ஒருமுறை கண்டு மகிழ்ந்தவர்கள் என்றும் மறவார்கள். நமது சமயத்தில் ஈடுபடாத வெளிநாட்டார்களும் இதுபோல உருவங்களைக் கண்டு அழகில் ஈடுபட்டுப் பெருந்தொகைகளைக் கொடுத்தும் திருட்டுத்தனமாகவும் தம் நாடுகளுக்குக் கொண்டுபோய்த் தம் காட்சி நிலையங்களில் வைத்துள்ளார்கள்.

பொதுவாக நாம் காணும் நடராசக் கோலங்களில் நான்கு கைகள் உடைய மூர்த்தியாகவும், மேலே வலக் கையில் உடுக்கையும், இடக் கையில் நெருப்பும், கீழே வலக் கை அபயமாகவும், இடக் கை இடக் காலைச் சுட்டிக்கொண்டும் இருக்கக் காண்கிறோம். இடக் கால் தூக்கிய வண்ணமும் வலக்கால் முயலகன் என்ற அரக்கனை மிதித்துக்கொண்டும் விளங்கும். சிரசில் சடைவிரிந்து பரவிநிற்கும் ; சந்திரன் கங்கை முதலியவைகளை அங்கு தரித்திருப்பார். பார்வை கருணை மிளிர்ந்ததாக இருக்கும். இக்கோலம் அநேகமாகச் சிவகாமசுந்தரியோடு எழுந்தருளுவது உண்டு.

இக்கோலம் பல இடங்களில் சிறிது சிறிது வேறுபாட்டுடன் இருப்பதுண்டு. காலா காலங்களில் சிறிது சிறிது மாறுபட்டும் வந்திருக்கிறது. உடை, அணி இவைகளில் சில உருவங்கள் மாறுபட்டிருக்கின்றன. சில உருவங்களில் மகுடம் விரிந்து பெரிதாக இருக்கும் ; சிலவற்றில் சுருங்கியிருக்கும். சில உருவங்களில் உத்தரியம் மேலே தொங்கிக் கொண்டும், சிலவற்றில் இடுப்புடை வெளியில் நீண்டும் இருக்கும். சில உருவங்களில் அணிகள் அதிகமாகவும் சிலவற்றில் குறைவாகவும் தோன்றும். இடுப்பில் பாம்பணி அகன்று இருப்பதுண்டு. சில உருவங்களில் சடைவிரிந்து பிரபாவளி வரை அகன்றிருக்கும். சிலவற்றில் அகன்ற சடையில்லை. பிரபாவளியும் பலவிதமாக இருப்பதுண்டு. புங்கனூர், திருவாலங்காட்டு உருவங்களில் பிரபாவளியே இல்லை. பேரூர் உருவத்தில் நீண்டு உள்ளது ; தஞ்சை கொடுத்த வனிதத்து உருவம் வட்டமாக இருக்கிறது.

இவ்வித வேறுபாடுகளில் முக்கியமானதொன்றை நான் சமீபத்தில் கண்டேன். அதனுடைய கருத்தை ஆராய்வது அவசியம் என எனக்குத் தோன்றுகிறது. ஆகவே அதனை இங்கே குறிக்கிறேன்.

திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கே சில காத அளவில் திருவாசி என்ற ஒரு சிறு ஊர் இருக்கிறது. இதன் பண்டைப்பெயர் திருப்பாச்சிலாச்சிரமம். இது ஒரு பாடல் பெற்ற தலம். இவ்வூர் ஆலயத்தில் ஓர் அழகிய நடராசமூர்த்தியின் கால் அடிக்கீழ் முயலக உருவம் கிடையாது, அதைப்பற்றி அங்கே விசாரிக்க அதனை ஒருவரும் விளக்குவார் இல்லை. இத்தலத்தின் வரலாற்றைப் பெரியபுராணம் திருஞானசம்பந்தர் புராணத்தில் விளக்கியிருப்பதை அன்பர்கள் அறிவார்கள். இவ்வூரில் ஆண்டுவந்த கொல்லிமழவன் என்ற தலைவனுடைய புதல்விக்கு முயலகன் என்ற நோய் உண்டாயிற்று. அதனைத் தீர்க்க அவன் என்ன முயன்றும் அது விலகவில்லை. ஒருகால் திருஞானசம்பந்தர் இவ்வூருக்கு விஜயம் செய்தபோது அத்தலைவன் வேண்டுகோளுக்கு இணங்கி, சம்பந்தர் அந்நோயைப் பதிகம்பாடி விலக்கினார் என்பது புராண வரலாறு. முயலகன் நோய் விலக்கப்பட்டுத் துறத்தப்படவே, இவ்வூர் நடராசமூர்த்தியிலிருந்தும் விலக்கப்பட்டதோ என்று ஐயமுறவேண்டியிருக்கிறது, அவ்வூரிலிருந்து முயலகன் துறத்தப்படவே, அவ்வூர் நடராசமூர்த்தியைச் செய்த சிற்பியும் அம்முயலகன் அங்கு இல்லை என்று குறிப்பதற்காகவே முயலகன் இல்லாமல் உருவினை அமைத்தான் போலும்.

இவ்வித ஐயம் எனக்கு ஏற்பட்டிருக்கையில் சென்ற மாதத்தின் போது திருச்சி ஜில்லா குழித்தலைக்குச் சென்று பெருந்துறை என்ற மற்றொரு ஆலயம் பார்க்கச் சென்றேன். அவ்வாலயத்தில் இரண்டு நடராச உருவங்கள் இருந்தன ஒன்று எப்போதும் உத்ஸவங்களுக்கு வழங்கி வந்த உருவம், மற்றொன்று சமீப காலத்தில் திருப்பணிக்காக நிலத்தில் தோண்டினபோது கிடைத்தது. வழங்கி வந்த உருவம் எல்லா

இடங்களில் உள்ள உருவத்தைப் போன்று முயலகனோடு இருப்பது. மற்றொன்று நிலத்தில் அகப்பட்டதில் முயலகன் இல்லை. அது பண்டை உருவம் எனத் தோன்றுகிறது. முயலகன் என்ற நோய் தீர்த்த காரணத்தைக் கொண்டு முயலகன் இல்லாமல் திருப்பாச்சிலாச் சிராமத்திலே உருவம் வார்க்கப்பட்டது என்றகாரணம் இந்தக் கடம்பந்துறை உருவத்தைக் கண்டவுடன் ஐயத்திற்திடமாயிற்று. ஒரு வேளை மிகப்பழைய காலத்து உருவங்களில் முயலகன் இல்லைபோலும். மேலும் அவ்வூர்த் திருவுருவத்தில் மகுடத்திற்கு மாறாகத் தலைமேல் படம் விரித்த நாகம் வைக்கப்பட்டிருக்கிறது. இம்மாறுதல்களை அன்பர்கள் அறிந்து ஆராய்வார்களாக..

12

வேலுமயிலுந் துணை

"ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

வேல் என்ற சொல் வெல் என்ற பகுதியின் அடியாகப் பிறந்தது. வெற்றி என்ற சொல்லும் இப்பகுதியிலிருந்தே தோன்றிற்று.. ஆகவே வெற்றி தருவதும் வெல்வதும் வேல் ஆகும். வேல் சத்தியின் அறிகுறியாகும் ; சக்தி இல்லாவிடில் வெற்றி எப்படிவரும்? உலகில் சகல இயக்கங்களுக்கும் சத்தியே காரணம். இச்சத்தி மூவகையாக விளங்கும். இவை இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானாசத்தி என்பன ஆகும். இவை மூன்றும் முருகப்பிரானிடம் மூன்று சத்திகளாக விளங்குகின்றன.

நீங்கள் முருகக் கடவுள் திருவுருவத்தைப் பாருங்கள்; வலப்புறம் வள்ளியம்மையார்; இடப்புறம் தெய்வயானையம்மையார்; நடுவே வேலாயுதத்தைக் கையிற் பிடித்து முருகர், வள்ளியம்மை இச்சாசக்தி, தெய்வயானையம்மை கிரியாசக்தி; வேல் ஞானசக்தி; இம்மூன்று சக்திகளுடன் கலியுகவரதனாகிய முருகக்கடவுள் காட்சியளிக்கிறார்.

முருகக்கடவுளின் சண்முகவடிவை உற்றுப் பாருங்கள். ஆறுமுகத்துடனும் பன்னிரண்டு கையுடனும் அவர் தோன்றுகிறார். அவ்வாறுமுகங்கட்கும் பன்னிரண்டு கைகட்கும் நக்கீரர் முதலிய பல புலவர்கள் பல அருமையான பண்புகளைக் கூறியிருக்கின்றனர். கைகளின் அமைப்பை உற்று நோக்குங்கள். பத்துக்கைகள் பத்து ஆயுதங்களோடு பின்னடைந்துள்ளன; இரண்டுகைகளே முன்வந்துள்ளன. இவற்றுள் வலக் கைவிரல்கள் ஒன்றுசேர்ந்து மேல்நோக்கியிருக்கின்றன. இவ்வலக்கை **அபயாஸ்தம்** எனப்படும். "நீங்கள் பயப்பட வேண்டாம். நான் உங்களைக் காப்பாற்றுவேன்" என்று அபயம் தருவது வலக்கை (அ + பயம் = பயமில்லை) இடக் கைவிரல்கள் கீழ்நோக்கியிருக்கின்றன ; கீழே உள்ள திருவடியைச்

சுட்டிக்காட்டுகின்றன. "நீங்கள் அடைய வேண்டிய சிறந்தபேறு திருவடிமுத்தியே" என்று கூறுகின்றன. இதுவே வரதாஸ்தம் எனப்படும். அடியார்கட்குச் சிறந்த வரமாகிய திருவடிமுத்தியைத் தருவது இக் கையாகும். அடியார்கட்கு வரும் இடையூறுகளைத் தீர்ப்பதற்குப் பத்துக் கைகளிலும் உள்ள ஆயுதங்கள் உதவுகின்றன. இவ்வாயு தங்களுட் சிறந்தது வேலாயுதமே. வேலாயுதம் ஞானசக்தியாதலினால் அதுதரும்படியான வெற்றி முத்தியேயாகும். இதைச் சிவப்பிரகாச சுவாமிகள் "வெற்றியாகிய முத்திதந்தருள்" என்கிறார். ஆகவே நாம் முத்திபெறுவதற்கு வேலின் உதவி வேண்டும்.

வேல் ஞானசக்தியின் சொரூபம் என்பதற்கு முருகக்கடவுள் திருநாமங்களுள் ஒன்றாகிய ஞானசக்திதரன் எனவரும் பெயர் ஆதரவளிக்கின்றது. அஷ்டோத்தர சதநாமாவளியின் ஓம் ஞானசக்தி தராயநம என்பதைக் காண்க. ஞானமாகிய வேலால் அஞ்ஞான மாகிய சூரனை மாய்க்கிறார் முருகக்கடவுள். ஆணவமே அஞ்ஞானமாகும், அதனை அதிகமாக உடையவன் சூரபதுமன். அஞ்ஞானமாகிய ஆணவத்தை வெல்வதற்கு ஞானமாகிய வேல்தான் வேண்டும். சூரபதுமன் சிறந்த அறிவுள்ளவன். தவம்செய்து வரம்பெற்று 1008 அண்டங்களை 108 யுகங்கள் ஆண்டவன். அவ்வாறு ஆட்சிபுரிந்தமையினால் மிகுந்த செருக்குடையவனாயினான்; முருகக் கடவுள் அவனுக்கு விசுவரூப தரிசனம் அருளிச்செய்தார். அப்போது அவன் தன்முன் நிற்பவர் "முழுமுதற் கடவுளே, கேவலம் ஒரு குழந்தையல்லர்" என்பதை நன்றாக உணர்ந்தான். என்றாலும் பிற்காலத்தவர் தன்னை ஒரு சிறுபிள்ளை வென்று விட்டதென்ற அபவாத வார்த்தை கூறக்கூடாது என்று நினைத்தான். எவ்வளவு நல்லறிவு புகட்டியும் "தடுத்தது மானம் ஒன்றே" என்றான். மானம் என்பது ஆணவத்தின் செயலாகும். புகழேந்திப்புலவர் "தனக்குரிய நாணம் துடைத்து தருமத்தை வேர்பறித்து மானம் துடைப்பதோர்வாள்" என்று மானத்தை இறுதியில் வைத்து அது மனிதனுக்குத் தரக்கூடிய ஓர் உயர்ந்த நிலையை எடுத்துக்காட்டுகிறார். ஆகவே அந்த மானம் சூரபதுமனைத் தடுத்தது ஒரு வியப்பல்ல. ஆணவ மிகுதியினால் இறுதிவரையில் சூரபதுமன் சண்டை பிடித்துக் கடைசியில் தோல்வியுற்றான். அந்த ஆணவத்தைத் தொலைத்ததுதான் ஞானமாகிய வேல்.

ஆணவம் இல்லாமலிருக்கத் தாழ்மை பெறவேண்டும். தான் தாழ்ந்தவன் என்ற எண்ணம் ஒருவனுக்கு ஏற்படுமாயில் அவனே உயர்ந்தவன். அது ஞானத்தினால் தான் வரும். அதற்கு ஒரு சிறுகதை உண்டு. தான் தாழ்ந்தவன் என்று நினைத்துக்கொண்டு அதன் உண்மையறியாத ஒருவன் ஒரு பெரியாரிடம் சென்று "நான் தாழ்ந்தவன், என்னை ஏற்றுகொள்ள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். அப்பெரியார் அவனுடைய உண்மை நிலையை அறிந்து கொண்டு "உன்னை விடத்தாழ்ந்த பொருள் ஒன்றைத் தேடிப்பிடித்துவா" என்றார். அவன் நெடுநாள் திரிந்து தேடியும் ஒரு பொருளும் கிடைக்கவில்லை. கடைசியில் மலம்தான் மிகத் தாழ்ந்த பொருள் என்று நினைத்து அதனை எடுத்துக் கொண்டு பெரியாரிடம் சென்றான். அவர் அதைக் கண்டு அவனை விளித்து "நண்ப ! நீ அப்பொருளை நோக்கி 'நீ தாழ்ந்ததோ' என்று அதைக்கேள்" என்றார். அவன் சரியென்று அம்மலத்தை நோக்கி வினாவினான். அம்மலத்துள்ளிருந்து ஒரு மறுமொழி கிளம்பிற்று. "நானோ தாழ்ந்தவன்! என் முன் நிலையில் நான் இனியதொரு மாம்பழமாக இருந்தேன். நீ அதனை விரும்பி உண்டனை. உன் தொடர்பு எனக்குக் கிடைக்கவே நான் மலமாக மாறினேன். உன்னுடைய பண்பு எவ்வளவு ஈனமானது என்பதை நீயே அறிந்து கொள் என்று அம்மலம் மறுமொழி கூறிற்று. உடனே அவன் மிகவும் மனம் நொந்து தன்னைவிடத் தாழ்ந்தவன் எவனுமில்லை என்று அறிந்தான்.

இவ்வாறு உண்மையான தாழ்மையுணர்ச்சி வந்தால் ஆணவம் நீங்கும். "வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித் தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது" என்று சிவஞான சித்தியார் கூறுகின்றது. கீழோராயினும் தாழ உரை" என்பது ஒளவையார் உபதேசம். சூரபதுமனுக்கு அவ்வுணர்ச்சியை ஞானவேலே தந்தது. ஏனெனில் அதன் உடல் அவ்வேலினால் அறுபட்டு இருகூறாகி மயிலும் கோழியுமாகிப் பரம் பொருளுக்கு அடிமை செய்யும் தொழில் பூணுகிறானல்லவா?

முருகனுடைய வடிவைச் குறிக்கும்போது மயிலும் வேலும் சேவலு முடையவன் என்று அருணகிரிநாதர் கூறுகிறார். "ஆடும்பரி

வேல் அணிசேவல்" என்பதைக் காண்க. இங்கும் வேலே நடுவிலுள்ளது. மேலும் வேலின் பல அரிய தொழில்களை வெகு உருக்கமாக வேல் வகுப்பில் பதினைந்து வகையாகக் கூறுகிறார்.

வேலாயுதத்துக்கு ஒரு தனிப் பெருமையுண்டு. வேறு வேறு ஆயுதங்களைப் பற்றிக் கூறும்போது அவற்றைப் பிடித்தகை என்ற சொற்றொடரே காணப்படும். சூலபாணி, சக்ரபாணி சாரங்கபாணி, கோதண்டபாணி என்று பெயர்கள் காணப்படுமேயன்றி சூலம் சக்ரம் சாரங்கம், கோதண்டம் என்ற பெயர்களால் எவரும் அழைக்கப் படுவதில்லை. ஆனால் வேல், கதிர்வேல், இரத்தினவேல், வச்சிரவேல், சிங்காரவேல், மாணிக்கவேல் முதலிய பெயர்கள் சைவர்களுள் பலருக்குண்டு. இதிலிருந்தும் வேல் ஒரு அஃறினைப் பொருளாகிய ஒரு ஆயுதமாகக் கருதப்படுவதில்லை யென்றும், உயர்திணைப் பொருளாகிய ஞானசக்தியாகவும், வள்ளியம்மை, தெய்வயானை யம்மைகளைப் போலவே சக்தி வரிசையில் வைத்தெண்ணப்படும் ஒரு தெய்வமாகவும் கருதப்படுகிறதென்றும் நாம் அறியலாம். வேலுக்குள்ள அருளை நேரிற் கண்டாரே அறிய முடியும். ஈழ நாட்டில் இதன் பெருமை நன்கு தெரியும். வேலை வைத்து முருகனாகவே வழிபடுவ துண்டு. கோவைக்கடுத்த மருத மலையில், ஸ்தல விருக்ஷமாகிய மருத மரம் வேலின் சொரூபம் என்று புராணத்தில் கூறப்பட்டுள்ளது. ஆகவே, மருதாசலம் முதலிய பெயர்களை அடியவர் வைத்துக் கொள்கின்றனர். வேலாகிய மருதம் அம்மலைக்கே சிறப்புத் தருகிறது. வேலின் பெருமையே பெருமை.

இனி மயிலின் சிறப்பைக் கவனிப்போம். மயில் நமது நாட்டு உயிரினங்களுள் ஒன்று. உயிரினங்கள் பறப்பன, நடப்பன, ஊர்வன முதலிய இனங்களாக வகுக்கப்பட்டுள்ளன. அவைகளின் பறப்பன என்னும் இனத்தைச் சேர்ந்தது மயில். பறப்பனவற்றை மேலே பறப்பன. நிலத்தில் ஓடிச்சிறிதே பறப்பன, ஆடுவன, பாடுவன என்று பல பிரிவு களாக்கலாம். இதில் மயில் ஆடுவனவற்றில் வருவது. பறவைகளுள் ஆண் அழகிய சிறகுகளையும் பெண் சாதாரண சிறகுகளையும் பெற்றிருக்கும். பெட்டைகளைக் காட்டிலும் சேவல்கள் பல நிறங்களைக்

கொண்ட இறக்கைகளையும் கொண்டைகளையும் உடையனவாக இருப்பதோடு கம்பீரமாக நடக்கவும் ஆடவும் கூடியதன்மையும் உடையனவாக விளங்குகின்றன. மயில் இவ்வகையில் சிறப்பாக உள்ளபடியால் உயிர் நூலிலக்கணத்தில் இது உயர்ந்த நிலை பெற்றுள்ளது.

இனி, புராணவகையாற் பார்த்தாலும் மயிலுக்குத் தனிச் சிறப்புண்டு. உமாதேவியார் மயிலாக உருக்கொண்டு திருமயிலாப்பூர் மாயூரம் முதலிய தலங்களில் பூசித்த செய்தியை அறியாதார் யாவர்? முருகப்பிரான் மயில் வாகனத்தின் மேல் காட்சி தருவதைக் காணாதார் யாவர்? முருகருக்கு எல்லா வாகனங்களிலும் சிறந்தது மயில் வாகனமே. இதுவே ஐந்தாம் திருவிழாவில் மிகச் சிறப்பாகப் புறப்படுவதுண்டு. முருகக் கடவுள் படங்களிலும் மயில் மீது காட்சி தரும் கோலத்தையே பார்த்து மகிழ்கின்றோம். அதனை நக்கீரர் மிகவும் உருக்கமாக "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு, பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு, ஓவற இமைக்கும் சேண்விளங்கவிரொளி" என்று உவமிக்கிறார். பச்சை மயிலின்மீது செவ்வேள் தோன்றுவதைப் ப்ச்சைக் கடலின் மீது சிவந்த கிரணங்களைக் கொட்டும் சூரிய உதயத்திற்கு அக்கவிஞர் ஒப்பிடுகிறார். சூரபதுமனை முருகக்கடவுள் வேலாயுதத்தாற் குத்தி இருகூறு செய்ய, அவன் மயிலாகவும் சேவலாகவும் மாற, மயிலைத் தம் ஊர்தியாகவும் சேவலைத் தம் கொடியாகவும் அவர் அமைத்துக் கொண்டார் என்பது புராண வரலாறு. ஆகவே மயில் புராணத்திலும் சிறந்து விளங்குகின்றது.

இனி, தத்துவ வகையிற் பார்க்குபோதும் மயில்சிறந்து நிற்கிறது. பிரபஞ்சத்தில் தத்துவங்கள் முப்பத்தாறாக வகுக்கப் பட்டிருக்கின்றன. அவை மண்முதல் நாதம்வரை பெயர் பெற்றுள்ளன. நாத தத்துவத்துக்கு மேம்பட்டவை சிவ சத்தி தத்துவங்களே. நாததத்துத்துக்குச் கீழே அடுத்தபடியிலிருப்பது விந்து தத்துவம். இவ்விந்து தத்துவத்தைக் குறிப்பது மயில், நாத தத்துவத்தைக் குறிப்பது சேவல். இவ்வகையிலும் மயில் உயரிய நிலையிலுள்ளதல்லவா? இதனைச் சிறிது விளக்குவோம்.

சமயங்களின் ஒப்பு உயர்வு அறிவதற்கு அவை கொண்டுள்ள தத்துவங்களின் நிலை அறிந்து ஏற்றத்தாழ்வு கூறுவதுண்டு, நிலம், நீர், தீ, வளி, வான் ஆகிய இவைகளே முதல் தத்துவங்கள். இவைகளையே எல்லாச் சமயங்களும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. மேல்நாட்டுக் கலை ஞானம், உலகாயதம், நாத்திகம் முதலியன இவற்றிற்கு மேற்செல்வதில்லை. பௌத்தமும் சமணமும் சிறிது மேற்செல்லும், இனி ஓரங்கியர், மீமாஞ்சகர், யோகாசாரர், பாஞ்சராத்திரிகள் முதலியோர் 24 தத்துவங்கள் வரையுமே கொள்வர். எல்லாவற்றிலும் மேலான சைவ சமயம் ஒன்றே 36 தத்துவங்களைக் கொள்வதாகும்.

இத்தத்துவ ஆராய்ச்சியை விளக்குவதற்கு ஒரு சிறு கதையை உதாரணமாகக் கூறலாம். ஒரு விறகுவெட்டி ஒரு காட்டில் விறகு வெட்டிப் பிழைத்துவந்தான். அப்போது ஒரு பெரியார் தோன்றி "நீ உள்ளே சென்றால் அதிக செல்வம் பெறுவாய்" என்றார். அடுத்தநாள் அவ்விறகுவெட்டி காட்டுக்குள் சிறிது தூரம் சென்றுபார்த்தான். அங்கே சந்தன மரம் இருந்தது. அதைவெட்டி அதிகப்பணம் சம்பாதித்தான். பிறகு மேலும் மேலும் காட்டினுட் சென்று பல அரியமரங்களும், பொன், வயிரம் முதலியவற்றையும் பெற்றுப்பெருஞ் செல்வனாயினான். இக்கதையிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது ஒன்றுண்டு. நமது அறிவினை விரித்து ஆராய ஆராயப் பலதத்துவங்களிலுண்மை புலப்பட்டு இறைவன் திருவருளால் தத்துவங்களின் எல்லையைக் காணலாம். "தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு" என்று நாயனார் கூறுவது போல நமது அறிவும் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டால் முடிவான உண்மைகள் நமக்கு விளங்கும்.

மயில் விந்து தத்துவத்தை விளக்குவதென்றுமேலே கண்டோம். மயிலின் உருவத்தைப் பார்த்தால் அதன்தலை சிறுத்து உடல்சிறிது பருத்துத் தோகை மிகவிரிந்து காணப்படும். இதுவே விந்துதத்துவத்தின் உருவகம். மாமரமும் கீழே சிறுத்து மேலே விரிந்துள்ளது. மயிலும் சேவலுமாகிய விந்துநாதத்தத்துவங்களைக் கடந்தவன் முருகன். ஆகையாற்றான் அவற்றை அவன் அடக்கி ஆளுகிறான். இக்கடந்த பொருளே கந்தழி (கந்த + அழி) ஆகும். முருகனை வணங்கும் போது "நாதவிந்துகலாதீநமோநம" என்று அருணகிரிநாதர் கூறுகிறார்.

முருகக்கடவுள் சூரபதுமாதியர்களை வென்றது ஆன்மாவின் உய்வை அறிவிப்பதே. மாயையாகிய தாரகன், கன்மமாகிய சிங்கமுகன், ஆணவமாகிய சூரபதுமன் அழிந்தனர். உலகில் துன்பம் ஒழிந்தது. "மாங்காய்ப்பாலுண்டு மலைமேலிருப்போர்க்குத் தேங்காய்ப்பாலேதுக்கடி" என்ற சித்தர் பாடலில் மாங்காய்ப்பால் விந்துதத்துவம், மலைமேலிருப் போர் முருகக் கடவுள்.

மயிலானது உயிர் நூல், புராணம், தத்துவம் ஆகிய மூன்று வகையிலும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

வேலும் மயிலும் இவ்வாறு சிறந்து விளங்குவதால் தமிழ் மக்கள் இவற்றின் துணையை நாடுகின்றனர். தாங்கள் எழுதும் போது வேலு மயிலுந்துணை என்று குறிக்கின்றனர். வேலுமயிலும் என்பதை மந்திரமாகவே உச்சரித்தால் வேலனும் மயிலனுமாகிய முருகவேள் நமக்குக் காட்சியளித்து நம்மைக்காத்து எல்லா நன்மைகளையும் நமக்குத்தருவான். வேல்வாழி, மயில் வாழி, முருகன் வாழி.

13

திருஞானசம்பந்தர் வாழ்க்கை

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுது
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"

ஒளி நிகழவல்ல கால நிலை

பண்டைக்காலம் முதலாக உலகத்தில் பெரியார்கள் தோன்றிப் பல அரிய பெரிய செயல்களைக் செய்து உலகினரை ஈடேற்றி யுள்ளார்கள். அவர்களது அரிய பெரிய செயல்களைச் செவ்வையாய் அறிய வேண்டுமாயின் அவர்கள் தோன்றிய காலநிலையை நன்றாக அறிதல் வேண்டும். செயல்களின் அருமை பெருமை, காலநிலையின் அவசியத்தைப் பொறுத்தே இருக்கின்றது. வேறு காலங்களில் அச்செய்கைகளே பயனற்றும் போகக்கூடியவை. ஆகவே, காலநிலை அறிய வேண்டியது அறிஞர்களின் சிறந்த படிப்பாகும். சம்பந்தப் பெருமான் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றியவர். அவரது அரிய செயல்களை அறிவதற்கு அக்காலத்தில் தமிழ்நாடு இருந்த சமயநிலையை அறிதல் வேண்டும். தமிழ்நாடு மிகப் பண்டையநாடு. தமிழருடைய வரலாறும் மிகப் பழமையதே. ஏனைய மொழிகள் பிறக்காததற்கு முன்பே தமிழ்மொழி சிறந்து வளர்ந்த பெருமை கொண்டது. தமிழர் இயற்கைச் சமயத்தையே தம் சமயமாகக் கொண்டிருந்தனர். அச்சமயக் கொள்கைகள் எக்காலத்திலும் எம்மக்களுக்கும் ஏற்றுக்கொள்ளத்தகுந்த உண்மைகளை அடிப்படையாக கொண்டிருந்தன. தொல்காப்பியனார் வரையறைகளையும், சங்கத்தார் உறுதி மொழிகளையும், திருக்குறளாரின் பொதுப்படையையும் உண்டாக்கியவர்களின் சமயக் கொள்கைகள் எத்தனைப் பொதுநோக்கையும், உண்மைகளையும்

உட்கொண்டிருக்க வேண்டும்! அவ்விதச் சமயக் கொள்கைகளைக் கொண்ட தமிழ்நாட்டிற்கு வடநாட்டிலிருந்து சில சமயங்கள் பரவி வந்தன. பௌத்தசமயம் வந்தது. ஆனால் அது ஒன்றிரண்டு நூல்களைக் தந்ததே தவிர அதிகமாக வேரூன்றவில்லை. அருகசமயம் வந்தது. அது தமிழ் மொழிக்குப் பலநூல்களைத் தந்ததுமன்றி, தமிழ் நாட்டின் அரசியலிலும் புகுந்து கலகம் செய்து விட்டது. அதன் காரணமாகவே பண்டைச் சமயத்துக்குப் புத்துயிர் தோன்றி வைதீக சைவம் மேலோங்கும் காரணமும் ஏற்பட்டது. அக்காரணத்திற்குக் காரியகர்த்தர்கள் சம்பந்தர் முதலிய சைவ சமயாசாரியர்கள். சங்கத்தார் காலத்தில் தமிழ்நாட்டை ஆண்டுவந்தவர்கள் சேர, சோழ, பாண்டியர்கள் என்ற தமிழ் மூவேந்தர்கள். அவர்கள் தமிழ் மொழி, தமிழ்ச் சமயம், தமிழர் நாகரிகம் இவைகளைப் பொன்னேபோலப் போற்றி வந்தார்கள். பிறகு சேரநாடு தனியே பிரிந்துபோயிற்று. பாண்டியர் ஆதிக்கம் குறைந்தது. சோழநாடு நிலை குலைந்தது. பல்லவர் மேலோங்கினர். இவர்கள் மூன்றாவது நூற்றாண்டு முதல் எட்டாவது நூற்றாண்டு வரை மிகுந்த சிறப்போடு ஆண்டனர். அவர்கள் வடநாட்டிலிருந்து பல கொள்கைகளையும், வடமொழியையும் தமிழ் நாட்டிற்குக் கொண்டுவருவதற்குக் காரணமாயிருந்தனர். சில பல்லவ மன்னர்கள் வடமொழிப்பயிற்சியில் சிறந்தவர்கள்.அவர்கள் பெயர்களைச் கேட்ட அளவிலே அவர்கள் கொள்கைகளையும் அறியலாம். அவர்கள் காலத்தில்தான் வடநாட்டிலிருந்து சமணசமயம் அதிகமாகத் தென்னாட்டிற்கு வந்தது. சம்பந்தர் காலத்துப் பல்லவன் சமணசமயத்தைத் தழுவினான். அதுகண்டு வலி குறைந்திருந்த பாண்டிய நாடும் பின்பற்றியது. அரசன் சென்ற வழி மக்களும் சென்றனர். வைதீக சமயம் அடியோடு போய் விட்டது. அதனைப் பிழைப்பிக்கவே சம்பந்தர் தோன்றித் சமயப் பிரசாரம் செய்தனர். தென்னாட்டிற்கு வந்த சமணம் ஆதியிலே அதன் ஆசிரியர்கள் போதித்த சமயமல்ல. பிற்காலத்தில் களைகளாக முளைத்த பர ஆபாசக் கொள்கைகளையும் வழக்கங்களையும் தழுவிக்கொண்ட ஒரு சமயமாகும். ஆதலால்தான் அவ்விதம் சீர்கெட்ட சமயத்தைப் பரவாமல் தடுத்துப் பண்டைச் சமயத்தை விளக்க முயன்றார்கள் சமயாசாரியர்கள்.

உயரிய வாழ்வின் நோக்கம்

ஆபாசக் கொள்கைகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும் அறவே ஒழித்து நல்லொழுக்கங்களைக் கொண்ட சமயத்தைப் பரப்புவதே சமயாசாரியர்களின் வாழ்க்கை நோக்கமாகும். உயிர்களை வதைக்கக்கூடாதென்ற கொள்கை கொண்டு, கிருமிகள் மாய்ந்து போகுமே என்று சொல்லிப் பல் விளக்காதிருத்தல், தவம் என்ற பெயரைக் கொண்டு தலை மயிரைப் பிடுங்குதல், உடல் அழகைக் கெடுத்தல், ஊனைச்சுருக்கி உடலை உலரவைத்தல், சுத்தமாக வீடு மனைவைக்காது அசுத்தமாக வைத்தல், பிறந்த மேனியில் இருத்தல் முதலிய பல வெறுப்பான வழக்கங்கள் பரவத் தொடங்கின. இவைகளை ஒழித்து உண்மையான ஞானம் மக்களுக்குப் புகட்ட வேண்டிக் கடவுள் ஞானத்தை மக்களுக்கு சம்பந்தப்படுத்தியதனால் ஞானசம்பந்தம் ஏற்பட்டது. அதுவே வாழ்க்கை நோக்காகக் கொண்டார், ஞானசம்பந்தர். அப்பெருமான் மக்களைக் கடவுளிடம் ஞானம் என்ற கயிற்றினாலே சம்பந்தப் படுத்தினார் என்க.

அந்நோக்கத்திற்கேற்ற வசதிகள்

இளவயதும், சுருங்கிய காலமுமே நல்லியக்கங்களுக்கு உறுதி தரத்தக்க சந்தர்ப்பங்களாகும் என மக்கள் வரலாறுகள் கூறுகின்றன. உலகில் தோன்றிய பெரியார்கள் அனைவரும் அச்சந்தர்ப்பங்களையே பெரிதாகப் போற்றிவந்தனர். கிறிஸ்து பெருமான் மூன்று ஆண்டுகளிலும். மகமதுநபி பத்து ஆண்டுகளிலும் தத்தம் கொள்கைகளை வெற்றிகரமாக நாட்டினார்கள். மெய்கண்டதேவர். சங்கரர் முதலியோர் இளவயதிலேயே அருள்வாக்களித்தார்கள். இளவயதிலும் குழவிப் பருவமே பிறரைக் கவரக்கூடிய பருவமாகும். நெஞ்சு உலக பந்தத்தில் ஈடுபடாமல் நிர்மலமாக இருக்கையிலே அது மக்கள் அனைவரையும் கவர்ந்து ஈடுபடச் செய்யக் கூடும் அல்லவா? அது கொண்டே கிறிஸ்துவும் குழந்தைகளின் மகிமையை எடுத்தாண்டிருக்கின்றார். சம்பந்தரும் குழந்தைப் பருவத்திலேயே தம் அருந்தொழிலை ஏற்றுக் கொண்டார். தம் தகப்பனார் தோள்மீது

அமர்ந்து கொண்டும், பிறகு பல்லக்கில் ஏறிக்கொண்டும் ஆலயங்கள் தோறும் சென்று சமயம் பரப்புதலைச் செய்தார். ஆகவே இளமைப் பருவமே சான்றதென அவர் வாழ்வில் அறிகிறோம். அதுவே அருந்தொண்டுக்கு ஏற்புடையதாக இருந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரது புனித வாழ்க்கையிலே ஈடுபட்டு முன்னேறினார்கள். நாடும் களை பிடுங்கப்பட்டு நன்னிலைமையடைந்தது. மேலும், இளமை கவர்ச்சிக்கு மாத்திரமேயன்றிஇடைறா ஊக்கத்திற்கும் ஏற்றதாகும். தற்காலத்திலும் இளமை இயக்கம் உலகெங்கும்பரவி அற்புதமான வேலை செய்துவருகிறது. சம்பந்தரும் பதினாறு வயதிற்கு உள்ளாக பல்லாயிரக்கணக்கான ஆலயங்களைத் தரிசித்து ஆயிரக்கணக்கான பாடல்களை அருளிச்செய்து நாடெங்கும் தமிழும் சமயமும் பரப்பினார். இருளில் முழுகிக் கிடந்த மக்களை ஒளிக்குக் கொண்டுவந்தார். சுருங்கியகாலத்தில் இளவயதில் வேறெவரே இவ்வாறு அளவு கடந்த செயல்களைச் செய்ய முடியும்!

இயக்கத்திற்கு உதவிபுரிந்த மொழியின் வண்மையும் இசையின் மென்மையும்

உயரிய எண்ணங்களே மக்களை நல்ல வழிக்கு இழுக்கக் கூடியவை. அவ்வெண்ணங்களை வாக்கின் மூலமாகத்தான் வெளிப்படுத்தல் கூடும். அவ்வாக்கும் அவ்வெண்ணங்களை எளிதில் அறியக் கூடியதாக இருக்க வேண்டும். மக்களுக்குப் புரியாத மொழியிலும், வன்மையிலும் இருந்தால் அவ்வாக்கால் பயன் இராது. மக்களுக்குத் தெரிந்த மொழியிலும், விளங்குகின்ற வண்மையிலும் இருந்தால் அது கேட்கும் மக்களை எளிதில் வசப்படுத்தும். அக்காரணத்தைத் உட்கொண்டே சம்பந்தர் அழகான தமிழ்ப் பாடலில் தம் எண்ணங்களை வெளியிட்டார். தற்காலத்தில் ஆலயங்களில் உச்சரிக்கும் வடமொழி மந்திரங்களைக் கேட்டு மக்கள் பொருள் அறியாமல் சந்தேகத்துடன் திகைக்கிறார்கள். அவைகளையே அழகான தமிழில் கூறினால் மக்கள் ஆதரிப்பார்கள். அக்காரணங் கொண்டே துதிப் பாடல்களைச் சம்பந்தர் தமிழ்ப்பாவில் பாடினார் போலும். அஷ்டோத்தர சதம் முதலியவைகளின் தமிழ்க் கூற்றே தேவாரங்களாகும் என்றால், தற்காலத்தில் படித்த தமிழர் மனதில்

எழும்பும் கிளர்ச்சியை அக்காலத்திலேயே சம்பந்தர் அறிந்து அதனைப் போற்றினார் எனில் மிகையாகாது. மேலும், இசையே மக்களைக் கவரக் கூடியது. தற்காலத்திலும் பிற மதத்தினர் இசைக் கருவிகளின் உதவியால் சமயப் பிரசாரம் செய்வதை நாம் அறிகிறோம். அதன் உண்மையைக் கொண்டு சம்பந்தர் தம் பாடல்களை அழகிய தமிழ்ப் பண்ணால் பாடினார். திருநீலகண்ட யாழ்ப்பாணரைக் தம்முடன் அழைத்துச் சென்று அவரது யாழொலிக்கு இசையப் பாடினார். அவ்விசையைக் கேட்க ஏன் பல்லாயிர மக்கள் வரமாட்டார்கள்?

மேலும் பாட்டுக்களில் வெறும் துதியேயன்றி அருமையான உண்மை மொழிகளையும் வைத்துள்ளார்கள். உலகத்திற்கு நல்லொழுக்கத்தையும், நன்னெறிகளையும் போதித்துள்ளார். இதுமாத்திரமோ? மேன்மையாக அகம், புறம் முதலிய துறைகளையும் அமைத்துள்ளார்கள். அதனைக்கண்ட எப்புலவனும் வியப்படைவான். ஆகவே புலவர்க்கும், பாமரருக்குமாக அவர்பாடல்கள் பயன் தந்தன. உலகமே அவர் பாவில் ஆழ்ந்துவிட்டது.

இயக்க வளர்ச்சிக்குகந்த பண்புகளான அன்பும் இன்பமும் ஆண்டமை

உலகம் அன்பும் இன்பமும் பொருந்தியதாம். அவை இல்லாத கடுந்தவமும், துன்பமும் ஒவ்வாதனவுமாம். சமணக் கூட்டத்தை மக்கள் வெறுத்தார்கள். அன்புமிகும் சைவ வைணவத்தைக் கண்டு போற்றினர். துறவறத்தைக் காட்டிலும் இல்லறமே மனிதர்க்குரியது. திருமணமும், காதலும் மக்கட்கியல்பானவை. இவ்வியற்கை மதத்தையே நல்லதெனச் சம்பந்தர் விளக்குகிறார். தம் நூலில் அக இலக்கணத்தை அழகுடன் அமர்த்தியதன்றித் தாமும் உலகத்தோடொத்து வாழத் திருமணம் புரிந்து கொண்டார். சிற்றின்பத்தைக் கடந்து பேரின்பத்திற்கு வழிகாட்டினார். இவ்வுலகில் இயற்கைப் போதனையை ஏன் மக்கள் பின்பற்ற மாட்டார்கள்? ஆகவே ஒழுக்கமும் இயற்கை அன்பும் மேலிட்ட சைவம் உலகத்திலே பரவத் தொடங்கிற்று.

மக்கட்கறிவுறுத்திய சித்தாந்த ஞானமும் அதன் கொள்கைகளும்

அழகான பாடல்களில் நடுநடுவே அருமையான சித்தாந்தக் கொள்கைகளைப் பொன் நகையில் மணி பதித்தாற் போல வைத்திருக்கின்றார். பாடுகின்றவர்கள் நெஞ்சில் அவை நன்றாக ஆணித்திறம்போல் பதிந்துவிடும். மெய்கண்ட சாத்திரக் கொள்கைகளும், சிவஞான போதத்தின் உறுதி மொழிகளும் அவை தரப்பட்டதன் காலத்திற்கு முந்தியே சம்பந்தர் ஆண்டிருக்கின்றார். பன்னிரண்டு சூத்திரங்களின் கருத்துக்களெல்லாம் பல தேவாரங்களில் மிளிரக் காணலாம். அவைகளைச் சொல்லாமல் சொல்லும் முறையைப்போல் வழங்கி இருப்பது அதிஅற்புதமாகும். உலகில் ஞானிகள் அறிந்த தற்கால ஆராய்ச்சி முழுவதும் சூத்திரங்களைப் போலச் சிறிய வாக்கியங்களிலே தேவாரங்களில் அமைந்திருப்பதே அம்மொழிகளின் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்தும். இதனைக் கண்டன்றோ பட்டினத்தார் மூவர் மொழியை "வித்தகச் செய்யுள்" என்றருளினார்.

மக்களை இழுக்க அரசியலையும் ஆட்படுத்திய திறம்

சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கு அரசியலார் உதவியே சிறந்தது. மன்னன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பதே உலகவழக்கு. அக்காலத்தில் இது உண்மையாக இருந்தது. பல்லவ பாண்டியர்கள் சமணர்களானார்கள். அப்பர் பல்லவனைத் திருத்தினார் ; சம்பந்தர் பாண்டியனை வழிக்குக் கொண்டு வந்தார். உடனே நாடு முழுவதும் சைவமயம் ஆகிவிட்டது. திருப்பின முறைக்கும் பெரியதும் கடினமானதுமான கழுவாய் இல்லை. திருநீறும், ஐந்தெழுத்துமே போதிய குறிகளாம். எத்தனை எளியமுறை? அது இக்காலத்தில் ஏற்குமா? ஆனால், அக்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக்காலத்தில் அக்கழுவாய் ஏற்பட்டால் எத்தனை சிறந்த சகோதரர்களை நாம் மீட்டுக் கொள்ளலாகாது. சரித்திரத்தில் இக்கழுவாய் சொல்லப் பட்டது. ஆனால் நாம் மறந்தோம். சுயநலமே அதற்குக் காரணம். இச்சுயநலம் எப்போது தொலையுமோ அப்போதுதான் நாட்டிற்கு நற்கதி கிடைக்கும். சம்பந்தர் தந்த நல்லொழுக்கத்தைப் பின் பற்றுவோமாக.

சமயநிலைகளின் மேன்மையும் அவசியமும்

இவ்விதம் சமய உண்மைகளை எடுத்து ஆண்ட சம்பந்தர் அச்செயல்களைப் பரப்புவதற்கு வேறு துறைகளிலும் பாடுபட்டார். சமயமேம்பாட்டிற்குச் சமயநிலையங்கள் அவசியமெனக் கண்டார். பண்டை இந்தியாவில் ஆலயங்கள் கிடையா. பௌத்த சமணர் ஆலயங்களைக் கட்டி உருவ வழிபாடு செய்தனர். அச்சமயங்களை வென்று வைதீக சமயத்தை நிலைநிறுத்தின சம்பந்தர் ஆலய வழிபாட்டின் மேன்மையை எடுத்துக்கொண்டு ஆதரித்தார். நாடுமுழுவதும் ஆலயங்களைக் கண்டு வழிபட்டார். இதனால் ஆலய வழிபாடு சிறப்புற்றோங்கியது. அரசர்களும், பொதுமக்களும், அதனை அதிகமாகப் போற்றத் தொடங்கினர். அதுமுதல் பாடல்பெற்ற தலங்கள், வைப்புத்தலங்கள் ஏற்பட்டன. சோழர்கள் இக்கொள்கைகளை அதிகப் படுத்தினார்கள். அதனால் சித்திரமும், சிற்பமும் இந்நாட்டில் அதிகரித்துப் பல்கலைகளும் விருத்தியடைந்தன. சமயப் பெருக்குக்கு நிலைத்த சின்னங்கள் ஏற்பட்டன. ஏனைய சமயத்தார்களாலே சமணம் அழிவு பெறவில்லை. ஏனெனில் சமண ஆலயங்களே அச்சமயம் நிலை நிற்றலுக்கு ஒருவாறு காரணம் எனலாம். பல நூற்றாண்டுகளாகப் பல பேர் எதிர்த்தும் ஏன் அம்மதம் இன்னமும் இருக்கிறது. ஆலயங்களிலிருந்துதான். அது போல சைவமும் மேன்மை பெற்றது என்று கூறவேண்டும்.

பிற சமயங்களின் ஆதரணையும், அவற்றினுட் கண்ட உண்மையும்

சம்பந்தர் சமண சமயத்தை எதிர்த்து அழித்தார் என்ற ஒரு கொள்கை தமிழருக்குள் பரவிக் கிடக்கிறது. இது சரியானதல்ல. சைவத்தினுடைய ஒப்பற்ற கொள்கை அன்பு, அன்பு இருந்தால் ஏனையரை வெறுக்க முடியுமா? ஆகவே அன்பே மயமான சம்பந்தர் சமணத்தை வெறுப்பாரா? இல்லவே இல்லை. மேலும் சைவம் தாய்ச் சமயமாகும். ஏனைய சமயங்கள் அதன் குழவிகள் போலாகும். குழவிகள் ஞானத்தில் தேர்ந்திருக்க முடியாது. பக்குவமடையாத குழந்தைகளைத் தாய் வெறுப்பதுண்டா? சைவம் முப்பத்தாறு

தத்துவங்களும் பூரணமாகக் கொண்டது. ஏனைய சமயங்களோ அதற்குக் குறைந்த தத்துவங்களைக் கொண்டவை. ஞானம் முதிர முதிர அவைகளும் தாயைப் போலப் பக்குவமடையக்கூடும். ஆகவே சைவம் ஏனைய மதங்களைத் தழுவி அவைகள் விருத்தியடையுமாறு போதிக்கும். ஆகவே சைவ சமயாசாரியரான சம்பந்தர் குறைந்த தத்து வங்களைக் கொண்ட சமணத்தை வெறுக்கமாட்டார். ஆதிச் சமணக் கொள்கைகளில் எவருக்கும் வெறுப்பு இல்லை. இருக்கவும் முடியாது. ஜீவகாருண்யம், தவ ஒழுக்கம், சீலம், கடவுட்டன்மை இவைகளில் யாருக்கு அபிப்பிராய பேதம் உண்டு? சைவர்களுக்கு இல்லை. ஆனால் அச்சமயம் பெரு நிலையையடையவில்லை. அது அடையட்டும் என்ற சீரிய கொள்கையே சமயாசாரியாருக்கு இருந்தது. ஆனால் சம்பந்தர் வெறுத்தது என்ன? சமயத்தின் பெயரால் முளைத்து அச்சமயத்தை ஆபாசமாக்கிய கெட்ட அப்பியாசங்களாகிய களைகளையே தான். அவைகளையே சம்பந்தர் வெறுத்துப் பாடியிருக்கிறார். இதையறிய தேவாரங்களைப் படிக்கவேண்டும். அக்களைகளை வேரறுக்கவே அடிக்கடி முரசு அறைந்திருக்கிறார். சமண சமயமே பொய்யானால் சம்பந்தர் முதலியோர் வெறுத்த பிறகும் அது உயிருடன் இருக்குமா? இன்னும் இருக்கின்றதே. சம்பந்தருக்குப் பிந்தியும் பலசமண ஆசிரியர்கள் தோன்றித் தமிழுக்குப்பாடு படவில்லையா? சம்பந்தர் களைகளைப் பிடுங்கின பிறகு அச்சமயமும் சுத்த நிலைக்கு வந்து தழைத்து, பவணந்தி, மண்டலபுருடர், அடியார்க்குநல்லார், கார்மேகக் கவிஞர் முதலியோரை உண்டாக்கியதை அறியுங்கள். ஆகவே சம்பந்தர் சமணத்தை இரக்கத்துடன் ஆதரித்தார். களைகளை வெறுத்துத் தூயதாக்கினார் என்று அறியவேண்டும்.

தொண்டரோடு கூட்டுக் காணல்

சம்பந்தர் தன்னந் தனியே இப்பெரிய இயக்கத்தில் ஈடு படவில்லை. அக்காலத்திலிருந்த அடியார்கள் அனைவரையும் தம்முடன் கூட்டிக்கொண்டார். இதில் வகுப்புப் பேதம் பாராட்டக் கிடையாது. வேளாளராகிய அப்பரை அப்பரெனக் கொண்டார். கடை வகுப்பினரான யாழ்ப்பாணரை உடன் அழைத்துக்சென்று தம் சகபாடியாக்கிக் கொண்டார். அந்தணர் வீட்டிலும் இடம் தந்திருக்கிறார். அந்தணர்களான முருக நாயனார், திருநீலநக்க

நாயனார், போர்வீரரான சிறுத்தொண்டர் முதலானவர்களைத் தம் திருத்தொண்டர்களாக்கிக் கொண்டார். ஆகவேதான் தாம் எடுத்துக் கொண்ட காரியம் சித்திபெற்றது. நல்ல காரியத்துக்குப் பலரையும் கூட்டிக் கொண்டாலல்லவோ நன்மை பயக்கும்?

அற்புதச் செயல்களும் கருணையும்

உலகில் எப்பெரியாரும் அற்புதங்களைச் செய்தே வெற்றியை நாட்டுவார்கள். சமயப் பெரியார்களின் சரிதங்களில் இதைக் காண்கிறோம். அவர்கள் செயல்கள் நமக்கு அற்புதமாகத் தோன்றுகின்றன. ஆனால் அப்பெரியார்களுக்கு அவை இயற்கையே தவிர அற்புதங்கள் அல்ல. சுய நலத்திற்குச் செய்தால் அற்புதமாகும். அல்லவேல் அவை இயற்கையே. பிற மக்கள் வருந்தினால் அவ்வருத்தத்தை நீக்கவே அற்புதம் செய்வார். இது இரக்கத்தின் பாற்பட்ட காருண்யமே தவிர வேறல்ல. பாம்பு கடித்து இறந்த வணிகனை ஒரு பெண்ணுக்காக இரங்கி எழுப்பினதும், நீறான பூம்பாவையின் உயிரை அவள் தகப்பனுக்காக எழுப்பினதும் முதலிய செய்கைகள் பெருமைக்காகவல்ல. கருணையைக் காட்டும் பொருட்டேயாகும். இத்தகைய சான்றுகளே சமயப் பிரசாரத்திற்குத் தகுந்த ஆதரவுகளாகும். ஆகவே சம்பந்தர் இவைகளை மக்களின் ஈடேற்றத்திற்காகவே கையாண்டனர் என்க.

சமயத்திற்குச் சிறந்த பண்புகளை அளித்தல்

இப்பெரும் அரிய செயல்களைச் செய்ததனால் அல்லவோ சைவம் இப்பொழுது விளங்கிக்கொண்டிருக்கிறது ! இதற்கு மூல புருடர் உலகில் என்றென்றும் மறவாத இன்ப நிலையாகிய நன்னிலையிலே இருப்பார் அல்லவா? ஞான சம்பந்தர் தம் வாழ்க்கையின் திறத்தால் சைவத்திற்கு ஒரு புத்துயிர் தந்தார். அவருக்கு முந்தியும் தற்காலத்தில் இருப்பதுபோலச் சைவம் முன்னேற முடியாத சமயமாக இருக்கவில்லை. அவர் அவ்வாறு கொள்ளவுமில்லை. அதனைப் பரவும் சமயமாகவும், பலரைத் தனக்குள் இழுத்துத் தூய்மைதரும் சமயமாகவும், கெட்டவர்களையும், தவறினவர்களையும் இழுத்துச் சேர்த்து ஒழுங்குள்ளவர்களாக்கிய சைவமாகவும் அதனை முற்படுத்தி ஆண்டார். சம்பந்தர் தம் வாழ்க்கையில் பாராட்டிய சைவமே நமக்குத் தகுந்த சமயமாக நம் தமிழர் கொள்ளுவார்களாக.

14

தவம் யாது?

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு

என்றார் வள்ளுவர். நம்மால் அல்லாமல் தானே தோன்றும் நோயைப் பொறுத்துக் கொள்ளுதல் தவமாகும். ஆனால் இந்நாளில் தவத்தின் பெயரால் உடலுக்குப் பல ஒறுத்தல்கள் தந்து அவற்றைப் பொறுத்துக் கொண்டு அதையே தவம் என்று மக்கள் கருதுகின்றார்கள். இது வள்ளுவர் கருத்து அன்று. பழனி, திருப்பதி முதலிய தலங்களுக்குச் சென்றால், நாக்கிலும் கன்னத்திலும் ஊசிகளை ஏற்றிக்கொண்டு நிற்கிறார்கள். சில இடங்களில் முட்கம்பிப் படுக்கையில் படுக்கிறார்கள். சில இடங்களில் முதுகில் கொக்கியை மாட்டித் தேரை இழுக்கிறார்கள். சில இடங்களில் மாலைபோல் குண்டூசிகளை மார்பில் மாட்டி எலுமிச்சைகளைத் தொங்க விடுகிறார்கள். மாரி, மாகாளி பண்டிகையில் நெருப்பு மிதிக்கிறார்கள். இலங்கை, பீஜி, மலேயா நாடுகளில் பலவிதமான ஊசிகளை ஏற்றிக்கொண்டு காவடி எடுக்கிறார்கள், இவைகள் எல்லாம் தவம், நோன்பு, வேண்டுதல் என்ற பெயர்களில் நடைபெறுகின்றன. இவை தவம் ஆகுமா?

ஒறுத்தல் உடலுக்கேயன்றி உயிருக்கு அல்ல, உடல் வருந்தினால் அதுதான் பயிற்சிபெறும். அதுபெறும் பயிற்சியினால் பொறுத்தல் தன்மை மிகும். அதனால் ஆன்மப் பயிற்சி ஏற்படுமா? குணம் மாறுதல் அடையுமா? ஓர் எடுத்துக்காட்டு கூறுவோம். வீட்டில் குழந்தைகளுக்கு அம்மை தோன்றுகிறது. மாரியம்மைக்கு வேண்டிக் கொள்கிறாள் தாயார். சுகம் ஆகிவிட்டால் நாக்கில் சலாகை ஏற்றிக் கொண்டு தீ மிதிப்பதாகக் கோருகிறாள். குழந்தை சுகமடைகிறது. அடுத்த ஆண்டு விழாவில் தாய் வாய்ப்பூட்டு போட்டுக்கொண்டு குண்டம் இறங்குகிறாள். தகுந்த சகிப்புத்தன்மை இருந்தால் எளிதில்

நிறைவேற்றுகிறாள். இல்லாவிடில் வெகுநாள் கொப்புளம் ஆகித் துடிக்கிறாள். இது சாதாரணமான பாவம். இதனால் தாயோ குழந்தையோ உடல் தூய்மையோ, ஆன்ம முதிர்ச்சியோ, குண முதிர்ச்சியோ அடைகிறார்களா?இல்லவே இல்லை. வேண்டுதலைச் சரிவர நிறைவேற்றினவர்கள் நடத்தையிலே குணத்திலே உயருகிறார்களா? குடிக்கிறவன் குடித்துக்கொண்டே இருக்கிறான். பொய் சொல்லுகிறவன் பொய் சொல்லிக் கொண்டே இருக்கிறான். திருடுகிறவன் திருடிக்கொண்டே இருக்கிறான். ஆகவே இந்தக் கொடிய அனுபவச் செயல்களைச் செய்தவர்கள் ஆன்ம உயர்வு பெறுவதே இல்லை. பொதுவாய்ப் பார்க்கின் மூட நம்பிக்கை உள்ளவர்களும் பெருமை பேசுகிறவர்களுமே, ஊசி குத்திக்கொள்ளுதல் தீ மிதித்தல் முதலிய சடங்குகளில் ஈடுபடுகிறார்கள். நாகரிகம் படைத்தவர்களும் நிரம்ப அறிவு-படைத்தவர்களும், கல்வியில் தேர்ந்தவர்களும் இவ்வாறான வேண்டுதல்களைச் செய்வதேயில்லை. தங்கள் உடலை வீணான துன்பங்களுக்கு உடம்படுத்துவதே இல்லை. ஏனெனில் இதனால் ஆன்ம முதிர்ச்சி ஏற்படுவதில்லை.

இந்தியர்களில் மட்டும் அல்ல, ஏனைய நாட்டார்களும் உடலைத் துன்புறுத்துவதே தவம் என்ற கொள்கை கொண்டிருக்கிறார்கள். அநாகரிகமான ஆஸ்திரேலியா, பாடிலா தீவுகளில் வசிக்கும் பண்டைக் குடிகள் உடலில் குத்திக்கொள்ளுதலிலும், பல்லைக் கூர்மையாக்குவதிலும் பச்சை குத்திக்கொண்டு நெருப்பில் வாட்டுவதிலும், கசையடி படுவதிலும் பொறுமை காட்டிச் சமயப்பெருமை கொள்கிறார்கள். ஆப்பிரிக்காவில் கருப்பு மக்கள் பெரும்பளுவு பூண்பதிலும் காது, மூக்கு, உதடு இவைகளைத் துளைப்பதிலும் ஆண்குறி, பெண்குறி அவைகளைத் துளைப்புப் பூட்டுவதிலும் பொறுத்துக்கொண்டு சமயமேன்மை உறுகிறார்களாம். பண்டை பெருவியா, மெக்ஸிகோ சிகப்பிந்தியர் முதலான அமெரிக்க இந்தியர்களில் கணக்கற்ற வகைகளில் உடல் துன்பம் பொறுப்பார்கள். இவைகள் எல்லாம் மதத்தின் பேரில் என்பர்.

இனி சிறந்த சமயத்தவர்கள் என்று தம்மைத் தாமே புகழ்ந்துகொள்ளும் கிறித்துவர்களும், முகம்மதியர்களும் எவ்வாறு தவத்தை மேற்கொள்ளுகிறார்கள் என்று சிறிது கூறுவோம். புருட் (Frode) என்ற வரலாற்றாசிரியர் எழுதிய ஆங்கில மடங்களின் வரலாற்றில் 10 நூற்றாண்டுகளுக்கு முன்பு மடாதிபதிகள் தங்களைத் தாங்களே கசையினால் அடித்துக்கொண்டு பொறுப்பார்களாம். இந்த வகையில் சில புதிய மடாதிபதிகள் தங்கள் உயிர்களையே இழந்திருக்கின்றனர். அன்னார்களைச் சிறந்த தவசிகள் என்று கூறி அவர்களுடைய சமாதிகளைப் புனித இடங்களாக யாத்திரை புரிவது வழக்கம். கத்தோலிக் சமயத்தில் இவ்வித ஒறுத்தல்கள் மிக உண்டு. இன்றைக்கும் இஸ்மேனியா நாட்டில் சில கோயில்களில் கணக்கற்ற துன்பங்களைச் சமயத்தின் பேரால் யாத்திரிகர்கள் அனுபவிக்கின்றனர். பாரசீகம் முதலிய முஸ்லீம் நாடுகளில் முகரம் பண்டிகையின்போது மார்பில் அடித்துக் கொள்ளுதல், இரத்தம் பெருக்குதல் சகஜமாக இருக்கிறது. வடநாட்டில் முகரம் நோன்பில் தீக்குளித்தல், மாரடித்தல் முதலியவை உண்டு. இவ்வாறான உடல் துன்பம் பொறுத்தல் தவம் ஆகுமா? அதனை அவர்கள் தவம் என்பர்.

உண்மையில் ஆராய்ந்தால் துன்பம் பொறுத்தல் உடலுக்கேயன்றி ஆன்மாவிற்கல்ல. ஆகவே ஆன்மா எவ்வாறு நன்மைபெறும்? சமய சேவை, சமூக சேவை, தியானம் முதலியவைகளினால்தான் ஆன்மா பயிற்சிபெறும். அதையே மக்கள் புரியவேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. அதுவே தமிழர் கொள்கையும் ஆகும்.

15

நமது கோயில்களில் காணும் சில அபூர்வ சிற்பங்கள்

சிற்பச் செல்வங்களில் தென்னிந்திய ஆலயங்கள் உலகத்திலேயே சிறந்தவை. இறைவன் எழுந்தருளியிருக்கும் புனித இல்லங்கள் அழகிலும் சிறந்திருக்க வேண்டும் என்பது நமது முன்னோர்களின் ஆழ்ந்த கொள்கை. ஆகவே எந்தக் கோயிலைப் பார்த்தாலும் ஏதாவது ஓர் அழகான சிற்பம் வைத்துச்சிறப்பிப்பார்கள். பொதுவாக எல்லாக் கோயில்களிலும் முக்கியமான சிற்பங்கள் ஒரே தன்மையனவாக இருக்கும். இறைவன், இறைவி, பரிவார தேவதைகள், முதலியவர்களைப்பற்றிப் புராணக்கதைகளில் வரும் செயல்களை முன்னிட்டுச் சிற்பங்கள் செய்யப்பட்டுள்ளன. சைவ வைணவக் கோயில்களில் காணும் திருவடிவங்கள் எல்லாம் மாறுபாடுகள் மிகவின்றி ஒரே தன்மையாக இருக்கக் காணலாம். சில சிற்பிகள் சில மாறுபாடுகளைத் தம் அறிவுக்குத் தக்கபடி மாற்றியும் உள்ளார்கள். இதனைச் சிறிது ஆராய்வோம்.

ஆலயங்களில் மூலத்தானம் மண்டபங்கள், தூண்கள், முகடுகள், கோபுரங்கள் முதலிய இடங்களில் சிற்பங்கள் இருக்கக் காணலாம். மூலத் தூண்களில் கற்சிலைகளும் தூண்கள், முகடுகள், விட்டங்கள் முதலியவைகளில் கல்லில் செதுக்கிய வகைகளும் கோபுரம், விமானம் முதலியவைகளில் சுதையிலும், சிற்பங்கள் செய்யப்பட்டிருக்கும். உற்சவங்களில் பெண்கள் உருவங்கள் பயன்படுகின்றன. இந்த வகைகளில் தோன்றும் திருவுருவங்கள் பொதுவாக ஒரே வகையினவாகக் காணப்படும். ஆகமங்களில் இவ்வுருவங்களுக்கு விதிகள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. சிற்பி அவ்விதிகளை நன்கு ஆராய்ந்து தன் அறிவைப் புகுத்தி அழகாக அமைப்பான். தல ஐதிகங்களையும் பரம்பரைச் செய்திகளையும் அனுசரித்துச் சிற்சில மாறுபாடுகள் அமைப்பான். இந்த வகையில் சிற்ப விசேடங்கள் நாட்டில் தோன்றியிருக்கின்றன. சிவாலயங்களில் மூலத்தானங்களில்

அருவுருவமாகிய இலிங்கமும் பரிவாரக் கோயில்களில் அந்தப்பரிவார உருவங்களும் காண்கிறோம். வைணவாலயங்களில் மூலத்தானத்தில் பெருமாள் உருவங்களும் பரிவாரங்களில் மற்ற உருவங்களும் காண்கிறோம். தூண்களிலும் விட்டங்களிலும் திண்ணைகளிலும் மண்டப மூலைகளிலும் ஏனைய பல வடிவங்கள் காணப்படுகின்றன. சில ஆலயங்களில் இயக்கர், கின்னரர், கிம்புருடர், முனிவர் முதலியவர்களின் வடிவங்களும் பல விசித்திர வடிவங்களும் காணலாம். இவைகள் எல்லாம் சிற்பிகளின் யுக்திக்குத் தக்கபடி சித்திரிக்கப் பட்டிருக்கும். சில தலங்களில் தனி உருவங்கள் செதுக்கியிருக்கவும் காண்கிறோம். சிவாலயங்களில் மூலத்தானங்களில் அருவுருவமான லிங்க வடிவங்களும் இருக்கின்றன. சிவபெருமானுக்கு 25 திருமூர்த்தங்கள் இருந்த போதிலும், அவைகள் எல்லாம் பெரும்பாலும் மண்டபத்துத் தூண்களிலேயே காணலாம். ஆனால் வைணவ ஆலயங்களில் மூலத்தானங்களில் அர்ச்சனா வடிவங்களே உண்டு. திருமால் அன்பர்களைக் காக்கும்பொருட்டு எடுத்த பலவித அவதாரவடிவங்களும் அங்கே காணலாம். இவைகள் ஒவ்வொன்றிலும் தலங்களுக்குகேற்ற வடிவங்கள் அமைந்திருக்கின்றன. ஆகவே வேறுபாடுகள் இருப்பது இயற்கை. சிவாலய மூலத்தானங்கள் உருவத்தில் பெரியதும் சிறியதும் ஆக இருக்குமேயன்றி வடிவங்கள் மாறுபட நியாயம் இல்லை. இலிங்ககாரத்தைத் தவிர வேறு வடிவங்கள் காணமாட்டோம்.

தமிழ் நாட்டில் பாடல்பெற்ற தலங்களில் திருச்செங்கோட்டைத் தவிர மற்ற எல்லாத் தலங்களிலும் இலிங்கமே மூலத்தானத்தில் இருக்கின்றது. திருச்செங்கோட்டு மலை மீது உள்ள கோயிலில் மட்டும் மாதொருபாகம் அதாவது அர்த்தநாரி வடிவமான திருவடிவம் இருக்கின்றது. இடப்புறம் பெண்வடிவமும் வலப்புறம் ஆண் வடிவமும் கொண்ட அர்த்தநாரி வடிவம் காட்சி தருகிறது. புராணமும் அவ்வடிவையே கூறுகிறது. பெண்ணுக்குரிய உறுப்புகளும் அணிகளும் கொண்ட பெண்வடிவம் இடப்பாதியிலும் ஆணுக்குரிய உறுப்புகளும் அணிகளும் கொண்ட ஆண்வடிவம் வலப்பாதியிலும் இருக்கக் காண்கிறோம். தலத்தேவாரங்களிலும் அர்த்தநாரீசன் என்ற பெயர் காணாவிடினும் தலமஞ்சரிகளில் அப்பெயரினையே காண்கிறோம்.

மற்ற தலங்களில் மாதொருபாகம் ஆகிய வடிவங்கள் தூண்களில் மட்டும் காணலாம். மூலத்தானங்களில் இல்லை. மாதிருக்கும்பாதியன் என்பதற்கு அடையாளமாகச் சிவபெருமான் இடக் காதில் தோடு என்ற பெண்கள் காதணியும், வலக் காதில் குழையென்ற ஆண்கள் காதணியும் அணிந்திருக்கக் காண்கிறோம். அதனால் தோடுடைய செவியன் என்று சம்பந்தர் பாடியதும் அறியலாம். இதற்கொரு புராண சரிதமும் உண்டு. பிருகு முனிவர் ஆழ்ந்த சிவபக்தி உடையவர். உமைஅம்மையைத் தொழுவதேயில்லை. உமையுடன் சிவன் அமர்ந்திருக்கையில் வண்டு வடிவமாக அம்முனிவர் இறைவனையே வலம் வந்தாராம். அது கண்டு அதனை விலக்கிட எண்ணி உமையம்மை பெருமானை வணங்கி அவருடைய உடலில் பாதி தனக்குத்தரும்படி வேண்ட இறைவன் அப்படியே தந்தருளினாராம். இதனால் பெருமானுடைய இடப்பகுதி உமையின் உருவமாயிற்று. இச்சரிதப் படி அர்த்தநாரீசன் வடிவம் தோன்றிற்று. திருச்செங்கோட்டு இறைவன் வடிவம் இந்த வகையில் தனிப்பெருமையோடு ஏற்பட்டது. எல்லாச் சிவாலயங்களிலும் அர்த்தநாரீசுவரர் வடிவம் இடப் புறத்தில் உமையொரு பாகமாக இருக்க, ஒரு கோயிலில் மட்டும் வலப் புறத்தில் உமையம்மை இருக்கக் காண்கிறோம். தஞ்சையில் கரந்தைக்கருகில் உள்ள வசிட்டேசர் சந்நிதியில் உள்ள அர்த்தநாரீசர் வடிவம் மிக விசித்திரமாக அமைக்கப்பட்டிருக்கிறது. வலப்புறம் பெண்வடிவமும் இடப்புறம் ஆண்வடிவமும் அமைந்துள்ளன. உறுப்புகளும் அணிகளும் அந்த வேறுபாட்டினைக் காட்டுகின்றன. இந்தக் கோயில் முதலாம் இராசராசனுக்கு முன்காலத்தில் ஏற்பட்ட பண்டைச் சோழர் திருப்பணியாகும். ஏனெனில் இதில் ஒரு கல்வெட்டு பராந்தகச் சோழன் செய்த தானங்களைக் குறிக்கிறது. அக்காலத்தில் வலப்பாகம் பெற்ற ஐதீகமும் வழங்கியிருக்கலாம். அல்லது சிற்பி தன் அறிவுத்திறனுக்கு இந்த உருவத்தை ஆக்கியிருக்கலாம். வேறென்ன காரணம் கூற முடியுமோ?

இனி திருமால் அவதாரங்களில் வராக நரசிம்ம அவதாரங்கள் மிகப்பிரசித்தி பெற்றவை. அவைகள் பல்லவர் காலம் முதல் கொண்டு நம்முடைய கோயில்களில் இடம் பெற்றுள்ளன. 6, 7 நூற்றாண்டுகளில் குடையப்பெற்ற பல்லவர் குகை மண்டபங்களில் பாறைச்சுவர்களில்

இவ்விரு அவதாரங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன. பின்னால் ஏற்பட்ட சோழ பாண்டிய கோயில்களிலும் இவ்வவதார உருவங்கள் அமைந்திருக்கின்றன. மூலத்தானங்களில் மட்டுமல்ல. தூண்களிலும் உருவங்களைச்சுற்றிலுமுள்ள சிற்றறைகளிலும் பரிவார தேவதைகளாக இவைகள் அமையப்பெற்றிருக்கின்றன. பெரும்பான்மையாக அவைகள் தலை வராகம், சிங்கம் என்ற உருவங்களும் உடல் மானுடவுருவமாகவும் இருக்கக் காணலாம். நரசிங்க உருவம் வீற்றிருக்கும் நிலையில் இரணியனை மடியில் இருத்திக் குடலைக்கிழிக்கும் செயலில் இருக்கிறது. இவ்வுருவங்கள் எல்லாம் ஆண்பால் உருவங்களே. மிகக்கோரமான இயல்பில் அவைகள் காட்சிதரும். ஆனால் ஒரு கோயிலில் மட்டும் பெண்பால் நரசிங்கம் காணப்படுகிறது. இதன் ஐதிகம் பலமுறை விசாரித்தும் தெரியவில்லை. விருத்தாசலம் அம்மன்கோயிலில் வலம் வரும் போது அம்மனுக்கு இடப் பக்கத்தில் இருட்டான மூலையில் அவ்வுருவம் அமைக்கப் பட்டிருக்கிறது. அத்திருவுருவத்தின் உடல் பெண்பால், தலை சிங்கம். நிற்கிற பாவனையில் அது இருக்கிறது. மார்பில் இரண்டு தனங்கள் சிறந்து விளங்குகின்றன. பரிவார தேவதைகளில் இந்தப் பெண்பால் நரசிங்கம் ஏன் வைக்கப்பட்டு உள்ளதோ? அறியோம். இவ்வுருவம் தான் முதலில் பெண் தேவதைகள் அமைக்கப்படும் மூலைகளில் உள்ளது. இறைவிக்கு எத்தேவதையானாலும் பெண்தேவதையே பரிவார தேவதையாக இருக்க வேண்டும் என்ற காரணத்தால் இப்படி பெண்பால் நரசிங்கம் கருதப்பட்டிருக்கலாம்.

நமது கோயில்களில் மூத்த பிள்ளையார் திருவுருவங்கள் எங்கும் காணலாம். அப்பிள்ளையார் உருவங்கள் பலவகையாகச் சித்தரிக்கப் பெற்றிருக்கின்றன. மூலை முடுக்குகளில் எல்லாம் பிள்ளையார் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில் முதன் முதலில் பிள்ளையாரை வழிபட்டுவிட்டுத்தான் வேறுவழிபாடே செய்ய வேண்டும் அல்லவா? அப்பிள்ளையார்கள் பொதுவாக வீற்றிருக்கும் நிலையில் அமைக்கப்பட்டிருக்கும். தலை யானை முகமாகவும், தும்பிக்கை முன்னால் வளைந்து கொண்டு நான்கு கைகளைப்பெற்றும் தொந்தி சரீரத்தோடு அமர்ந்தும் அவ்வுருவங்கள் காட்சி தரும். பிள்ளையார் சிவபெருமானின் மூத்தபிள்ளை யானதாலும் எல்லாத் தடைகளை

நீக்கும் கருணை கொண்டவராதலாலும் மக்களிடையே மிகவும் அன்போடு போற்றப்படுகின்றார். மேலும் பிள்ளையார் என்றாலே ஆண்பால் என்ற நினைவு நம்மைவிட்டு அகலாது. ஒரு சிற்பி மட்டும் பிள்ளையார் திருவுருவத்தைப் பெண்பாலாகச் சித்தரித்திருக்கிறார். கன்னியாகுமரி வட்டத்தில் சுசீந்திரம் என்ற புகழ்பெற்ற திருத்தலத்தில் நடுத்தூணில் ஒரு பெண்வடிவத்தில் விநாயகர் வடிவம் சித்தரிக்கப் பெற்றிருக்கிறது. உடல் பெண் உருவம். தலை விநாயகர் உருவம். அது வீற்றிருக்கும் நிலையில் உள்ளது. இதனை இக்கோயிலில் விக்கினேசுவரி என்கிறார்கள். முழுஜதீகம் தெரியவில்லை. தமிழ்நாட்டில் பெயர்களில் விக்கினேசுவரி என்று பெயர் இடுவார்கள் இல்லை. ஆனால் மலேயா நாட்டில் தமிழ்ப்பெண்கள் விக்கினேசுவரி என்று பெயர் இட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த வகையில் விசித்திரமான பெண் வடிவங்கள் பல நமது கோயில்களில் உள்ளன.

16

குடைவரைக் கோயில்களும் உருவ வழிபாடும்

உருவ வழிபாடு மிகப் பழமையானது. அது எல்லாச் சமயங்களிலும் உண்டு. சில சமயங்களில் சில உருவங்களையும் சில சமயங்களில் பல உருவங்களையும் சில சமயங்களில் கொள்கைகளையும், சில சமயங்களில் சின்னங்களையும் வழிபடும் பொருளாக வைத்திருக்கிறார்கள். சில சமயங்களில் மானுட உருவங்களையும், சிலவற்றில் விலங்கு முதலிய சிற்றுயிர் உருவங்களையும், அவற்றின் கலப்புகளையும் வழிபடும் உருவங்களாகக் கருதி இருக்கிறார்கள். பண்டை நாடுகளான ஈஜிப்ட், அசிரியா, முதலிய நாடுகளில் இவ்வழிபாடுகள் இருந்தன. இவ்வாறு வழிபடும் தெய்வங்கள் இருப்பதற்காக இருக்கைகள் கட்டினார்கள். அவைகள் கோயில்கள் எனப்பட்டன.

சீனாவிலும் இந்தியாவிலும் இப்படிப்பட்ட கோயில்கள் எழுப்பப்பட்டன இக்கோயில்களில் சில பெரிதாகவும் சில சிறிதாகவும் இருந்தன. கம்போடியா முதலிய தீவுகளில் மிகப்பெரிதாகக் கட்டப்பட்டன, இந்தியாவிலும் இந்த முறையில் பண்டையகாலத்தில் கோயில்களும் வழிபாடுகளும் எழும்பின. சிந்து நதி நாகரிகக் காலத்தில் கோயில்களும் வழிபடு பொருள்களும் இருந்தன என்பதைத் தொல்பொருள் ஆராய்ச்சி கூறுகின்றது. அந்தக் காலம் மறைந்து போக நடுஆசியாவிலிருந்து ஆரிய நாகரிகம் கங்கை நதிக்கரையில் குடியேற, அருவமான தேவதைகள் வழிபடப்பட்டன. அவைகளுக்கு வழிபாடு செய்ய வேள்விகள் செய்யப்பட்டன. சிற்றுயிர்களும் நெய்யும் தீக்குண்டங்களில் இட்டு வழிபாடு செய்தார்கள். தேவதைகளுக்கு உலகத்துப் பிரதிநிதியாக இருந்தது நெருப்பு என்று கூறப்பட்டது. அந்தக்கால மக்கள் வேதங்களைச் சிறப்பாகக் கூறி வேள்விகளைச் செய்தார்கள். தற்காலத்தைப் போலக் கல்லாலும், மரத்தாலும், மண்ணாலும் உருவங்கள் செய்யப்படவில்லை. அவைகளுக்குக் கோயில்கள் கட்டப்பட்டதாகத் தெரியவில்லை. ஆற்றோரங்கள், வனங்களிலும் வழிபாடுகளுக்கான வேள்விகள் நடத்தப்பட்டன

அரசர்களைக் கொண்டு முனிவர்கள் வேள்விகளை நடத்தினார்கள். நாளுக்கு நாள் ஆடு, குதிரை முதலிய உயிர்கள் நூற்றுக்கணக்கில் வதைக்கப்பட்டன. அறிஞர்களுக்கு அக்காட்சிகள் அருவருப்பு ஊட்டின. வர்த்தமானரும் கௌதமரும் தோன்றி எதிர்த்தார்கள். அவ்வெதிர்ப்பு வெற்றியடைந்தது. கொலைகளும் ஊன் உண்ணலும் வெறுக்கப்பட்டது. இவ்விரு அறிஞர்களுக்கும் கணக்கற்ற சீடர்கள் தோன்றினார்கள். அவர்களுக்கு உண்மைத்தத்துவங்கள் போதிக்கப்பட்டன. பிற உயிர்களை வதைப்பதனால் மனிதனுக்கு நற்கதி உண்டாகாது. மனிதன் தனது ஐம்புலன்களை அடக்கி ஆளுவதிலேயேதான் நற்கதி உண்டாகும் என்று அறிவுறுத்தப்பட்டது. வர்த்தமானருடைய சீடர்கள் ஜெயினர்கள் அல்லது சமணர்கள் ஆனார்கள். கௌதமருடைய சீடர்கள் பௌத்தர்கள் ஆனார்கள். இந்த மாறுதல்கள் கி. மு. 500, 600 ஆண்டுகளில் வட நாட்டில் நடைபெற்றன.

வர்த்தமானரும் புத்தரும் மனிதர்களை நல்வழிக்குக் கொண்டு போக வேண்டும் என்றுதான் முதலில் எண்ணினார்கள். அவர்களுடைய அறிவுரைகள் சீடர்களால் தொகுக்கப்பட்டுப் புதிய சமயங்கள் ஆயின. நன்னெறி ஆசிரியர்களாக வந்த அவர்கள் அவ்விரண்டு சமயங்களுக்கும் தாபதர்களாகக் கொள்ளப்பட்டார்கள். இருவரும் அரசகுமாரர்களாகத் தோன்றி உலக வாழ்க்கையில் நிலையாமையை வற்புறுத்தி நற்கதி அடைவதற்கு வழிகள்காட்டின வகையில் புதிய சமயமார்களுக்கு ஆசிரியர்களாக ஏற்பட்டார்கள். நாளா வட்டத்தில் அவர்கள் தெய்வீகத்தன்மையில் வைக்கப்பட்டார்கள். தெய்வங்களாகவே கொள்ளப்பட்டார்கள். சிறப்பான வழிபாடுகளும் நடத்தப்பட்டன. சீடர்களில் பொது மக்கள் மட்டும் அன்றி அரசர்களும் சேர்ந்தார்கள். அரச வம்சங்களும் இப்புதிய சமயங்களை ஏற்றுக் கொண்டன.

இவ்விரு சமயங்களும் தியாகம் செய்த அறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்டவைகள். ஆனதினால் வெகுவிரையில் நாடுகள் எங்கும் பரவின. சமண சமயம் வட இந்தியாவில் மட்டும் அன்றி தென்னிந்தியாவில் தமிழ் நாட்டிலும் 3, 4 நூற்றாண்டு அளவில்

பரவத் தொடங்கிற்று. பௌத்த சமயமோ இந்தியா முழுவதும் பரவி இமயமலைக்கு வடக்கேயும் கிழக்கேயும் மிகத்தொலைவில் இருந்த கிழக்குத்தெற்குத் தீவுகளிலும் பரவியது. அவைகளோடு சில சின்னங்களும் புனிதமாகச் சென்றன. ஜெயின சமயத்திற்கு அசோக மரமும் பௌத்தத்திற்கு வெள்ளரசு போதி மரமும் சின்னங்களாயின. அருகன் அசோமரத்தின் கீழும், பௌத்தன் வெள்ளரசின் கீழும் தொழப் பட்டார்கள். சமயப்புனித இடங்களில் இவ்விரண்டு மரங்களும் தொழப்பட்டு வருவதை இலங்கை முதலிய இடங்களில் நேரில் காணலாம்.

இச்சமயங்கள் தோன்றிய இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் கிரேக்கர் என்ற யவனர்கள் இந்தியாவை எட்டிப் பார்த்தார்கள். அலெக்சாண்டர் பஞ்சாப் மீது படையெடுத்தான். அவர்களுடைய நாகரிகம் இந்து நாகரிகத்தைச் சந்தித்தது. இரண்டு நாகரிகங்களும் தொடர்பு கொள்ளப் பழக்க வழக்கங்களும் தொடர்பு கொண்டன. யவனர் பண்டைக்காலம் முதல் உருவ வழிபாட்டில் சிறந்து விளங்கினவர்கள். தங்கள் தெய்வங்களுக்குக் கோயில்களைக் கட்டி உருவங்களைச் சமைத்துப் பலிதந்து ஆராதனை செய்து வந்தார்கள். இரண்டு நாகரிகங்களும் சந்தித்த வகையில் உருவவழிபாடும் ஆராதனைகளும் அறிமுகம் ஆகிவிடும் அல்லவா? ஒரே காலத்தில் இரண்டு வேறு குலங்கள் சந்திக்கும் பொழுது பழக்கங்கள் பரிமாறிக் கொள்வது இயற்கையன்றோ? இந்தியாவிலும் உருவவழிபாடு புதுமுறையில் தொடர முற்பட்டிருக்கும் அல்லவா?

கி. மு. 600, 500 ஆண்டுகளில் தோன்றிய தமது ஆசிரியர்களுக்குச் சமண, பௌத்த சீடர்கள் நாளாவட்டத்தில் தொழுவதற்கும், ஆராதனை செய்வதற்கும் அவர்களைப்போல் உருவங்கள் செய்து வழிபடத் தொடங்கினார்கள். அருகக் கடவுள் ஆடையின்றியும், புத்தர் ஆடையுடனும் உருவாக்கப்பட்டார்கள். இந்த உருவங்களை வழிபாடு செய்ய ஆலயங்களும் நிறுவப்பட்டன. சைத்தியம் என்ற அமைப்பு ஏற்பட்டது. பண்டைக்காலக் கூரை வீடு போன்ற வடிவம் அதற்குத் தரப்பட்டது. மேலும் ஜீன உருவமும் பௌத்த உருவமும் பெரும்பாறைகளில் வடிவாக்கப்பட்டன. வட

அரசர்களைக் கொண்டு முனிவர்கள் வேள்விகளை நடத்தினார்கள். நாளுக்கு நாள் ஆடு, குதிரை முதலிய உயிர்கள் நூற்றுக்கணக்கில் வதைக்கப்பட்டன. அறிஞர்களுக்கு அக்காட்சிகள் அருவருப்பு ஊட்டின. வர்த்தமானரும் கௌதமரும் தோன்றி எதிர்த்தார்கள். அவ்வெதிர்ப்பு வெற்றியடைந்தது. கொலைகளும் ஊன் உண்ணலும் வெறுக்கப்பட்டது. இவ்விரு அறிஞர்களுக்கும் கணக்கற்ற சீடர்கள் தோன்றினார்கள். அவர்களுக்கு உண்மைத்தத்துவங்கள் போதிக்கப்பட்டன. பிற உயிர்களை வதைப்பதனால் மனிதனுக்கு நற்கதி உண்டாகாது. மனிதன் தனது ஐம்புலன்களை அடக்கி ஆளுவதிலேயேதான் நற்கதி உண்டாகும் என்று அறிவுறுத்தப்பட்டது. வர்த்தமானருடைய சீடர்கள் ஜெயினர்கள் அல்லது சமணர்கள் ஆனார்கள். கௌதமருடைய சீடர்கள் பௌத்தர்கள் ஆனார்கள். இந்த மாறுதல்கள் கி. மு. 500, 600 ஆண்டுகளில் வட நாட்டில் நடைபெற்றன.

வர்த்தமானரும் புத்தரும் மனிதர்களை நல்வழிக்குக் கொண்டு போக வேண்டும் என்றுதான் முதலில் எண்ணினார்கள். அவர்களுடைய அறிவுரைகள் சீடர்களால் தொகுக்கப்பட்டுப் புதிய சமயங்கள் ஆயின. நன்னெறி ஆசிரியர்களாக வந்த அவர்கள் அவ்விரண்டு சமயங்களுக்கும் தாபதர்களாகக் கொள்ளப்பட்டார்கள். இருவரும் அரசகுமாரர்களாகத் தோன்றி உலக வாழ்க்கையில் நிலையாமையை வற்புறுத்தி நற்கதி அடைவதற்கு வழிகள்காட்டின வகையில் புதிய சமயமார்களுக்கு ஆசிரியர்களாக ஏற்பட்டார்கள். நாளா வட்டத்தில் அவர்கள் தெய்வீகத்தன்மையில் வைக்கப்பட்டார்கள். தெய்வங்களாகவே கொள்ளப்பட்டார்கள். சிறப்பான வழிபாடுகளும் நடத்தப்பட்டன. சீடர்களில் பொது மக்கள் மட்டும் அன்றி அரசர்களும் சேர்ந்தார்கள். அரச வம்சங்களும் இப்புதிய சமயங்களை ஏற்றுக் கொண்டன.

இவ்விரு சமயங்களும் தியாகம் செய்த அறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்டவைகள். ஆனதினால் வெகுவிரைவில் நாடுகள் எங்கும் பரவின. சமண சமயம் வட இந்தியாவில் மட்டும் அன்றி தென்னிந்தியாவில் தமிழ் நாட்டிலும் 3, 4 நூற்றாண்டு அளவில்

பரவத் தொடங்கிற்று. பௌத்த சமயமோ இந்தியா முழுவதும் பரவி இமயமலைக்கு வடக்கேயும் கிழக்கேயும் மிகத்தொலைவில் இருந்த கிழக்குத்தெற்குத் தீவுகளிலும் பரவியது. அவைகளோடு சில சின்னங்களும் புனிதமாகச் சென்றன. ஜெயின சமயத்திற்கு அசோக மரமும் பௌத்தத்திற்கு வெள்ளரசு போதி மரமும் சின்னங்களாயின. அருகன் அசோமரத்தின் கீழும், பௌத்தன் வெள்ளரசின் கீழும் தொழப் பட்டார்கள். சமயப்புனித இடங்களில் இவ்விரண்டு மரங்களும் தொழப்பட்டு வருவதை இலங்கை முதலிய இடங்களில் நேரில் காணலாம்.

இச்சமயங்கள் தோன்றிய இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் கிரேக்கர் என்ற யவனர்கள் இந்தியாவை எட்டிப் பார்த்தார்கள். அலெக்சாண்டர் பஞ்சாப் மீது படையெடுத்தான். அவர்களுடைய நாகரிகம் இந்து நாகரிகத்தைச் சந்தித்தது. இரண்டு நாகரிகங்களும் தொடர்பு கொள்ளப் பழக்க வழக்கங்களும் தொடர்பு கொண்டன. யவனர் பண்டைக்காலம் முதல் உருவ வழிபாட்டில் சிறந்து விளங்கினவர்கள். தங்கள் தெய்வங்களுக்குக் கோயில்களைக் கட்டி உருவங்களைச் சமைத்துப் பலிதந்து ஆராதனை செய்து வந்தார்கள். இரண்டு நாகரிகங்களும் சந்தித்த வகையில் உருவவழிபாடும் ஆராதனைகளும் அறிமுகம் ஆகிவிடும் அல்லவா? ஒரே காலத்தில் இரண்டு வேறு குலங்கள் சந்திக்கும் பொழுது பழக்கங்கள் பரிமாறிக் கொள்வது இயற்கையன்றோ? இந்தியாவிலும் உருவவழிபாடு புதுமுறையில் தொடர முற்பட்டிருக்கும் அல்லவா?

கி. மு. 600, 500 ஆண்டுகளில் தோன்றிய தமது ஆசிரியர்களுக்குச் சமண, பௌத்த சீடர்கள் நாளாவட்டத்தில் தொழுவதற்கும், ஆராதனை செய்வதற்கும் அவர்களைப்போல் உருவங்கள் செய்து வழிபடத் தொடங்கினார்கள். அருகக் கடவுள் ஆடையின்றியும், புத்தர் ஆடையுடனும் உருவாக்கப்பட்டார்கள். இந்த உருவங்களை வழிபாடு செய்ய ஆலயங்களும் நிறுவப்பட்டன. சைத்தியம் என்ற அமைப்பு ஏற்பட்டது. பண்டைக்காலக் கூரை வீடு போன்ற வடிவம் அதற்குத் தரப்பட்டது. மேலும் ஜீன உருவமும் பௌத்த உருவமும் பெரும்பாறைகளில் வடிவாக்கப்ப

நாட்டிலும் நடு ஆசியாவிலும், இலங்கையிலும் பௌத்த வடிவங்கள் நின்றகோலம், இருக்கும் கோலம், படுக்கும் கோலம் இந்த வகைகளில் தென்படுகின்றன. அருகன், தீர்த்தங்கரர் முதலியோரின் உருவங்கள் ஆடையின்றி வைக்கப்பட்டன.

தென்னிந்தியாவில் பௌத்த சமயம் மிகுதியாக நுழையவில்லை. காஞ்சியிலும் நாகையிலும்தான் கோயில்களும் வழிபாட்டு உருவங்களும் ஏற்பட்டன. சம்பந்தர், திருமங்கையாழ்வார்களால் பௌத்தம் அழிக்கப்பட்டுச் சிலைகளும் மறைந்தன. காஞ்சியில் மட்டும் நிலத்தின் கீழ் சில பௌத்த உருவங்கள் இருக்கின்றன. ஏகாம்பரநாதர் கோயில் சுற்றுமதிலில் சில சிற்பங்கள் உள்ளன. அவைகளில் புத்தருடைய மகாநிர்வாண நிலை ஒன்று இருக்கிறது. காரைக்காலுக்கு அடுத்த போதிமங்கையில் இருந்த சின்னங்கள் சம் பந்தரால் அழிக்கப்பட்டன. ஆந்திர நாட்டில் நாகார்ச்சுன கொண்டாவில் இருந்த ஸ்தூபிகள் பாழடைந்து நின்றன. சாதகக் கதைகள் அடங்கிய பளிங்குச் சிற்பங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. மற்றபடி இருந்த சின்னங்கள் தற்போதில்லை. ஆனால் சமண சமயமோ 20 நூற்றாண்டுகளுக்கு முன்பே தென்னாடுகளில் நன்கு புகுந்து விட்டது. முதலில் சமணத் துறவிகள் வந்தார்கள். நாட்டு மொழிகளை நன்கு கற்றுக்கொண்டு மக்களிடம் பழகினார்கள், தங்கள் சமய நூல்களையும் நாட்டு மொழிகளில் எழுதினார்கள். தமிழில் காப்பியங்களை எழுதியனது மட்டுமன்றி மறை நீதி நூல்களையும் இலக்கணம், நிகண்டு முதலிய நூல்களையும் எழுதினார்கள். மேலும் தெலுங்கிலும். கன்னடத்திலும் நூல்களை இயற்றினார்கள். மொழி ஆராய்ச்சிச் சங்கங்களில் பங்கு எடுத்துக்கொண்டார்கள். சமய நிலையங்களைக் கட்டி, மக்களுக்குச் சமய அறிவு தந்தார்கள். 6, 7 நூற்றாண்டுகளில் சைவ வைணவாச்சாரியர்களால் எதிர்த்துக் தோற்கடிக்கப்பட்டும் அவர்கள் சமயம் முழுவதும் போகவில்லை. 10, 12 நூற்றாண்டுகளிலும் கூட அவர்கள் நூல்கள் எழுதியும் சமயப் பிரச்சாரம் செய்தும் வந்தார்கள். நாளது தேதியிலும் அவர்கள் குடும்பங்கள் பிரபலமாக இருக்கின்றன.

சமணர்கள் தென்னாடு புகுந்ததும் சிறு சிறு குன்றுகளில் தவம் செய்ய இருப்பிடங்கள் அமைத்துக் கொண்டனர். அப் பாறைகளில் குகைகளில் வசித்தும் இல்லாத இடத்தில் குகைகளைக் குடைந்தும் தவம் செய்யப்பாறைகளில் படுக்கை இயற்றியும் நூலாராய்ச்சி செய்தார்கள். அக்கம் பக்கத்து ஊர் மக்கள் அவர்களுடைய மொழிகளை ஆர்வத்துடன் கேட்டு வந்தார்கள். அப்படிப்பட்ட படுக்கைகள் தொண்டை, சோழ, பாண்டி, கொங்கு நாடுகளில் இன்றைக்கும் இருக்கின்றன. தொண்டை நாட்டில் திருமலை, சோழ நாட்டில், திருச்சிராப்பள்ளி மலை.

கொங்கு நாட்டில் ஆறுநாட்டார் அல்லது புகளூர்மலை, அயிரைமலை, பாண்டிய நாட்டில் சித்தன்ன வாசல் திரு ஆனைமலை முதலிய எட்டுக் குன்றுகள், கழுகு மலை முதலியவைகளில் படுக்கைகள் இருக்கின்றன. திருவிளையாடல் புராணம் இதனை வேள்வியிலிருந்து வந்த விலங்குகள் என்ற உவமைக் கதையாகக் கூறுகிறது.

சமணக்குரவர் பிரசாரக் கொள்கைகளான வேள்வி விலங்குகளை சைவக்குரவர்கள் கல்லாகச் சபித்து எதற்கும் உதவாதவகை செய்து விட்டார்கள். இதனைப் புராண ரீதியில் கதையாக்கிவிட்டார்கள். அந்த எட்டு மலைகளிலும் சமணக்குரவர் இருந்து தவம் செய்த இடங்கள் இன்றைக்கும் இருக்கின்றன. அயிரை மலையில் சமணக்குரவர் உருவங்களும் கழுகுமலையில் 100 க்கு மேற்பட்ட குரவத் திருவுருவங்களும் பாறைகளில் உருவாக்கப் பட்டுள்ளன. பல இடங்களில் பிராமி மொழியில் எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் குரவர்களின் பெயர்களும் காண்கிறோம். கழுகுமலையில் குரவர்களேயன்றி குரத்திமார்களின் பெயர்களும் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வாறு சமணர் ஒரு காலத்தில் மிகப்பெருக்கமாக இருந்தார்கள் என்பதற்கு வெகு சான்றுகள் நாட்டில் இருக்கின்றன.

5 - ஆம் நூற்றாண்டு அளவில் சமய நிலையங்கள் மண்மேடைகளாகவும் மரநிழல்களாகவும் இருந்தன. பிறகு கூரை

வீடுகளாகவும் வில்லை வீடுகளாகவும் இருந்தன. 6, 7 நூற்றாண்டில் தான் அந்த நிலையங்கள் உறுதியான கட்டடங்களாக மாறத் தொடங்கின. தீயினாலும், நீராலும், காற்றாலும் அழிக்க முடியாத மண்டபங்கள் உண்டாக்கி அவைகளைச் சமய நிலையங்கள் ஆக்க வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் உதித்தது. இவ்வெண்ணம் அக்காலத்துச் சமய அறிஞர்கள் எல்லாரிடத்திலும் உண்டாயிற்று. சிறப்பாக நடு இந்தியா, தென் இந்தியா இவைகளில் தோன்றிற்று, நடு இந்தியாவிலும், எல்லோரா, அஜந்தா குன்றுகளிலும் ஒரிசாவில் (உத்சலம்) கண்டகிர், உதயகிரிகளிலும் மேல் இந்தியாவில் பாதாமி, கன்னேரிப்பாறைகளிலும், தென்னாட்டில் மாமல்லை முதலிய பல குன்றுகளிலும் கோயில்கள் குடையப்பட்டன.

நடு இந்தியாவில் யாதவமன்னர்களும், மேல் இந்தியாவில் சாளுக்கியர்களும், தென்னாட்டில் பல்லவமன்னர்களும் இக்கற்குகைகளைத் தோண்டி வழிபடு கோயில்கள் ஆக்கினார்கள். எல்லோரா, அஜந்தாக் குகைகளில் புத்த, சைன இந்து சமயங்கள் தோன்றின. ஒரிசாவில் சமண விக்கிரகங்கள் தோன்றின. பாதாமியில் புத்தசைன சைவ, வைணவக் கோயில்கள் உண்டாயின. தென்னாட்டில் சில குகைகள் சைனர்களாலும் சில இந்துக்களாலும் உண்டாயின. அனேகமாக இந்தக்குடைவரைக் கோயில்கள் எல்லாம் ஒரே காலத்தில் ஏற்பட்டன. 6, 7 ஆம் நூற்றாண்டிலேயே இவைகள் தோன்றின. இந்தப்பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் தொடர்பு ஏற்பட்டிருந்தது. சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்கும் அக்காலத்தில் அடிக்கடி சண்டை ஏற்பட்டது. பல்லவர் பாதாமியின் மீது படையெடுத்து அந்நகரைத் துகள் ஆக்கிய செய்தியைச் சிறுத் தொண்ட நாயனார் சரிதம் கூறுகிறது. அவர் பல்லவர் தளபதி. நரசிம்ம பல்லவனின் படைத்தலைவராக இருந்தவர். ஆகவே சமயத் தொடர்பும் சிற்பத்தொடர்பும் ஏற்பட்டிருத்தல் இயல்பே. பாதாமிக் குகை மண்டபங்களும் பல்லவர் குடைவரை மண்டபங்களும் ஒரே மாதிரி இருந்ததைக் காணலாம்.

இனி தென்னாட்டிலும் குடைவரைக் கோயில்களுக்குச் சமணக் குரவர்களின் உதவி இருந்திருக்க வேண்டும். ஆதி காலத்தில் சமணக்குரவர்கள் தமிழ்நாடெங்கும் குன்றுகளில் தவம் செய்து வந்தார்கள் என்று முன்னே கூறப்பட்டது. அவர்கள் தங்கள் சமயநிலையங்களை உறுதிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டார்கள். அதற்கு அனுகூலமாக நாட்டு அரசர்களும் சமணர்கள் ஆனார்கள். 7 ஆம் நூற்றாண்டில் பல்லவ மகேந்திரனும் பாண்டிய கூன்பாண்டியனும் சமணர்கள் ஆனார்கள். அப்போது குடைவரைக் கோயில்கள் பல வெட்டப்பட்டன. சிற்றன்ன வாசலில் சமணக் கோயிலும் மதுரையைச் சுற்றியுள்ள எட்டுமலைக் கோயில்களும் பல வெட்டப்பட்டன. சிற்றன்ன வாசலில் சமண குடைவரைக் கோயில்களும் அப்போது அமைக்கப்பட்டன. பின்னர் மகேந்திரனும் கூன்பாண்டியனும் சைவர்கள் ஆன போது குடைவரைக் கோயில்கள் சைவ வைணவக் கோயில்கள் ஆயின. புதுக்கோட்டைச் சீமை குடைவரைகள் இந்த மாறுதலை தெளிவாகக் காட்டும். சிற்றன்ன வாசல் சமணமாக இருக்க திருக்கோகரணம் சைவமாக இருக்க திரு மெய்யம் சைவமும் வைணவமும் கூடஇருக்கக் காணலாம். கோகரணத்தில் ஒரு சமணச் சிலையும் கல்வெட்டும் இருக்கிறது. இந்தக் கலப்புச் சமய நிலை வரலாற்றில் ஒரு வியக்கத்தக்க நிலையைக் காட்டுகிறது. ஒரே அரசன் முதலில் சமணனாயிருந்து பிறகு சைவனான செய்தி பெரிய புராணத்தில் மட்டுமின்றித் திருச்சி குடைக்கோயில் கல்வெட்டும் நன்கு கூறுகின்றது.

இதுவரை கூறப்பட்டவகையில் குடைவரைச் சமணக்கோயில்கள் முதலில் தொடங்கின. அவற்றில் சமண உருவங்களும் வைக்கப்பட்டன. பிறகு சைவவைணவ குடைவரைக்கோயில்கள் தோன்றின. அவைகளில் சிவலிங்கமும் சிவ மூர்த்தங்களும் உருவாக்கப்பட்டன. வைணவ மூர்த்திகளும் செதுக்கப்பட்டன. பள்ளி கொண்ட மூர்த்தி கருவறையிலும் வராகநரசிங்கமூர்த்திகள் பக்கச் சுவர்களிலும் செதுக்கப்பட்டன. இவைகள் பல்லவர் கால சிற்பவேலைகள். பல்லவர் காலத்துப் பின்பகுதியில் கட்டுக்கோயில்கள் தொடங்கின. அவைகள் 8, 9, நூற்றாண்டில் என்க. அவைகளில் சில குடைவரைக் கோயில்கள் சைவ சமயாசாரியர்கள், ஆழ்வார்கள் தோன்றின காலத்து முந்தியே இருந்தன. சிலவற்றை அன்னார் பாடியிருக்கிறார்கள். சிலவற்றிற்குப் பாடல் இல்லை.

வீடுகளாகவும் வில்லை வீடுகளாகவும் இருந்தன. 6, 7 நூற்றாண்டில் தான் அந்த நிலையங்கள் உறுதியான கட்டடங்களாக மாறத் தொடங்கின. தீயினாலும், நீராலும், காற்றாலும் அழிக்க முடியாத மண்டபங்கள் உண்டாக்கி அவைகளைச் சமய நிலையங்கள் ஆக்க வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் உதித்தது. இவ்வெண்ணம் அக்காலத்துச் சமய அறிஞர்கள் எல்லாரிடத்திலும் உண்டாயிற்று. சிறப்பாக நடு இந்தியா, தென் இந்தியா இவைகளில் தோன்றிற்று. நடு இந்தியாவிலும், எல்லோரா, அஜந்தா குன்றுகளிலும் ஒரிசாவில் (உத்சலம்) கண்டகிர், உதயகிரிகளிலும் மேல் இந்தியாவில் பாதாமி, கன்னேரிப்பாறைகளிலும், தென்னாட்டில் மாமல்லை முதலிய பல குன்றுகளிலும் கோயில்கள் குடையப்பட்டன.

நடு இந்தியாவில் யாதவமன்னர்களும், மேல் இந்தியாவில் சாளுக்கியர்களும், தென்னாட்டில் பல்லவமன்னர்களும் இக்கற்குகைளைத் தோண்டி வழிபடு கோயில்கள் ஆக்கினார்கள். எல்லோரா, அஜந்தாக் குகைகளில் புத்த, சைன இந்து சமயங்கள் தோன்றின. ஒரிசாவில் சமண விக்கிரகங்கள் தோன்றின. பாதாமியில் புத்தசைன சைவ, வைணவக் கோயில்கள் உண்டாயின. தென்னாட்டில் சில குகைகள் சைனர்களாலும் சில இந்துக்களாலும் உண்டாயின. அனேகமாக இந்தக்குடைவரைக் கோயில்கள் எல்லாம் ஒரே காலத்தில் ஏற்பட்டன. 6, 7 ஆம் நூற்றாண்டிலேயே இவைகள் தோன்றின. இந்தப்பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் தொடர்பு ஏற்பட்டிருந்தது. சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்கும் அக்காலத்தில் அடிக்கடி சண்டை ஏற்பட்டது. பல்லவர் பாதாமியின் மீது படையெடுத்து அந்நகரைத் துகள் ஆக்கிய செய்தியைச் சிறுத் தொண்ட நாயனார் சரிதம் கூறுகிறது. அவர் பல்லவர் தளபதி. நரசிம்ம பல்லவனின் படைத்தலைவராக இருந்தவர். ஆகவே சமயத் தொடர்பும் சிற்பத்தொடர்பும் ஏற்பட்டிருத்தல் இயல்பே. பாதாமிக் குகை மண்டபங்களும் பல்லவர் குடைவரை மண்டபங்களும் ஒரே மாதிரி இருந்ததைக் காணலாம்.

இனி தென்னாட்டிலும் குடைவரைக் கோயில்களுக்குச் சமணக் குரவர்களின் உதவி இருந்திருக்க வேண்டும். ஆதி காலத்தில் சமணக்குரவர்கள் தமிழ்நாடெங்கும் குன்றுகளில் தவம் செய்து வந்தார்கள் என்று முன்னே கூறப்பட்டது. அவர்கள் தங்கள் சமயநிலையங்களை உறுதிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டார்கள். அதற்கு அனுகூலமாக நாட்டு அரசர்களும் சமணர்கள் ஆனார்கள். 7 ஆம் நூற்றாண்டில் பல்லவ மகேந்திரனும் பாண்டிய கூன்பாண்டியனும் சமணர்கள் ஆனார்கள். அப்போது குடைவரைக் கோயில்கள் பல வெட்டப்பட்டன. சிற்றன்ன வாசலில் சமணக் கோயிலும் மதுரையைச் சுற்றியுள்ள எட்டுமலைக் கோயில்களும் பல வெட்டப்பட்டன. சிற்றன்ன வாசலில் சமண குடைவரைக் கோயில்களும் அப்போது அமைக்கப்பட்டன. பின்னர் மகேந்திரனும் கூன்பாண்டியனும் சைவர்கள் ஆன போது குடைவரைக் கோயில்கள் சைவ வைணவக் கோயில்கள் ஆயின. புதுக்கோட்டைச் சீமை குடைவரைகள் இந்த மாறுதலை தெளிவாகக் காட்டும். சிற்றன்ன வாசல் சமணமாக இருக்க திருக்கோகரணம் சைவமாக இருக்க திரு மெய்யம் சைவமும் வைணவமும் கூடஇருக்கக் காணலாம். கோகரணத்தில் ஒரு சமணச் சிலையும் கல்வெட்டும் இருக்கிறது. இந்தக் கலப்புச் சமய நிலை வரலாற்றில் ஒரு வியக்கத்தக்க நிலையைக் காட்டுகிறது. ஒரே அரசன் முதலில் சமணனாயிருந்து பிறகு சைவனான செய்தி பெரிய புராணத்தில் மட்டுமின்றித் திருச்சி குடைக்கோயில் கல்வெட்டும் நன்கு கூறுகின்றது.

இதுவரை கூறப்பட்டவகையில் குடைவரைச் சமணக்கோயில்கள் முதலில் தொடங்கின. அவற்றில் சமண உருவங்களும் வைக்கப்பட்டன. பிறகு சைவவைணவ குடைவரைக்கோயில்கள் தோன்றின. அவைகளில் சிவலிங்கமும் சிவ மூர்த்தங்களும் உருவாக்கப்பட்டன. வைணவ மூர்த்திகளும் செதுக்கப்பட்டன. பள்ளி கொண்ட மூர்த்தி கருவறையிலும் வராகநரசிங்கமூர்த்திகள் பக்கச் சுவர்களிலும் செதுக்கப்பட்டன. இவைகள் பல்லவர் கால சிற்பவேலைகள். பல்லவர் காலத்துப் பின்பகுதியில் கட்டுக்கோயில்கள் தொடங்கின. அவைகள் 8, 9, நூற்றாண்டில் என்க. அவைகளில் சில குடைவரைக் கோயில்கள் சைவ சமயாசாரியர்கள், ஆழ்வார்கள் தோன்றின காலத்து முந்தியே இருந்தன. சிலவற்றை அன்னார் பாடியிருக்கிறார்கள். சிலவற்றிற்குப் பாடல் இல்லை.

சேக்கிழார்

சேக்கிழார் சுவாமிகள் சைவப் பெரியார்களின் சரித்திரங்கள் மறைவுபடாமல் உலகத்தோர் பொருட்டாகச் சேமித்து வைத்தருளிய பெருமான் ஆவர். ஏனைய புலவர் மக்களைப் போல் அல்லாது உண்மைச் சரித்திர பாகங்களையும் அவ்வக் காலத்தில் நடந்த நடவடிக்கைகளையும் சேர்த்துத் திரட்டி இனியநடையில் அச்சரித்திரங்களை அருளியிருக்கின்றார். அதற்கு அநுகூலமாக அவருக்கு அவருடைய அமைச்சுத் தொழிலும் தேர்ந்த கல்வியும் திரண்ட அனுபவ ஞானமும் இருந்தன. அன்னார் சரிதத்தை அவருக்குப் பின் 200 ஆண்டுகளில் அவதரித்த உமாபதி சிவாச்சாரியார் அருளிய சேக்கிழார்புராணத்தினால் அறியலாம். மேலும் அவரியற்றிய பெரியபுராணத்தின்கண்ணேயும் பல உட்சான்றுகள் உள. சேக்கிழார் பிள்ளைத்தமிழில் அவரது பெருமையும் சமீப காலத்தில் வெளியான சேக்கிழார் சரிதம் (சுப்பிரமணிய பிள்ளை) சைவசிகாமணிகள் இருவர் (சோமசுந்தர தேசிகர்) என்ற நூல்களில் ஆராய்ச்சி உரைகளும் காணலாம்.

தொண்டை நாட்டிலே குன்றத்தூரில் வேளாளர் மரபிலே சேக்கிழார் குடியிலே அவர் அவதரித்தார். **அருண் மொழித்தேவர்** என்ற பிள்ளைத் திருநாமம் அவர்க்கு இட்டார்கள். அவரது இளவல் பாலறாவாயர் என்பார். அக்காலத்திலும் அரசர்கள், பெரியார்கள், கடவுளர்கள் ஆகிய இவர்கள் பெயர்களை மக்களுக்கு இடுவது வழக்கம். அருண்மொழி என்பது அக்காலத்துச் சோழ மன்னர்கள் தங்கள் பட்டப் பெயர்களாக வைத்துக்கொள்வது. பாலறாவாயர் என்பது திருஞானசம்பந்தப் பெருமானது திருநாமம். சேக்கிழார் குடியிலே நமது பெரியார் சிறந்து விளங்கி அக்குடிக்கே பெரும் புகழ் கொடுத்த வரானதினால் அவரைச் சிறப்பாகச் சேக்கிழார் நாயனார் என்றே உலகத்தார் வழங்கி வந்தார்கள்.

சுவாமிகள் இளவயதிலேயே கல்வியில் சிறந்து அறிவில் முதிர்ந்தவராக விளங்கியிருந்தார். அதனைக் கண்ட அக்காலத்து மன்னர் அநபாயச் சோழர் அவரை அழைத்துத் தம் அமைச்சராக வைத்துக் கொண்டார். அவரது மேம்பாட்டைக் கண்டு வியந்து அவருக்கு உத்தம சோழ பல்லவராயர் என்ற பட்டமும் தந்தார். இக்காலத்து மன்னரைப் போன்றே அக்காலத்துச் சோழரும் பெருமக்களுக்குப் பட்டங்கள் வழங்குவதுண்டு என்பதைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

சுவாமிகள் அமைச்சுத் தொழிலில் அமர்ந்திருந்தும் சைவ சமயத்தில் ஈடுபட்டவர் ஆதலால் சோழ நாட்டுத் திருநாகேசுவரரிடம் அன்புமிகுத்திருந்த காரணத்தைக் கொண்டு தம் ஊரிலும் அவர் ஒரு நாகேசர் ஆலயத்தை எழுப்புவித்து மடவிளாகம் ஒன்று கட்டி அதற்குத் திருநாகேசுவரம் என்று பெயரிட்டு வழங்கி வந்தனர்.

அமைச்சுத் தொழிலில் அமர்ந்திருக்கையில் ஒருநாள் அரசர் தம் நண்பர்களோடு சிற்றின்பமும் ஜைன உபதேசமும் நிறைந்துள்ள சீவக சிந்தாமணி என்ற நூலை வியந்துபாராட்டிக் கொண்டிருக்கையில் மிகவும் துயர்மெய்தி அரசரை விளித்துச் "சைவத்தில் பிற்பலன் கிடைக்கக்கூடிய பல சரிதங்கள் இருக்க இப்பொய்ந்நூலைக்கேட்டு மகிழ்வது நன்றன்று, கரும்பிருக்க இரும்பு கடித்தலும், விளக்கிருக்க மின்மினித் தீக் காய்தலும் போலாகும் அச் செயல்" என்றார். அரசன், "அவ்வித சரிதங்கள் உண்டோ?" என, நம்பியாண்டார்நம்பிகள் அருளின திருவந்தாதியில் கண்ட சரிதங்களை எடுத்து உரைத்தார். அவைகளைக் கேட்டு மகிழ்ந்து அச்சரிதங்களை அமைத்துக் காவியமாக ஒரு நூல் இயற்றும்படி வேண்ட, சுவாமிகள் தில்லையில் சென்று, ஈசன் அருள் காட்ட, அதனைப் பெற்று ஓர் ஆண்டளவில் திருத்தொண்டர் புராணத்தை இயற்றி அருளினார்.

புராணம் எழுதுவதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அரசர் உடனே தில்லைக்குத் தம் பரிசனங்களுடன் சென்று சுவாமிகளிடம் புராணத்தை ஓதும்படி வேண்டினார். அப்படியே சேக்கிழாரும் ஆயிரக்கால் மண்டபத்தில் அரசர் முதலானோர் இருந்து கேட்க ஓர் ஆண்டு அளவில் தம் புராணத்தை விரித்துரைத்தனர். பின்னர், புராணத்தைச் சேக்கிழாருடன் யானையின் மீதேற்றி ஊர்வலம்

செய்வித்து யாவரையும் மகிழ்வித்தனர். புராணமும் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது. பின்னர் அருண்மொழித்தேவர் அமைச்சுத் தொழிலைத் துறந்து சிவசிந்தனையிலேயே வீற்றிருந்து பின் சிவபதம் அடைந்தனர். அரசர் அவர் தம்பி பாலறாவாயரை அமைச்சராகக் கொண்டு அவருக்குத் தொண்டைமான் என்ற பட்டம் அளித்து ஆண்டு வந்தனர்.

ஏனைய சைவப் பெரியோர்களைப் போன்றே சேக்கிழார் காலத்தைப் பற்றியும் பலவித அபிப்பிராயங்கள் புலவரிடை உண்டு. ஒருவர் இராசேந்திரச் சோழன் (1013 - 1045) காலம் என்றும், ஒருவர் குலோத்துங்கன் I (1073 - 1118) காலம் என்றும், ஒருவர் குலோத்துங்கன் II (1123 - 1146) காலம் என்றும் கூறுவர். சேக்கிழாரும் தாம் எழுதிய சரித்திரங்களில் பல சரித்திரப் பகுதிகளைக் குறித்தனரேயன்றித் தம்மைப் பற்றியும் தாம் இருந்த காலத்தைப் பற்றியும் ஐயம்தீரக் குறிப்புகள் எழுதி வைக்கவில்லை. அரசர்களின் பெயர்களைக் குறிக்கும் போதும் அநபாயன் போன்ற பட்டப் பெயர்களைக் குறித்துள்ளாரே ஒழியச் சிறப்புப் பெயர்களைக் குறிக்கவில்லை. அக்காலத்தைய பிறநாட்டு அரசர்களின் பெயர்களையும் அவர் குறிக்கவில்லை. இதனாலே கால நிர்ணயத்திற்கு முட்டுப்பாடு நேர்ந்திருக்கிறது.

சேக்கிழார் அவதரித்த காலத்தில் சோழர் ஆதிக்கம் உன்னத நிலையில் இருந்தது. சைவ சமயமும் நிலைநின்று பெருகியது. 7, 8, 9 நூற்றாண்டுகளில் சமயாசாரியர்கள் நால்வரும், கண்டராதித்தர் கருவூர்த் தேவர் நம்பியாண்டார் முதலான சைவப் பெரியார்களும் தழைத்து ஓங்கிச் சைவத்தை நிலைநிறுத்தினார்கள். சோழ மன்னர்களும் அவர்களின் உபதேசங்களுக்கு ஆட்பட்டு ஆலய மெழுப்பியும் திருப்பதிகங்கள் ஓதுதற்கு ஏற்பாடுகள் செய்தும் சைவத்தைப் பெருக்கி வந்தார்கள். அதனைச் சார்ந்தாற் போல வைணவமும் மரத்வமும் இத்தென் நாட்டில் வளர ஆரம்பித்தன.

சைவ சமயாசாரியர்கள் சைவத்தை நிலையூன்றினதற்கு முன்பு 500 ஆண்டுகளாகச் சமணமே இந்நாட்டில் பிரதிபலித்திருந்தது. அம்மதம் வடக்கே இருந்து வந்தது. அதனாசிரியர்கள் கலைகளில் வல்லவர்கள். தாங்கள் செல்லும் நாடுகளிலெல்லாம் அவ்வம்மொழிகளைக் கற்று அவைகளில் தங்கள் கொள்கைகளை நிலைநிறுத்திச் சிறந்த நூல்களையும் வெளியிட்டனர். தெலுங்கு நாட்டில் 10-ஆம் நூற்றாண்டிற்கு முந்தி ஜைனப் புலவர்களே முற்பட்டிருந்தார்கள். இராசேந்திரச் சோழன் (1030) அதைப்பிடித்துச் சைவத்தைக் கொண்டு சேர்த்தபோது அங்கிருந்த ஜைனர் கன்னட நாட்டிற் புகுந்தனர். கன்னட நாட்டில் அதன் பிறகு 100 ஆண்டுகள் வரை அவர்களே சிறந்து விளங்கி வந்தனர். சமணராக இருந்த ஓய்சள அரசர்கள் வைணவத்திற்கும் சைவத்திற்கும் திரும்பவே அங்கேயும் அம்மதம் நிலைகுலைந்தது. நம் தமிழ் நாட்டிலோ அப்பராலும் சம்பந்தராலும் சமணம் சீர்குலைந்ததை அவ்வாசாரியர்கள் சரிதத்தில் காட்டியிருக்கின்றோம். ஆனால் அரசியலில் சமண சம்பந்தம் குறைந்துபோயும், தமிழர்களுடைய சமரச பாவனையினால் சைன மதம் முழுதும் குன்றாமல் புலவர் மாட்டு நிலைத்து வந்தது. ஏனெனில் 8, 9, 10 நூற்றாண்டுகளிங் கூட ஜைனப் பெரு நூல்களான கொங்கு வேண் மாக்கதை, சூளாமணி, நீலகேசி, யசோதர காவியம், சிந்தாமணி முதலிய காவியங்களும், அறநெறிச் சாரம் முதலான நீதி நூல்களும் இயற்றப் பெற்றன. மேலும் 10, 11, 12, நூற்றாண்டுகளில் வீரசோழியம், நேமி நாதம், வச்சணந்தி மாலை, யாப்பருங்கலக் காரிகை, திவாகரம், பிங்கலந்தை முதலான இலக்கணங்களும், அடியார்க்குநல்லார் முதலியோர் அருளிய உரைகளும் உண்டாயின. இதன் பின்னரும் நன்னூல், நம்பி அகப்பொருள், சூடாமணி நிகண்டு முதலியவை ஏற்பட்டதும் அறிவோம். ஆகவே, சமண மேம்பாடு கலைகளிடம் நீங்காது தழைத்திருந்தது நோக்கத் தக்கது. அதற்குக் காரணம் அவற்றில் கண்ட அரும் பொருள்களேயாகும்.

நிற்க, நாம் முன் கூறியது போலச் சிந்தாமணி என்ற நூலைச் சோழர் சைவராயிருந்தும் கலாவினோதத்திற்காக மகிழ்ந்து கொண்டிருந்த காலத்தில்தான் சேக்கிழார் அதன் காரணத்தை அறிந்து அக்காரணமாகச் சைவத்தில் காவியமில்லாக் குறையைப் பெரியபுராணம் இயற்றி நீக்கினார். அக்குறை நீங்கினவுடன் அரசர்களும் சைன நூல்களை ஓதுதலை விடுத்துச் சைவநூல் பாராயணம் செய்தலையும் அதனைக் கேட்டலையும் வைத்துக்கொண்டனர். பெரியபுராண ஆசிரியரான சேக்கிழாரே புராணபடனஞ் செய்ய, அநபாயச் சோழர் கேட்டதை அவரது புராணத்தால் உமாபதி சிவாச்சாரியார் சொல்ல அறிகின்றோம். மேலும் கி.பி. 1181-ஆம் ஆண்டில் திருவொற்றியூர் படம்பக்கநாதரது ஆலயத்து மண்டபத்தில் பங்குனி உத்திரத் திருவிழாவில் சுந்தரமூர்த்தி சுவாமிகளான ஆளுடைய நம்பிகள் புராணத்தை வாசிக்க, அதனை அப்போதைய அரசனான இராசாதிராச தேவ (II) சோழனும், சதுரானை பண்டிதனும் வாகீசர பண்டிதனும், கோயில் நாயகனும், ஸ்ரீகாரியஸ்தனும் மற்றும் பலரும் வீற்றிருந்து புராண படனத்தைக் கேட்டதாகத் திருவொற்றியூர் ஆதிபுரீசர் ஆலயத்துச் சாசனம் கூறுகிறது. (செவ். 965) இச்சாசனத்தில் கண்ட புராணம் சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணமாகவே இருக்கும். ஏனெனில் திருத்தொண்டர் புராணத்தின் அமைப்பை உற்று நோக்கின் சுந்தரர் சரிதமே முக்கிய பாகமாகக் கொண்டு ஏனைய அடியார்களின் சரிதங்கள் அதினின்றும் பிரியும் கிளைகளாக வைத்துச் சேக்கிழார் எழுதியிருப்பதை அறியலாகும். அந்தக் காரணத்தைக் கொண்டே நாம் அச்சாசனமும் ஆளுடைய நம்பி புராணம் என்று கூறுகிறதாகக் கொள்ளல் வேண்டும். ஆகவே அரசியல் வர்க்கத்திலும் அதிகார வர்க்கத்திலும் சைவ சமயம் ஊன்றிவிட ஆரம்பித்தது என்றும் அதற்கு ஊன்றுகோலாக உதவியவர் சேக்கிழார் என்றும் சொல்லலாம்.

தென்னாட்டில் இவ்விதமாய்க் காலப்போக்கு இருந்த காலத்தில் அவதரித்த சேக்கிழார்சுவாமிகளைப்பற்றிக் கல்வெட்டுக்களில் என்ன காண்கிறோம் என்பதை இனி எடுத்து எழுதுவோம்.

வழங்கிவந்த பெயர்கள்

i. குடிப்பெயர்

சேக்கிழார் என்னும் பதம் வேளாளர் மரபில் ஒரு குடிக்குப் பெயராக இருந்தது. இன்னமும் அந்நாட்டில் ஒரு குடிப்பெயராக இருந்து வருகின்றது. இதைப்போலவே கூடல் கிழான், புரிசைகிழான், வெண்குளப்பாக்கிழான்;[1] குளத்துழான்[2] முதலிய குடிகளும் இருந்தனர். சங்கத்தார் காலத்திலும் கிழார் என்ற பதம் வழக்கத்தில் இருந்தது. கிள்ளிமங்கலம் கிழார், கோளியூர் கிழார், நல்லாவூர் கிழார், நொச்சி நியமங் கிழார், பெருங்குன்றூர் கிழார், பொதும்பில் கிழார், மருதங் கிழார், மாங்குடி கிழார் முதலிய சங்கப் புலவர்களின் பெயர்களில் இப்பதத்தைக் காண்க. இனிக் கல்வெட்டுக்களில் வருவனவற்றைக் குறிப்போம்.

1. **சேக்கிழான்** குட்டேரன் - நந்திவனம் (செங். 82) கனேசர் ஆலயத்து ஒரு கல்லில் கண்ட சாசனம். இதில் சேக்கிழான் குட்டேரன் என்பவன் ஒரு நந்தாதீபம் தானம் செய்தது கண்டிருக்கிறது. இப்பெயர் ஒரு குடிப்பெயர் ஆகும்.

2. **சேக்கிழான்** அம்மையப்பன் பராந்தக தேவன் என்ற கரிகாலசோழ பல்லவராயன் - திருக்கடவூர் (தஞ்சை 650) அமிர்தகடேசர் ஆலயத்து முதல் பிரகாரத்துத் தென் சுவர்ச் சாசனம் - குலோத்துங்கச்சோழன் 4-ஆம் ஆண்டு. இதில் குலோத்துங்கச் சோழவளநாடு என்ற புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் அம்மையப்பன் பராந்தக தேவன் என்ற கரிகால்சோழ பல்லவராயன் என்பான் பூதானம் செய்ததைக் கூறுகிறது. இதில் சேக்கிழார் குடியைக் காண்கிறோம். இதில் காணும் பெயரும் அருண்மொழித் தேவருடையதாக இருக்கலாம் என்றும் சாசன ஆராய்ச்சிக்காரர்கள் ஊகிக்கின்றனர். சேக்கிழார் சுவாமிகளுக்கு உத்தம சோழ பல்லவர் என்ற பட்டம் உண்டு. இதில் கண்டவருக்கும் பராந்தக கரிகாலசோழ பல்லவராயர் என்ற பட்டம் உண்டு. ஆகையால்

---

1. குன்றத்தூர் வெண்குளப்பாக்கிழான்அரையன் தில்லைநாயகரான நந்தி அன்பன் "என்று சிதம்பர சாசனம் கூறும்"
2. காரிகைக்குளத்தூர் குளத்துழான் சிற்றம்பலமுடையான் "என்று பல்லவராயன் பேட்டை சாசனம் கூறும்."

இவரே பெரியபுராண ஆசிரியராக இருக்கக்கூடும் அல்லது அவ்வமிசத்தில் வேறொருவர் அமைச்சுத்தொழிலும் பட்டமும் தரித்தவராக இருத்தல் வேண்டும்.

3. **சேக்கிழார்** பாலறாவாயன் களப்பாளராயர் - கோட்டூர் (தஞ்சை 482) கொழுந்தீசர் ஆலயம் கர்ப்பக்கிரகத்துத் தென் அஸ்திவாரத்தில் கல்வெட்டு, குலோத்துங்கன் III - 2-ஆம் ஆண்டு. குலோத்துங்கச் சோழவளநாட்டுக் **குன்றத்தூர்** நாட்டு குன்றத்தூர்ச் சேக்கிழான் பாலறாவாயன் களப்பாளராயர் ஒரு தீபம் வைப்பதற்காகப் பணம் தானம் செய்தது. இச்சாசனத்தினால் சேக்கிழார் குடி இருந்ததெனவும் அதில் பாலறாவாயர் களப்பாளராயர் என்பவர் இருந்தனரெனவும் தெரிகிறது. இவரே சேக்கிழார் சுவாமிகள் தம்பி என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பேரும் ஊரும் ஒன்றாக அமைந்திருக்கிறது. காலமும் சமீபத்தில்தான் இருக்கிறது. ஏனெனில் குலோத்துங்கன் II (1123 - 1146) காலத்தில் பெரிய புராணத்தார் இருந்திருந்தால் அவர் தம்பி குலோத்துங்கன் III (1178 - 1216) காலத்தில் இருந்திருக்கலாம் அல்லவா?

4. **புரவுவரித் திணைக்களம் சேக்கிழார்** - முதற்குலோத்துங்கன் காலத்தில் இப்பெயர் கொண்டார் ஒருவர் இருந்தார். இப்பெயரில் வரும் புரவுவரித் திணைக்களம் என்னும் பதத்தொடர் திருவொற்றியூர் (செங். 1011) கோயில் சாசனத்தில் அரசியல் வரி வாங்கும் அதிகாரியின் பெயரில் பிரயோகிக்கப் பெற்றிருக்கிறது. இஃது இராஜாதிராஜ தேவன் - I காலத்தது.

5. **சேக்கிழான்** செட்டி சங்கன் அனுராதபுரம் - இலங்கைத்தீவு - (607/1912 B). ஒரு கல்லில் தமிழில் உள்ளது. சிரிசங்க போதிமாராயன் 5-ஆம் ஆண்டு. இதில் சேக்கிழான் செட்டி சங்கன் என்பவன் குமாரகணத்துப் பேரூர் வாசிகள் வட்டிக்காக 30 ஈழக்காசுகள் பெற்று நொந்தாவிளக்கு திருவமுது இவைகளுக்காகக் கொடுத்தது கண்டிருக்கிறது. (S.I.I. No. 1403 Vol. 11.)

6. **சேக்கிழான்** - சென்னை - 608/2 அதே இடத்தில் அதே அரசன் 7-ஆம் ஆண்டில் சேக்கிழான் சென்னை என்பான் தானம் செய்தது.

இவ்விரண்டு கல்வெட்டுகளிலிருந்தும் சேக்கிழான் என்ற குடிப்பெயர் சிங்களம் அதாவது ஈழநாட்டிலும் வழங்கி வந்தது எனத் தெரிகிறது. இச் சிரிசங்கபோதி என்ற அங்கபோதி III என்ற அரசன் மகாவம்சத்தின்படி கி. பி. 624-இல் பட்டத்திற்கு வந்தவன் (1913E. P. 103) இதனால் சேக்கிழார் என்ற பெயர் எத்துணைப் பழம்பெயர் என்று அறிகிறோம்.

மேற்காட்டிய மேற்கோள்களிலிருந்து சேக்கிழார்குடி தமிழ்நாட்டில் வெகு புராதன காலத்திலிருந்து இருந்து வருகின்ற தென்றும், அக்குடிமக்கள் தொண்டைநாடு மாத்திரமேயன்றிச் சோழநாடு ஈழநாடு முதலிய நாடுகளிலும் வாழ்ந்து வந்தனர் என்றும், அவர்களில் அமைச்சுத் தொழில் பூண்டவர்கள் பலர் இருந்தனர் என்றும், சைவத்தில் சிறந்திருந்து ஆலயங்களுக்குத் தானங்கள் பல செய்து விளங்கினர் என்றும் அறிகிறோம்.

ii சுவாமிகளின் இயற்பெயர் :-

பெற்றோர்கள் சுவாமிகளுக்கு அருண்மொழித் தேவர் என்ற பெயர் சூட்டினார்கள் என்று அவர் புராணத்தினால் தெரிகிறது. இப்பெயர் அருண்மொழி என்பது அக்காலத்து மன்னர் வைத்துக்கொண்ட பெயர் என்று கல்வெட்டுகளால் தெரிகிறது. அதனைக் கொண்டு பெருங்குடி மக்களும் தங்கள் பிள்ளைகளுக்குப் பெயரிட்டார்கள். அரசர்கள் தாங்கள் ஆண்ட நாட்டிற்கும், ஊர்களுக்கும், அக்கிரகாரங்களுக்கும், தாம் பிரதிஷ்டித்த விக்கிரகங்களுக்கும் பெயரிட்டனர் என்றும் அடியிற் குறித்த கல்வெட்டுகளால் தெரியவரும். தாங்கள் கொடுத்த பட்டத்திலும் இப்பெயர் புகுத்தியிருப்பதாகவும் தெரிகிறது.

முதலில் இப்பெயர் வைத்துக் கொண்ட மன்னன் இராஜராஜன் I என்ற பிரக்யாதி பெற்ற சோழ மன்னன். இதனைத் திருமலைச் சாசனம் ஒன்றில் "அலைபுரியும் புனற் பொன்னியாளுடைய சோழன் **அருண்மொழிக்கு** யாண்டிருபத் தொன்றாவது என்றும்" S.I.I. Vol. I. P. 95 என்றதில் காண்கிறோம். இனி "அருண்மொழி" அல்லது "அருமொழி" என வரும் பெயர்களைக் குறிப்போம்.

1. மனிதர் பெயர்கள்

1. அருமொழி - செங். 1055 S.I.I. II.P.259 ஆண்களும் பெண்களும் இப்பெயர் வைப்பது.
2. அருமொழி பிரமராயன் - தஞ்சை - 819. இது ஒரு பட்டம்.
3. அருமொழி பல்லவரையன் - இது ஒரு பட்டம். S.I.I. II. P. 495.
4. அருமொழித் தேவர் - தஞ்சை - 1237. S.I.I. II. P. 260, 437, இது இராஜராஜன் I. பெயர்.
5. அருமொழிதேவ மிலாடுடையார் - தென். ஆ.-718.
6. அருமொழி நிர்த்தப் பேரரசன் - S.I.I. II. P. 297.
7. அருமொழி நங்கை-வட ஆ-49, தஞ்சை - 1358, திருச்சி - 886. இது வீரராஜேந்திரன் I. பட்டமகிஷியின் பெயர்.

அலைபுரியும் புனற்பொன்னி ஆளுடைய சோழன்
அருமொழிக்கு யாண்டு இருபத் தொன்றாவ தென்றுங்
கலைபுரியு மதிநிபுணன் வெண்கிழான் கணிச் செக்
கரமரு பொக்குரியன்றன் நாமத்தால் வாம
நிலைபுரியும் நிற்றகுங் கலிஞ்சிட்டு நிமிர் வைய்கை மலைக்கு
நீடூழி இருமருங்கும் நெல்விளையக் கண்டோன்
குலைபுரியும் படைஅரைசர் கொண்டாடும் பாதன்
குணவீர மாமுனிவன் குளிர் வைய்கைக் கோவே.

S.I.I. II. P. 95

ii ஈசுவரன் பெயர்கள்

1. அருமொழி தேவ ஈசுவரர். தஞ்சை - 148. தென் ஆ - 54, 925. புதுக் - 397.

iii ஊர்பெயர்கள்

1. அருமொழி தேவ சதுர்வேதி மங்கலம் - கோ. 120.
2. அருமொழி தேவ நல்லூர் - செங். III
3. அருமொழி தேவபுரம் வட ஆ. -389. புதுக் - 298 - 9.
4. அருமொழி தேவ தெரிந்த திருப்பரிகளத்தார் வேளம் - இது தஞ்சையில் ஒரு பாகம், S.I.I. II. P. 437.

iv நாடு

1. அருமொழி தேவ வளநாடு. செங் - 1025. தஞ்சை - 148, 493 721. திருச்சி - 703.

v அளவை

1. அருமொழி தேவ மரக்கால். செங் - 972.

இப்பெயர்களினால் அரசன் பெயரை எதுகாறும் மக்கள் பாராட்டி வந்தனர் எனத் தெரியும். நமது சுவாமிகளும் இராஜராஜன் I காலத்திற்குப் பிந்தியவர் எனவும் தெரியவரும்.

18

கல்லும் கதை சொல்லும்

மனிதன் பேசுவான். நினைப்பான், கதை கட்டுவான், அதனைப் பிறர்க்குச் சொல்லுவான். விலங்குகளும் பறவைகளும் பேசா. ஆனால் கத்தும்; அதன்மூலம் கருத்தை வெளிப்படுத்தும்; நினைவு குறைவு எனினும் இன்பதுன்பங்களை ஒலிகளால் தெரியப்படுத்தும்; செயல்களால் காட்டும்; மற்ற சிற்றுயிர்களும் அப்படியே. ஆனால் கற்களோ உயிர்அற்றவை. அவைகள் பேசுமோ என்று கேட்கலாம். கதையும் சொல்லுமோ என்றும் வினவலாம். உயிர் இல்லாததால் சுயமாக அறிவுஇல்லை. ஆனால் கிளிப்பிள்ளை போலச் சொல்லிக் கொடுத்தவைகளைச் சொல்லும். அதற்கு யார் சொல்லிக் கொடுத்தார்கள் என்று கேட்டால் மனிதன் தான் அதற்கு ஆசிரியனாக இருந்து சொல்லிக் கொடுக்கிறான். நாகரிக மனிதனே அன்றி அநாகரிக மனிதனும் அக்கல்லுக்கு ஆசிரியனாக அமைந்திருக்கிறான். இது வியப்பே அன்றோ?

ஆப்பிரிக்காக் கண்டத்தில் இருளடர்ந்த வனாந்திரத்தில் ஒரு பெரிய பாறையில் குதிரை, பாம்பு, மனிதன் இவைகளைப் போன்ற உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கும். சிறு குழந்தை கரும்பலகையில் எழுதினாற்போல அவைகள் தோன்றும். அவ்வுருவங்கள் பண்டைக் காலத்து மனிதனுடைய ஆற்றலைத் தெரிவிக்கின்றன. ஒரு சிங்கத்தை ஒரு மனிதன் ஈட்டியால் குத்துவது போல் வரையப்பட்டிருக்கும். இது பண்டைய மனிதன் வேட்டை ஆடுதலைக் கூறும் கதை. மற்றும் ஒரு மரநிழலில் ஒரு கோர உருவம் செதுக்கப்பட்ட கல் நிற்கும். அதன் மேல் சில மலர்மாலைகள் போடப்பட்டிருக்கும்; கையில் வாள் பிடித்திருக்கும். இக்கல் அதனை இயற்றிய மக்களின் தெய்வக் கொள்கைகளை வெளிப்படுத்துகிறது.

இனி மனிதன் ஆசிரியனாய் இருந்து கற்பித்ததற்கு மாறாக இயற்கையே ஆசிரியனாக இருந்து கற்பித்து அது கொண்டு பாடம் சொல்லும் பெரும்பாறைக் கற்களும் உண்டு. பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த பெரிய விலங்குகள் இயற்கை விபத்தால் பாறைகளில் மடிய, அப்பாறைகளில் அவ்வுருவங்கள் பொருந்திவிடும் வகையில் அவைகள் கல்லில் எழுதின வடிவங்கள் போலாகிவிடும். அவைகளை இப்போது தோண்டிப் பார்க்க அவைகளின் பண்டை வடிவம் நன்கு புலப்படும். இந்த நாளில் உயிருடன் இல்லாத பல விலங்குகள் பண்டைக் காலத்தில் இருந்தன என்று அவ்வடிவங்கள் காட்டும். அவைகளில் ஒன்று டினோசர் என்பது. அக்கல் உருவங்கள் பலபல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த உலக சரிதத்தை நமக்குக் கூறுகின்றன. இச்சரிதங்களை ஆராய்ச்சி செய்வதே ஒரு கலை என்று கூறவேண்டும்.

இனி நாகரிகம் அடைய அடைய, மனிதன் வடிவங்களைத் தீட்டித் தன் கருத்துக்களை வெளியிடுவதை மேன்மேலும் ஊக்கி எழுத்து வடிவங்களை உண்டு பண்ணினான். அந்த வகையில் எழுத்து தோன்றிற்று. சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுத்து தோன்றியது. அதனைக் கல்லிலும், காய்ந்த களிமண்ணிலும், சுட்ட களிமண்ணிலும் பொறித்து வைத்தான். மேல் ஆசியாவிலும், ஈஜிப்டு நாகரிகத்திலும் இவைகள் காணப்படுகின்றன. அவைகள் அக்காலத்திய மக்கள் வரலாறு, எண்ணப் போக்கு, சட்டதிட்டங்கள் இவைகளை நமக்குக் கூறுகின்றன. அக்கால மக்கள் எழுத்துக்களால் கல்லைப் பேச வைத்தது மட்டும் அன்றி அருமையான உருவங்களையும் செய்துவைத்து அவைகளைக் கொண்டு அக்காலத்து நடை, உடை, பாவனை இவைகளை நமக்கு தெரியப்படுத்துகிறார்கள். ஈஜிப்டு தேசத்தில் பண்டை அரசர்கள் எவ்வாறு இருந்தார்கள், அவர்கள் வரலாறுகள் என்ன என்று அக்கற்கள் கூறுகின்றன. பிறகு இக்கலை வெகு விரிவாக வளர்ச்சி அடைந்தது.

உலகத்தில் மற்ற நாடுகளைக் காட்டிலும் நமது பரதகண்டத்திலே கல்லைப் பேசச் செய்வதிலே அறிஞர்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்கள் ஆனார்கள். ஏடுகளிலும், கர்ண பரம்பரைப் பாடல்களிலும் தம் வரலாற்றைப் பதித்து வைப்பதைக் காட்டிலும் கல்லில் பதித்துவைத்து அதன் மூலம் பேசச் செய்தது மிகவும் சிறப்பான செய்தி ஆகும். ஏடுகளும், கர்ணபரம்பரைகளும் அடிக்கடி அழியக் கூடும், மாறக்கூடும். ஆனால் கல்லில் பதித்து வைத்தவை வெகு காலம் அழியா. உண்மையை உள்ளபடி எடுத்துச் சொல்லக் கூடியவை. இந்த முறையை பாரத நாட்டில், வட பகுதியைவிடத் தென்பகுதியாகிய தமிழ்நாடே சிறப்பாகக் கையாண்டு வந்திருக்கிறது. எழுத்துக்களும், உருவங்களும் தமிழ் நாட்டில் இருக்கும் அளவு வேறு எந்த நாட்டிலும் இல்லை என்று பெருமையாகக் கூறலாம்.

ஏட்டில் எழுத்து, நீரில் எழுத்துப் போல் அழியக் கூடியது. நெருப்பாலும் புழுவாலும் தின்னப்பட்டுப் போகும். ஆனால் கல்லில் எழுத்தோ கணக்கற்ற நூற்றாண்டுகள் அழியாது. அது வந்த வர்களிடம் எல்லாம் பேசிக் கொண்டும், அறிவுறுத்திக் கொண்டும் இருக்கும். ஆகவே "கல்லின் மேல் எழுத்து" என்ற கூற்று ஒரு பழமொழியும் ஆகிவிட்டது. அதை ஓர் ஒப்பற்ற உவமையாக ஔவையாரும் எடுத்து ஆண்டிருப்பாரானால் அதன் பழமையைக் கூறவும் வேண்டுமா? "நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம் கல் மேல் எழுத்துப் போல் காணுமே" என்று சொன்ன காலத்திலேயே கல்லின் மேல் எழுதுவது, ஓர் ஒப்பற்ற பழக்கமாக அந்நாளிலேயே இருந்தது என்பதில் ஐயமில்லை. அப்படிப்பட்டக் கல் எழுத்து ஓவியங்கள் இந்நாளிலும் வந்தவர்களிடம் எல்லாம் கதைகளைச் பேசிக் கொண்டிருக்கின்றன.

இக்கல் எழுத்துக்கள் நமக்கு எப்படிப்பட்ட கதைகளைச் சொல்லுகின்றன என்பதற்குச் சில உதாராணங்களைக் கூறுவோம்.

முதன் முதலில் அது எழுத்தினுடைய வரலாற்றைக் கூறுகிறது. எழுத்து எப்படித் தோன்றிற்று? அது வரவர எப்படி மாறுதல் அடைந்தது? பல நாட்டு எழுத்துக்களுக்கும் தமிழுக்கும் என்ன தொடர்பு? எழுத்தின் வடிவுக்கும், ஒலிக்கும் என்ன தொடர்பு? மொழி எப்படி தோன்றி வளர்ச்சி பெற்றது? மொழி மாறுதல் எப்படி ஏற்பட்டது? பல மொழிகளுக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது? வலப்புறம் இருந்து இடப்புறமும், இடப்புறத்திலிருந்து வலப் புறமும் எழுதும் எழுத்துக்களுக்குள் ஏதாவது தொடர்பு உண்டா? இறந்து போன எழுத்துக்கள் எவை? தமிழில் வட்டெழுத்து, கோலெழுத்து, தற்கால எழுத்து அவைகளின் குணங்கள் எவை? எண்களின் வடிவங்கள் எப்படி ஏற்பட்டன? இந்த பலவிதமான கேள்விகளுக்குமே கல்வெட்டுகள் உண்மையான விடைகள் அளிக்கின்றன.

கீழை நாட்டு மொழிகளிலே நூல்கள் பெரும்பாலும் செய்யுளாகவும், சிறுபான்மை உரைநடையாகவும் இருக்கின்றன. தமிழ்மொழி வரலாற்றிலும் அதுவே காண்கிறோம். இந்த இரு நடைகளும் எவ்வாறு வளர்ந்தன என்பதற்குத் தகுந்த சான்றுகள் இல்லை. ஆனால் கல்வெட்டுக்களிலோ செய்யுளைக் காட்டிலும் உரைநடைப் பகுதிகளே மிகுதி. ஆகவே உரைநடை எப்படி வளர்ந்தது என்பதற்குத் தெளிவான வரலாற்றை அது காட்டுகிறது. செய்யுளிலும் மாறுபாடு எப்படி ஏற்பட்டது என்று அது தோற்றுவிக்கிறது பல நூற்றாண்டுகளிலும் மொழி வடிவங்கள் எப்படி எப்படி இருந்தன மாறின என்று ஆதாரங்களுடன் அது கூறுகிறது. கீழை நாட்டு மொழிகளில் மொழி வரலாறு செவ்வையாக ஆராய்ச்சி செய்யப்பட வில்லை. நூல்களையும் எழுதி வைத்தார்இல்லை. இப்போது தான் கல்வெட்டுக்களின் ஆதாரங்களைக் கொண்டு அவ்வாராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

மேலும் புலவர் வரலாறுகளிலும் சரியான நூல்கள் இல்லை. ஏடுகளில் கூறப்படாத புலவர்கள் பலபேர் இருக்கின்றனர். அவர்களின் பெயர்களையும் பாடல்களையும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஏடுகளில் கண்ட நூல்களின் ஆசிரியர்களின் காலமும் தெரியவில்லை. அவைகளையும் கல்லெழுத்துக்கள் கூறுகின்றன. ஏடுகளில் காணப்படாமல் கல்வெட்டுக்களில் கிடைத்த புலவர் செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன. அவைகளைத் தற்காலத்தில் சில ஆசிரியர்கள்

குறித்திருக்கின்றனர். இதுவரை வெளிவராத கல்வெட்டுக்களைப் பதிப்பித்தால் இன்னமும் நூற்றுக் கணக்கான செய்திகளை அறியக்கூடும். கன்னட மொழிக் கல்வெட்டுச் செய்திகள் நாளது வரை பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் தமிழிலே அதுவரை கேட்டிராத செய்யுட்கள், பிரபந்த நூல்கள், புராணங்கள் முதலியவை கூறப்பட்டுள்ளன. திரிசிரபுரக் கலித்துறை, திருவிடைவாய்ப் பதிகம், வில்லையந்தாதி, பல அருமையான மெய்க்கீர்த்திகள் முதலியன, இந்த வகையில் கிடைத்திருக்கின்றன. இவைகளில் மிக அரியபொருள் செறிந்த பிரயோகங்கள் உள்ளன. அருமையான சரிதச் செய்திகளும் உண்டு. கல்வெட்டுகளாலன்றி இவைகளை அறிய வகையில்லை. சிலவற்றை அறிந்தால் நீங்கள் வியப்பு அடைவீர்கள். இவைகளில் சிறப்புற்றது திருக்கச்சூர் கல்வெட்டு வரலாறு.

சாத்தனார் என்ற ஒரு பெரும்புலவர் சந்ததிக்கு விருது தரப்பட்டது. அதற்கு ஒரு நிலமும் இறையிலியாகத் தரப்பட்டது. குற்றாலக் குறவஞ்சிபாடிய பெரும்புலவர் திரிகூட ராசப்பக் கவிராயருக்கும் ஒரு நில தானமும் தரப்பட்டது என்று மற்றொரு கல் எழுத்து கூறுகின்றது. இந்த வகையில் அளவுகடந்த அரிய செய்திகளைக் கற்களே கூறுகின்றன. கற்கள் தம்மிடம் அடைக்கலமாக ஒப்புவித்த செய்திகளை உள்ளபடியே பின் சந்ததியாருக்குக் கூறுகின்ற பெருமை பெற்றிருக்கின்றன. அதனை அறியாது நம் காலத்துப் பாமர மக்கள் அவைகளை பேய் எழுதிய எழுத்துக்கள் என்றும், பிரமலிபி என்றும் அறியாமையால் ஏளனம் செய்து பழிக்கிறார்கள். அறிந்தால் அவ்வாறு கூறுவார்களோ?

நமது நாட்டு வரலாறு முழுதும் நமக்குத் தெரியாது. நமது முன்னோர்கள் என்னென்ன செய்தார்களோ, எந்தெந்த அரிய கருத்துக்களை விரித்தார்களோ, முழுதும் அறிந்தோம் இல்லை. ஏடுகளில் எழுதிவைத்த வரலாறுகள் சிலவே. அவைகள் புராணக் கதைகளாக மாறி இருக்கின்றன. உண்மைக் கதைகளை உள்ளபடி அறியக் கல்வெட்டுக்களே சான்றுகளாக உள்ளன. உதாரணமாகக் கொங்கு நாட்டுச் சரிதையில் கொங்குச் சோழர்ப் பகுதிதான் சிறந்தது.

அதனை எந்த ஏடும் குறிக்கவில்லை. கல்வெட்டுக்களே எந்த அரசர்கள் எந்தெந்த ஆண்டுகளில் ஆண்டார்கள் என்னென்ன அற்புதச் செயல்களைச் செய்தார்கள் என்று கூறுகின்றன. ஏட்டு நூலாகிய கொங்கு தேச ராசாக்கள் இப்படிப்பட்ட ஒரு வம்சம் ஆண்ட செய்தியையே குறிக்கவில்லை.

மேலும் மிகப் பிரசித்தி பெற்ற சோழர் அரசியலைப்பற்றிக் கலிங்கத்துப் பரணி, மூவர்உலா என்ற சில சிறு நூல்களேயன்றி மற்ற காவியங்களோ, உரை நூல்களோ ஒரு சிறிதும் கூறவில்லை. திரைகடல் கடந்து வங்கம் ஏறித் தமிழர் பெருமை, நாகரிகம், சமயம் இவைகளைப் பல ஆயிரம் காதங்களுக்கப்பால் உள்ள தீவுகளில் கொண்டுசெலுத்திய சோழப் பேரரசின் வரலாறே நாம் ஏடுகளில் மூலம் அறியாதிருந்தோம். ஆனால் இப்போது ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த கல்வெட்டுக்களின் மூலமாக அப்பேரரசின் முழுவரலாறும் அறிந்து கொண்டோம். கிராமங்களின் சனநாயக முறை அக்காலத்தில் எவ்வாறு இருந்தது என்பதற்கு உத்தர மேரூர் சாசனம் ஒன்றே ஒரு பெரும்புதையல் போன்று அகப்பட்டது. அதன் அருமை பெருமை உலகத்திலேயே வேறு எங்கும் இல்லை எனலாம்.

பல்லவர்களின் பேரரசு எப்படிப்பட்ட மேன்மை பொருந்தியது என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் யார் அறிந்தார்? இப்பொழுதோ காஞ்சிக் கல் வெட்டுகளாலும், மாமல்லைச் சிற்பங்களாலும் பல சிறு குன்றுகளில் படர்ந்து கிடக்கும் குடைக் கோயில்களாலும் அறிகிறோம். சிற்ப வேலைச் சிறப்பு எத்தன்மைய பெருமை அடைந்தது என்று அக்குன்றுகளே காட்டுவன.

தமிழ்நாடே அன்றி இலங்கை, சாவகம், கம்போடியா, கடாரம் முதலிய தொலைவு இடங்களில் தமிழர் செய்த அற்புதச் செயல்களை அங்கே கிடைக்கும் தமிழ்க் கல்வெட்டுக்களும், சிற்பச் சின்னங்களும் கோயில் அமைப்புக்களும் காட்டுவன. இலங்கையிலே தமிழ் மக்கள் செய்த படையெடுப்பு, அரசியல், பண்பாடு இவைகளின் விபரம் அறிய "கடலின் கண் முத்து" என்ற நூலைப்படித்தால் தெரியவரும். 2200 ஆண்டுகளின் முன் இந்தியரின் உச்சநிலை காட்டுவது கல்வெட்டுகளும், தூண்களுமே ஆகும் என்க. (மௌரிய அசோகர் காலம்)

இனி நாட்டு வரலாறு மட்டும் அல்ல, மக்களின் நடை, உடை, பாவனை, ஒழுக்கம், கருத்துப் பெருக்கு, பண்பாடு முதலியவைகளையும், சிக்கனம், பொருளாதாரம், அரசியல் துறை வாணிபம், போர்இயல் முதலிய புறத்தியல் கொள்கைகளையும் கல்வெட்டுக்களே கூறுகின்றன. எந்தெந்த இடங்களில் என்னென்ன போர்கள் நடந்தன, அவைகளின் காரணங்கள், அவைகளால் ஏற்பட்ட மாறுதல்கள் இவைகளையும் கூறுகின்றன. காந்தளூர்ச் சாலைக், கப்பற்போர், திருப்புறம்புயப்போர், கொப்பத்துப்போர் முதலியவைகளை நாம் சரித்திர நூல்களில் கேள்விப்படுவதில்லை. கல்வெட்டு மெய்க்கீர்த்திகளில் தான் கேட்கிறோம். இவை போன்ற பலவும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

நமது நாட்டின் சமய வரலாற்றையும் கல்வெட்டுக்களே கூறுகின்றன. சமணமும், பௌத்தமும் தென்னாட்டில் ஒரு காலத்தில் இருந்தன என்று ஒரு சிறு செய்தி மட்டும் தேவாரம் முதலிய நூல்களினால் அறிகிறோம். ஆனால் அச்சமயங்கள் எந்தக்காலத்தில் எத்தனை அளவு பரவியிருந்தன என்று அவைகள் கூறுவதில்லை. கல்வெட்டுக்களே கூறுகின்றன. நடுநாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு, பாண்டிய நாடு முதலிய நாடுகளில் காணும் சிறு குன்றுகள் எல்லாம் சமணச் சின்னங்களே கொண்டிருக்கின்றன. சமணக்குரவர்களின் பெயர்களும் அங்கங்கே காண்கிறோம். கோயில்களும், உருவங்களும் கிடைக்கின்றன. காஞ்சியிலே உள்ள சைன, பௌத்தச் சின்னங்களை இன்றும் ஒருவரும் சரியாக ஆராய்ச்சி புரிந்து வெளியிடவில்லை. பின்னே வந்த வைதீக சமயங்கள் அச்சமயங்களை எவ்வளவு அழித்தும் அச்சின்னங்கள் தப்பித்துக் கொண்டுத் தம் கதைகளைச் சொல்லிக் கொண்டே நிற்கின்றன.

அதுபோலவே சைவ வைணவ சமயப் பரப்புக்களையும் கல்வெட்டுக்களே நன்றாகக் காட்டுகின்றன. சண்டைக் காலங்களில் முகம்மதியர்கள் கோயில்களை அழித்த செய்திகளை குன்றக்குடிக் கல்வெட்டு கூறுகிறது. இக்கோயில்களில் பின்னால் திருப்பணி செய்து சில தலைவர்கள் புகழ் பெற்றார்கள்என்றும் அக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இப்போது நமக்குச்சரித்திரம் ஏது?முன்னோர்களுக்கு இருந்த அறிவு, ஆற்றல், சரித்திரத்தில் ஆர்வம் இவைகள் நமக்கு இப்போது இல்லை. ஏனெனில் இவைகளின் அருமைகளை நமது அறிஞர்கள் முதலில் அறியவில்லை. ஜெர்மனியரும், ஆங்கிலேயரும் கண்டுபிடித்து ஆராய்ந்தார்கள். நமது மக்களோ அவைகளை அழித்துக் கண்ணாடி போலச் செய்து பாழாக்குகிறார்கள். இன்னும் இந்தப் பாழாக்கும் அறிவின்மை நடைபெறுகிறது. எப்போது இவற்றின் அருமை, பெருமைகளை நம் மக்கள் அறிகிறார்களோ அப்போது தான் நாட்டில் பண்பாடு நிலைக்கும்.

19

வழிபாடு

வழிபாடு யாது?

வழிபாடு என்றால் இறைவனிடம் உயிர்களாகிய நாம் செலுத்தும் அன்பு பொருந்திய காணிக்கை. இறைவன் தலைவன், நாம் அடியவர். இறைவன் எல்லாம் வல்லவன். நாமோ எளியவர், குறைபாடு உடையவர். இறைவனிடம் அன்பு செலுத்தின் நாம் நலம் அடையலாம். அவ்வாறு செலுத்தும் அன்புமயமான செயல் வழிபாடு ஆகும். இவ்வழிபாடு எல்லா நாடுகளிலும் எல்லாச் சமயங்களிலும் எல்லா மொழிகளிலும் உண்டு. இதனை வடமொழியில் பிரார்த்தனை என்றும், தமிழில் போற்றுதல், வணங்குதல், பரவுதல், வழிபாடு என்றும் வட மொழியில் துதி, தோத்திரம், அருச்சனை முதலிய பல சொற்களால் கூறுவர். மக்களுடைய நெஞ்சில் எழும் அன்பு கூர்ந்த கருத்துக்களை இறைவனிடம் செலுத்தும் போது அவைகள் பாடல்களாகவும், உரை நடைகளாகவும் மிளிர்வதுண்டு. இவைஎல்லா மொழிகளிலும் இவ்விருவகையிலும் தோன்றியிருக்கின்றன.

வகைகள் :-

வழிபாடு இருவகைப்படும். பொது இடங்களில் பலர் சேர்ந்து நடத்துவது, தனி இடங்களில் தனித்தனியே நடத்துவது என இரண்டு வகைகள் உலகம் எங்கும் நடைபெறுகின்றன. பொது இடங்கள் சமயக் கூடங்களாவும், திருக்கோயில்களாவும் இருக்கின்றன. இவ்விடங்களில் கூட வழிபாடு அல்லது பிரார்த்தனை எனப்படுவது திருகோயில்களில் நடத்தப் பெறுவது போன்று பொதுப் பிரார்த்தனை என வழங்கப்படும். அதற்கு வடமொழியில் "பரமார்த்த பூசை விதி" என்ற நூல் இருக்கின்றது. தனி இடங்களில் நடைபெறுவதோ, தனி இல்லங்களில் நடைபெறுவதோ தனி ஆள் செய்யும் வழிபாடு ஆகும். இந்த வழிபாடு வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு முறையாக இருக்கும். இதைத் தனிவழிபாடு ஆத்மார்த்த பூசை என்று வடமொழியில் கூறுவர். தமிழில் ஆகமப்படி தீட்சைமுறை என்பர். பரமார்த்த பூசை அல்லது பொதுத் திருக்கோயில் வழிபாடு அவ்வக் கோயில்களின் விதிப்படி வெவ்வேறாக அமைந்திருக்கிறது.

இனி நாட்டு வரலாறு மட்டும் அல்ல, மக்களின் நடை, உடை, பாவனை, ஒழுக்கம், கருத்துப் பெருக்கு, பண்பாடு முதலியவைகளையும், சிக்கனம், பொருளாதாரம், அரசியல் துறை வாணிபம், போர்இயல் முதலிய புறத்தியல் கொள்கைகளையும் கல் வெட்டுக்களே கூறுகின்றன. எந்தெந்த இடங்களில் என்னென்ன போர்கள் நடந்தன, அவைகளின் காரணங்கள், அவைகளால் ஏற்பட்ட மாறுதல்கள் இவைகளையும் கூறுகின்றன. காந்தளூர்ச் சாலைக், கப்பற்போர், திருப்புறம்புயப்போர், கொப்பத்துப்போர் முதலியவைகளை நாம் சரித்திர நூல்களில் கேள்விப்படுவதில்லை. கல்வெட்டு மெய்க்கீர்த்திகளில் தான் கேட்கிறோம். இவை போன்ற பலவும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

நமது நாட்டின் சமய வரலாற்றையும் கல்வெட்டுக்களே கூறுகின்றன. சமணமும், பௌத்தமும் தென்னாட்டில் ஒரு காலத்தில் இருந்தன என்று ஒரு சிறு செய்தி மட்டும் தேவாரம் முதலிய நூல்களினால் அறிகிறோம். ஆனால் அச்சமயங்கள் எந்தக்காலத்தில் எத்தனை அளவு பரவியிருந்தன என்று அவைகள் கூறுவதில்லை. கல்வெட்டுக்களே கூறுகின்றன. நடுநாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு, பாண்டிய நாடு முதலிய நாடுகளில் காணும் சிறு குன்றுகள் எல்லாம் சமணச் சின்னங்களே கொண்டிருக்கின்றன. சமணக்குரவர்களின் பெயர்களும் அங்கங்கே காண்கிறோம். கோயில்களும், உருவங்களும் கிடைக்கின்றன. காஞ்சியிலே உள்ள சைன, பௌத்தச் சின்னங்களை இன்றும் ஒருவரும் சரியாக ஆராய்ச்சி புரிந்து வெளியிடவில்லை. பின்னே வந்த வைதீக சமயங்கள் அச்சமயங்களை எவ்வளவு அழித்தும் அச்சின்னங்கள் தப்பித்துக் கொண்டுத் தம் கதைகளைச் சொல்லிக் கொண்டே நிற்கின்றன.

அதுபோலவே சைவ வைணவ சமயப் பரப்புக்களையும் கல்வெட்டுக்களே நன்றாகக் காட்டுகின்றன. சண்டைக் காலங்களில் முகம்மதியர்கள் கோயில்களை அழித்த செய்திகளை குன்றக்குடிக் கல்வெட்டு கூறுகிறது. இக்கோயில்களில் பின்னால் திருப்பணி செய்து சில தலைவர்கள் புகழ் பெற்றார்கள்என்றும் அக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

மேலும் நாட்டுப்பெயர்கள் அடிக்கடி மாறிஇருக்கின்றன. அரசர்கள் தங்கள் பெயர்களை நிலை நாட்டுவதற்காக அவ்வாறு செய்தார்கள். ஆனால் அவைகள் மறைந்தன. பண்டைப் பெயர்களே நின்றன. ஊர்ப்பெயர்களும் அவ்வாறே சிதைவுண்டன; பல உருமாறின. கோயிலில் திருவுருவங்களின் பெயர்களும் முன் இருந்த தமிழ்ப்பெயர்கள் போய் வடமொழிப் பெயர்களாக மாறின. கோயமுத்தூர் கோவன்புத்தூர் ஆகஇருந்து ஒரு காலத்தில் வீரகேரள நல்லூர் என்ற பெயரும் பெற்றிருந்தது. ஈரோடு, ஈரோடை, சித்தோடு, சிற்றோடை, பல்லடம், பல்லோடை, என்ற பெயர்கள் ஓடைக்கருகில் இருந்து பெயர் பெற்ற விவரத்தைத் தெரிவிக்கின்றன.

பேரூர்ப் பெருமான் திருஆன்பட்டியுடையார் என்றும் ஈரோடு அர்த்தகமாலீசர், திருத்தொண்டீசர் என்றும் பண்டைப் பெயர்களைக் கொண்டிருந்து இப்போது அர்ச்சகர்களால் மாற்றப்பட்டதை அக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

ஆலயப் பரிபாலனம், தான தருமங்கள், எல்லைகள், கோயில் சொத்துக்கள், வரிவகைகள், வகுப்புப்பிரிவினைகள், அவர்களின் உரிமைகள், நீதிசெலுத்துதல், தண்டனைகள் முதலிய எல்லாச் செய்திகளையும் மிகத்தெளிவாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. பண்டையச்சங்க நூல்களில் கூறப்பட்டு இப்போது மறைந்து போன பழக்கங்களையும் அவைகள் எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, உடன்கட்டையேறல், தீப்பாய்தல், வடக்கிருத்தல், வீரக்கல் நடுதல், மாசதிக்கல் நடுதல் ஆகியவற்றைக் கூறலாம். சாசனம் எழுதுவதில் அக்காலத்தார் கொண்ட வாசகம் மிகவும் வியப்புறத்தக்கது. அக்காலத்து வரிகளின் பெயர்கள், அளவைகளின் பெயர்கள், நாணயங்களின் பெயர்கள் ஆகியவைகளும் கல்வெட்டுக்களில் இடம் பெற்றுள்ளன.

இவைகளை எல்லாம் ஆராய்ந்துதான் இக்காலத்தில் நாட்டு வரலாறு எழுதப்படுகிறது. ஆகவே ஆராய்ச்சி செய்யும் அறிஞர்களுக்குக் கல்வெட்டுக்களே மிகுந்த உதவிசெய்கின்றன. நமது முன்னோர்கள் கற்களைப் பேசுவிக்கச் செய்திருக்காவிட்டால்

வழிபாட்டு அறை :-

இறைவன் எங்கும் இருக்கிறான். இல்லங்களிலும் இருக்கிறான். பொது இடங்களிலும் இருக்கிறான். ஒவ்வொரு குடும்பத்து இல்லத்திலும் நாள் தோறும் முறையாக வழிபாடு நடைபெறும். அது போலத் திருக்கோயில்களிலும் நடைபெறும். இல்லங்களில் நடைபெறுவது தனி அறையாக இருக்கும். அதற்குப் பூசையறை என்பர். அவரவர்கள் விரும்பிய வடிவத்தை வைத்து வழிபடுவது உண்டு. அல்லது திருப்பாடல்களைப் பாராயணம் பண்ணும் வகையில் வழிபடுவதும் உண்டு. இப்படிப்பட்ட வழிபாட்டில் நம் இல்லங்கள் தோறும் இறைவன் எழுந்திருக்கின்றான் என்கிறார் மணிவாசகர், சமய நெறியில் ஈடுபடுகின்ற எந்த மனிதனும் இவ்விதமாகத் தனி வழிபாடு செய்கின்றான். இதற்குப் பெற்றோர்களே இளைஞர்களுக்கு வழி காட்டுகிறார்கள். குறிப்பாகக் கிறிஸ்துவர்களும், முகம்மதியர்களும் வைதீக இந்துக்களும் இந்த முறையைக் கையாண்டு கொண்டிருக்கிறார்கள்.

வழிபாட்டு முறை :-

வைதீக முறையில் இருக்கிற சைவர்களும் வைணவர்களும் மற்ற கொள்கையினரும் வழிபாட்டு அறையில் மூர்த்தியை வைத்து அதன் முன்னிலையில் குறிப்பிட்ட பாடல்களைக் கூறி, மலர்களைக் கொண்டு வழிபடுவார்கள். "இறைவற்கொரு பச்சிலை" என்று திருமூலர் கூறுகிறார். பிறகு சைவர்கள் ஆயின் திருமுறைப்பாடல்களைப் பாடுவார்கள். வைணவர்கள் ஆயின் திவ்யபிரபந்த சாத்து முறைகளே ஓதுவார்கள். மற்ற கொள்கையினர் வடமொழிப்பிரார்த்தனைகளை ஓதுவார்கள். பூணூல் அணிந்தவர்கள் சந்தியாவந்தனத்தால் வழிபடுவார்கள். இட்ட தேவதைகளின் தனித்தனி பிரார்த்தனைகளும் இருக்கின்றன. பொதுவாக இந்த முறையில் தத்தம் தாய் மொழியிலேயே புகழுரைகள் ஓதுவதுண்டு. தாம்என்ன கூறுகிறோம் என்பதை அறிந்து கொண்டே வழிபாடு செய்கிறார்கள். தென்னாட்டில் பாமரமக்கள் இந்தப்படி வழிபாட்டை இல்லங்களில் செய்வதை நிறுத்தியே விட்டார்கள்; சின்னங்கள் அணிவதும் மறந்து விட்டார்கள்.

திருக்கோயில் வழிபாடு :-

திருக்கோயில்களில் வழிபாடு வேறுவிதமாக நடைபெறும். அங்கே வழிபாடு பலர்சேர்ந்து கூட்டு முறையில் நடத்துவார்கள். அவைகள் திருவிழா என்ற முறையில் நடைபெறும். மூர்த்திகளை ஊர்வலமாகக் கொண்டுவந்து நடத்துவார்கள். அம்முறை பொது மக்களின் வழிபாடாக அமையும். ஆனால் அங்கும் தனித்தனிப் பிரார்த்தனைகளும் நடைபெறுவதுண்டு. குறிப்பிட்ட நேரங்களில் அதாவது காலை, நடுப்பகல், மாலை, இரவு முதலான சந்திகளில் பொதுவழிபாடு நடைபெறும். அப்போது விளக்கு அலங்காரம் ஒளிகாட்டல், தீபாராதனை, அருச்சனை முதலியவை நடை பெற்ற பிறகு தனித்தனிப் பிரார்த்தனையாளர்கள் அருச்சனை செய்விப்பார்கள். மேலும் இடை நேரங்களில் தனித்தனி பிரார்த்தனைகளும் நடைபெறும். இம்முறைகளே பொதுவாக எல்லாக் கோயில்களிலும் நடைபெறுகின்றன.

நடைபெறும் வகைகள் :-

எல்லாக் கோயில்களிலும் ஒரே விதமாக வழிபாடு நடைபெறுவதில்லை. சைவ, வைணவ, அத்வைத, ஜைன, பௌத்த கோயில்களிலும் வெவ்வேறுவிதமாக வழிபாடுகள் நடைபெறும். இந்துக் கோயில்களில் பரார்த்த பூஜாவிதி என்ற முறைப்படி நடைபெறுகின்றது. தற்காலத்தில் சைவக் கோயில்களில் அவ்வக்கோயிலுக்கு அமைந்த ஆகம முறைப்படி நடக்கும். மூர்த்திகளின் முழுக்கு, அலங்கார தீபாராதனைகள் ஒரேமாதிரி இருக்கும். வேதங்களைச் சொல்லியோ, சொல்லாமலோ நடத்துவார்கள். பிறகு 108, 1008 நாமாவளிகள் கூறி மலர்களை இடுவார்கள். அப்போது நாமங்கள் வடமொழியில் சொல்லப்படுகின்றன. பிறகு பஞ்சபுராணம் ஓதுவதில் தமிழில் வேதாகமத் திருமுறைகள் ஓதித் திருப்புகழ் சொல்லிக் கற்பூர ஆரத்தியோடு பூஜை முடிவுபெறும். வைணவர்கள் பிரபந்த சாத்து முறை சொல்ல வழிபாடு நடைபெறும்.

பலவிதக் கோயிகள் :-

தமிழ் நாட்டில் பல வகைக்கோயில்கள் இருக்கின்றன. பாடல் பெற்றவை உயர்ந்தவை. வைப்புத்தலங்கள் பிறகு. புராணக் கோயில்கள், கல்வெட்டுக் கோயில்கள், வகுப்பு வாரிக் கோயில்கள் இவைகள்

எல்லாம் கணக்கிட்டால் 2000, 3000 கோயில்களுக்கு மேல் இல்லை. இவைகளிலேதான் மேலேகண்ட ஆகம முறையில் வழிபாடுகள் நடைபெறுகின்றன. இவைகளைத் தவிர ஒவ்வொரு சிற்றூரிலும் ஒன்றிரண்டு பிள்ளையார் கோயிலும், இரண்டு மூன்று தேவதை கோயிலும் சில மரமேடைக் கோயில்களும் உண்டு. இவைகளிலே ஆகம முறைகளோ, அந்தண வழிபாடோ இல்லை. பெரும்பான்மை யாக வழிபடுவோர்கள் தாங்களே கற்பூரங்காட்டி, வழிபாடு செய்து தமக்குத் தெரிந்தபாடல்களைக் கூறி வழிபடுவார்கள். சில கிராம தேவதைக் கோயில்களில் பண்டாரங்கள் அல்லது அர்ச்சகர்கள் பூஜை செய்வார்கள். குயவர் முதலியோரும் பூஜை செய்வார்கள். தமிழிலேயே வழிபாடு நடைபெறும். சில பண்டாரங்கள், அந்தணர்களைப் பின்பற்றி தப்புத்தப்பாகச் சொல்வார்கள். ஆகவே எண்ணிக்கையில் தாய் மொழியே மீறியிருக்கும்.

எண்ணிக்கை :-

தமிழ் நாட்டில் 10 மாவட்டங்களில், 100 வட்டங்களில், 5000 ஊர்களில், 50,000 சிற்றூர்களில் 3,00,000 கோயில்கள் கணக்கிடலாம். இவைகளில் 3000 பெருங்கோயில்களைத் தவிர. 2,97,000 சிறு கோயில்கள் உள்ளன. 3000 பெருங்கோயில்கள் மட்டும் ஆதிசைவர்களும் பட்டாச்சார்யர்களும் வழிபாடு செய்கின்றனர். ஒரு கோயிலுக்கு 5 குடும்பங்களைக் கணக்கிட்டால் மொத்தம் 15,000 குடும்பங்கள் தான் வடமொழி அர்ச்சனை செய்ய வல்லவர்கள். இவர்களிலும் நன்கு படித்தவர்கள் 100க்கு 10 பேர் இருப்பார்கள். ஆகவே 1500 பேர்தான் வடமொழி படித்து வழிபாடு நடத்துபவர்கள். மற்ற 2,97,000 கோயில்களில் வழிபாடு செய்கிறவர்கள் அரைகுறையாகப் படித்தவர்கள். தமிழும் கூட நன்குபடிக்காத பண்டாரங்கள். இவர்கள் நடத்தும் அருச்சனை எப்படி இருக்கும்? யோசியுங்கள்.

வழக்கு :-

கோயிலுக்குப் பொதுமக்கள் திருவிழா நாட்களில் தான் செல்வார்கள். அவர்கள் பக்தி மேலிட்டுச் செல்லுகிறார்களோ, அல்லது வேடிக்கை பார்க்கச் செல்லுகிறார்களோ, கூற முடியாது. பெரும்பான்மை யவர்களுக்குக் கோயிலில் நடைபெறும். சீர் சிறப்புகளின் பொருள்

தெரியாது. மொழிவேறு. சொல்லும் உச்சரிப்பும் அப்படியிருந்தால் பொருள் எப்படி விளங்கும். அர்ச்சகர் வருமானத்தின் பேரில் தான் கண்ணாக இருப்பார். தீவிரமாக வேலை செய்வதே அவரது நோக்கம். பழனி அபிஷேகத்தைக் கண்டால் இது தெளிவு திருநாட்களில் மக்களை இழுப்பது, மேளம், வாணம், குதிரையாட்டம், பாட்டுக்கச்சேரி, பொரி கடலை தின்பண்டம் விளையாட்டுச் சாமான்கள் உணவுச் சாலை இவைகளே ஆகும். ஆகவே ஆன்ம ஈடேற்றம் எங்ஙனம் உண்டாகும்? சமயச் சொற்பொழிவு வைத்தால் 1000-இல் ஒருவர் கூட வருவதில்லை. ஆகவே சமய ஈடுபாடு எங்கே?

பலன் :-

கோயில்களில் நடைபெறும் வழிபாடு இவ்வாறு இருக்க அருச்சகர் செய்து வரும் வழிபாடு தங்கள் ஜீவனத்திற்காக கடன் கழிப்பதேயன்றி இறைவன் மீது அன்பு மேலிட்டுச் செய்வது எனச் சொல்வதற்கில்லை. ஆதி சைவர்களில் ஒரு நம்பிஆரூரரும் ஒரு நம்பியாண்டார் நம்பியுமே அக்காலத்தில் உண்மையான வழிபாட்டில் திகழ்ந்தார்கள். இடைக்காலத்தில் ஒரு கச்சியப்ப சிவாச்சாரியாரே புராணம் எழுதினார். அவ்வாறு முற்காலத்தில் இருந்தால் இக்காலம் எவ்வாறு இருக்கிறது என்று சொல்லவும் வேண்டுமோ? ஒரு பெரிய கோயில் கும்பாபிடேகம் நடத்த வேண்டியிருக்கின் ஓர் ஈசான சிவாச்சாரியாரே இருக்கிறார். அவர் மூலமாக இருபது முப்பது பேர் சீடர்களாக வருகின்றனர். மூன்று நூறாயிரம் கோயில்களுக்கு இவ் வெண்ணிக்கை போதுமா?

வழிபாடு யாருக்கு :-

கோயிலில் வழிபாடு யாருக்காகச் செய்யப்படுகிறது? அங்கு வரும் பொது மக்களுக்கன்றி, அர்ச்சகர்களுக்காக அல்ல. பொது மக்களுக்குச் செய்ய வேண்டின் அவர்கள் நெஞ்சை இழுத்து கடவுள் அன்பின் ஈடுபடும் படி செய்ய அல்லவோ அமைந்திருக்க வேண்டும். அப்படியின்றி அவர்களுக்குப் பொருள் விளங்காத ஒரு செயலாக இருக்கும் பட்சத்தில் அதனால் என்ன பயன்? சொல்லும் சொற்கள் வழிபட வருபவர்களுக்கு விளங்கும்படியாக இருக்க வேண்டும். இந்த விளங்காச் சொற்களால் யாருக்கும் என்ன பலனும் கிட்டாது. இந்த நிலை நமது பெருங்கோயில்களில் நிரம்ப இருக்கின்றது. இதனை

நன்கு அறிய வேண்டின் பிற சமய நிலையங்களின் போக்குகளை ஆராய்ந்தால் தெரிய வரும். நமது நாட்டிலும் பிற நாடுகளிலும் பிறசமயங்களில் எவ்வாறு நடக்கிறது பார்க்கலாம்.

பிற சமயங்கள் :-

இந்தியாவில் கிறிஸ்தவர்களின் வழிபாடுகள் நாட்டு மொழிகளிலேயே நடக்கின்றன. பலவகைப்பட்ட கிறிஸ்தவர்களில் ரோமன் கத்தோலிக் சமய குழுக்களைத்தவிர பிற குழுக்கள் தமிழிலேயும் பிற தாய்மொழிகளிலேயும் வழிபாடு மட்டுமன்றி, திருமணமும், சமயச்சடங்குகளும் நடத்துகிறார்கள். அது போலவே சீக்கியர், பிரம்ம சமாஜத்தார், பிரம்ம ஞானசபையார், பௌத்தர், சமணர் முதலிய பலவகைப்பட்ட பிற சமயத்தார்களும் அம்மொழிகளிலேயே சடங்குகள் வழிபாடுகள் முதலியவைகளை நடத்துகிறார்கள். இசுலாமியர் மட்டும் இதற்கு மாறுபாடாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அரபிக்கு மொழியில் நடத்தினாலும். சிறுவயது முதற்கொண்டே பொருளை அறிந்து கொண்டே நடத்துகிறார்கள் ஆனால் இசுலாமியராக மாறியவர்கள் அனைவரும் அம்மொழியில் ஓதலாம்.

பிற நாடுகள் :-

மேல் நாடுகளில் கிறிஸ்தவ மதம் பரவிய காலத்தில் அதன் வழிபாடுகளும் மறைகளும் லத்தீன் மொழிகளில் நடத்தப்பட்டன. இங்கிலாந்து ஜெர்மனி முதலிய நாடுகளில் அம்மதம் பரவிய போது சமய குருக்கள்மார் லத்தீன் மொழியையே வழங்கினார்கள். அம்மொழி அறியாத போது மக்கள் யாதொன்றும் விளங்காமல் குருட்டுத்தனமாக அடிபணிந்தார்கள். 15, 16 நூற்றாண்டுகளில் புது மலர்ச்சி மேற்கு நாடுகளில் பரவியது. அப்போது சில பெரியவர்கள் தோன்றி (லூதர். விக்லிப்) பைபில் என்ற மறையை ஆங்கிலப்படுத்தியும் கோயில்களில் ஆங்கிலத்தில் வழிபாடு செய்யவும் கிளர்ச்சி செய்தார்கள். அதன் பயனாகத் தேவாலயங்களிலும் சடங்குகளிலும் ஆங்கிலமே வழங்கப்பட்டது. அது முதல் கிறிஸ்தவம் பரவும் எல்லா நாடுகளிலும் அந்தந்த நாட்டு மொழியே பயிற்சி மொழியாக ஏற்பட்டது. இந்த முறை பிற மதங்களிலும் வழங்கப்பட்டது.

பாரதத்தில் :-

பண்டைக் காலத்தில் வடநாட்டில் வேள்விகளிலும் மற்றைச் சடங்குகளிலும் வடமொழியே வழங்கப்பட்டது. எல்லாச் சமய நூல்களும் அப்போது வடமொழியிலேயே இருந்தன. அரசர்களும் அர்ச்சகர்களும் வடமொழி அறிந்திருந்தார்கள். கி. மு. 5-ஆம் நூற்றாண்டில் புத்தர் தோன்றினார். ஜினரும் தோன்றினார். இவர்கள் வேள்விகளையும் உயிர்ப்பலிகளையும் தடுத்து சமயக் கொள்கைகளைச் சீர்திருத்தினதில் படித்த மக்களைவிடப் படியாத மக்களிடம் தம் கொள்கைகளைப் பரப்ப வேண்டி வந்தது. அப்போது பொதுமக்களுக்குப் பேச்சு மொழியாக இருந்த பிராக்கிருதம் பாலி முதலிய சார்பு மொழிகளில் பேச வேண்டிவந்தது. புதுக் கோட்பாடுகளும் பேச்சு மொழிகளிலேயே ஓதப்பட்டன. இவ்வாறே பல தேசிய மொழிகளிலும் பரப்பப்பட்டன. இவ்வகையில் வழிபாடு நாட்டு மொழிகளில் நடந்தன.

தமிழ் நாட்டில் :-

முன்னாளில் வடநாட்டில் இலக்கிய மொழி வடமொழியும், பேச்சு மொழி பிராகிருதமுமாக வழங்கினாற் போலல்லாது தமிழ் நாட்டில் தமிழே இலக்கிய மொழியாகவும் பேச்சு மொழியாகவும் வழங்கி வந்தது. கி. மு. வில் தமிழ்நாட்டில் வடமொழி நுழைவு மிகக் குறைவு. எல்லாம் தமிழிலேயே இயற்றப்பட்டன (ஆக்கப்பட்டன). வடநாட்டில் சமயச் சடங்குகள் வேள்விகளாக ஆற்றங்கரைகளில் முனிவர் குடில்களிலும் மன்னர் அவைகளிலும் நடந்தன. (வேள்விகள் நெருப்புக் குண்டங்களில் நடத்தப்பட்டன.) நெருப்பே வணங்கப்படும் கடவுளாக இருந்தது. உயிர்ப்பலியும் கூட நடந்தன. இவைகளுக்கு வடமொழி மந்திரங்களே ஓதப்பெற்றன. தமிழ்நாட்டிலோ நாட்டுக் கோயில்களிலே சமய வழிபாடு நடந்தது. உருவ வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. தொழுகைக்குத் தமிழ்ப்பாடலே பயன்படுத்தப்பட்டது. ஆகவே தாய்மொழியாகிய தமிழே உரிய மொழியாயிற்று.

சமய நிலையங்களின் வளர்ச்சி :-

வட நாட்டில் வடமொழி வேதங்களின் அடிப்படையில் சமயம் வளர்ந்தது. வேள்விகளின் நெருப்பு (அக்கினி) முதலிய தேவதைகள் சிறப்பாக வழிபடப்பட்டன. அவைகளுக்குக் கோயில்கள் தேவையில்லை. பௌத்த சமண சமயங்கள் தோன்றிவரவே வேள்விகளின் ஆதிக்கம்

குறைந்தது. அந்தச் சமயங்களின் மூலமாக உருவ வழிபாடு தொடங்கிற்று. புதிய மாறுதலும் ஏற்பட்டது. புராணங்கள் தோன்ற சின்னஞ்சிறு கோயில்களும் தோன்ற நாமாவளிகள் தோன்றின. அங்கு இன்றைக்கும் கோயில்களைவிட தீர்த்தங்களுக்கே சிறப்பு காட்டப்படுகின்றது.

தென்னாட்டிலோ உருவ வழிபாடும் சைவமேம்பாடும் வளர்ச்சி பெற ஆகமங்கள் கோயில்கள் பெருகித் தோன்றின. இங்கு நெருப்பு வழிபாட்டுக்கு மாறாக ஆகம வழிபாடு மிகுந்தது. உருவ வழிபாட்டிற்குத் துதிகள் வேண்டியிருந்தன. அத்துதிகள் தாய் மொழியாகிய தமிழிலேயே தோன்றின.

துதிகள் :-

பௌத்தர்களும், சமணர்களும் எங்கு சென்றாலும் தங்கள் உருவ வழிபாட்டையும் கொண்டு சென்றார்கள். மேலும் அந்நாட்டு மொழிகளையும் கற்று அவைகளிலே நூல்கள் எழுதி, நீதி நூல். இலக்கணம் நிகண்டு முதலியவைகளைப் புதிதாக எழுதி துதிகளையும் இயற்றினார்கள். அவர்கள் தென் நாட்டிற்கு வந்த போது தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் இந்நூல்களை இயற்றினார்கள். தமிழில் ஐம்பெருங் காப்பியங்கள் நாலடி முதலிய நீதி நூல்கள் ஏற்பட்டதற்கு அவர்களே காரணம். அவைகளில் காட்டப்படும் வணக்கச் செய்யுள்கள் தமிழிலேயே இருக்கக் காணலாம், சிந்தாமணி; சூளாமணி; மணிமேகலை; பெருங்கதை; யசோதர காவியம், நீலகேசி, நிகண்டுகள் இவைகளில் கண்ட கடவுள் வணக்கச் செய்யுட்கள் அழகிய தமிழ் மொழியில் இருப்பது எதனைக் காட்டுகிறதோ, இலக்கணத்திலும் அதே நிலை அறியலாம்.

தமிழ்த்துதிகள் :-

பெருங்காப்பியங்களில் கண்ட துதிகளைப் போலவே அக்காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலும், ஞாயிறு, திங்கள், மால், வேலன், கொற்றவை முதலிய தேவர்களின் துதிகள் காணலாம். திருமுருகாற்றுப்படையில் முருகனுடைய புகழ்களைச் சுட்டும் வழிபாட்டுப் பாடல் அழகாக அமைந்திருத்தலைப் பார்க்கலாம். இத்துதிகள் எல்லாம் வைணவ மறுமலர்ச்சிக் காலமாகிய

தேவார திவ்யப்பிரபந்தங்களுக்கு முற்பட்ட காலம் என்றால் தவறில்லை. ஆகவே பல்லவர்கள் காலத்திற்கு முன்பே தமிழ்நாட்டில் கடவுள் வணக்கங்கள் தமிழிலே ஏற்பட்டு வழங்கப்பட்டன, என்றும் கூறலாம். அக்காலத்தில் வடமொழி அர்ச்சகர் தென்நாட்டில் குடியேறவில்லை, வடமொழி நாமாவளிகளைத் தெற்கே கொணரவில்லை. என்றால் மிகையல்ல.

இந்நாட்டுப் பண்டை கோயில்கள் :-

பல்லவர் காலத்திற்கு முன் அதாவது சங்ககாலம் பௌத்த சமணக்காலம், இவைகளில் தென்நாட்டில் கோயில்கள் மிகச் சுருங்கிய அளவில் இருந்தன. அவைகள் மண்தானிகளாகவும், மர நிழல்களாகவும், ஓலை அறைகளாகவும், மண்மேடைகளாகவும் இருந்தன. இவைகளுக்குத் தனி அர்ச்சகர்கள் ஏற்பட்டிருக்க மாட்டார்கள். தற்போதைய ஊர் தேவதைக் கோயில்களை ஒப்ப இருந்திருக்கும். பொது மக்களே விழாக் கொண்டாடித் தொழுதார்கள். துணங்கையாடல். வெறியாடல் முதலிய காட்சிகளோடு விழாக்கள் நடைபெற்றன. வெறியாட்டியாகிய மூதாட்டியின் ஆடல்பாடலோடு விழாக் கொண்டாடப்பட்டது. திருமுருகாற்றுப்படை, குறிஞ்சிப்பாட்டு முதலிய சங்க நூல்களில் இவற்றின் நிலைமை அறியலாம். ஆகவே அக்கோயில்களில் பிராமணப் பூசாரியும், வடமொழி அருச்சனையும் இருந்திருக்கச் சான்றுகள் இல்லை.

வலுத்த கோயில்கள் :-

முதன் முதலாக 6 ஆம் நூற்றாண்டில் பல்லவ மகேந்திரனுக்குப் பிறகு தூண் வலிவான கோயில்கள் கட்டப்பட்டன முதல் முதலில் பாறைகளைக் கொத்தி கடவுள் இருக்கைகள் உண்டாக்கப்பட்டன. மாமல்லை, திருச்சி, திருப்பரங்குன்றம் முதலிய குடைகோயில்கள் கட்டப்பட்டன. பிறகு தனிப்பாறைகள் கோயில்களாக உருவாக்கப்பட்டன. மல்லை இரதங்களில் அச்சிற்பம் காணலாம். பிறகு கல்லின் மேல் கல் நிறுத்திக் கோயில் கட்டப்பட்டது மல்லை கடற்கோயில். இம்மூன்று வகைகளில் கோயில் வளர்ச்சி உண்டாயிற்று. இவைகள் பிறகு கருங்கல்லின்மீது செங்கல் விமானம் தோன்றின. அப்போது எல்லாம் 6-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரை.

தென்னாட்டில் மூவர் சமயிகளும், ஆழ்வார்களும் தோன்றித் தமிழைச் சைவ, வைணவ துதிப்பாடல்களான தேவாரத் திவ்வியபிரந்தங்களைப் பாடிக் கோயில்களுக்குள் வழிபாடு ஏற்படுத்தினார்கள்.

வடநாட்டு முயற்சி :-

வடநாட்டில் மனுதஸ்களே சமயப்பிரதான நூல்கள். அவைகளை ஓதி வேள்விகள் செய்தார்கள். சடங்குகளின் விவரங்கள் பிராமணங்களில் சொல்லப்பட்டன. பிற்காலத்தில் முனிவர்கள் தத்துவ விசாரணை செய்தார்கள். அந்தக் கோட்பாடுகள் உப நிஷத்துக்களில் காணப்படும். இவைகளில் எல்லாம் இறைவனைத் துதிக்கும் நாமாவளிகள் இல்லை. வேதகாலம் போய் உருவ வழிபாடும் கோயில்களும் தோன்ற அப்போது துதிப்பாடல்கள் தோன்றின. புராணங்கள் உற்பத்தியாயின. சைவ, வைணவ மூர்த்திகள் தோன்றி அவற்றின், பெருமைகளைக் கூறும் நூல்களே புராணங்கள். அவைகளிலே இடையிடையே நாமாவளிகள் தோன்றின. அந்நாமாவளிகள் புராணங்கள் தோன்றிய போதே பிற்காலத்தில் இடைச் செருகல்களாக, உண்டாகியே வந்தன. அந்தக்காலம் 5, 6 நூற்றாண்டுகளுக்குப் பின் என்பர் ஆராய்ச்சியாளர். ஆகவே வட மொழி நாமாவளிகளான அஸ்டோத்திர சதம் (108) சகஸ்ர நாமம் (1008) என்பன. 6, 7 நூற்றாண்டுகளில் தான் வழங்கப்பெற்றன. இந்தக் காலப்பெருமை நன்கு ஆராயவேண்டும்.

வடக்கு தெற்கு வழக்க ஒப்புமை :-

மேலே கூறியபடி வடக்கே உருவ வழிபாடும் புராணங்களின் மூலம் நாமாவளிகளும் தோன்றின. 6, 7 நுற்றாண்டு. அதேபோல தெற்கே பல்லவர் காலத்தில் (5, 6, 7 நூற்றாண்டு) கற்கோயில்களும் செங்கல் கோயில்களும் தோன்றி 'உருவ வழிபாடு சிறந்து தேவாரப் பிரபந்தத்துதிப் பாடல்கள் தோன்றி வளர்ந்தன. வடக்கே புராணங்களின் மூலமாக 108 உம், 1008 உம் தோன்ற அதே காலத்தில் தெற்கே மூவர் தேவாரங்களும் ஆழ்வார் பிரபந்தங்களும் துதிப்பாடல்களாக வழங்கப் பட்டன. இரண்டிடங்களிலும் தனித்தனியாகத் துதிப்பாடல்கள் தோன்றி வழங்கி வந்த சிறப்பை நாம் அறிய வேண்டும். அந்த நூற்றாண்டுகளில் வடக்கே வடமொழியும், தெற்கே தமிழும், துதிகளுக்குப் பயிற்சி

மொழிகளாக இருந்த செய்தி நன்கு உணரத்தக்கது. இவ்வித ஒழுங்கு இயற்கையாக ஏற்பட்டு யாதொரு மனத்தாங்கலும் இல்லாமல் நடைபெற்றது.

இடைக்காலம் :-

வடக்கே ஹிந்து சாம்ராச்சியங்கள் வலிகுன்றிச் சிறு சிறு இராச்சியங்களாகப் பிரிவுகள் அடைந்தன. குப்த, ஸ்ரீஹர்ஷப் பேரரசுகள் 7-ஆம் நூற்றாண்டில் மறைய. வட நாட்டின் நிலை சீர் கெடத் தொடங்கியது. சமய நிலையங்களின் சிறப்புகளும் குறைந்தன. வடமொழி பேரரசுகளின் காலத்தில் கொண்டிருந்த மேன்மை தாழ்ச்சியடைந்தது. பத்தாம் நூற்றாண்டில் வட மேற்கிலிருந்து இசுலாமிய ஆக்கிரமிப்பு ஆர்யவர்த்தத்தில் இறங்கியது. கல்விச் செழிப்புப் பெற்ற கல்விமான்கள் தெற்கே புகலிடம் நோக்கினார்கள். 7 முதல் 10 நூற்றாண்டுகள் ஆகிய அந்த இடைக்காலத்தில் தெற்கே பல்லவப் பேரரசு குலைந்து போக, சோழப் பேரரசு தலை நிமிர்ந்தது. பேரூர்களில் கோயில்கள் கட்டத் தொடங்கினார்கள். தேவாரப் பிரபந்தத் துதிப்பாடல்களுக்கு ஆதரவு பெருகிற்று. பராந்தகச் சோழன் தேவாரங்களுக்கு ஆதரவு தந்தான். இராசராசச் சோழன் ஓதுவார்களுக்கு நிபந்தங்கள் தந்து தஞ்சைப் பெருங்கோயிலில் நிரந்தர ஏற்பாடுகள் தந்தான். தமிழ்த்துதி வேரூன்றியது.

சோதனைகள் :-

பத்து நூற்றாண்டு செல்லப் பதினோராவது நூற்றாண்டில் பாரதத்திற்குப் பெருஞ்சோதனைகள் தொடங்கின. ஆப்கன் இசுலாமியர் வடநாட்டின் மீது படையெடுத்துச் சமயநிலையங்களையும் புனித இடங்களையும் அழித்தார்கள். சமயவேலையில் ஈடுபட்டிருந்த வேதியர்களுக்கு இடமும் ஆதரவும் குன்றிப்போகத் தெற்கு நோக்கிப் புகலிடம் தேடினார்கள். அதற்குத் தகுந்தாற்போல தெற்கே செழிப்புடன் ஆட்சி புரிந்துவந்த சோழப் பேரரசு அந்த அகதிகளுக்கு ஆதரவு தந்தது. இராஜேந்திர சோழன் I ஆன கங்கை கொண்ட சோழன் வடக்கே படையெடுத்த காலத்தில் அங்கிருந்து 8000 வேதியர்களைத்தன்னுடன் அழைத்து வந்து அடைக்கலம் தந்தான். சோழ நாட்டில் அக்காலத்தில் எழுப்பிய பல நூற்றுக்கணக்கான

கோயில்களில் அந்த வேதியர்களைக் கோயில் பணியில் அமர்த்தினான். அவர்கள் தங்களுடன் வடமொழி நாமாவளிகளைக் கொண்டு வந்தார்கள். தமிழ்க் கோயில்களில். வடமொழி அர்ச்சனைகள் புகுந்தன. இது 11 நூற்றாண்டிற்கு பிறகு.

மாறுதல் :-

தமிழ்ப்பாடல்களாலே வழிபாடு செய்யப் பெற்றிருந்த தென்னாட்டுக் கோயில்களில் வடக்கேயிருந்து இறக்குமதி செய்யப்பெற்ற வேதியர்கள் மன்னர்களின் செல்வாக்கால் வடமொழிக்குக் கோயில்களில் ஆதிக்கம் தந்தார்கள். வடமொழி அஷ்டோத்திரங்களும் சகஸ்ரநாமங்களும் (108 + 1008) தமிழ்த் தேவாரங்களின் இடங்களில் புகுத்தப்பட்டன. ஆனால் ஒரே அடியில் தமிழை அழித்துவிடாமல் தமிழ்த்துதிகளுக்கு பின்னிடம் தரப்பட்டது. வடமொழி நாமாவளிக்குப் பின்னர் தேவாரப் பிரபந்தங்கள் ஓதப்பட்டன. இந்த மாறுதல் வெகு இலகுவில் ஏற்பட்டது. பொது மக்கள் அதன் நிலைவை யறிந்திலர். அரசனுடைய ஆதரவு இருக்கும் போது குடிகள் என்ன செய்ய முடியும்? வைணவர்கள் மட்டும் உடையவர் செல்வாக்கினால் பிரபந்தங்களுக்கு மேன்மை குறையாமல் நல்ல நிலைமை தந்தார்கள். அந்த ஆதரவு சைவ நிலையங்களுக்கு நன்மை விளைத்தது. இல்லாவிடில் வேதாந்த நிலையங்களைப் போல் முழுவதும் அழிந்திருக்கும்.

தென்நாட்டு நிலை :-

சோழ பாண்டியப் பேரரசுகள் 13-ஆம் நூற்றாண்டில் சீர் குலைந்தன. பின் நிகழ்ந்த முகம்மதியப்படையெடுப்பு தென்னாட்டில் நிலைக்கவில்லை. 14-ம் நூற்றாண்டில் தோன்றிய விஜய நகரக் கருநாடகப் பேரரசு முகம்மதிய ஆக்கிரமிப்பைத் தடுத்தது. கருநாடகத்தாரோ தமிழ் நாட்டின் ஆட்சியை ஏற்றார்கள். அவர்களின் கீழ் ஆண்ட நாயக்கத் தலைவர்கள் தென்னாட்டில் சமய நிலையங்களைச் காப்பாற்றினார்கள். கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டன. வழிபாடுகளுக்குச் சாசனங்கள் தரப்பட்டன. கோயில் பணிவிடையாளர்களுக்கு இனாம்கள் நிரம்பத் தரப்பட்டன. அந்த அளவில் வடக்கே இருந்து வந்த வேதியர்கள் திறமாக அமர்ந்தார்கள்.

வடமொழியும் தமிழும் ஒன்றன்பின் ஒன்றாக ஓதும் திட்டம் ஊர்சிதம் ஆயிற்று. விஜயநகர நாயக்கர் அரசும் அழிந்த பிறகு கருநாடக நவாப்களும் பிறகு ஆங்கில ஆட்சியும் வந்தது. அவர்கள் யாதொரு மாறுதல்களும் செய்யவில்லை. சமய வழிபாட்டில் அவர்களுக்கு அக்கறை இல்லை. இந்த நிலையில் தன்னுரிமை நாட்டிற்கு வந்தது.

தன்னுரிமைப் பலன்கள் :-

தன்னுரிமை நாட்டிற்கு வந்ததினால் நாட்டு மொழிகளுக்கும் தாய்மொழிகளுக்கும் பற்பல சலுகைகள் ஏற்பட்டு வருகின்றன. அச்சலுகைகள் தமிழுக்கும் சிறப்பாக வருகின்றன. அரசியல் அலுவலகங்களில் தமிழ்மொழி வழங்க தொடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் மட்டுமன்றிக் கல்லூரிப் படிப்பிலும் தமிழ்ப் பயிற்சிமொழியாக்கப்படுகின்றது. அமைச்சர்கள் மாவட்ட அதிகாரிகள் தமிழிலேயே மக்களுடன் பேசுகிறார்கள். போக்குவரத்துச் சாதனங்கள் தமிழிலேயே வழங்குகின்றன. நிலையங்களில் தமிழ் எழுத்துக்கள் வழங்கப்படுகின்றது. கூட்டுறவு நிலையங்களும் பயிற்சிச் சாலைகளும் தமிழிலேயே நடத்தப்படுகின்றன. ஆகவே எல்லாம் தமிழிலேயே நடத்தப்பட்டு வருகிற போது சமய நிலையங்களில் மட்டும் இன்னும் வடமொழி வழங்கப்பட்டால் அது எத்தனை மட்டும் ஊன்றிவிட்டது கூறமுடியுமா? மக்களின் மனம் மாறிவிட்டது. ஆகவே தற்போது கிளர்ச்சி செய்யப் படுகிறது. இது சரியா, கவனியுங்கள்.

சில முயற்சிகள் :-

ஏற்கனவே இக்கோயில்களில் தமிழ் அருச்சனை தொடங்கியுள்ளார்கள். அது விரும்புகிறவர்களுக்கு மட்டும் செய்யப்படும். அதற்குச் சில ஆதிசைவர்கள் ஒத்துக் கொண்டு செய்கிறார்கள். தூத்துக்குடி ஈரோடு, குன்றக்குடி, பேரூர் முதலான இடங்களில் நன்றாக நடைபெறுகின்றன. புதிதாக அஷ்டோத்திரங்களை உண்டுபண்ணவில்லை. வடமொழி நாமங்களை மொழி பெயர்க்கவும் இல்லை. ஏற்கனவே தேவாரங்களில் உள்ள போற்றித்திருப்பாசுரங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. கயிலைத் திருப்பதிகம், போற்றிக் திருவகவல் சிவபுராணம் முதலியவைகளை ஓதுகிறார்கள். கயிலைப் பதிகம்

"வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி" மிகவும் பொருத்தமாக இருக்கிறது. இதனைக் கூறுவதில் எவருக்குமே தடையிருக்காது. இதைப் போலவே முருகனுக்கு ஆற்றுப்படை அடிகளும் பயன்படுகின்றன. பின்னர் பிள்ளையாருக்கு விநாயகனே என்ற செய்யுள் பயன்படுகிறது. வேறு சிலர் பல தொகுப்புகளையும் பதித்திருக்கிறார்கள்.

எதிர்ப்புகள் :-

மாமூலுக்கு எதிரிடையாக ஒருதுளி மாறுபட்டாலும். அதற்கு எதிர்ப்புத் தோன்றுவது இயற்கை. அதிலும் சமயம் என்றால் எதிர்ப்பு பலமாக இருக்கும் வேதியர்கள் பழமையையே விட்டுக் கொடார்கள். நல்லதிற்கு வேறுபாடு செய்தாலும் மதத்திற்கு ஆபத்து வந்த தென்று வாதாடுவர்கள். வடமொழி அருச்சனைக்குப் பதிலாகத் தழிழர்ச்சனை என்றால் புனிதம் ஓடிவிட்டது என்று கத்துவார்கள். தேவாரம் புனிதம் அல்லவா என்றால் அது வடமொழி அர்ச்சனைக்குப் பின்பு தான் வர வேண்டும் என்பார்கள். இந்தப் பிடிவாதமான எதிர்ப்பு வலுத்து வருகின்றது. காரணங்கள் எத்தனை காட்டினாலும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். வழக்கம்மாறக் கூடாது என்று கத்துவார்கள் எது எப்போது ஏற்பட்டது என்று தக்கசான்றுகளோடு சொன்னாலும் சிறிதும் காதில் போட்டுக் கொள்ளமாட்டார்கள். இது நமது நாட்டுப் பிடிவாதநிலை என்க.

உச்சரிப்பு அல்லது ஒலி :-

வடமொழி மந்திரங்களுக்கு புனித உச்சரிப்பு உண்டு. அதற்கே ஒரு ஆற்றல் உண்டு. தமிழில் அது கிடையாது. என்று வாதாடுவார்கள். வடமொழி வேதமோ. நாமாவளியோ பாரதம் முழுவதும் ஒரே உச்சரிப்பில் கூறுகிறார்களா. தமிழ் நாட்டிற்கும். ஆந்திராவிற்கும், குஜராத்திற்கும், உத்தரபிரதேசத்திற்கும், வங்காளத்திற்கும் ஒரு மந்திரத்திற்கு வெவ்வேறு உச்சரிப்புகள் இருக்கக். காண்கிறோம். ஆகவே உச்சரிப்பு ஒலியின் பெருமை மறைந்துவிடுகின்றதல்லவா? அஷ்டோத்திரமும், சொல்லும் போது இடம் பொருள் ஏவல்களைப் பொறுத்து உச்சரிப்பு தோன்றுவதை நேரில் கண்டிருக்கிறோம். தமிழ்நாட்டிலேயே ஒவ்வொரு வட்டத்திலும்

ஒவ்வொரு உச்சரிப்பு உண்டு. நேரில் கண்டவகையில் 10, 12 கோயில்களைத்தவிர மற்றவைகளில் அருச்சகர்கள் சரியான உச்சரிப்பில் சொல்வதில்லை. ஆகவே ஒலியின் மகிமை மறைந்து விடுகின்றதல்லவா?.

தெய்வீக மொழி :-

வடமொழி தேவ மொழி? அதிலேதான் தேவர்களுக்கு நம் கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்ற ஒரு எண்ணம் சிலருக்கு உண்டு. அம்மொழி பேச்சு வழக்கில் இல்லை. ஆகவே தான் அரூபிகளின் மொழி என்று கூறலாம். சென்ற 2500 ஆண்டுகளாக அது வெறும் எழுத்து மொழியாக இருக்கிறது. தமிழோ இன்னும் பேச்சு மொழியாகவும், இலக்கிய மொழியாகவும் இருக்கிறது. அதனைத் தெய்வம் கமழும் மொழி என்று ஆன்றோர்கள் கூறிச் சென்றார்கள். தேவாரத் திருமுறைகள் அருட்பாக்கள் என்று முதலிலிருந்தே சொல்லப் படுகின்றன. அதன் பெருமைகளைப் பல அற்புதக் கதைகளால் விளக்கியிருக்கிறார்கள். நாள் தோறும் பாராயணத்திற்கு ஏற்றதென்று வகுத்திருக்கிறார்கள். ஏதாவது ஒரு செய்தியின் நலம் அறிய வேண்டுமென்றால் தேவாரத்தைக் கயிறுசாத்தி அறிந்து கொள்ளும் வழக்கம் தமிழ் நாட்டில் இருந்திருக்கிறது. ஆகவே எது தெய்வமொழி?

இறைவனுக்கு உகந்த மொழி :-

உலகில் உள்ள அறிவுடைய மக்கள் எல்லாரும் இறைவனுடைய மக்களே. இது மட்டுமோ, மற்ற உயிரினங்களும் இறைவன் மக்களே. ஆகவே உயிர்கள், சிறப்பாகப் பகுத்தறிவுடைய மக்கள் பேசும் மொழிகள் எல்லாம் இறைவன் அருளால் வந்தவையே. இறைவன் எல்லாம் வல்லவன் ஆகையால் எல்லாமக்களின் மொழிகளையும் அவன் அறிவான். ஆகவே அவனிடம் செலுத்தும் கருத்துக்களையும் மொழியையும் இறைவன் அறியமாட்டானா? அறியாத மொழியில் பிறர் ஒருவன் காசு பெற்றுக் கொண்டு சொல்வதைக் காட்டிலும் தன் மொழியிலேயே ஒருவர் தன் கருத்தைச் செலுத்தின் இறைவன் உடனே ஏற்றுக்கொண்டு அருள்புரிவான். கல்வியறிவற்ற வேடனாகக் கண்ணப்பர் செலுத்திய அன்புக் காணிக்கையை இறைவன் ஏற்றுக் கொள்ளவில்லையா? கல்லே மலராகப் போட்ட சாக்கிய நாயனார் இதய பூசையை இறைவன் ஏற்றுக் கொண்டான் அல்லவா? இனி மொழியில் என்ன ஏற்றத்தாழ்வு?

குறிப்பிட்ட சொற்கள் :-

ஒவ்வொரு அறிவாளியும் தன் விருப்பப்படி இறைவனைத் தொழலாம். இறைவனுக்கு புகழ்ச் சொற்களோ காணிக்கையோ வேண்டியதில்லை. இறைவனைப் புகழ்வதாலும் காணிக்கை செலுத்துவதாலும் ஒருவன் தன் நெஞ்சை நல்லதாக்குகிறான்; தூய்மை செய்து கொள்கிறான். இது தான் வழிபாட்டின் பொருள். ஆகவே பல முறைகளையும். சொற்களையும் இறைவனிடம் அளிப்பதைக் காட்டிலும் பேரறிஞர் கூறிய அரும்பாக்களைக் பயன்படுத்துவது மிக நல்லது. அதுவே அறிஞர் குழுவிற்கு ஏற்றதாகும். அந்த முறையில் தமிழ் திருமுறைகள் ஏற்பட்டன. அவை முழுவதும் கூற இயலாது. அதன்காரணமாக சில அறிஞர்கள் தொகை நூல்களை ஏற்படுத்தி உள்ளார்கள். வட மொழியில் பத்ததி, விதி முதலிய தொகை நூல்கள் இருப்பது போலத் தென் மொழியில் அகத்தியர் தேவாரத் திரட்டு முதலான திரட்டு நூல்கள் ஏற்பட்டுள்ளன. அவைகளைப் பயன்படுத்திக் கொண்டால் நாம் நினைத்த பலன்களை அடைய முடியும். அவைகளே குறிப்பிட்ட அருட் சொற்கள்.

திருமணத் திரட்டு :-

சிவாலய முனிவருக்கு நாள்தோறும் செய்யக் கூடிய வழிபாட்டுப் பாராயணத்திற்காக அகத்திய முனிவர் திரட்டிய திரட்டு மிக உயர்ந்தது. அதில் எட்டுப் பொருள்கள் ஆளப்பட்டுள்ளன. குருவருள், திருநீறு, ஐந்தெழுத்து, கோயில்திறம், இறைஉருவம், திருவடிகள், அருச்சனை, என்ற எட்டு கருத்துக்கள் மூவர் மொழிகளில் இருந்தும் சிறந்தவைக்ளைப் பொறுக்கி எடுத்துக் கொடுக்கப்பட்டன. பாராயணம் செய்யும் போது இந்த எட்டுக் கருத்துக்களும் நமக்குத் தோன்றும். இவைகளில் சமயக் கருத்துக்கள் முழுதும் அடங்கி உள்ளன. வைணவச் சாத்து முறையிலும் இவ்வடிப்படைக் கருத்தே மிளிருகிறது. இவ்வெட்டுக் கருத்துக்களில் அருச்சனையானது ஏழாவது கருத்து. இறைவனை துதிக்கும் போது கூறப்படுவது. சம்பந்தருடைய பூந்தராய்ப் பதிகம். அப்பருடைய கயிலைப் பதிகம், சுந்தரருடைய சமூகக்குறைப் பதிகம் என்ற மூன்றும் எடுத்தாளப்பட்டன. இவைகளில் அப்பருடைய "நீ காற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி" என்ற கயிலைப் பதிகம் அஷ்டோத்திரத்தை ஒத்து இருக்கிறது. போற்றி என்று முடிப்பதினால் "நம" என்ற பொருள் விளங்குகிறது. ஆகவே இதுவே தமிழ் அருச்சனைக்குகந்ததாகும்.

அடிப்படைக் கருத்துக்கள் :-

இறைவனுடைய எண் குணங்களைப் போற்றித் தன் வீரட்டானச் செயல்களால் அவ்வெண் குணங்களையும் அவன் காட்டின திறத்தைப் போற்றி, அவனை அடைவதற்கு வழிபடுகிறவன் தன் தாழ்மையை எடுத்துக் காட்டி, இறைவன் அருள்பெற வேண்டி அவனை எட்டு மலர்களால் அருச்சித்து, அவன் அருட்பாதத்தைப் புகழுவதே இப்பதிகத்தின் அடிப்படை. இவைகளைக் கூறுவதினால் அருச்சனையின் முழுப் பயனையும் வழிபடுகிறவன் பெறுவான். இதை நாம் தழுவ வேண்டாமா? பண்டைத் தமிழின் சமய கோட்பாடு "தீதும் நன்றும் பிறர்தரவாரா" என்பதே ஆகும். அதாவது ஒருவன் இறைவன் அருள்பெற அவனே உழைக்கவேண்டும். பிறரொருவன் காசு பெற்றுக் கொண்டு பலன் தரமுடியாது என்பதே ஆகும். ஆகவே அவனவன் தன் பேற்றிற்குத் தானே முயற்சி செய்யட்டும். இதற்கும் தடையா? தன்னுரிமை பெற்ற நாட்டில் சமயத்துறையில் தன்னுரிமை பெற வேண்டாமா?

முடிப்புரை :-

கோயில்களில் வழிபாட்டிற்காக நாம் செல்லும் போது அருச்சகர் எந்த மொழியில் அருச்சனை செய்தாலும் நாம் சும்மா மௌனமாக இருப்பதில்லை. இறைவனுடைய துதிகளை நமக்குத் தெரிந்த மொழியில் சொல்லுகின்றோம். அதைத்தடுப்பார் இருக்க முடியாது. தன் மதிப்பு நமக்கு இருக்கும் வரையில் அவன் பிற மொழியில் சொன்னால் நாம் தமிழிலேயே அருட்பாடல்களைச் சொல்லி தொழுவோமாக. இவ்வாறு எல்லாரும் செய்யும் பொழுது. தானே நாளடைவில் தமிழ் அருச்சனை ஏற்படும். அறநிலையமும் அதற்கு ஒத்துக் கொள்ளும். சிலபேர் தேவாரத்திற்குப் பொருள் விளங்கவில்லை என்பர். அது நம் தப்பேயன்றி பிறர் தப்பல்ல. தமிழில் உள்ள தேவாரங்களுக்குப் பொருள் அறிந்து கொள்வது நமது கடமை. "அருச்சனை பாட்டே ஆகும் அதனைத் தமிழில் கூறுக" என்று இறைவன் ஆணை இருக்கும் போது அதன் பொருளை அறிந்து கொள்ள முயல்வது நம் கடமையாகும். தற்போது நாடு செல்லும் வேகத்திலும் மக்கள் வளர்ச்சி செல்லும் வகையிலும் விரைவில் தாய் மொழியில் வழிபாடு நடைபெறுவது திண்ணம் என்க.

20

கோயில் அமுதுகள்

தென்னாட்டுத் திருக்கோயில்களில் இறைவர்களுக்கு வழிபாட்டு நேரங்களில் அருச்சனை முடிந்தவுடன் தீபாராதனை செய்து அமுது படைப்பதுண்டு. பின்னர் அவ்வமுதை வழிபாடு செய்வோர்களுக்கும். செய்விப்போர்களுக்கும் விநியோகம் செய்வது நெடுநாளைய பழக்கம். வழிபாட்டிற்கு வரும் அன்பகோடிகளுக்குப் பிரசாதம் வழங்குவதுண்டு. இப்பிரசாதம் சிவன் கோயில்களில் திருநீறும், சந்தனமும் ஆகும். திருமால் கோயில்களில் தீர்த்தமும், துளசியும் ஆகும். இந்த முறை பிற ஆலயங்களில் சிறிது வேறுபாடுகளுடன் நடைபெறும். திருமால் ஆலயங்களில் சிறிது அமுதும் தரப்படும். பெரும்பான்மையான கோயில்களில் மூர்த்திகளுக்கு அளிக்கும் நைவேத்தியங்கள் அன்பர்களுக்கு விலைக்கு வழங்கப்படும். சிவாலயங்களில் பொங்கலும், திருமால் ஆலயங்களில் புளியோதனம், ததியோதனம், வடை, முறுக்கு, தோசை முதலியவைகளும் விற்கப்படும். இது நாம் தற்போது காண்பவை.

ஆனால் சில நூற்றாண்டுகளுக்கு முன் எவ்வாறு இந்த அமுதுகள் வழங்கப்பெற்றன என்று அறிய வேண்டுமானால் கோயில்களில் உள்ள திட்டங்களும் சுவர்களில் காணும் கல்வெட்டுக்களுமே சான்று கூறும். சிவாலயத்துக் கல்வெட்டுக்களில் வழிபாட்டு அமுதுகளுக்காக நில தானங்கள் செய்யப்பட்ட விவரங்கள் பொதுவாகக் காணப்படுகின்றனவேயன்றி அமுதுகளின் விவரங்களும் வகைகளும் குறிக்கப்படவில்லை. ஆனால் திருமால் கோயில்களில் வழங்கப்படும் அமுதுகளின் விவரங்களை மிக நுட்பமாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. திருமால் கோயில்களில் சிறப்புற்றன. திருவரங்கமும் காஞ்சி கோயில்களுமே ஆகும். இராமானுசரால் சிறப்பிக்கப் பெற்றவை. இவையேயன்றோ? இவ்விரண்டில் காஞ்சிப் பெருமான் கோயிலை எடுத்துக்காட்டாகக் கொண்டு அங்கே காணும் கல்வெட்டுக்களை சில பொறுக்கி எழுதுவோம்.

காஞ்சி அருளாளப் பெருமான் (வரதராசப் பெருமாள்) கோயிலில் சோழர், விஜயநகரத்தார் கல்வெட்டுக்கள் நிரம்ப இருக்கின்றன. அதாவது கி. பி. 1000 முதல் 1600 ஆண்டு வரை 6 நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் என்க. சோழர் காலத்துக் கல்வெட்டுக்களில் இராசராஜன் I, குலோத்துங்கன் I, முதலான அரசர்களின் கல்வெட்டுக்களில் நந்தா விளக்குகள் வைப்பதற்காக நிலம், பொன், தானம் செய்த செய்திகளே சிறப்பானவை. ஆனால் விஜயநகரத்தார் காலத்தில் அரிகரராயன் முதல் கொண்டு மூன்று வம்சத்தார்கள் வரை கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகள் முதலிரண்டு வம்சங்களில் 1350 முதல் 1500 வரை நெய், தயிர், அமுது, பொடி, தளிகை இவைகளுக்காகத் தானங்கள் செய்யப்பட்டன. கிருஷ்ணதேவராயன், அச்சுதராயன், சதாசிவராயன், வேங்கிடப்பதிராயன், முதலானோர் ஆட்சிகளில் கோயிலில் ஆக்கப்படும் நைவேத்தியங்கள் இன்னின்னவை என்றும், இன்னாருக்கு இவ்வளவு வழங்கவேண்டும் என்றும் விவரமாகக் கூறுகின்றன. சில எடுத்துக்காட்டுகள் கூறுவோம்.

			பொருட்கள்
1,	கிருஷ்ண தேவராயர்	– 1517 –	சுகியன் படி 16
2.	கிருஷ்ண தேவராயர் (346)	– 1521 –	புஷ்பயாகக் சிறப்பு அமுதுபடி-நெய்- வெல்லம் மிளகு, சீரகம், தேய்காய் மூடி
3,	அச்சுதராயன் (353)	– 1542 –	24 ஏகாதசிகளுக்கு 35 தோசை - தோசைப்படி
4.	சதாசிவராயன் (365)	– 1549 –	13 தளிகை
5.	சதாசிவராயன் (390)	– 1555 –	தோசை - 26, ஆழ்வார் திருநாள்
6.	சீரங்க (369)	– 1571 –	5 வகைப் படிகள், அப்பம், வடை, சுகியன், இட்லி, தோசை - விவரங்கள்
7.	வேங்கடபதி (368)	– 1592 –	மேற்படி - 5 படிகள்
8.	வேங்கடப்தி (382)	– 1595 –	மேற்படி - 5 படிகள் புளியோதரை, ததியோதரை

இந்த எட்டுக் கல்வெட்டுக்கள் எல்லாம் கிருஷ்ணதேவராயன் முதல் கொண்டு வேங்கடபதிராயன் வரையில் 5 மன்னர்கள் காலங்களில் அதாவது ஒரு நூற்றாண்டில் (16 நூ) கோயிலுக்குச் செய்த திட்ட வகையில் பிரசாத வினியோகங்கள் ஆகும். அவைகளில் தளிகை, புளியோதனம், ததியோதனம், அப்பப்படி, வடைப்படி, சுகியன் படி, இட்டலிப்படி, தோசைப்படி என்பவைகள் சிறப்பானவை. இவைகளின் எண்ணிக்கை, வேண்டிய பண்டங்கள், யார்யாருக்கு வினியோகம் செய்ய வேண்டும், மீதி யாகும் பிரசாதத்தை எப்படி வினியோகம் செய்ய வேண்டும் என்ற விவரங்கள் காண்கிறோம்.

கோயிலோ சிறந்த திருமால் கோயில். அரசர்களோ பரம வைணவர்கள். கோயிலில் வழங்கப்பட்ட பணியாளர்களோ வைணவர்கள். ஆகவே மிக விவரமாகக் குறிப்பிட்டதில் வியப்பில்லை விவரங்கள் எவ்வாறு குறிக்கப்பட்டன என்பதற்கு சில பகுதிகளை மட்டும் குறிப்போம். மகாராசாதிராச......ஸ்ரீவீர வேங்கடபதி தேவ மகாராயர் பிருதிவிராச்சியம் பண்ணி அருளி நின்ற சதாப்தம் 1514....... காஞ்சிபுரம், திருவத்தியூர் நின்றருளிய பேரருளாளப் பெருமாள் கோயில் பண்டாரத்தார் திருமலகுமாரதத்தாச்சாரியர் ஐயனுக்கு சிலாசாசனம் பண்ணிக் கொடுத்தப்படி....... ஆடித்திருநாளாக்கும் கங்கை கொண்டான் மண்டபத்துக்கு எழுந்தருளித்திரும்ப அக்கினிஷ்டோம சாலை மண்டபத்தில் பெருமாள் எழுந்தருளி அமுது செய்யும் ஆழ்வார்.... அமுது செய்யும் ததியோதன தளிகை 12க்கு அரிசி, தயிர், சுக்கு 12, ஏலம் 3, கறியமுது, கத்தரிக்காய், வாழைக்காய், பாகல்காய், வெள்ளரிக்காய் 4, கறியமுது, திருப்பருமாற நெய் 2, சீரகம் 1, அப்பப்படி-1, வடைப்படி - 1, சுகியன்படி - 1, இட்டிலிப்படி - 1 தோசைப்படி 1, ஆகப்படி 5க்கு, அரிசிபடி - 4, எண்ணெய்-362, நெய் - 32, பயிறு - 342, உளுந்து, வெல்லம் - 42, மிளகு சீரகம்.................................... மாவி 4 கூலி, சந்தனம் அரைத்தக் கூலி, தானத்தார், கோயில் கணக்கு, முதல் எழுதுவார், சன்னிதி பரிசாசனன் முதலியோருக்கு.. -

368 = (381 / 19)

இதைப் போலவே சீரங்கராயன் காலத்து 36-ஆம் கல்வெட்டில் பெருமாள் கங்கை கொண்டான் மண்டபத்திலும் பல மண்டபங்களிலும் அமுது செய்தருளும் அப்பப்படி 40க்கு படி 1க்கு 4-படி, 40க்கு 32 வடைப்படி, 40க்கு படி 1க்கு 5 ஆக 20 சுகியன் படி 26க்கு படி 1க்கு 4-4 ஆக 15, இட்டலிப்படி 21க்கு படி 1க்கு 4 - 4 ஆக 8. தோசைப்படி 40க்கு படி 2க்கு படி 2 ஆக 10.................... 369 - (380 /19)

ஆகவே வினியோகம் செய்யப்பட்ட பிரசாதங்களில் சிறப்பாக 5 இருந்தன. அவைகள் அப்பம், வடை, சுகியன், இட்டலி, தோசை என்பவை. இவைகள் 4 நூற்றாண்டுகளாக செய்யப்பட்டன என அறிக. இவைகளுக்கு எத்தனைப்படி அரிசி எண்ணெய், நெய், பயறு, உளுந்து, வெல்லம், சீரகம் வேண்டும் எனக் கண்டிருக்கிறது. தற்காலத்தில் பயிர் பண்டங்களுக்கு ஒப்பு உவமை பார்த்து வரலாம். இக்காலத்தில் புளியோதரை, ததியோதனம் (தயிர்ச்சாதம்) அக்கார அடிசில் (சக்கரைப் பொங்கல்) முதலியன வினியோகம் செய்யப்படுகிறது. மேலும் அப்பம், அரிசிமாவும், உளுந்தும் சுருட்டிச் சுடுவது இட்டலியும் அப்பமும் வடை பருப்பு ஆட்டி எண்ணெயில் சுடுவது. சுகியன் இனிப்பு கலந்தது, உருண்டையாக செய்வது. தோசை அகலமாக வட்டமாகச் செய்வது இவ்வைந்தும் துவையல் சேர்த்து உண்பதுண்டு. காஞ்சிப் பெருமான் கோயிலில் மிகப்பெரியதாகப் படி போலச் சுடப்படும். நல்ல பதார்த்தங்களில் செய்யப்படுவதால் மற்ற இடங்களைக் காட்டிலும் அதிகமான சத்துக் கொண்டிருப்பது. ஆகவே விலையும் அதிகம். அன்பர்கள் வெகுபிரியத்துடன் வாங்கி உண்பார்கள். இந்தப் பிரசாதங்கள் எல்லாம் தென்னாட்டுக் கோயில்களுக்கே சிறப்பாக உள்ளவை. வடநாட்டில் காண்பது அரிது. சிறப்பாக தோசை வடநாட்டில் இல்லை. இது 5 நூற்றாண்டுகளாக இங்கே இருப்பதினால் தென்னாட்டு உணவாகத் தான் இருக்க வேண்டும் சில மக்கள் இதை தோ + சொய் எனப் பிரித்து இரண்டு (தோ = இரண்டு - இந்தி) சொய் (ஒலி) என்பதன் மருவு என்பார்கள். இந்தி மொழிக்கும் இப்பண்டத்திற்கும் தொடர்பு இல்லை. பிற நாட்டுப் பதார்த்தங்களைக் கோயிகளில் வழங்கமாட்டார்கள் என்று அறிய வேண்டும். அச்சுதராயன் கல்வெட்டு

ஒன்றில் (353 = 614) (கி. பி 1542) அடியிற் கண்ட பகுதி காணப்படுகிறது. ஏகாதசி தோறும் பெருமாள் கெருடமண்டபத்தில் எழுந்தருளி அமுது செய்தருள தோசைப்படிக் கட்டளையிட்டு பொலியீடாகக் கொடுத்த படி - 250 தோசைப்படி ஒன்றுக்கு அரிசி 34 உளுந்து - 3, நெய் - 22, சர்க்கரை - 2, சீரகம் - 2, பாக்கு - 50, இலை - 100, சந்தனம் - 1, விட்டு அமுது படி செய்தருளிய தோசை 51 க்கு வைஷ்ணவர்களுக்கு தோசை - 4, கணக்குப் பிள்ளைக்கு தோசை - 1.................. தோசை - 16 நின்ற தோசை 35, இப்படி 24 ஏகாதசிகளுக்கு விடக்கடவது என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

ஆகவே தோசை என்ற உணவு பண்டம் தூய்மையான தமிழ்நாட்டு வழக்கத்தது என்றும், அதைப் பற்றி வழங்கும் கதைகள் பிற்காலத்தில் ஏற்பட்டவை என்றும் அறியலாம். தூய்மையான தமிழ்ச் சொற்களும் வழக்கங்களும் அடுப்பங்கரையில் தான் காணலாம்.

